# வி. கோ.

# சூரியநாராயண சாஸ்திரியார்

## (பரிதிமாற் கலைஞர்)

**1870—1903**

சென்னை அ. மா. ஜெயின் கல்லூரி,
விரிவுரையாளர்,
**வித்வான் : ர. சுப்ரமண்யன், எம். ஏ.,**
எழுதியது.

DR. T. P. M. LIBRARY
MADURAI KAMARAJ UNIVERSITY

**பரிதிமால் பதிப்பகம்**
புத்தக வெளியீட்டாளர், மதுரை

நூல் கிடைக்குமிடங்கள்

வி. சு. கோவிந்தன்
5 ஏ, மூன்றாம் தெரு
வசந்த நகர்,
மதுரை-3

என்னெஸ் பப்ளிகேஷன்ஸ்
96, என்.ஜி. ஓ. காலனி
மதுரை-1

பதிப்புரிமை]

[விலை :

முதற் பதிப்பு—March, 1950.
இரண்டாம் பதிப்பு—Dec. 1953.

Printed at the B. N. Press, Mount Road, Madras.



V. G. Suryanarayana Sastri, B.A.

பரிதிமாற்கலைஞர்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று

—*திருக்குறள்*

# நூன்முகம்

ஆசிரியர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரைப் பற்றி அறியாத தமிழறிஞர் எவரும் இரார். இவர் தாம் வாழ்ந்திருந்த முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டு யாவராலும் பெருமையோடு பாராட்டத்தக்கதாம். தமிழ் கற்போரும் மற்றோரும் அவரைப்பற்றிப் பொதுவாக அறிவார்களேயன்றி, அவர் வாழ்க்கையின் வரலாற்றை நன்குணர்ந்துள்ளவர்கள் சிலரே. இக்குறையை நீக்க வந்ததே இந்நூல்.

இலக்கியத்தைச் சுவையோடு நுகர வேண்டுமாயின் அவ்விலக்கிய ஆசிரியரின் உள்ளப்பான்மையை உள்ளபடி அறிய வேண்டும். இதை அறிவதற்கு அவ்வாசிரியரது வாழ்க்கை வரலாற்றினை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டுவது அவசியம். ஆதலால், சாஸ்திரியாரது வாழ்க்கை வரலாற்றை, அன்னாரது மாணவர்களில் முதல் வரும் எனது தந்தையாருமான ந. பலராம ஐயரவர்கள் எழுதி வெளியிடக் கருதியிருந்தனர். இவ்வெண்ணம் பல இடையூறுகளால் நிறைவேறாது போகவே, சாஸ்திரியாரைப் பற்றிப் பன்முறையும் நன்றியறிதலோடு எனது தந்தையார் கூறக் கேட்டுள்ள நான், அக்குறிப்புக்களையும் மற்றவற்றையும் திரட்டி எனது ஆற்றலுக்கியைந்த அளவு ஒருவாறு இவ்வரலாற்றினை எழுதியுள்ளேன்.

இந்நூலை இயற்றுதற்கண், எனது தந்தையார் குறித்து வைத்திருந்த சில குறிப்புக்களும் திரு. மு. சி. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் ஆங்கிலத்தில் எழுதியிருந்த வரலாற்றுச் சுருக்கம் ஒன்றும் மிகவும் பயன்பட்டன.

இவ்வரலாற்றைத் தமிழன்பர்கள் பலரும் படித்துப் பரிதிமாற்கலைஞரது தமிழார்வத்தையும் ஆற்றலையும் உணர்ந்து கடைப்பிடிப்பார்களாயின், அதுவே இந்நூலை இயற்றியவருக்கும் பதிப்பித்தவர்களுக்கும் அவர்கள் செய்யும் சிறந்த கைம்மாறாகும்.

ந. சுப்ரமண்யன்.

# முன்னுரை

தமிழ் நாடு ஆங்கில மோகத்தில் ஆழ்ந்திருந்த காலத்தில் அருந்தமிழ்ப் புலவர் சிலர் தோன்றித் தமிழை ஆதரித்தனர். அன்னவருள் ஒருவர் சூரியநாராயண சாஸ்திரியார் என்னும் பரிதிமாற் கலைஞர். மதுரைமாநகரிலே பிறந்து, ஆங்கிலமும் தமிழும் ஆர்வமுறப் பயின்று, பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற இக் கலைஞர், சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியிலே தமிழாசிரியராக அமர்ந்தார்; செந்தமிழால் மாணவர் சிந்தையைக் கவர்ந்தார். அவர் பணித் திறத்தால் தமிழாசிரியர் பதவியே பெருமையுற்றது என்று கூறுதல் மிகையாகாது.

முத்தமிழும் முறையாக வளர்ந்து ஓங்குதல் வேண்டும் என்பது இக்கலைஞருடைய ஆசை. அவ் வாசையால் இடையறாது உழைத்து அரிய நூல்கள் பல இயற்றினர். 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் பெயரால் அவர், வெளியிட்ட ஆராய்ச்சி நூல் இயற்றமிழின் சீர்மையை இனிது விளக்குவதாகும். நாடகத் தமிழுக்குரிய பழைய இலக்கண நூல்கள் காணப் பெறுமையால் தமிழிலும் பிற மொழிகளிலும் கண்ட நாடக இயல்புகளைத் தொகுத்து 'நாடக இயல்' என்னும் இலக்கண நூலை வெளியிட்டார். இதற் கேற்பச் சில நாடகங்களும் இயற்றினர். முப்பத்திரண்டு ஆண்டளவில் அவர் வாழ்நாள் முற்றுப்பெற்றது.

இத்தகைய கலைஞரது சரிதம், அறிஞர் திரு. ந. சுப்பிரமணியன் அவர்களால் சிறந்த முறையில் எழுதப் பெற்றுள்ளது. பரிதிமாற் கலைஞருடைய மாணவர்களுள் முதல்வராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராகவும் விளங்கிய திரு. பலராம ஐயர் அவர்கள் எழுதிவைத்திருந்த குறிப்புக்களைத் துணைக்கொண்டு அவர் தம் அறிவறிந்த மைந்தரால் இயற்றப் பட்ட இந் நூலை நன்றி மறவாத தமிழகம் நன்கு ஆதரிக்கும் என நம்புகின்றேன்.

சென்னை, 5-3-50 ரா. பி. சேதுப்பிள்ளை.

# பதிப்புரை

நினைவறிந்த நாள்முதலாய், உலகறிந்த புலமை மிகுந்த எந்தையாரது வாழ்க்கைச் சரிதத்தை உலகறியச் செய்ய வேண்டு மென்பதே அல்லும் பகலும் யான் கொண்ட நினைப்பு. பல முறை சென்னைசென்று, அன்னாரது மாணவர்களையும் நண்பர்களையும் சந்தித்துப் பல குறிப்புக்கள் திரட்டினேன். இவ்வாறு சேகரித்த குறிப்புக்களின் உதவியால், எந்தையாரது சரித்திரச் சுருக்கத்தை, 1939-ல் எனது தமையனார் டாக்டர் **வி. சூ. நடராஜ சாஸ்திரி**, L. M. P., L. P. H., அவர்கள் எழுதியளித்தார். அது சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்ட S. S. L. C. பாட புத்தகத்திலும் வெளியிடப்பட்டது; தனிப்புத்தகமாகவும் வெளிவந்துள்ளது.

பின்னர், எந்தையாரது நிழல்போன்ற முக்கிய இயற்றமிழ் மாணவர், ஸ்ரீ. **ந. பலராம ஐயரவர்களது** நெருங்கிய தொடர்பு கிட்டியது. அதன் பயனாகச் சாஸ்திரியாரது பல நூல்களுக்கும், தாம் பாடங்கேட்ட உரைகளை எழுதியளித்தார்கள். அவையெல்லாம் நன்கு பதிப்பிக்கப் பட்டன. எந்தையாரை நன்கறிந்திருந்த அவரே, அன்னாரது விரிவான வாழ்க்கை வரலாற்றையும் எழுதித்தருவதாக வாக்களித்திருந்தார். அது அவர் காலத்துக்குள் முற்றுப் பெறாது போயிற்று. ஆனால் அவர் எழுதி வைத்திருந்த பல குறிப்புக்களிலிருந்தும், தமது தந்தையாரிடம் நேரில் கேட்டறிந்தவைகளைக் கொண்டும், அன்னாரது குமாரர் ஸ்ரீ. ந. சுப்பிரமணியன் M. A. அவர்கள் எழுதியுள்ள இந்நூலை வெளியிட முன்வந்துளேன்.

*எந்தையாரது வாழ்க்கை வரலாற்றைப்பற்றிய நினைப்பை ஆதியிலேயே ஊட்டியும், சுருக்கம் எழுத ஊக்கியும், விரிவாய் எழுத அடிக்கடி அறிவுறுத்தியும், இந்நூலுக்கு அரியதொரு முன்னுரை அளித்தும் பல்வகையாலும் உதவிய உயர் திரு.* **ரா. பி. சேதுப் பிள்ளையவர்களை** *என்றும் மறவேன் ; தமிழுலகும் மறவாது.*

*தந்தையார் வாக்கைச் செவ்வனே நிறைவேற்றித் தமிழுலகிற்குச் சிறந்ததோர் பணி செய்தளித்த ஸ்ரீ. ந. சுப்பிரமணியன் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றி. இந்நூல் வெளிவரப் பல்விதத்தும் எனது தமையனார் உதவியது பாராட்டற்பாலது.*

**'தந்தையின் புகழைத் தரணியிற் பரப்புவதே தனயனின் கடமை'** *என்னும் ஒரே நோக்கத்துடனேயே இந்நூலை வெளியிட்டுள்ளேன். வாழ்க்கை வரலாற்றில் நடந்தவற்றையே உரைக்குங்கால், சிற்சிலரைப் பாதிக்கவும் செய்யும். அது போன்றதெதுவுமின்றி, ஆசிரியர் இந்நூலை எழுதியிருப்பது பாராட்டற்பாலது. இனியும் இதன்கண் ஏதேனும் சீர்திருத்தங்கள் வேண்டுமெனக் கருதுவோர் எனக்கு எழுத வேண்டுகின்றேன்.*

*மதுரை,*
6—3—'50

**வி. சூ. சுவாமிநாதன்.**

# பொருளடக்கம்


| அத். | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர் தந்தையார் | ... | 9 |
| 2. | உயர்நிலைப்பள்ளி வாழ்க்கை | ... | 13 |
| 3. | கல்லூரி வாழ்க்கை | ... | 19 |
| 4. | பேராசிரியத்தன்மை | ... | 30 |
| 5. | நாடகப்பணியும் நாட்டுப்பணியும் | ... | 59 |
| 6. | தாய்மொழிப் பணிகள் | ... | 81 |
| 7. | இயற்றமிழ் மாணவர் | ... | 110 |
| 8. | ஆசிரியத் தன்மை | ... | 113 |
| 9. | கூற்றும் கொள்கையும் | ... | 149 |
| 10. | இறுதிக் காலம் | ... | 161 |



DR. T. P. M... MADURAI KAMARAJ UNIVERSITY

# வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

## (பரிதிமாற் கலைஞர்)

### அத்தியாயம் 1

### ஆசிரியர் தந்தையார்

தொன்றுதொட்டுச் செந்தமிழ் மொழிக்குப் பிறப்பிடமாயிருந்து அதனைப் போற்றி வளர்த்தது **மதுரைமாநகர்**; மூன்றாஞ் சங்கத்திலிருந்து இயற்றமிழ்ப் புலவர் நாற்பத்தொன்பது பேரும் தமிழாராய்ந்ததும், பாண்டியர்களிருந்து தமிழையும் தமிழ்ப் புலவரையும் மேலும் மேலும் தழைக்கச் செய்ததும் அந்நகரே. 'முத்தமிழ்ச் சங்கத்தெய்வப்புலவர் வீற்றிருக்கத் தாம் நின்றிருந்து' தமிழாராய்ந்து திவ்வியத் திருவிளையாடல்கள் அறுபத்து நான்கும் ஆடிய இறைவனார் வெள்ளியம்பலத்தில் திருநடனமாடியதும் அந்நகரே. செந்தமிழ் நாட்டின் தெற்கு எல்லையும் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையைச் சார்ந்ததே யாகும். தமிழருடன் இவ்வளவு தொடர்புடைய அந்நகர்ப் புறத்தே **விளாச்சேரி** என்பதோர் சிறு கிராமம் உள்ளது. இக் கிராமத்தில் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் **கோவிந்த சாஸ்திரியார்** என்று ஒரு பெரியார் வசித்து வந்தனர்.

---

'ஆசிரியர்' என்பது எந்தையார்தம் ஆசிரியராம் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரையே இவ்விடத்தும் பிறவிடங்களிலும் இந்நூலுள் குறிக்கும்.

இவர் தீவிர சைவப் பிராம்மணர்; கௌசிக கோத்திரத்தினர்; சாம வேதத்தினர்; ஸ்மார்த்தப் பிராம்மணர்களில் ஒரு பகுதியினரான பிரகத்சரணத்தைச் சார்ந்தவர்; புராதன கண்ட்ரமாணிக்கக் கிராமத்திலிருந்து பல திக்குகளிலும் பிற்காலம் சிதறிவிட்டன சில பிராம்மணக் குடும்பங்கள். அவர்கள் வகுப்பைச் சேர்ந்தவராகையால் 'கண்ட்ர மாணிக்க பிரகத் சரணம்' எனப்படும் பிரிவைச் சார்ந்தவர். வடமொழிப் பாண்டித்தியமும், குலத்திற்கேற்ற உயர்ந்த ஒழுக்கமும், தெய்வ பக்தியும் நிரம்பியவர். இவர் தந்தையார் பெயர் சூரிய நாராயண சாஸ்திரியார். இவருடைய முன்னோர்கள் எல்லோரும் தீக்ஷிதர் என்னும் பட்டப் பெயர் புனைந்து கொள்வதுண்டு. இவர்களின் மூதாதையருள் முன்னோராகிய அண்ணு தீக்ஷிதர் என்ற பெயர் பூண்ட யக்ஞபுரீசுவர தீக்ஷிதர் என்பவர் பிரயாகை, காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்கள் சென்றுவந்து பெரிய வேள்வியொன்றை யியற்றி அதற்கேற்ப 'தீக்ஷிதர்' என்னும் பட்டமும் புனைந்து கொண்டனர். யக்ஞபுரீசுவர தீக்ஷிதருக்கு நான்கு தலைமுறைகளுக்குப் பிறகு தோன்றியவரே நாம் தோடக்கத்திற் கூறிய கோவிந்தசாஸ்திரியார். இவர் கலைவல்லுநரா யிருந்ததாலும், அக்காலத்தில் வேள்வியியற்றும் வழக்கம் குறைந்துவிட்டதாலும், 'தீக்ஷிதர்' என்னும் பெயரை மாற்றி 'சாஸ்திரி' என்னும் பெயரைப் பூண்டு கொண்டனர்.

மேலே கூறியபடி, சிவபக்தியிலும், சைவ சாஸ்திர ஆராய்ச்சியிலும் தலைசிறந்து விளங்கிய கோவிந்த சாஸ்திரியார் மதுரையில் கோயில் கொண்டுள்ள சோமசுந்தரக் கடவுளையும், மீனாக்ஷியம்மையையும் நாள்தோறும் காண்பதும், தம்மை யணுகினவர்களுக்கு வடமொழி கற்றுக் கொடுப்பதும் தமது கடமையாகக் கொண்டு நெறி தவறாமல் வாழ்ந்து வந்தனர். 'இல்லற இயல் வழாதிருந்த

புலவர்' (அவயவ அறிக்கை) என்று ஆசிரியரும் இவருடைய நெறி தவறுமையைப் புகழ்ந்துள்ளனர். மறந்தும் புறந்தொழாத பற்றுடன் இறைவனையே வழிபட்டு வந்த சாஸ்திரியாருக்கு, அவ் விறைவன் திருவருளே ஒரு திருவுருக் கொண்டு எதிர்ப்பட்டது என்னுமாறு தீக்ஷா குரு ஒருவர் கிடைத்தனர். அவரே **மாங்குடி மணியசிவனார்.** தேவீ பக்தராகிய இக்கோவிந்த சாஸ்திரிகள் ஒரு நாள், மதுரைக்கு வந்திருந்த மணியசிவனாரைப் பற்றிக் கேள்வியுற்று, அவரிடம் வந்து நமஸ்கரித்து நின்றனர். அப்போது மணியசிவனார் தம்மை வணங்கி நின்ற சாஸ்திரிகளைப் பார்த்துச் 'சாக்த சார்வ பௌமராகக் காணப்படுகின்றதே' என்று கூறிக்கொண்டே அநேக சாஸ்திர விஷயங்களைப்பற்றி விரிவாகக் கேள்விகள் கேட்டனர். எல்லாக் கேள்விகளுக்கும் மணியசிவனார் மகிழும்படி விடையளித்த சாஸ்திரிகளுக்குச் சிவதத்துவத்தை யுபதேசித்து ஏகலிங்க சிவார்ச்சனை செய்யுமாறு உத்தரவு கொடுத்தனர். இச்சிவனார் அருள் தொடர்பு நேர்ந்ததிலிருந்து கோவிந்த சாஸ்திரியாரும், சிவனாரது சீடர்கள் பலருள்ளும் தலைமை வகிப்பாராயினார்; சைவத்திலே மேலும் மேலும் ஈடுபடத் தொடங்கிச் சிவதீட்சையும் பெற்றுக் கொண்டனர்; கோவிந்த சாஸ்திரியாரும் கோவிந்த சிவனாராயினார்.

இவ்வாறு நியம குருவாய் வந்து வாய்த்த மாங்குடி மணியசிவனார் † சிவானுபூதிச் செல்வர். மாங்குடி கிராமத்தைச் சேர்ந்த சைவப் பிராம்மணர்களே பொதுவாகச் சிவபக்தியிற் சிறந்தவர்கள். ஆயினும் மணிய சிவனார் அனுபூதி பெற்றவர். இப்பெரியாருக்குப் பல ஞான சீடர்கள் வாய்த்திருந்தனர். இவர்களைப்பற்றியெல்லாம் விரிவாக ஆசிரியர் இயற்றியுள்ள 'மணிய சிவனார் சரித்

† அனுபூதி - பின்பு ஏற்படும் ஐசுவரியம். அனு - பின்பு உண்டாகும்; பூதி - ஐசுவரியம்.

திரம்' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. மணிய சிவனார் யோகம் முதலியன பயில்பவர்; சித்திகள் பலவும் கைவந்தவர். ‡ 'அட்டாங்கயோகம் பயின்றான்' (மணிய சிவனார் கலிவெண்பா), 'அரசங்கம் யாவும் அடைந்த குரிசில்' என்று ஆசிரியரும் கூறுவர். இச் சீடருள்ளும் கோவிந்தசிவனார், ஸ்ரீனிவாசசிவனார், சுப்பிரமணிய சிவனார் என்பவர்கள் சிறந்து விளங்கியவர்கள். இம் மூவரும் ஸ்ரீ மணியசிவனாரிடம் சிவதீட்சையும் ஞானோபதேசமும் பெற்ற சீடர்கள் ஆவர். சுப்பிரமணிய சிவனார் தினந் தோறும் சிவதரிசனம் செய்தே உணவு கொள்ளும் விரதம் மேற்கொண்டவர் என்பதை ஆசிரியரும் 'அயின்று நஞ்சைக் கண்டங் கறுத்தான் அடிமலர் தரிசனம் அனுதினம் செய் யும் சுப்பிரமணிய சிவன்' ¶ (அவயவ அறிக்கை) என்னு மிடத்துக் கூறுவர். இச் சிவனார் சோமசுந்தரபுரம் சுப் பிரமணிய சாஸ்திரிகள் என்னும் பெயர் பெற்றவர்; சிந்தாமணி கணபதி யுபாசனை செய்பவர். இம்மூவரும் சிறந்த சிவபக்தர்களாய் விளங்கி வந்தனர்.

அவர்களுளெல்லாம் தலைமையாய் விளங்கியவர் கோவிந்த சிவனார் அவர்களே! இறைவன் திருவருளா லும், அனுபூதிபெற்ற மணிய சிவனாருடைய தொடர் பாலும், கோவிந்த சிவனாரும் யோகப் பயிற்சி முதலிய சாதனங்களைக் கையாண்டு வந்தனர். இப்பெரியார் மூச் சினை யடக்கல், நீர்மேல் நிற்றல், நெருப்பில் நடத்தல் முத லிய செயற்கரிய செயல்களைச் செய்தவர். 'நல்யோகம் பயின்ற கோவிந்த பரமாசிரியன்' (அவயவ அறிக்கை) என்பது ஆசிரியர் வாக்கு. வேதம் முழுவதும் கைவந்தவ

‡ அட்டாங்கயோகம் - இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என்னும் எட்டு உறுப்புக்களை யடக்கிய யோகப் பயிற்சி.

¶ 'நஞ்சை அயின்று கண்டம் கறுத்தான்' என்று சொற்களை மாற்றிப் பொருள் காண்க.

ராதலாலும், சாமத்தையும் அதர்வ வேதத்திற் கூறப் பட்டுள்ள மந்திரங்களையும் ஐயந்திரிபற அறிந்திருந்ததா லும் தன்னிகரின்றி விளங்கியவர்.

இவருக்கு மூவர் அறிவறிந்த மக்கள் பிறந்தனர். இவருள் மூத்தவர் சுந்தரேச சாஸ்திரியார்; இரண்டா மவர் ஆனந்தவல்லி அம்மையார்; மூன்றாமவரே தமிழுய் யப் பிறந்த ஆசிரியர் **சூரியநாராயண சாஸ்திரியார்.**

---

## அத்தியாயம் 2

## உயர்நிலைப்பள்ளி வாழ்க்கை

ஆசிரியர் சூரிய நாராயண சாஸ்திரியார் விளாச் சேரியில் † 1870-ம் ஆண்டு ஜூலை மாதம் 6-ம் தேதி புதன்கிழமை பிறந்தார். இவருக்கு இவருடைய பாட்ட னரான சூரிய நாராயண சாஸ்திரியாரின் பெயரே இடப் பட்டது. இப்பெயர் வரன்முறை தவறாமல் ஆசிரியர் குடும்பத்தில் ஒன்றுவிட்டொரு தலைமுறையாக இடப் பட்டுவரும் பெயராகும். ஆசிரியர் பிறந்த குலம் கல்வி கேள்விகளாலும், தூய ஒழுக்கத்தாலும் நிரம்பிய பெரி யோர் உதித்த குலம்; இவர் பூண்ட தொடர்பு சிவானு பூதிச் செல்வராகிய ஸ்ரீ மணியசிவனார் தம் பேரருள் பெற்ற தந்தையார் கோவிந்தசிவனாருடைய தொடர்பு; இக் காரணங்களால் இவர் சிறு பிராயத்திலிருந்தே கல்வியில் மிகுந்த ஊக்க முடையவராயிருந்தனர்; அன்றி யும் 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண' வேண்டும் என்னும் பேரவா உடையவராயு மிருந்தனர். மிகுந்த ஊக்கமும், ஏதொன் றையும் குறிப்பாக உற்றுக் கவனித்துப் பின்பு மறவாமல்

---

† இதற்குச் சரியான தமிழ் நாள்: பிரமோதூத ஆண்டு ஆனி மாதம் 24-ம் தேதி, சித்திரை நட்சத்திரம்—புதன்கிழமை.

மனத்திலிருத்திக் கொள்ளும் பண்பும், ஆராய்ந்தறிந்தே எக்கருத்தையும் மேற்கொள்ளும் குணமும் ஆசிரியரிடத்தில் அப்பொழுதே காணப்பட்டன.

பண்டைக் காலந்தொட்டு வடமொழி தென்மொழி இரண்டும் பயின்று வந்த ஆசிரியர் குலத்தின் பழுத்த பழம் எனத்தகும் கோவிந்த சிவனார் தமது அருமை மகனை சூரிய நாராயணனையும் தமிழ்ப் பள்ளியிற் சேர்த்துத் தமிழும் ஆரம்பக்கணிதமும் கற்கும்படி ஏற்பாடு செய்தனர்; அன்றியும் சிறு பிராயத்திலிருந்தே தாமும் வட மொழியை வரன் முறையாகத் தமது புதல்வனுக்கும் கற்பிப்பாராயினர். இவ்வாறு கல்வி கற்பிக்குங்கால், தம் மகனது மதி நுட்பத்தையாய்ந்தறிந்து வியந்த கோவிந்த சிவனார் தமது பிள்ளை பத்துப் பிராயம் எய்தியதும் (1880-ம் ஆண்டில்), மதுரையை யடுத்த பசுமலையிலுள்ள கல்லூரியில் சேர்த்து உயர்தரக் கல்வி பயிலுமாறு ஏற்படுத்தினர். கல்லூரிக்கும் தமது விளாச்சேரி மனைக்கும் ஏறக்குறைய ஒரு மைல் தூரமிருக்கும்; பெரும்பாலும் ஆசிரியர் பள்ளிக்கு நடந்து செல்லுவார்; சிற்சில சமயங்களில் போக்கு வண்டிகளில் நண்பர்களுடன் கூடிச் செல்வது முண்டு. இவ்வாறு ஆசிரியரது பள்ளிக்கூட ஆரம்பக் கல்வி தொடங்கியது.

இளமையில் வடமொழிமீது அளவிறந்த ஆர்வமும் அம்மொழியில் திறமையும் பெற்றிருந்த ஆசிரியர், வீட்டில் தமக்குத் தாய்மொழியினைச் சரிவரக் கற்பிப்பார் இல்லாததால் தமிழ் மொழிப் பயிற்சியில் சிறிது ஆர்வங் குன்றி யிருந்தனர். தமிழ் என்றால் உமிழ் என்று கூறி விலக்கும்படி செய்யும் சில பழைய போலித் தமிழாசிரியர்கள் தமிழில் ஆர்வமில்லாத மாணவர்களுக்கு அம் மொழியினிடத்தில் ஆர்வமூட்டும் இயல்பற்றவர் என்பது யாவரும் அறிந்ததன்றோ! ஆசிரியரின் உயர்தரப்பள்ளியில் தமிழ் போதிக்கும் பணி மேற்கொண்டிருந்த தமிழா

சிரியர் ஒருமுறை இவரைக் கடிந்துகொண்டு, தமிழை நன்கு பயில வேண்டுவதன் நியதியினை விளக்கமாய் எடுத்துரைக்கவே, அது முதற் கொண்டு ஆசிரியரும் தமிழினைத் தீவிரமாய்க் கற்கப் புகுந்தனர். பள்ளியிற் பயிலுங் காலத்திலேயே பலதிறப்பட்ட ஆக்க வேலைகளையும், ஊக்க உணர்ச்சி மிகுதியுடன் ஆசிரியர் தலைப்பட்டு இயற்றுவராயினர். மனோ விருத்திக்கான நூற் பயிற்சியேயல்லாமல் உடல் நலம் கருதித் தேகப் பயிற்சி பலவும் கையாண்டு வந்தனர்; சிறு பிராயத்திலேயே சிலம்பம், மல்யுத்தம் முதலிய விளையாட்டுக்களைப் பயின்றும் வந்தனர். இவ் விளையாட்டுக்களை ஆசிரியர் மதுரை யானை மாவுத்தர் **பாலகிருஷ்ண நாயுடு** என்பவரிடம் பயின்றனர். அன்றியும் கல்லூரியில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் முதன்மையாக நின்று பற்பல பரிசுகளும் பதக்கங்களும் பெற்றனர். இளமை முதல் துடுக்கும் தைரியமும் மிகுந்திருந்த ஆசிரியருக்குத் தமது தமையனாரிடம் நிறைந்த பயபக்தி விசுவாசம் உண்டு. ஆரம்பத்திலேயே படிப்பில் அளவிறந்த ஊக்கம் தோற்றிய ஆசிரியர் பசுமலைப் பள்ளியை விட்டு மதுரை * **ஜில்லா உயர்நிலைப்பள்ளியில்** மேற்படிப்பை முன்னிட்டுச் சேர்ந்தனர்.

இது இவ்வாறாக, மேலும் மேலும் தமிழ்மொழியினிடத்தில் ஆசிரியருக்கு அளவு கடந்த ஆர்வம் வளர்ந்து வருவதை யுணர்ந்த கோவிந்த சிவனார், தமது மகனை மதுரைக் கலாசாலையில் ஆசிரியராயிருந்த மகா வித்வான் **சு. சபாபதி முதலியாரவர்களிடம்** தமிழ் பயிலுமாறு செய்வித்தனர். சபாபதி முதலியாரும் (இருபத்திராண்டுகள் கலாசாலையில் அலுவல் பார்த்து விட்டு 1880-ம் ஆண்டில்) உத்தியோகத்தினின்றும் ஓய்வு எடுத்துக் கொண்டு தமிழ் அபிமானிகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தலே தமது கடமையும் இன்பமுமாகக் கருதி வாழ்ந்து வந்தவர்.

* Zillah High School, Madura.

ஆகவே, ஆசிரியர் தமது பதினைந்தாம் வயதிலிருந்து (1885) சபாபதி முதலியாரிடம் தமிழும், தந்தையாரிடம் வடமொழியும், பள்ளியில் ஆங்கிலமும் பயின்று வந்தனர். அதிதீவிர புத்தியுடைய ஆசிரியர் வரன் முறையாய்த் தமிழைக் கற்றுணர்ந்து சிறிது காலத்திற்குள் தொல்காப்பியம் முதலிய சங்க இலக்கண நூல்களையும் ஐயந் திரிபுகள் ஏதுமின்றி ஓதி அவற்றுள் நல்லுணர்ச்சி பெற்று, சங்க இலக்கியங்களாகிய தொகை நூல்களைப் பல முறையும் கற்பதில் மிகவும் ஈடுபட்டவராயிருந்தனர். அந்நாளில் மதுரை ஜில்லா உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியாராயிருந்த ஜான் பாலகிருஷ்ண நாயுடு என்பார் ஆசிரியர் எழுதிய ஒரு கட்டுரையைப் பாராட்டி, 'பகலவா! நீ எழுதும் எழுத்தெல்லாம் எனக்கு இருளாயிருக்கிறதே!' என்று கூறினராம்.

மகா வித்வான் சபாபதி முதலியார், அக்காலத்தில் விளங்கிய பெருந்தமிழ்ப் புலவர்களுள் ஒருவராயிருந்தனர். 'இவர் வடமொழியும் ஆங்கில மொழியும் ஒருங்கு கைவந்தவர்; கணித நூல் வல்ல கட்டுரையாளர்; தர்க்க நூல் வல்ல தண்டமிழ் வாணர்; அறிவு நூல் பயின்ற அருங்கலைக் குரிசில்; நற்குணச் செல்வர்.'

'† ஆங்கிலகீர் வாண வருமொழிக டாம்பயின்றோய்!
தாங்கு கணிதம்வல் தார்க்கிகர்தங் கோமானே'

தம்மை யணுகித் தமிழ் பயில்வோர்க்கெல்லாம் எளியராயிருந்தவர்;— ஆசிரியரோடு, இவரிடம் தமிழ் பயின்றவர்கள் இருபதின்மர்—அவர் இயற்றிய நூல்களுள் 'திருப்பரங்கிரிக் குமரன் அந்தாதி, திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழ், மதுரை மாலை' என்பன தலைசிறந்தவை. 'திருப்பரங்கிரிக் குமரன் அந்தாதி

† கீர்வாணம்=வடமொழி. தார்க்கிகர்=தர்க்க சாஸ்திரத்தில் வல்லவர். பாவலர் விருந்து—கையறுநிலை.

யமகமாக அமைத்துப் பாடப்பட்டது; 'மதுரை மாலை' சோமசுந்தரக் கடவுள் மீது நூறு சிலேடை வெண்பாக்களாக இயற்றப்பட்டது. இப் புலவருக்குத் தமிழைத் தம்மிடம் செவ்விதின் ஆராய்ந்து பாடம் கேட்கும் மாணவரான சாஸ்திரியாரிடத்தில் அளவிறந்த அன்பு உண்டு. அறிவிஞுவாகத் தாம் கேட்கும் கேள்விகளுக்கு சாஸ்திரியார் தடையின்றி அளிக்கும் அரிய விடைகள் எப்போதும் இன்பம் பயப்பனவாயிருந்தது கருதி, முதலியாரும் தமது மாணவனை மெச்சிப் புகழ்ந்து தழுவியது முண்டு.

'† ..........................................நின்
செம்மை விஞக்கட்குச் சிற்சிலகா லெம்விடைகேட்
டெம்மைத் தழீஇயவனை யெவ்வுலகிற் காண்குதுமோ !'

என்று இதனை ஆசிரியரே கூறியுள்ளனர். கிடைத்தற்கரிய பேராசிரியருடைய உதவியாலும், தமது நுண்ணறிவுத் திறத்தாலும், 1885-ம் ஆண்டு வரன்முறையாகத் தமிழைக் கற்கப் புகுந்த ஆசிரியர் தமக்கு இருபது ஆண்டு நிரம்பும் முன்னரே தமிழில் ஆழ்ந்த அறிவு படைத்து விளங்கினர். அன்றியும் இனிமை வாய்ந்த தமிழ்ச் செய்யுட்களை மிக விரைவாய்ப் பாடுந்தன்மையினையும் அப்பொழுதே பெற்றிருந்தனர். அக்காலத்தே (1889), அதாவது இவரது பத்தொன்பதாம் வயதில், இவர் இயற்றிய நூல் '**மாலா பஞ்சகம்**' என்பதாம்; இது இவரால் தோத்திர ரூபமாக இயற்றப்பட்ட வொரு நூலாகும். இதனை விரைவில் வெளியிட வேண்டும் என்று ஆசிரியர் பலகாலும் கூறியதுண்டு; ஆயினும் ஏனோ அது இதுகாறும் வெளிவரும் பேறு பெறவில்லை. யாழ்ப்பாணத்து நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் எழுதிய 'சாதன சதுஷ்டய தர்ப்பணம்' என்னும் சிறு நூலுக்கு இவரும் இவரது ஆசிரியர் சபாபதி முதலியாரும்

† பாவலர் விருந்து—கையறுநிலை.

சேர்ந்து 'சாதன சதுஷ்டய தர்ப்பண வச்சிர சூசிகா என்ற கண்டன நூலும் வெளியிட்டனரென்பர்.

இவ்வாறே ஆசிரியரும் 1890-ம் ஆண்டு வரையில் மதுரைக் கல்லூரியில் படித்து எப். ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேறினர். இதன் பயனாக **பாஸ்கர சேதுபதி அரசர்** உதவிச் சம்பளமும் பெற்றனர். மேலும் மேற்படிப்பில் விருப்பம் கொண்டிருந்த இவரைச் சென்னைக்கு அனுப்பி உயர்தரக் கல்லூரியில் பி. ஏ. படிப்பிற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்விக்க இவர் தந்தையாரும் விரும்பினர். இக்காலத்தில் சாஸ்திரியார் மதுரைச் **சோமசுந்தர முதலியார்** என்னும் செல்வருடைய குமாரர் **விசுவநாத முதலியாரின்** நெருங்கிய நட்பைப் பெற்றிருந்தனர். இந்த முதிர்ந்த நட்பின் விளைவாய் முதலியாரும் சாஸ்திரியாரைச் சென்னைக்கு அழைத்துச் சென்று, சென்னைக் கிருத்துவக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் தானும் சாஸ்திரியாரும் சேர்ந்து, உடனிருந்து வேண்டும் பல உதவியும் புரிந்தனர். அன்றியும் விசுவநாத முதலியாரும் சாஸ்திரியாரும் சென்னையிலேயே ஒரு வீட்டின் மேல் மாடியில் ஒரு அறையில் இருந்து வந்தனர். விசுவநாத முதலியார் மட்டும் தன் மனைவியுடன் வீட்டின் ஒரு பக்கத்தில் குடியிருந்து வந்தனர். இவர்கள் குடியிருந்து வந்த வீட்டின் சொந்தக்காரர் **செங்கல்வராய முதலியார்** என்னும் ஓர் பெருந்தகையாளர். தன் வீட்டில் வசித்துக் கொண்டு பள்ளியில் படித்து வந்த சாஸ்திரியாரின் வசதிகளில் ஒன்றும் குறைவு படாது அவர் கவனித்துக் கொண்டார். இவ்வாறாகச் சாஸ்திரியாரும் முதலியாரும் தங்களது பி. ஏ. படிப்பினைச் சென்னைக் கிருத்துவக் கல்லூரியில் 1890-ம் ஆண்டில் தொடங்கினர்.

## அத்தியாயம் 3

# கல்லூரி வாழ்க்கை

அக்காலத்தில் சென்னையில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்த உயர்தரக் கல்லூரிகள் ராஜதானிக் கல்லூரி, கிருத்துவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி ஆகிய மூன்றுமே. இவற்றுள் ராஜதானிக் கல்லூரி அரசாங்கத்தாராலும், பச்சையப்பன் கல்லூரி பச்சையப்ப முதலியார் என்னும் வள்ளல் ஒதுக்கி வைத்த நிதியினின்று அவர் கருத்துக்களுக்கிணங்க ஒரு குழுவினராலும் நடத்தப்பெற்று வருவனவாம். கிருத்துவக் கல்லூரியோ, 19-ம் நூற்றுண்டிறுதியிலும் இந் நூற்றுண்டின் தொடக்கத்திலும் 'மில்லர் கல்லூரி' என்னும் பெயரோடு வழங்கி வந்தது; ஏனெனில் டாக்டர் மில்லர் என்னும் பெருந்தகையாளரே இக்கல்லூரியை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தவர்.

இந்த டாக்டர் மில்லர் என்பவர் ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஒரு பெரியார்; கல்வி கேள்விகளிற் சிறந்தவர். இல்வாழ்க்கையின் இன்பங்களைத் துறந்தவர். இதை '† மெல்லியலார் தம் வலையில் வீழாக் குருமணி' என்று மில்லர் அவர்களைப் புகழுமாற்ருல் ஆசிரியர் குறிக்கின்றனர். கல்விச் சாலைகளை ஏற்படுத்திக் கல்வி பரப்புவதையே தமது வாழ்க்கைப் பயனுகக் கருதியவர். அன்றியும் அவர் மிகப் பணக்காரர். ஸ்காட்லாந்து தேசத்தில் தர்ஸோ என்னுமிடத்தில் அவருக்கு ஏராளமான நிலபுலங்கள் இருந்தன. இவைகளிலிருந்து வந்த வரும்படி முழுவதையும் தமது கல்லூரிக்காகவே செலவிட்டு வந்தனர். மாணவர்களுக்கு விடுதிகள் ஏற்படுத்தவும், கல்லூரிக்காகப் புதுக்கட்டிடங்கள் கட்டுவதற்கும் இவர் பணத்

---

† பாவலர் விருந்து—ஆசானுரு நிலை.

தில் பெரும்பாலும் செலவிடப்பட்டது. இக்கல்லூரியில் படித்துவந்த மாணவர்களுக்கெல்லாம் இவர் ஒரு கடவுள் அவதாரமாகவே தோன்றி வந்தார். இப் பெரியார் தலைமை வகித்து நடத்திய கல்லூரியில் தமது மக்களை படிக்கவைப்பதே 'தந்தை மகற்காற்றும் நன்றி' என்று பெற்றோர் பலரும் கருதுவராயினர்.

கிருத்துவக் கல்லூரியில் ஆசிரியத் தொழில் நடத்தி வந்ததோடு அக்கல்லூரிக்குத் தலைமையும் வகித்துவந்த டாக்டர் மில்லர், சென்னைச் சட்டசபையிலும் ஒரு அங்கத்தினராக இருந்தனர்; அன்றியும் சென்னைச் சர்வகலாசாலை உப தலைவராகவும் இருந்து வந்தனர். அவர் எந்த வேலையை மேற்கொண்டு பார்த்து வந்தபோதிலும், தமது மாணவர்களது நன்மையொன்றே அவர் கவனத்தில் முதன்மை பெற்று வந்தது. தம்மிடம் கல்வி பயிலவரும் மாணவர்களில் ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசத்தை இவர் பாராட்டுவதில்லை. செல்வ வந்தர் வீட்டுப் பிள்ளை என்பதற்காகச் சலுகை காட்டுகிறதுமில்லை; எளியவர் வீட்டுப்பிள்ளை என்பதற்காக ஏளனஞ் செய்வதுமில்லை. மாணவர்களோடு சரிசமமாய் அளவளாவிப் பழகும் வித்தையை இவரைப்போல் கற்றவர் யாருமில்லை; ஆயினும் இவர் கல்லூரியில், மாணவர்களுக்குப் பொறுப்புணர்ச்சியும், அடக்கமும், ஒழுக்கமும் வளர்ந்து கொண்டேதான் வந்தன. எளிய மாணவர்களிடத்திலேயே இவர் பெரும்பாலும் நெருங்கித் தமது அனுபவமுது மொழிகளாலும் இன்சொற்களாலும் அவர்களுக்குத் தைரியம் ஊட்டுவதுடன் அவர்களுக்குச் சாப்பாடு, புத்தகம், உடை முதலான எவ்விதத் தேவைக்கும் குறைவு ஏற்படாதபடியும் கவனித்துக் கொள்வார்.

ஆகவே, இக்கிருத்துவக் கல்லூரியில் கல்வி பயில வந்து சேர்ந்த நமது சாஸ்திரியார், தமது நுண்ணிய அறிவிற்கேற்ற ஆழ்ந்த பரந்த கல்வி கற்கும் வசதிகள் பலவும்

உள்ள ஒரு கல்விச்சாலையையே அடைந்தனர் என்பது கூறாமலே விளங்கும். கூரிய அறிவு வாய்ந்த நன்மாணாக்கர் வாய்க்கப் பெறுதலையே தமது வாழ்நாளின் குறிக் கோளாகக் கொண்டு வாழ்ந்த மில்லர் அவர்களும், பேரா சிரியர் எங்கிருப்பினும் அவரிடம் கற்க வேண்டுவன வற்றையெல்லாம் முறைப்படி ஐயந்திரிபறக் கற்கும் இயல்பு வாய்த்திருந்த நமது சாஸ்திரியாரும் ஒருங்கு சேர்ந்து பழகும் நிலைமையில் கல்வி, நடைமுறை வரை யறைகளை மீறிப் பல துறைகளிலும் பரவிற்று என்பதில் ஓர் வியப்புமில்லை! மில்லர் ஆசிரியருக்கும் சூரியநாரா யண சாஸ்திரியாரிடம் தொடக்கத்திலிருந்தே மிகவும் உயர்ந்த நன்மதிப்பு ஏற்பட்டு அது மேலும் மேலும் வளர்ந்து வந்தது. சாஸ்திரியாரும் தமது ஆங்கில ஆசிரி யர் மில்லரைத் தமது தமிழாசிரியர் சபாபதி முதலியா ருக்கு அடுத்தபடியாக நன்கு மதிக்கத் தொடங்கினர். இந்த நல்லுணர்வு வளர்வதற்கு ஆதிகாரணமாக ஒரு நிகழ்ச்சி நடந்ததுண்டு; அது சாஸ்திரியாரது கல்லூரி மாணவ வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில் ஒருநாள் வகுப் பில் நிகழ்ந்தது.

சாஸ்திரியார் கல்லூரியில் சேர்ந்து பல நாட்கள் ஆகிவிடவில்லை. ஒருநாள் பி. ஏ. முதல் வகுப்பிற்கு ஷேக்ஸ்பியர் பாடம் நடத்துவதற்கு மில்லர் துரை வழக் கம்போல் வகுப்பிற்குள் நுழைந்தனர். அறிவும் ஆற்ற லும் உள்ள இடங்களையெல்லாம் துருவி ஆராய்ந்து கண்டுகொள்வதில் கைதேர்ந்த மில்லரும், வகுப்பின் முன்னணியில் உட்கார்ந்திருந்த சாஸ்திரியாரைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே, தாமும் மேடையேறி உட்கார்ந்து கொண்டனர். பிறகு முறைப்படி மாணவர்கள் எல் லோரும் வந்துள்ளனரா என்றறிய வேண்டி அவர் களுடைய பெயர்களை ஒவ்வொன்றாகக் கூப்பிட்டுக் கொண்டு வரவே, நமது சாஸ்திரியாரது பெயர் வந்து

ஆசிரியர் மில்லர் நாவிற்கு ஓர் தடைவிதித்தது. ஐரோப்பியரான மில்லருக்குச் 'சூரியநாராயணன்' என்னும் நீண்ட பெயர் அசாத்தியமான பெயராகிவிட்டது. அந்தப் பெயரோடு சிறிதுநேரம் போர் புரிந்துவிட்டு, இவ்வளவு உச்சரிக்க முடியாத நீண்ட பெயருடைய மாணவன் யார் என்றறிந்துகொள்ள விரும்பிப் புன்முறுவலுடன் தலை நிமிர்ந்து நோக்கினர்; தாம் வகுப்பில் நுழையும்போதே கவனித்துக்கொண்டு வந்த மாணவனுடைய பெயர்தான் அது என்று தெரிந்து கொண்டார்.

'உன்னுடைய சிக்கலான பெயரை உச்சரிக்க என்னால் இயலவில்லையே; நீ அந்தப் பெயரைக் கொஞ்சம் மாற்றிக்கொள்ளக் கூடாதோ' என்று மில்லர் துரை கேலியாகக் கேட்டனர்.

'ஆகா, அப்படியே செய்ய முயலுகிறேன்' என்று மாணவனிடமிருந்து பதில் வந்தது.

சாஸ்திரியாரும் ஆசிரியர் கட்டளையைத் தலைமேற்கொண்டு, நடந்ததைக் கல்லூரிக் காரியாலயத்தில் சொல்லித் தனது பெயரை மாற்றிக்கொண்டு விட்டனர்.

அடுத்தமுறை மில்லரும் வகுப்பிற்கு வந்துசேர்ந்தனர். தனது பலதிறப்பட்ட அலுவல்களுக்கிடையே மிகச்சிறிய நிகழ்ச்சிகளையும் மறவாமல் நினைவில் வைத்துக்கொள்ளும் வழக்கம் அவருக்கு உண்டு. ஆசிரியர் மில்லர் தான் விளையாட்டிற்குச் சொன்னதற்காக மாணவன் தன் பெயரை மாற்றிக்கொண்டிருப்பான் என்று சிறிதும் எதிர் பார்க்கவில்லை. ஆசிரியர் மில்லர் ஒவ்வொரு மாணவனின் பெயரையும் படித்துக்கொண்டே வந்தார். சாஸ்திரியார் பெயர் வந்ததும் அது மிகப் பெரியதொரு முட்டுக்கட்டையாக இருந்தது; இதைக்காண அவரது வியப்பு மிகுந்தது. முன்பிருந்ததைவிட நீண்டதொரு பெயர் அவர் கண்முன் நின்றது. 'சூரிய நாராயணன்' என்னும் பெயர் 'சூரியநாராயண சாஸ்திரி' என்று மாற்றப்பட்டிருந்தது!

வியப்பு மிகுந்த கண்களோடு மில்லர் நமது சாஸ்திரியாரை ஏறிட்டுப் பார்த்தனர்; அவர் பார்வையிலேயே அவர் கேள்வி தொனித்தது.

'ஆமாம், நீங்கள் கேட்பது தெரிகிறது; பெயரை மாற்றிக்கொள்ளச் சொன்னீர்கள். மாற்றிக்கொண்டு விட்டேன்; நீங்கள் குறுக்கிக்கொள்ளச் சொல்லவில்லையே' என்று மாணவன் தங்குதடையின்றி விடையளித்தான்.

பிற்காலத்தில் தமிழுலகம் விரல் நுனியில் வைத்தெண்ணப் போகும் ஒரு சிலரில் இவன் ஒருவன் என்பதை அறிவாளியான மில்லர் அப்பொழுதே உணர்ந்தனர்.

தைரியத்தையும் பேரறிவையும் கண்டவிடத்தில் தலை தூக்கவிடாது நசுக்கிவிட விரும்பும் சில புல்லறிவாளரைப் போலல்லாமல், டாக்டர் மில்லர் அவை குடிகொண்டிருந்த சாஸ்திரியாரிடம் பேரன்பு காட்டத் தொடங்கினர். அன்று தொட்டுச் சூரியநாராயண சாஸ்திரியாரும் மில்லர் துரையும் மிக நெருங்கிப் பழகத் தொடங்கினர். ஆங்கில மொழியிலுள்ள அருமை பெருமைகளை நமது சாஸ்திரியாருக்கு எடுத்து விளக்கிய மில்லர், தமிழ் மொழியிலுள்ள அருமையான பொருள்களை இவர் மூலமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் பேரவா உடையராயுமிருந்தனர். மில்லர் ஷேக்ஸ்பியர் பாடம் நடத்திய முறையே பெரும்பாலும் சாஸ்திரியாருக்குப் பிற்காலத்தில் நாடகத் தமிழில் மிகுந்த ஊக்கம் உண்டாக்கிற்று என்பது தெளிவு. அன்றியும் ஷேக்ஸ்பியருடைய ஹாம்லட், ஒதெல்லோ, லியர் முதலிய சோக நாடகங்களே தமிழில் **மானவிஜயம்** போன்ற அவலச் சுவை நாடகங்களுக்கு வழிகாட்டிற்று என்பதும் விளங்குகின்றது.

மதுரையில் இருந்த காலத்திலேயே சபாபதி முதலியாரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபுஇன்றிக்

கற்றுணர்ந்திருந்த சாஸ்திரியார் சென்னையில் தமிழ்க் கல்வியோடுகூட ஆங்கிலம், வேதாந்த தத்துவ சாத்திரம் முதலிய கலைப் பயிற்சிகளையும் தீவிரமாக மேற்கொண்டு தமது அறிவைப் பெருக்கி வருவாராயினர். இவரது ஆங்கில அறிவு பிற்காலத்தில், இவர் தமிழில் மேனாட்டு இலக்கிய முறைகள் பலவற்றைப் புகுத்த முயன்றபோது மிகவும் பயன்பட்டது; அன்றியும் நவீன மேனாட்டு மொழியாராய்ச்சி முறைகளைக்கொண்டே இவர் தமது தமிழ்மொழி வரலாற்றினை எழுதியுள்ளனராகையால், அதற்கும் இவரது ஆங்கிலப் படிப்பு உறுதுணையாயிருந்திருக்கிறது. 'யாம் எமது ஆங்கிலக் கல்வியின் பயனாகப் பழைய தமிழ் நூற் கருத்துக்கள் சிலவற்றோடு முரணிப் புதுக் கருத்துக்கள் சில ஆங்காங்குக் காட்டியிருத்தல் பற்றிப் பேரறிவாளர் எம்மையிகழாது நூன் முழுவதும் உற்று நோக்கி இஃது அமையும் அமையாது என இறுதியிற் கூறுக' என்று ஆசிரியரே தமது தமிழ்மொழி வரலாற்றின் முகவுரையிற் கூறியுள்ளனர். இவர் இயற்கையிலேயே பரந்த கருத்துக்களை யுடையவராய் இருந்ததால் தத்துவ சாத்திர ஆராய்ச்சியால் இவரது இயற்கைக் குணம் மிகுந்த பொலிவுற்று விளங்கியது. இவரது இலக்கியங்களிலேயும் பல புதுக் கருத்துக்கள் மலிந்து கிடப்பதற்கும் இதுவே காரணமாகும். கல்லூரியில் இவருக்குத் தத்துவ சாத்திரப் பேராசிரியராக அமைந்தவர் பொறுமையே உருவெடுத்த, **ரெவரண்டு கூப்பர்** என்னும் ஐரோப்பியர்.

சாஸ்திரியார் கிருத்துவக் கல்லூரியில் படித்து வந்த பொழுது, ஆங்கிலப் பாடப் புத்தகங்களில் ஒன்றாகத் தெனிசன் இயற்றிய (*Morte D' Arthur*) 'ஆர்தரின் இறுதி' என்னும் செய்யுள் நூல் வைக்கப்பட்டிருந்தது. மில்லர் ஆங்கிலச் செய்யுள் நூல்களைப் பாடம் சொல்லுவதில் ..நிகரற்றவர்; அன்றியும் அந்நூல்களைத் தாமே

பல முறை படித்துப் படித்து இன்புறுவர். 'Morte D' Arthur'-ல் வரும் கீழ்க்கண்ட பகுதி அவரது உள்ளத்தை மிகவும் பிணித்தது.

> 'So said he, and the barge with oar and sail
> Moved from the brink, like some full-breasted swan'

ஆர்தர் அரசன் இறக்குந்தறுவாயில் இருக்கிறான். அவனது மனைவியரோடு அவ்வரசனை அழகிய ஒரு படகில் வைத்து நதியில் செலுத்தி விடுகிறார்கள். இந்தக் கட்டத்தில், படகு நதியில் அழகாகச் செல்லுகிற காட்சியையே மேலே காட்டிய இரண்டடிகளும் வருணிக்கின்றன. அந்தப் படகு தனது துடுப்புக்களை ஆட்டி அசைத்துக் கொண்டு நீரில் மிதந்து செல்வது ஒரு அழகிய அன்னப் பறவை தனது சிறகுகளை விசிறிக்கொண்டு நீரில் நீந்துவதுபோல் தோன்றுகிறது, புலவனது அகக் கண்களுக்கு. இது மாதிரியான வருணனை தமிழில் எங்கேயாவது உண்டா என்று அறிந்துகொள்ளவேண்டும் என்னும் இயற்கை அவா பேராசிரியர் மில்லருக்கு உண்டாயிற்று. கேட்ட மாத்திரத்தில் திருப்திகரமாக விடையளிக்கக் கூடியவர் நமது சாஸ்திரியார்தான் என்று அவருக்குத் தோன்றிற்று.

மற்றொரு நாள் பி. ஏ. வகுப்பிற்கு ஆங்கிலம் நடத்த வந்த மில்லருக்கு, சாஸ்திரியாரைக் கண்டதும் Morte D' Arthur அடிகள் நினைவுக்கு வந்தன.

'அன்புடைய மாணவ! இன்று உன்னோடு ஒரு சிறு இலக்கியப் போர் புரிய விரும்புகிறேன். தமிழின் பெருமையைப் பற்றிச் சளைப்பில்லாமல் எப்போதும் பேசி வருகிறாயே! எனக்கு உன்னிடம் ஒன்று கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று இருக்கிறது. ஆல்பிரெட் தெனிசனுடைய Morte D' Arthur-ல்

'So said he, and the barge with oar and sail
Moved from the brink, like some full-breasted swan'

என்று அழகிய உவமைப் பகுதி ஒன்று வருவது உனக்குத் தெரியுமே! அதே அல்லது அதுபோன்ற உவமை தமிழிலக்கியத்தில் எங்கேயாவது வந்திருக்கிறதா? இருந்தால் சொல் பார்ப்போம்' என்று புன்முறுவலுடன் கேட்டார்; அது மாதிரி உவமை நிச்சயம் தமிழில் இராது என்று அவர் உண்மையில் நம்பியதையே அந்தப் புன்முறுவல் வெளிப்படுத்தியது.

இலக்கிய விஷயங்களில் யார் எந்தச் சவால் விடுத்தாலும் துணிவுடன் எதிர் நோக்கும் இயல்புடைய சாஸ்திரியார் :

'இருக்கிறது; தெனிசனுக்கு எட்டு அல்லது ஒன்பது நூற்றுண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட ஒரு தமிழ்க் காவியத்தில் இந்த உவமை இன்னும் அழகாக எடுத்தாளப்பட்டிருக்கிறது' என்றார். 'ஆகா! அப்படியா! அப்படியானால் எங்கே அதை எடுத்துச் சொல், கேட்போம்' என்றார் ஆவலுடன் தலைமையாசிரியரும்.

"இந்தச் செய்யுளைக் கேளுங்கள் :

† 'விடுநதி கடிதென்றான் மெய்யுயி ரனையானு
முடுகின நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினின் மடவன்னக் கதியது செலநின்று
ரிடருற மறையோரு மெரியுறு மெழுகானார்.'

இது கம்பன் தரும் காட்சிகளில் ஒன்று; சீதாராம லக்ஷ

† கம்பராமாயணம். அயோத்தியா காண்டம், கங்கைப் படலம். கடிது - விரைவாக; மெய்யுயிர் அனையான் - உடலுக்கு உயிர் போல் படைப்பிற்குக் காரணனான இறைவனது அம்சமான ராமன்; நாவாய் - படகு; இடர் - துன்பம்; மறையோர் - ரிஷிகள் முதலிய வேதம் வல்லவர்கள்; எரியுறு மெழுகானார் - அனற்பட்ட மெழுகுபோல் உருகுவாராயினர்.

மணர்கள் கங்கையை ஓடத்தாற் கடக்கும் காட்சி; குகன் படகை ஓட்டுகிருன்; 'முடுகின நெடுநாவாய், முரிதிரை நெடுநீர்வாய்க் கடிதினின் மடவன்னக் கதியது செல நின்ருர்.' இங்கே படகின் செலவிற்கு மட அன்னத்தின் அசைவை ஒப்பிடுகிருர்; இதே உவமைதான் தெனிசனும் பிற்காலத்தில் எடுத்தாண்டது" என்று எடுத்துரைத்தார்.

இதைக் கேட்ட டாக்டர் மில்லர் புதையல் கண்டெடுத்த வறியவனைப் போல் மகிழ்ச்சி கொண்டார்; அன்றியும் தமது மாணவனது தமிழறிவில் மிகுந்த பெருமையும் அடைந்தார்.

கல்லூரியில் மாணவராயிருந்த காலத்திலேயே இவரது விடாஉழைப்பு, சுறுசுறுப்பு, சுயநலமற்ற தன்மை, செல்வத்தை ஒரு பொருளாக மதியாத பண்பு முதலிய நற்குணங்கள் தெளிவாய் இவரிடத்தில் விளங்கி வந்தன. தாமும் ஒரு மாணவராயிருந்த போதிலும் தம்முடன் படித்த மற்ற மாணவர்களுக்குத் தாம் ஓரளவு ஆசிரியராகவே இருந்துவந்தனர். தமிழாசிரியர் சொல்லிக் கொடுக்கும் பாடங்களில் மாணவர்களுக்கு ஐயம் தோன்றிஞல், அவற்றைத் தீர்ப்பது நமது சாஸ்திரியாரே. இவ்வாறு இவர் மாணவராயிருக்கும்பொழுதே இவரது தமிழறிவு பலரும் அறியுமாறு ஆயிற்று. இவர் பி. ஏ. வகுப்பில் படித்துவந்த காலத்திலே, புத்தகப்படிப்போடு மட்டும் நில்லாது, தாமே பல புதுவகைக் கட்டுரைகள் எழுதியும் வந்தனர், இக்கட்டுரைகள் அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த **விவேக சிந்தாமணி**, என்னும் பத்திரிகை வாயிலாக வெளிப்பட்டு வந்தன.

சென்னைத் தங்கசாலைத் தெருவில் செங்கல்வராய முதலியார் என்பவர் வீட்டு மாடியில் ஓர் அறையில் இவர் வசித்து வந்தனர் என்று முன்பே கூறப்பட்டது. சென்னையில் ஜனநடமாட்டம் மிகுந்த இடத்தில் இவர் குடியிருந்த

தால், ஊரோசை யடங்கிய பின்பே இவர் பெரும்பாலும் தமது புத்தகப் படிப்பை ஆரம்பிப்பது வழக்கம். இரவு வெகுநேரம் வரையில் படித்துக்கொண்டு இருப்பார். இவரது உழைப்பையும், கல்வி மீதுள்ள ஆர்வத்தையும் கண்ட வீட்டுக்காரர்கள் இவருக்குப் பால், பழம் முதலியன உதவித் தங்களுடைய நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொள்வதுண்டு.

அந்த வீட்டுச் சொந்தக்காரருக்கு ஒரு மகன் இருந்தான். அவனும் பள்ளியிற் சென்று படித்து வந்தனன். பெற்றோர்கள் அவனை நோக்கி, 'நம் வீட்டு மாடியில் குடியிருக்கும் பி. ஏ. வகுப்பு மாணவன் எவ்வளவு ஆர்வத்தோடு படிக்கிறான், பார்; நீயும் அப்படியே படிக்கவேண்டும், அவனைப்போல் பெயர் பெற வேண்டும்' என்று புத்தி புகட்டுவது வழக்கம்.

கிருத்துவக் கல்லூரியில் சாஸ்திரியார் படித்துவந்தபோது, அக் கல்லூரித் தமிழாசிரியராக இருந்தவர் ஸ்ரீ **சின்னசாமிப் பிள்ளை** என்பவர். சாஸ்திரியார் கல்லூரியில் சேர்வதற்கு முன்பே மகா வித்வான் சபாபதி முதலியாரிடம் தமிழை நன்றாகப் படித்திருந்ததால் பி. ஏ. வகுப்பிற்கு ஏற்படுத்தியிருந்த பாடப் பகுதிகள் அவருக்கு மிகவும் எளிய பகுதிகளாகவே இருந்தன. தமிழில் தவறாமலும், வேதாந்த தத்துவ சாத்திரத்தில் பெரும்பாலும் சாஸ்திரியாரே வகுப்பில் முதல்வராக இருப்பது வழக்கம்.

1892-ம் ஆண்டு இவர் பி. ஏ. தேர்வுக்குச் சென்றார். எதிர் பார்த்தபடியே தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் ராஜதானியிலேயே முதல்வராகத் தேறினார். ஆங்கிலத்திலும் நல்ல முறையிலேயே தேர்ந்தார். ஷேக்ஸ்பியர், தெனிசன் முதலியோரின் கவிதையில் இவருக்கிருந்த பேரார்வம், மில், ஸ்பென்ஸர் முதலிய மேனாட்டுத் தத்துவாசிரியர்களுடைய கோட்பாடுகளை யாராய்வதிலும் அக் கோட்பாடுகளை நம் நாட்டுத் தத்துவங்களோடு ஒப்பிட்

டுப் பார்ப்பதிலும் இவருக்கிருந்த ஊக்கம், அவா ஆகிய இவற்றை உணர்ந்தவர்களுக்கு இவர் ஆங்கிலத்திலும் தத்துவ சாத்திரத்திலும் உயர்ந்த முறையில் தேறியது வியப்பைத் தராது. தமிழோ—இவருடைய இயற்கை. ஆகவே பலருடைய நன்மதிப்பையும் பெற்று பி. ஏ. தேர்வில் இவர் முதல்வராகத் தேறியது அந்தக் காலத்தில் கூட யாருக்கும் வியப்பை யளிக்கவில்லை.

1893-ம் ஆண்டில் நடந்த பட்டமளிப்பு விழாவில் சாஸ்திரியாரும் பி. ஏ. பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். பி. ஏ. யில் ராஜதானியிலேயே முதல் வகுப்பில் முதல் வராகத் தமிழில் தேர்ச்சி யடைபவர்களுக்கு, பாஸ்கர சேதுபதி அரசர் பெயரால் நிறுவப்பட்ட பொற்பதக்கம் ஒன்று பரிசாக அளிப்பது வழக்கம். அந்தப் பரிசு 1893-ம் ஆண்டு நமது சாஸ்திரியாருக்கே அளிக்கப்பட்டது. இவர் தமது இருபத்துமூன்ருவது வயதிற்குள்ளாகத் தமிழ், வடமொழி, ஆங்கிலம், தத்துவ சாத்திரம் ஆகிய துறை களில் முழுத்தேர்ச்சியும் பெற்று பி. ஏ. பட்டமும், பரிசும், பதக்கமும் பெற்று விளங்கிஞர்.

இவர் சென்னையில் மாணவராக வாசம் செய்து வந்த போது, தமது புத்தகப்படிப்பிலும் தமிழை மேன்மேலும் ஆராய்வதிலும் பெரும் பொழுதைச் செலவிட்டு வந்த தால், பலருடன் கூடிப் பழகும் வாய்ப்பு இவருக்கு ஏற்படவில்லை; அந்த எண்ணமும் இவருக்கு இருந்த தில்லை என்றே தோன்றுகிறது. மிகச் சிறிய வாழ்நாளில் தமிழுக்கு மிகப் பெரிய தொண்டு செய்து முடிக்க வேண் டியே தாம் இவ்வுலகில் நிலவுவதாகக் கருதித் தமது தமிழ்த் தொண்டிற்கு வேண்டிய கருவிகளான கல்வி, ஆராய்ச்சி, சொல்வன்மை முதலானவற்றை மேம்பாடுறச் செய்வதிலேயே இவர் முனைந்திருந்தனரோ என்று கூட ஐயுறத் தோன்றுகிறது. கல்லூரி ஆசிரியர்கள், விசுவ நாத முதலியார், செங்கல்வராய முதலியார் முதலிய ஒரு

சிலர் கூட்டுறவு நீங்கலாக இவர் பெரும்பான்மை தமது புத்தகக்கூட்டத்தனிடையே தமது பொழுதைச் செலவிட்டு வந்தனர். ஆயினும் சமயசஞ்சீவி என்னும்படி ஆப்த நண்பர் ஒருவர் இவருக்குக் கிடைத்தனர்; அவர் பெயர் **ஆபதோத்தாரண ஐயர்** என்பது; அவரும் தமது பெயருக் கிணங்கச் சாஸ்திரியாருக்கு ஆபத்தில் உதவுபவராகவே இருந்தனர். அப்பெரியார் சென்னை உயர் நீதி மன்றத் தில் (*High Court*) மானேஜராக அலுவல் பார்த்து வந்தவர்; இப்பெரியாருடைய உதவியைச் சாஸ்திரியார் பலகாலும் நாடுவது உண்டு; அவருக்கும் சாஸ்திரி யாரிடம் மிகுந்த நன்மதிப்பும் அன்பும் இருந்தன.

தமிழ்த்தாயின் அன்பைப் பூரணமாகப் பெற்றிருந்த சாஸ்திரியார் 1893-ம் ஆண்டில் டாக்டர் மில்லர் துரை யவர்களின் வேண்டுகோளின்படிக் கிருத்துவக் கல்லூரியி லேயே உதவித் தமிழ்ப் பண்டிதராக அலுவல் பார்க்கத் தலைப்பட்டனர்.

---

## அத்தியாயம் 4

# பேராசிரியத் தன்மை

தமது கல்லூரியில் கல்வி பயின்று மாகாணத்திலேயே முதல்வனாகத் தேறிய மாணவனைத் தமது கல்லூரிலேயே ஆசிரியராக நியமித்துக் கொள்ள வேண்டும் என்னும் அவா டாக்டர் மில்லருக்கு இருந்தது; அவனும் தான் படித்து முன்னேறி நல்ல நிலைமை எய்துவதற்குக் காரண மாயிருந்த கல்லூரி என்று நன்றியறிதலோடு அலுவல் பார்ப்பன் என்பதும் அவர் நம்பிக்கை. ஆகவே பட்ட மளிப்பு விழாவை யொட்டியே டாக்டர் மில்லர் சாஸ்திரி யாரை யணுகிக் கிருத்துவக் கல்லூரியில் தத்துவ சாத்திர ஆசிரியர் வேலையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்

டனர். சாஸ்திரியாரோ தமக்குத் தமிழாசிரியர் பதவியையே கொடுக்குமாறு வேண்டினர். இவரது தமிழார்வத்தைக் கண்டு வியந்த மில்லர் துரை மகனுர், இவருக்கு உதவித் தமிழாசிரியர் பதவியை யளித்துத் தத்துவ போதகாசிரியரின் ஊதியத்தையே அளித்தனர். சாஸ்திரியாரோ மிகுந்த புகழோடு பரீட்சையில் தேறியிருந்தார்; அந்தக் காலத்தில் பி. ஏ. தேறியிருந்தாலே அது ஒரு மிகப் பெரிய சாதிப்பாகக் கருதப்பட்டு வந்தது; மிகுந்த ஊதியத்தைத் தரக்கூடிய பெரிய அலுவல்கள் இவருக்கு எளிதில் கிடைத்திருக்கும். ஆயினும் தமிழிற்குத் தொண்டு செய்யவும், தாம் கற்ற கல்வியைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து இன்புறவும் ஒரு அரிய சந்தர்ப்பம் வலிய வாய்க்கும்போது அதை விடக் கூடாது என்று இன்முகத்தோடு டாக்டர் மில்லரது சொல்லுக்கிணங்கி, உதவித் தமிழாசிரியர் உத்தியோகத்தை மேற்கொண்டனர். இதையும் ஒருவகைத் தியாகம் என்றேதான் சொல்ல வேண்டும். சாஸ்திரியார் தத்துவ சாத்திரத் துறையில் செல்லாமல் தமிழ்த் துறையில் இறங்கியது தமிழ்த் தாயின் நல்லூழ் என்றே கருத வேண்டும். ஆகவே இவர் தமது இருபத்து மூன்ரும் ஆண்டில் (அதாவது, 1893-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில்) கிருத்துவக் கல்லூரி உதவித் தமிழாசிரியர் அலுவல் பார்க்கத் தொடங்கினர்.

அக்காலத்தில் சென்னையில் வசித்து வந்த தமிழ்ப் பேரறிவாளிகளில் யாழ்ப்பாணம் **சி. வை. தாமோதரம் பிள்ளை** (1832—1901) என்னும் பெரியார் ஒருவர். இவர் சித்தூர் **வைரவநாதம் பிள்ளை** என்பவரது குமாரர்; சுன்னுகம் **முத்துக் குமாரசாமிப் புலவருடைய** மாணவர். இவர் கலித்தொகை, சூளாமணி, தணிகைப் புராணம் முதலிய இலக்கியங்களையும், தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், இறையனர் அகப்

பொருள் முதலிய இலக்கண நூல்களையும் முதன் முதலாகப் பதிப்பித்த பேரறிஞர். யாழ்ப்பாணத்துப் பெரியார்களில் தமிழறிவிலும், தமிழ் நூல் பதிப்பித்தலி லும், தமிழார்வத்திலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர் களுக்குச் சிறிதும் பின்வாங்கியவரில்லை. இவர் சென்னைச் சர்வ கலாசாலையில் முதன் முதல் 1858-ம் ஆண்டில் பி. ஏ. பரீட்சையில் தேறிய இருவருள் ஒருவர். இவர் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உயர் நீதி மன்றத்து நீதிபதியாயிருந்தனர். அங்கிருந்த காலத்தில் மகனின் மத மாற்றத்தால் ஏற்பட்ட வருத்தத்தால் 1888-ம் ஆண்டு உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு சென்னைக்கே வந்துவிட்டனர். சென்னையில் பல்கலைக் கழகத் தமிழ்ப் பாடப் புத்தகக் குழுவின் தலைவராக இருந்து வந்தனர்.

இவர் தாம் தமிழ்த் தொண்டு செய்து வருவதோடு நில்லாது பலரும் தமிழைக் கற்குமாறும், தமிழாராய்ச்சி செய்யுமாறும் ஊக்கப்படுத்திக்கொண்டும் வந்தனர். சென்னைப் பல்கலைக் கழக பி. ஏ. பரீட்சையில் ஒவ்வோ ராண்டும் தமிழில் முதலாகத் தேறி, பாஸ்கர சேதுபதி பொற் பதக்கத்தைப் பெறுபவர் ஒவ்வொருவரையும் தாமும் தமது மனைக்கு வரவழைத்து, அவர்களுக்குத் தமிழினிடத்தில் இருந்த அன்பையும் அறிவையும் புகழ்ந்து பெருக்குவதோடுகூடத் தாமும் அவர்களுக்கு ஒரு சிறு பரீட்சை நடத்தி அவர்களது உண்மையான தமிழறிவு எவ்வளவு என்று அறிந்து கொண்டு அதற் கேற்றாற் போல் அவர்களுக்குப் பரிசளிப்பதும் வழக்கம். பெரும்பாலும் தாம் அச்சிட்டிருந்த அரிய இலக்கண, இலக்கிய நூல்களையே அவர்களுக்குப் பரிசாக அளித்து வந்தனர். இதை ஒவ்வொரு ஆண்டும் ஒரு பண்டிகை போல் கொண்டாடி வந்தனர் தாமோதரம் பிள்ளை யவர்கள்.

சாஸ்திரியார் பி. ஏ. பரீட்சையில் தேறிய ஆண்டில் ராஜதானி முதலாகத் தமிழில் யார் தேர்ச்சி பெற்றார்

என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்ட தாமோதரம் பிள்ளையவர்கள், சாஸ்திரியாருக்கும் வழக்கம் போல் சொல்லியனுப்பினர். தாமோதரம் பிள்ளையவர்கள் முதன்மையாகத் தேறிய மாணவனுக்கு மறு பரீட்சை நடத்திப் பரிசளிப்பது வழக்கம் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்த போதிலும் இவ்வளவு பெரியவர் எதற்காகத் தம்மை வரவழைக்கிறார்; அவர் தமிழிற் புலியாயிற்றே; அவரிடம் முதன் முதலில் எப்படிப் பேசிப் பழகிக் குற்றம் குறையில்லாமல் மீள்வது என்னும் ஐயத்தோடு அச்சமும் சாஸ்திரியாருக்கு உண்டாயிற்று. தனியே செல்வதை விட நண்பர் யாரேனும் ஒருவரைக் கூட அழைத்துக் கொண்டு சென்றால் நல்லது என்று கருதினர்; இதற்கு ஏற்ற நண்பர் யார் என்று ஆராய்ந்து, தமக்கு ஆபத்திற்கு உதவும் ஆபதோத்தாரண ஐயரை உடன் கூட்டிக்கொண்டு தாமோதரம் பிள்ளையவர்களின் மனையை யடைந்தனர்.

பிள்ளையவர்களும் சாஸ்திரியார் வந்திருப்பதை யறிந்து, வெளியில் வந்து, தம்மைக் காண விருந்த இருவரையும் மனைக்குள் அழைத்துச் சென்றார்; பிறகு அவர்களை யாசனத்திலிருத்திச் சிறிது நேரம் இனிமையாகத் தமிழ் மொழியைப்பற்றிப் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். தாம் கேட்கும் கேள்விகளுக்குச் சாஸ்திரியார் பதில் அளிக்கும் காலத்திலும், அவராகவே சிலவற்றை எடுத்துச் சொல்லி வந்த சமயத்திலும், அவர் பேசி வந்த தமிழ் நடையைப் பிள்ளையவர்கள் ஆச்சரியத்தோடு கவனித்து வந்தார்கள். இது வரையில் உரையாடும் போது யாரும் பேசித் தாம் கேள்விப்படாததொரு நடையில் அன்று தமிழ் அவர்முன்பு பேசப்பட்டது. சங்ககாலத் தமிழில், 19-ம் நூற்றுண்டினிறுதியில், ஒரு பிராம்மணச் சிறுவன் தம் முன்பு வீற்றிருந்து அச்சமின்றி ஆழ்ந்த கருத்துக்களைக் கோவைப் படுத்திப் பேசிக் கொண்டு

வந்ததைப் பார்த்த பிள்ளையவர்களுக்கு, தம் முன்பு வீற்றிருந்த சிறுவன் தமிழ்த் தாயின் தவப் புதல்வன் என்பது நன்ருய்த் தெரிந்தது. இவ்வாருக உரையாடும் போதுகூடச் சங்க காலத் தமிழிற் பேசும் வித்தையை யிவன் பயின்றதில்லை, இயல்பாகவே இவனுக்கு அமைந்தது என்பதையும் அந்த அறிவாளி அறிந்துகொண்டார்.

பிறகு, முறைப்படி தாம் நடத்த வேண்டிய பரீட்சையையும் நடத்த விரும்பி ஒரு மணி நேரத்தில் விடை எழுதித்தர வேண்டுமாறு ஒரு விஞத்தாளையும் சாஸ்திரியாரிடம் கொடுத்தார். சாஸ்திரியாரும் அரை மணி நேரத்திலேயே விடை முழுவதும் எழுதி முடித்துப் பிள்ளையவர்களிடம் கொடுத்து விட்டனர். அது கண்டு மகிழ்ச்சி கொண்ட பிள்ளையவர்கள் சாஸ்திரியாரை மறுநாள் வந்து தன்னை மறுபடியும் காணும்படி கூறிச் சாஸ்திரியாரையும், அவரோடுகூட வந்த ஆபதோத்தாரண ஐயரையும் விடை கொடுத்தனுப்பினர்.

சாஸ்திரியாரும் நண்பருடன் மறுநாள் தவருமல் பிள்ளையவர்களைச் சென்று கண்டு கொண்டனர். வந்த சாஸ்திரியாரைக் கண்ட பிள்ளையவர்கள் மிகுந்த உவகையோடு எதிர்சென்று அழைத்து வந்து வீற்றிருக்கச் செய்து உபசரித்தனர்.

'சாஸ்திரியாரே! உமது விடைத்தாள்களைக் கண்ணுற்ருேம்; அவை உயரிய செந்தமிழ் நடையில் எழுதப் பெற்று, ஆழ்ந்த புதுப் புதுக் கருத்துக்களைக் கொண்டு இயங்குகின்றன. தமிழ்த் தாய்க்குத் தொண்டு புரிய நும் போன்று தமிழ் நலத்தோடு ஆங்கில நலமும் ஒருங்கமையப் பெற்ற இளைஞர்கள் முன்வந்திருப்பது கண்டு உளம் மகிழ்கின்ருேம்; பிராம்மணராயிருந்து, சாஸ்திரியென்னும் பட்டம் புனைந்திருந்தும், திராவிட மொழியில் இவ்வளவு ஆர்வங்கொண்டு அதை நீர் ஆராய்ந்திருப்பது நமக்கு ஓரளவு விந்தையே அளிக்கின்றது. உம்மைத் '**திராவிட**

சாஸ்திரி' என்று அழைத்தல் சாலப் பொருந்தும் என்றே கருதுகின்றோம்' என்று கூறிப் புன்முறுவல் கொண்டார் பிள்ளையவர்கள்; சாஸ்திரியார் கையாண்ட உரைநடையி லேயே பிள்ளையவர்களும் பேசிப் பழகினர் என்று தோன்றுகிறது! அன்று முதல் சாஸ்திரியாரை அவரது நண்பர்களும் பிறரும் 'திராவிட சாஸ்திரி' என்று அழைப்பது வழக்கமாகி விட்டது.

தாம் விடுத்த வினாத் தாளுக்குத் தாம் எதிர்பார்த் ததைவிட மிக அழகாக விடை எழுதித் தந்த சாஸ்திரி யாருக்குத் தாம் பதிப்பித்துள்ள இலக்கண இலக்கிய நூல்களைத் தம் கையெழுத்திட்டு அன்பளிப்பாகவும் பரிசாகவும் பிள்ளையவர்கள் அளித்தனர். இத்தமிழ் நூல் குவியலைப் பதிப்பாளரிடமிருந்து எழுத்தாளர் நன்றியறித லோடு பெற்றுக் கொண்டனர்.

பெற்றுக்கொண்டு, வழக்கம்போல் ஒவ்வொரு நூலின் முதல் தாளிலும் தமது பெயரையும் பொறித்து வைத்துக் கொண்டனர். இவற்றைக் காணும்போது, ஆசிரியர் தமது பெயரைச் 'சூரிய நாராயணன்', 'சூரிய நாராயணசிவா', 'சூரிய நாராயண சாஸ்திரி', 'சூரிய நாராயண சாஸ்திரி யார்' என்று பலவிதமாக எழுதுவதுண்டு என்பது விளங்குகின்றது. அன்றியும் அந் நூற்குவியல்களின் மேல் முதன்மையாக இருந்த 'இறையனுர் அகப்பொருள்' முதல் தாளில் கீழ்க்கண்ட செய்யுளை எழுதிக் கையெழுத் தும் செய்துகொண்டனர்.

† 'உண்மையைச் சொலப்புகுந்தாலுத்தம நேசர்காளிப்
பண்மிகு புத்தகந்தான் பரசிவக்கொழுந் தாய்வந்த
சண்முகத் தேவைஞான சற்குருபரனை வாழ்த்துந்
தண்மையார் சூர்யநா ராயணச் சிவன்றன் னதாமால்'

---

† இச்செய்யுளும் இதுபோல் சிலவும் ஆசிரியரே இயற்றித் தாம் படித்த புத்தகங்களிலும் உபயோகித்த புத்தகங்களிலும் எழுதி வைப்பது வழக்கமாம்.

சாஸ்திரியாரது தமிழ் இலக்கிய இலக்கண அறிவில் மிகுந்த பெருமைகொண்ட பிள்ளையவர்களுக்கு, ஆங்கில மொழியும் கைவந்த சாஸ்திரியாருக்கு மொழிபெயர்ப்பு வித்தையில் எவ்வளவு சாமர்த்தியம் இருக்கிறது என்பதையும் கண்டுகொள்ளவேண்டும் என்னும் அவா ஏற்பட்டது.

"திராவிட சாஸ்திரியாரே! நுமது கல்வியறிவின் ஒரு பகுதியையே சோதித்து அறிந்து கொண்ட நமக்கு நுமது மொழி பெயர்ப்புத்திறனையும் அறிய அவா உண்டாகிறது; நான் ஆங்கிலத்தில் ஒரு செய்யுள் பகுதியைக் குறிக்கின்றேன்; அதைச் செய்யுளாகவே தமிழில் மொழி பெயர்த்துத் தாரும், பார்ப்போம்" என்று கூறி, ஷேக்ஸ்பியர் மகா கவி இயற்றியுள்ள 'வேனிஸ் வர்த்தகன்' (Merchant of Venice) என்னும் நாடகத்தில் 'இன்னிசை' (சங்கீதம்) யைப் பற்றிக் கூறியுள்ள பகுதியை எடுத்துக் கொடுத்தார். அப்பகுதியாவது;

'The man that hath no music in himself
Nor is not moved with concord of sweet sounds,
Is fit for treasons, strategems and spoils;
The motions of his spirit are dull as night
And his affections dark as Erebus;
Let no such man be trusted.'

*(Merchant of Venice, Act, V. Scene 1.)*

இதைப் பார்த்த சாஸ்திரியாருக்கு, இப்பகுதியை மொழி பெயர்ப்பது ஒரு நிமிஷ வேலையாகவே இருந்தது. உடனே கீழ்க்கண்ட கவியை எழுதிப் பிள்ளையவர்களிடம் கொடுத்தனர்:

† 'கன்னலங் கனிந்த பாடற் காயக னல்ல னேனு(ம்)
இன்னிசை கேட்டு நெஞ்ச மிளகிடா திருப்பான் வஞ்ச

† இச் செய்யுள் 'கலாவதி' நாடகத்தின் 15-ம் செய்யுளாகப் பிறகு அமைக்கப் பெற்றது.

மன்னவர் துரோக மாதி மாபவஞ் செய்யத் தக்கா(ன்)
அன்னவன் றணை நம் பாம லகற்றிட வேண்டுமென்றே.'

இக்கவியைப் படித்துப் பார்த்து இன்புற்ற பிள்ளையவர்கள் சாஸ்திரியாரிடம் மிகுந்த அன்பு பூண்டு அவரைப் பாராட்டினர்.

சாஸ்திரியாரது செய்யுள் நடை எளிதாகவும் ஆற்றொழுக்காகவும் அமைந்திருக்க, அவரது வசனநடை கடினமாகவும் சங்க கால நடையாகவும் திகழ்வது கண்ட பிள்ளையவர்கள், அந்நடையிலேயே முழுவதும் இயன்ற ஒரு உரைநடை நூலை, சாஸ்திரியாரை இயற்றச் சொல்ல வேண்டும் என்று கருதினர். 'நுமது தமிழ் நடையைக் கண்டு வியந்த எமக்கு நீர் அதே உயரிய நடையில் இயன்ற ஒரு நூல் எழுதித்தர இயலுமாயின், அவ்வாறு எழுத வேண்டுகிறேன்' என்று கூறினர். இது கேட்ட சாஸ்திரியாரும், 'ஆகா! அவ்வாறே செய்வேம்; நுமக்கு வேண்டியவாறே உயர்தனிச்செம்மொழி நடையிலேயே இயன்ற உரை நடை நூல் ஒன்று இயற்றித் தருவல்' என்று கூறி யமர்ந்தனர்.

பிள்ளையவர்களும் சிறிது போழ்து சாஸ்திரியாரிடம் உரையாடிக் கொண்டிருந்த பிறகு அவருக்கு விடை கொடுத்தனுப்பினர்.

அன்றைக்கே சாஸ்திரியார் உயர்தனிச் செம்மொழி நடையில் இயன்ற ஒரு வசன நூலை எழுதத் தொடங்கினர்; அந்நூலே 1897-ம் ஆண்டு முதல் 'ஞான போதினி' என்னும் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை வாயிலாகச் சிறிது சிறிதாக வெளிப்பட்ட '**மதிவாணன்**' என்னும் கதையாகும். இந்நூல் 1902-ம் ஆண்டு முதன் முதலாகப் புத்தக ரூபமாக அச்சிடப்பட்டது. தாமோதரம் பிள்ளையவர்களின் வேண்டுகோளின்படி தொடங்கப் பட்ட இந்நூல் அன்றிருந்த காலத்திலேயே முற்றுப் பெருது போனமை பற்றி ஆசிரியர் பெரிதும் வருந்தியதுண்டு.

தாமோதரம் பிள்ளையவர்களுக்கும் சாஸ்திரியாருக்கும் இவ்வாறு ஏற்பட்ட நட்பு நாள்தோறும் 'நவில் தொறும் நூல் நயம்' போலப் பழகப் பழக வளர்ந்து கொண்டே வந்தது.

இடையீடில்லாமல் கடைசி வரையில் சாஸ்திரியாருக்கு நண்பர்களாகவும் உதவி புரிபவர்களாகவும் இருந்து வந்தவர்களில் மற்றொருவர் **ஸ்ரீ மு. சி. பூரணலிங்கம் பிள்ளை** யவர்கள். எட்டையபுரம் ஜமீன்தார் சிறுவராயிருந்த காலத்தில் அவருக்கு ஆங்கில ஆசிரியராகப் பிள்ளையவர்கள் அமர்ந்திருந்தனர். அந்த அலுவல் முடிவுறும் சமயத்தில், திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் தத்துவ சாத்திரப் பேராசிரியர் பதவி காலியாயிற்று; ஏனெனில் ஆசிரியர் **பி. சுந்தரம் பிள்ளை** எம். ஏ. ('மனோன்மணியம்' ஆசிரியர்) அவர்கள் அப்பொழுது தான் காலகதியடைந்து விட்டனர். அப்பேராசிரியர் பதவிக்குப் பூரணலிங்கம் பிள்ளையவர்கள் முயன்று வந்தனர். அம்முயற்சிக்கு உதவியாகக் கிருத்துவக் கல்லூரியிலிருந்த டாக்டர் மில்லர், கூப்பர், டங்கன் முதலிய பெரியவர்களும் உதவி புரிந்தனர். ஆயினும் திருவனந்தபுரம் கல்லூரியில் அப்பேராசிரியர் பதவியே எடுபட்டு விட்டதால், பூரணலிங்கம் பிள்ளையவர்கள் சென்னையில் வேறு அலுவலை நாடி வந்துவிட்டனர். வந்த இடத்தில், கல்வி மீது தமக்கிருந்த ஆர்வத்தால், பெரும்பொழுதை நூல் நிலையங்களிலேயே செலவிட்டு வந்தனர். அங்கேயும் பெரும்பாலும் தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய நூல்களையே அதிக நேரம் படிப்பது அவருக்கு வழக்கமாயிருந்தது.

ஒரு நாள், பூரணலிங்கம் பிள்ளையவர்கள் கிருத்துவக் கல்லூரி நூல் நிலையத்தில் சில புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவ்வழியே வந்த சாஸ்திரியார் இவ்வளவு ஆர்வத்தோடு தமிழ்ப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் குறிப்புக்கள் எழுதிக் கொண்டிருப்

பவர் யார் என்று அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினர். ஆயினும் தமக்கு முன்பின் அறிமுகமில்லாதவரை எவ்வாறு தாம் அணுகி விசாரிப்பது என்று சிறிது கூச்சம் இயல்பாக உண்டாயிற்று; தமிழறிஞர் ஒருவரை அறிமுகம் செய்துகொள்ளும் வாய்ப்பைத் தவற விடக்கூடாது என்ற ஆசை ஒருபுறம் இவரை இழுத்தது. இதற்கிடையே, சாஸ்திரியார், தன்னையும் மறந்து நூல்களை யாராய்ந்துகொண்டிருந்த பிள்ளையவர்களின் அருகே சென்று சந்தடியில்லாமல் சிறிது நேரம் நின்று கவனித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்குள், தமிழிலக்கிய வரலாறு பற்றிய ஆராய்ச்சி நடக்கிறது என்பதை யுணர்ந்துகொண்டனர்.

பிள்ளையவர்கள் தலைநிமிர்ந்து பார்த்தபோது தம் அருகில் கல்லூரித் தமிழாசிரியர் நிற்பதை யுணர்ந்தார். சாஸ்திரியாரும் உடனே, 'தாங்கள்தான் முன்னீர்ப்பள்ளம் பூரணலிங்கம் பிள்ளையவர்கள் என்று நான் கருதுகிறேன்; அப்படித்தானே?' என்று சிறிது ஐயம் கலந்த உறுதியோடு கேட்டார். பிள்ளையவர்களுக்கு வியப்பாயிற்று; தமக்கு முன்பு பழக்கமில்லாத இவர் எப்படித் தம் பெயரைச் சரியாகக் கண்டுபிடித்தார் என்பது அவருக்கு வியப்பு.

'ஆமாம்; நான்தான் அது. தங்களை இக்கல்லூரியின் உதவித் தமிழாசிரியர், சூரியநாராயண சாஸ்திரியார் என்று நானறிவேன். ஆனல் நீங்கள் எப்படி என் பெயரைக் கண்டு கொண்டீர்கள்?' என்று பிள்ளை கேட்டார்.

'பூரணலிங்கம் பிள்ளை என்னும் ஆங்கில ஆசிரியர் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிருர் என்று நானறிவேன்; நீவிர் இப்போது பார்த்துக்கொண்டிருக்கும் நூல்கள் எல்லாம் இலக்கிய வரலாறு பற்றியவையாகவே உள்ளன; ஆயி

னும் நீவிர் தமிழாசிரியர் இல்லை என்பதையும் உணர்ந்தேன்—ஏனெனில், நீவிர் எழுதிவைத்திருக்கும் குறிப்புக்கள் எல்லாம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆகவே பூரணலிங்கம் பிள்ளை நீவிராகத்தான் இருக்க வேண்டும் என்று ஒருவாறு தீர்மானித்தேன்; அதுவும் நினைத்த வண்ணமேயாயிற்று' என்றார் சாஸ்திரியார்.

சாஸ்திரியாரது கூரிய அறிவைக் கண்ட பிள்ளையவர்களுக்கும், சாஸ்திரியாருக்கும் அன்று ஏற்பட்ட நட்பு இறுதிவரை வளர்ந்து வந்தது. இவர்கள் இருவரும் பிற்காலத்தில் தத்தம் வாழ்க்கையில் பல துறைகளில் ஒன்று சேர்ந்து உழைத்தவர்கள்.

1892-ம் ஆண்டு ஆங்கிலக் கவிஞர் பெருமானான ஆல்பிரெட் லார்டு தெனிசன் (Alfred Lord Tennyson) என்பவர் காலமாய்விட்டார். ஆங்கில மொழியில் ஆர்வமுடையார் பலரும் இதை ஒரு துக்க சம்பவமாகக் கொண்டாடினார்கள். சாஸ்திரியார் தமது தமிழ் நூலாராய்ச்சியினிடையே மறு சுவையாகக் கொண்டு பார்க்கும் நூல் இத்தெனிசனார் இயற்றிய செய்யுட் கோவையாகும். ஆகவே அவரும் தெனிசன் பிரபு இறந்த செய்தி கேட்டு உளம் மிக வருந்தினார். பிறரைப் போல வருந்தியதோடு நில்லாது அச் செய்தி கேட்டுக் கையறு நிலையாகப் பதினொரு பாடல்களும் பாடினர். தெனிசன் இயற்றியுள்ள இன் கவிகளில் இவர் பெரிதும் ஈடுபட்டவர் என்பதும் அதோடு ஸ்பென்ஸர், பெயின், மில், முதலிய தத்துவாசிரியர்களுடைய நூல்களை ஆராய்வதில் பேரார்வம் உடையவர் என்பதும் அக்கையறு நிலையால் விளங்கும்:

† 'தத்துவ சாத்திரத் தனித்த ருக்கணே
கொத்தொடு தோன்றிய குணஞ்சி றந்துள
வித்தைசேர் பெயின்ஸ்பென்சர் மில்லெ னும்பழச்
சத்தினைக் கவிக்கலந் தந்த வள்ளலே!'

---

† பாவலர் விருந்து - கையறு நிலை.

ஆங்கில தத்துவ சாத்திரப் பயிற்சி நன்குடைய ஆசிரியர் அத் தத்துவ சாத்திரக் கருத்துக்களை அழகு பெறத் தன் கவிதைகளில் எடுத்துக் காட்டும் தெனிசனிடத்தில் ஈடு பட்டது இயற்கைதானே! 'தெனிசன்' என்னும் பெயர் 'தேன் இசையன்' என்பதன் மரூஉ என்று அவர் தற் குறிப்பேற்றியதும் இதற்கு ஒரு சான்ருகும்.

† 'ஒழுகுதே னிசையனு யொளிர்ந்து நின்றநிற்
கழகொடு வாய்மையு மமைந்த பண்பினுல்
விழைவொடு தெனிசப்பேர் விளம்பி னுர்கொலோ'

ஆசிரியர், கல்லூரித் தமிழாசிரியரான பிறகு இவரது பேராசிரியத் தன்மை மாணவர்களுக்கும் மற்றவர்களுக் கும் நன்கு புலப்படத் தொடங்கியது. ஆங்கிலம் முதலிய பிற மொழிகள் வந்து உலாவத் தொடங்கிய பின், உத்தி யோகத்தையே குறிக்கோளாக வைத்துக்கொண்டு பள்ளி யிற் படிக்கும் மாணவர்களுக்குத் தமிழ் முதலிய தாய் மொழிகளில் ஆர்வம் குறைந்து இருந்தது; இவ்வாறு குறைந்த ஆர்வத்தை நிரப்பும் கலையை அக்காலத் தமிழாசிரியர்கள் கற்று வைக்கவும் இல்லை. மாணவர்களது மனத்தை வசப்படுத்தித் தாம் கற்பிக்கும்பாடத்தில் அவர் களுக்கு உண்மையான ஆர்வம் உண்டாகும்படி செய்யும் வன்மை, பெரும்பான்மை தமிழொன்றே அறிந்திருந்த ஆசிரியர்களில் பெரும்பாலோர்க்கு இயலாததாயிருந்தது. சாஸ்திரியாரோவெனில் தமிழை நன்ருய்க் கற்றிருந்தார்; தமிழ்க் கடலின் எல்லையையும் கண்டிருந்தார் என்றே சொல்லலாம். அன்றியும் ஆங்கிலமும் நன்ருய்ப் பயின் றிருந்தார். மேனுட்டுப் பேராசிரியர்களான டாக்டர் மில்லர் முதலானவர்கள் பாடம் சொல்லும் வகுப்புக்களில் தாமே உட்கார்ந்து பாடம் கேட்டுப் பழகியவர். மாணவர் களது மனப்பான்மையை அறிவதற்கு வேண்டிய அளவு உள நூலையும் (Psychology) நன்ருகக் கற்றிருந்தார்.

---

† பாவலர் விருந்து - கையறு நிலை.

அக்காலத்தில் கல்லூரி மாணவர்களுக்கு ஏற்படுத்தியிருந்த தமிழ் இலக்கிய இலக்கண பாடப் பகுதிகள் இப்பொழுதெல்லாம் இருப்பதைவிட மிகவும் அதிகமாகவும் கடினமாகவும் ' இருந்து வந்தன. மாணவத் தன்மை என்பது எக்காலத்திலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்குமாயினும், ஆங்கிலம் தலை தூக்கி நின்ற அக்காலத்தில், ஆங்கிலம் கற்று ஆங்கிலத்திற் பேசிவருவதே வாழ்க்கைப் பயன் என்றும் தமிழிற் பேசுவதும் எழுதுவதும் மதிப்புக் குறைவு என்றும் கருதி வந்த அக்காலத்தில், தமிழிடத்தில் மாணவர்களுக்கு ஆர்வம் குறைவாக இருந்தது என்றால் அது ஒரு வியப்பாகாது. ஆயினும் இலக்கியப் பகுதிகளையே யன்றி, அவற்றைவிடக் கடினமான இலக்கணப் பகுதிகளையும் மாணவர்கள் சுவைத்து நுகரும்படியும் அப்பகுதிகளில் மேன் மேலும் பாடம் கேட்க வேண்டும் என்னும் அவா மாணவர்களுக்கு ஏற்படும் வண்ணமும் சாஸ்திரியார் பாடஞ் சொல்லிவந்தார். நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் முதலிய கடின இலக்கண நூல்களும், பி. ஏ. க்குப்பாடமாக வைக்கப்பட்டிருந்தன. மாணவர்கள் நன்மையையே தமது நன்மையாகக் கருதி அரும்பாடு பட்டுவந்த ஆசிரியர் பாடஞ் சொல்லிவந்ததால் மாணவர்கள் இந்நூல்களை ஒரு வருத்தமாகக் கொள்ளாது விரும்பிக் கற்றுவந்தனர். அன்றியும் இலக்கியப்பாடங்களை நடத்தும்போதும் அவ்விலக்கியச் சுவை குறைவு படாமல், கவியின் உள்ளத்தைத் திறந்து காட்டி, கவிதையின் உட்பொருளை விளக்கிச் சொல்லும் இயல்பினராகையால், தமிழ் மாணவர்களேயன்றிப் பிறரும் இவரது இலக்கியப் பாடங் கேட்க வந்து விடுவது உண்டு. இவர் கம்ப ராமாயணம், பெரிய புராணம் முதலிய இடைக்கால இலக்கியங்களையும் பத்துப்பாட்டு முதலிய சங்ககால இலக்கியங்களையும் ஒரே மாதிரியாகச் சுவைபடப் பாடஞ் சொல்லுவார். பெரும்

பாலும் தமிழ் ஒன்றே கற்ற ஆசிரியர்களுக்குத் தமிழ் வரம்பை மீறி வேறு புதுக் கருத்துக்களை மாணவர்கள் இன்புற எடுத்துக்காட்ட இயலாது. ஆசிரியரோவெனில் தற்காலக் கருத்துக்களைப் பண்டைய இலக்கியங்களைக் கொண்டு விளக்கியும் பண்டைத் தமிழர் வரலாறு மொழிவரலாறு, பண்பாடு முதலானவற்றைத் தற்காலக் கலை ஆராய்ச்சி முறையில் சரித்திரச் சான்ருேடு விளக்கியும் சொல்வர். இது மேனுட்டு ஆராய்ச்சி முறையில் ஈடுபட்ட கல்லூரி மாணவர்களுக்கு மிகுந்த இன்பம் பயக்கும்.

இவ்வாறு பாடஞ்சொல்லி வருகையில், ஆசிரியரது சொற்பொழிவுத் திறனும் கற்பிக்கும் முறையும் எண்ணிறந்த மாணவர்களை அவரது வகுப்பிற்கே வந்து சேரும்படி தூண்டும். இவர் பொதுவாகச் சொற்பொழிவுகளில் கையாளும் நடையே பண்டைய உரையாசிரியர்களுடைய உரை நடைதான்; அந்த நடை இவருக்கு இயல்பாக அமைந்திருந்தது; தங்கு தடையின்றி மடைதிறந்தாற் போலத் தனித் தமிழ்ச் சொற்களை மாரியாகப் பெய்து கருத்துக்களை எடுத்து வீசுவது சாஸ்திரியாருக்கு விளையாட்டாகவே இருந்தது. உயரிய செந்தமிழ் நடையிலேயே வகுப்பு நடக்கும். ஒரு மணி நேரமும் பேசும் திறமையைக் கண்டு வியவாத மாணவர்களோ மற்றுள்ள ஆசிரியர்களோ இல்லை. இன்று வரையில் அவருடைய மாணவர்கள் அவரது ஆசிரியத் திறமையைப்பற்றி வியந்து பேசுகின்றனர்.

"ஒரு முறை சீவகசிந்தாமணி கோவிந்தையாரிலம்பகம் பாடஞ் சொல்லியபோது,

'நாம வென்றிவேல் நகைகொள் மார்பனைக்
காம னேஎனக் கண்ணி மங்கையர்
தாம ரைக்கணுற் பருக'

என்னும் பாடலின் பொருள் கூறும் அமையத்து— 'தாமரைக் கணால் பருக': தாமரை போலும் கண்ணால் பருக எனவும், மங்கையராதலால் வெளிப்படையாகப் பார்க்க அஞ்சித் தாம்+அரைக் கணால் பருக—அஃதாவது குறிப்பாக அரைக் கண்ணால் பார்க்க எனவும், தாம்+ மரைக் கணால் (மான்போலும் கண்ணால்) பருக என மூன்றுவது ஒரு பொருளும் கொடுத்தனர்'' என்று ஆசிரியரது மாணவரான வ. சு. செங்கல்வராய பிள்ளை யவர்கள் வியந்து எழுதுகின்றனர்.

பெரும்பாலும், கவிஞராயிருப்போர் ஆராய்ச்சித் துறையில் மிகுதியாக ஈடுபடுவதில்லை என்பது யாவரு மறிந்தது. சாஸ்திரியாரோ, தாமே கவிஞராயிருப்பினும், தமிழ் மொழி இலக்கண ஆராய்ச்சித் துறைகளில் பெரிதும் ஈடுபட்டு அவ்வாராய்ச்சியின் முடிவுகளைத் தம் மாணவர்களுக்கு எடுத்துரைப்பதில் மிகுந்த ஊக்க முடையவராயிருந்தனர். மொழியாராய்ச்சியிலும், முக்கிய மாகச் சொற்பொருளாராய்ச்சியிலும், பகுதியாராய்ச்சி யிலும், இவருக்கு இயல்பாகவே வன்மையும் ஆசையும் இருந்தன. இவற்றை யெல்லாம் இவர் வாயிலாகக் கேட்டுக் கற்றுத் தெளிந்த கல்லூரித் தமிழ் மாணவர்கள் தமது பாடப் பகுதிகளில் ஆழ்ந்த அறிவு படைத்திருந் தனர்; அவர்கள் ஆசிரியரது அரிய சொற்பொழிவுகளை மேலும் மேலும் கேட்டுப் பயனடைய விழைந்தனர். இவரே ஒரு கவியாகவும் இலக்கிய கர்த்தாவாகவும் இருந்தமையால், புலவர்களின் மன எழுச்சியைத் தாமும் உணர்ந்து துய்த்து இலக்கியப் பகுதிகளை இவர்பாடம் சொல்லும்போது, கேட்கும் மாணவர்கள் கவிதைக் கலையை உள்ளபடி ரசிக்க முடிந்தது.

பண்டைக்காலத் தமிழாசிரியர்களில் பலருக்குத் தம் மாணவர்களுக்குத் தமிழன்போ அன்றித் தமி ழறிவோ வளரும் முறையில் பாடஞ்சொல்ல இயலா

திருந்தது ஓர் உண்மை. 'பரமார்த்த குரு'வும்* 'ஆடுசா பட்டி அம்மையப்ப பிள்ளை'யும் முழுவதும் கற்பனையின் சிருஷ்டிகள் இல்லை. அவ்வக் காலத்திலிருந்த ஆசிரியர்களது கல்வி முறைகளை நேரடியாகக் கண்டிருந்த அறிவாளிகளுடைய சித்திரங்கள் தாம் அவை. ஆனால், நமது சாஸ்திரியாரோ இவ்விதிக்கு ஒரு விலக்கு. இவர் தமிழ்ப் பாடம் நடத்தும்போது இவர் வகுப்பு மாணவர்கள் யாரும் வகுப்புக்கு வராமலிரார்; வந்தவர் யாவரும் வகுப்பைவிட்டு ஒரு விநாடியும் பிரியார். இதுவேயன்றி, இவரது அறிவு செறிந்த சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனடைய விரும்பிப் பிற வகுப்பு மாணவர்கள் கூடத் தங்கள் பாடங்களையும் ஆசிரியர்களையும் புறக்கணித்துவிட்டு இவர் வகுப்பில் வந்து கூடிவிடுவதுண்டு. இவ்வாறாக இவர் வகுப்பில் மாணவர் கூட்டத்திற்கு எப்பொழுதும் பஞ்சமே இல்லை. ஆகவே இவர் கிருத்துவக் கல்லூரி ஆசிரியராயிருந்த காலத்தில் அக்கல்லூரியில் படித்த மாணவர்கள் எல்லாருக்குமே ஓரளவு தமிழ்ப் பற்றும் நல்ல தமிழ் அறிவும் இருந்தன என்று சொல்லலாம்.

இவர், வகுப்பில் தமிழ்ச் செய்யுள்களைப் படிக்கும் போது இசையோடு இசைந்தே படிக்கவிரும்புவாராயினும், மிக இனிய குரல் இல்லாத குறைவால், வகுப்பிலுள்ள நல்ல குரல் படைத்த சில மாணவர்களைக் கொண்டு செய்யுள்களைப் படிக்கச் சொல்வதுண்டு. செய்யுள் பாடம் நடக்கும் பொழுதெல்லாம் தவறாமல் இவரது வகுப்புக்களில் ஓர் இன்னிசை விருந்து இருக்கும். தாளத்தோடு இயையாவிடினும், **ராக பாவங்கள்** ததும்பச் செய்யுள்களைப் படித்து விரிவுரை கூறுவதில் ஒரு இனிமை இருக்கத்தான்

---

* ஸ்ரீ. பி. ஆர். ராஜம் ஐயர் எழுதிய கமலாம்பாள் சரித்திரத்தில் வருபவர்.

செய்கிறது. ஆயினும் இவ்வுண்மையை மேனாட்டு ஆசிரியர்கள் உணர்வது கடினம்.

ஸ்கின்னர் (Skinner) என்னும் பேராசிரியர் இருத்துவக் கல்லூரியில் அக்காலத்தில் பணிபுரிந்து வந்த பேராசிரியர்களில் ஒருவர். இவர் ஒவ்வொரு முறை தாழ்வாரத்தின் வழியே சுற்றி வருவதுண்டு; அப்படி வரும்போது ஒவ்வொரு சமயம் சாஸ்திரியார் வகுப்பைத் தாண்டிச் செல்ல நேரிடும். அப்போது இவர் கேட்கும் இன்னிசை இவருக்கு மிகுந்த வியப்பை உண்டாக்கும். இதைச் சாஸ்திரியாரும் உணர்ந்திருந்தார். ஒரு நாள் அப்பேராசிரியர் இதைப்பற்றிக் குறிப்பிடவே, ஆசிரியரும் அவருக்குத் தமிழ்ச் செய்யுள்களின் யாப்பமைதியை விளக்கி, அச்செய்யுள்கள் இசையோடு சேர்த்தே பாடவேண்டும் என்னும் உண்மையையும் விளக்கிக் கூறினார். தமிழ்ப் பாடல்களை இசையோடு படிப்பதால் கவியின் உள்ளக் கிளர்ச்சியை உள்ளபடி உணர இயலுகிறது என்றும் இசைச் செவியில்லாதவர்கள் உயிருள்ள கவியை இயற்றவும் ரசிக்கவும் இயலாதவர்கள் என்றும் ஆசிரியர் பன்முறை கூறுவதுண்டு.

ஆசிரியர் கல்லூரியில் தமிழ்த் தொண்டு செய்து வந்த காலத்தில் மிகவும் சிறு வயதுடையவரா யிருந்தனர்; மாணவர்களோவெனில், ஒரு சிலரைத் தவிரப் பலரும் ஏறத்தாழ ஆசிரியர் வயதிற்குக் குறையாதவர்களாகவே இருந்து வந்தனர். ஆதலால் தாம் கேட்கும் பாடங்களில் ஐயுறவு நேரிடுங் காலங்களில் அவ்வையப்பாடுகளைப் போக்கிக் கொள்ளுவதில் அவர்களுக்கு அதிகக் கூச்சம் இருப்பதில்லை. ஆசிரியரும் மாணவர் ஐயுறவுகளைத் தீர்த்து வைப்பதில் மிகுந்த ஊக்கம் உடையவராகவே இருந்தனர். இவை இயற்கையும் விரும்பத் தக்கவையும் ஆயினும், சிற்சில சமயங்களில் ஆசிரியர்களது திறமையைச் சோதிக்கவோ, அன்றித் தமது சூழ்ச்சியை வெளிப்

படுத்தவோ, அன்றித் தாம் முன்பே அறிந்து வைத்திருந்த பொருள்களைப்பற்றி இல்லாத ஐயங்களைக் கிளப்பவோ விரும்பும் சிலரது போலி வினுக்களையும் கல்லூரி ஆசிரியர்கள் சமாளிக்க வேண்டித்தான் வரும். இதுபற்றி யார் மீதும் குற்றம் கூறுவதற்கில்லை. இது தற்கால ஆசிரியத் தொழிலிலேயே அமைந்து கிடப்பதொரு கூறுபாடாகும். இவ்விதப் போலி வினுக்களையும் சமாளிக்கும் திறமை இல்லாத ஆசிரியர்கள் மாணவர்களிடம் தோல்வியை மறைமுகமாகவேனும் ஒப்புக்கொள்ள வேண்டிவரும். ஆனுல் இம்மாதிரியான குறும்புகளையும் எதிர்த்து மாணவர்களை நேர்வழியான கல்வியில் ஊக்கும் திறமையுடைய ஆசிரியர்களே மாணவர்களுடைய உள்ளத்தைத் தம் திறமையால் பிணிப்பவர்கள் ஆவார்கள்; நமது ஆசிரியரிடம் இவ்விதமான போரில் இறங்க யாருக்கும் துணிவு இராதாயினும், எப்பொழுதேனும் ஒரு முறை இம்மாதிரியான நிகழ்ச்சிகள் வகுப்பில் நடைபெறுவதுண்டு. ஆசிரியரோ இவற்றிற்கெல்லாம் அஞ்சுபவரல்லர்.

ஒரு முறை ஆசிரியர் வகுப்பு நடத்திக் கொண்டிருந்த போது, வழக்கத்திற்கு மாருக, ஒரு மாணவர் வகுப்பில் நடக்கும் பாடப்பகுதிகளைக் கவனியாமலோ, வேறு ஏதோ விஷயத்தில் கவனமாகவோ, அன்றிப் பிற பாடங்களைக் கவனித்துக்கொண்டோ இருந்தனராம்.

இம்மாதிரியான நடத்தைகளுக்கு ஆசிரியர் ஒரு சிறிதும் இடம் கொடுப்பதில்லை; ஒழுங்கு முறையில் என்றைக்கும் எக்காரணம் பற்றியும் தவறி நடந்தறியாத ஆசிரியர் தம்மிடம் பாடம் கேட்கும் மாணவர்கள் முறை தவறி நடந்துகொண்டால், அதை எவ்வாறு பொறுப்பர்? மேற் கூறியவாறு பிற விஷயத்தைக் கவனித்துக்கொண்டு ஆசிரியர் சொற்பொழிவைப் புறக்கணித்த மாணவரை விளித்து, ஆசிரியர்,

'நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இவணிருந்து எழுவாய்; நீ ஈண்டு இருத்தலால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை; இவணிருந்து உன்னுற் செயப்படு பொருளிலை; ஆதலான் வகுப்பினின்றும் வெளியேறுக' என்று கூறி அம்மாணவரை வகுப்பினின்றும் அப்புறப்படுத்தி விட்டனர். இலக்கணக் குறியீடுகளாகிய எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்பவற்றைச் சமயத்திற் கேற்றபடி இவர் எடுத்தாண்டது உணரற்பாலது.

இம்மாதிரியான நிகழ்ச்சிகள் மிக அருமையாகவே சாஸ்திரியாரது வகுப்புக்களில் நடக்கும்; ஆயினும் எப்பொழுதும் மாணவர்களது நன்மையிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கும் ஆசிரியர் இவற்றை நிகழவிடாமல் பார்த்துக்கொள்வார். ஆதலால் மாணவர்களுக்கும் ஆசிரியரிடம் மட்டற்ற மரியாதையும் அன்பும் நிறைந்திருந்தன என்ருல் வியப்பைத் தராது.

இதனுல் சாஸ்திரியாரவர்கள் மாணவர்களுக்கு எந்த விதமான உரிமையும் மறுத்து விடுவார் என்பது பொருளன்று.

வகுப்பில் ஆசிரிய மாணவ உறவு இன்ன முறையில் அமைந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்து அதைக் கண்டிப்பாய் நடைமுறையில் செய்து காட்டிய ஆசிரியர், தமது மாணவர்களோடு மற்றச் சமயங்களில் உடன் பிறப்பு முறையில் பழகி வந்தார் என்பது குறிப்பிட வேண்டும். தமது குறும்புத் திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்னும் ஒரே எண்ணத்துடன் விஞக்களை விடுக்கும் மாணவர்களை அவர்களது மட்டத்தை உணரும்படி செய்வதில் வல்லவராயிருந்த ஆசிரியர், உண்மையிலேயே ஐயம் நீக்கிக்கொள்ளும் கருத்தோடு விடுக்கப்படும் விஞக்களுக்கு விடையளிப்பதில் மிகுந்த ஊக்கமுடையவராயுமிருந்தனர்.

மாணவர்களுக்குப் பாடங்களில் நேர்மையான ஐயங்

கள் எழுமாயின் அவற்றை வகுப்பிலேயே கேட்டுத் தீர்த்துக்கொள்ளவிரும்பினும், அன்றி ஆசிரியரை அவருடைய மனையிலேயே சந்தித்துத் தம் ஐயங்களை நீக்கிக் கொள்ள விரும்பினும், அதற்கு ஆசிரியர் எப்போதும் இசைவர். பல்கலைக்கழகத் தேர்வுப் பாடங்களை மாணவர்களுக்குக் கற்பிப்பதோடுகூட, பொறுக்கான சிலருக்குத் தனிப்படச் சிறப்பாகப் பாடஞ்சொல்வதுமுண்டு.

கல்லூரியில் ஆசிரியர் செய்து வந்த தமிழ்த்தொண்டு வகுப்புக்களில் பாடஞ்சொல்வதோடு நின்றுவிடவில்லை; ஒழிவு கிடைத்தபொழுதெல்லாம் நேர்ந்த துறைகளி லெல்லாம், கிடைத்த கருவிகளைக் கொண்டு தமது கூர்த்த அறிவினால் தமிழ்த்தொண்டு செய்து வந்தனர். தமிழறி விற்கும் ஆராய்ச்சிக்குமேயன்றிச் சொற்பொழிவாற்றும் திறமைக்கும் சிறந்த பெயர்பெற்றிருந்த சாஸ்திரியாரைப் பல இடங்களிலும் இருந்த தமிழன்பர்கள் சொற்பொழி வாற்றப் பலகாலும் வரவழைப்பதுண்டு.

தமது கருத்துக்களையும், அவ்வப்போது தமக்குத் தோன்றும் புதிய பொருள்களையும் பத்திரிகைகள் வாயி லாகக் கட்டுரைகளாக வெளியிட்டால் தமிழ் கற்போர்க் கும், மற்றவர்க்கும் பயன்படும் என்று கருதிப் பல கட் டுரைகள் எழுதி விவேகசிந்தாமணி, ஞானபோதினி, முதலிய பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டு வந்தனர். இவர் மாணவராக இருக்கும்போதே சில கட்டுரைகள் வரைந்து விவேகசிந்தாமணி மூலமாக வெளியிட்டிருந் தனர்; ஆசிரியரான பிறகு இவ்விரு பத்திரிகைகளும் ஆசி ரியரது வெளியீடுகளுக்கு மிகவும் பயன்பட்டன.

திராவிட மொழிகளின் வளர்ச்சிக்கு எப்போதும் வாயளவில் ஆதரிப்போர் பலர் என்பதும், செயலள வில் வினை செய்வோர் மிகச் சிலரே என்பதும் யாவரு மறிந்ததே; சாஸ்திரியார் காலம் இதற்கு ஒரு விலக்கன்று. ஆகையால், நமது ஆசிரியர், அம்மொழிகள் முன்னேறு

மாற்றை யாராய்ந்து அதற்குத்தகச் செயல் புரியவேண்டி ஒரு சங்கம் நிறுவ வேண்டும் என்று மிகவும் பாடுபட்டு வந்தனர். இக்கருத்தையே அக்காலத்தில் சென்னையில் இருந்த மற்றும் பல பெரியோர்களும் கொண்டிருந்தனர். இவர்களில் முக்கியமானவர் சென்னை உயர் நீதிமன்றத்து நீதிபதிகளில் பெரும் புகழ் படைத்த **சர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களே.** இவரது பெருந்தன்மை, பரந்த அறிவு, பிறர்க்குதவும் தன்மை முதலிய நற்குணங்களைக் கண்டு தமிழ் மக்கள் அவரை 'மயிலை முனிவர்' என்று அழைத்தனர். இப்பெரியாரை நமது சாஸ்திரியார் அடிக்கடி சென்று கண்டு பேசிப் பழகி வருவதுண்டு. அறிவோடு பண்பும் குலவும் பெருந்தகையாரிடம், அத்தகைய பெரியார் மற்றொருவர் விரும்பிப் பழகியதில் என்ன வியப்பு? இவ்வாறு 'மயிலை முனிவரை'க் காண சாஸ்திரியார் செல்லும்போதெல்லாம் இவரோடுகூட பூரணலிங்கம் பிள்ளையவர்களும், ஆசிரியரது இயற்றமிழ் மாணவர்களில் ஒருவரான **ந. பலராம ஐயர**வர்களும் செல்வதுண்டு. இவர்களது ஆலோசனைகளின் முடிவாகவே கிருத்துவக்கல்லூரியில் நிறுவப்பட்டிருந்த தமிழ்மொழி முன்னேற்றச் சங்கத்தைப் புதுப்பிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கேற்ப 1899-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 5-ம் தேதி 'திராவிட பாஷா சங்க'த்தின் சிறப்புக் கூட்டமொன்று சர். சுப்பிரமணிய ஐயரவர்களின் தலைமையில் கிருத்துவக் கல்லூரியில் நடந்தேறியது. இச்சங்கம் இதற்குமுன் சுமார் பத்தாண்டுகளாக ஒருவாறாக உழைத்து வந்திருப்பினும், இவ்வாண்டிலிருந்து இது புத்துயிர் பெற்றது என்னலாம். இச்சங்கத்தின் சார்பாக இதன் கருத்துக்களை விளக்கி நமது சாஸ்திரியாரே பேருரை யாற்றினர். இச்சங்கம் சில ஆண்டுகள் நன்கு நடைபெற்று வந்தது. *தாம் மாணவ

---

* நாடகவியல் உரை—முதற் பதிப்பு–நூலாசிரியர்-வரலாறு—ந. பலராம ஐயர் எழுதியது.

ராக இருந்த காலமுதற் பலவிதமாக உழைத்து வந்த கிருத் துவக் கலாசாலைத் "திராவிட பாஷாபிவர்த்தினி" சங்கத் திற்கு உதவித் தலைவராக நின்று அதன் அங்கத் தினர் பலரையும் ஊக்கியதை உற்று நோக்கின் அச்சங் கத்தின்மாட்டு ஆசிரியர்க்குள அன்பு அளவிலதென்பது புலப்படும். ஆயினும் காலவயப்படாத சங்கம் யாதுமே யில்லையாதலால், இதுவும் தக்கவாறு போற்றி வளர்ப் பாரும் ஆதரிப்பாரும் இன்மையால் சிறிது சிறிதாகக் குன்றத் தொடங்கியது. இதைப்பற்றிச் சாஸ்திரியார் தமது 'தமிழ்மொழி வரலாற்'றில் பின் வருமாறு கூறி யுள்ளனர் :'...........நன்மக்கள் சிலர் முற்புகுந்து, தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் துளுவங்கள் ஆகிய அனைத்தையும் போற்றுவேம் என எழுந்து 'திராவிட பாஷா சங்கம்' என்னும் பெயர் புனைந்து கொண்டு சின்னாள் உழைத்தனர். இவர்கள் சில ஆங்கிலக் கலைச் சொற்களை மேற்கூறிய மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட்டனர். அதன்மேல் துயிற் பெருந்தேவி இச்சங்கத்தையும் பற்றிக் கொண்டனள். ஆகவே சென்னைத் 'திராவிட பாஷா சங்க'மும் தூங்குவதாயிற்று.' இச்சங்கம் பிறகு துயில் நீங்கி எழவே இல்லை.

இவ்வாசிரியர் தம் சொற்பொழிவுத் திறனை உணர்ந்து வியந்த தமிழறிஞர்கள் இவரை விரும்பியழைத்து இவர் தம் கருத்து நிறைந்த சொற்பொழிவுகளைக் கேட்டுப் பய னடைந்தனர். சைதாப்பேட்டையில் நிறுவப்பட்டிருந்த தமிழ்ச் சங்கத்தில், ஆசிரியரும், அவரது இயற்றமிழ் மாணவர்களில் ஒருவரான **பிரணதார்த்திஹர** சிவனும் தமிழின் பெருமையைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர். மற்றுமோர் முறை திருப்பாதிரிப்புலியூர்க் கோவிலில் தோன்றாத் துணைவர் சந்நிதியில் அப்பர் சுவாமிகள் திரு நட்சத்திரமாகிய சதயத்தன்றிரவு திருத்தொண்டர் புரா ணத்தில் இயற்பகை நாயனாரது சரிதத்தை யெடுத்துப்

பல மேற்கோள்கள் காட்டிச் சொற்பொழி வாற்றினர். "சென்னைத் தமிழ் பாஷாபிவிருத்தி சபை"யாரது வேண்டுகோளுக்கிணங்கி இவர் 'தற்காப்பு நியமம்' என்னும் பொருள் பற்றி யொரு அரிய சொற்பொழி வாற்றினர்; அவ்வமயம் சென்னை ராஜதானிக் கல்லூரி வடமொழிப் பேராசிரியர் ஸ்ரீ. மி. சேஷகிரி சாஸ்திரியாரவர்கள் தலைமை வகித்தனர். இச்சொற்பொழிவு 'தமிழ் வியாசங்கள்' என்னும் நூலிற்சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை ஆசிரியரது பரந்த அறிவிற்கு ஓர் அறிகுறியாம் இதைப்பற்றித் திருமயிலை மகா வித்வான் சண்முகம் பிள்ளையவர்கள்

'பொலம் பூத்த தற்காப்பு நியம மெனும்
விடயமரும் புலவோர் நாட
நலம்பூத்த சுவைசெறிசெந் தமிழ்வசன
நடையினனி நலக்கத் தந்தான்
குலம்பூத்த பிறப்பொழுக்கங் குன்றாத
நான்மறையோர் குலத்துட் டோன்றி,
வலம்பூத்த வேற்கு கற்றூழ்
சூரியநா ராயணநாவலவ ரேறே'

என்று அப்போது பாடினர்.

கிருத்துவக் கல்லூரியில் சரித்திரப் பேராசிரியர் கெல்லெட் (F. W. Kellet) அவர்கள் ஆசிரியராயிருந்து 'கிருத்துவக் கல்லூரிப் பத்திரிகை' என்பதோர் மாதாந் தப் பத்திரிகையை நடாத்திவந்தனர். இப்பத்திரிகையில் பெரும்பாலும் ஆங்கிலக் கட்டுரைகளையே அச்சிட்டு வெளிப்படுத்துவது வழக்கம். தமிழில் வரையப்பட்ட கட்டுரைகளைக் கல்லூரிப் பத்திரிகையில் வெளியிடுவது முறையன்று என்று கூடக் கருதப்பட்டது போலும். ஆயினும் ஆசிரியரது நன் முயற்சியால் முதன் முதலாகத் தமிழ்க் கட்டுரைகளும் இப்பத்திரிகை வாயிலாக வெளி வரத் தொடங்கின. ஆசிரியர் இயற்றிய சில தனிப் பாசு

ரங்களும் சில கட்டுரைகளும் 'மான விஜயம்' என்னும் செய்யுள் நாடகமும், இப்பத்திரிகை வாயிலாகவே வெளி வந்தனவாம். 'முற்றும் ஆங்கில மொழியானியன்று வெளிப்படும் கிருத்துவக் கலாசாலைப் பத்திரிகையின்கண் விலக்கென எம் புன்னூலை (மானவிஜயம்)யும் பதிப்பித்து எம்மைப் பலரும் நன்கு மதிக்குமாறியற்றிய அப்பத்தி ராதிபர் கருணைத்திறம் ஒருபொழுதும் மறக்கற்பால தன்று' என்று 'மான விஜயம்' முகவுரையில் ஆசிரியரே கூறியுள்ளனர்.

இவரது தமிழறிவை யுணர்ந்து இவரைத் தம் கல்லூரியில் தமிழாசிரியராக நியமித்துக்கொண்ட மில்லரவர்களுக்கு, இரண்டாண்டு தமிழ் ஆசிரியத்தொழிலை இத்துணைத் திறமையோடு இவர் நடாத்தியதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியுண்டாயிற்று. 1885-ம் ஆண்டில் இவர் அக்கல்லூரியில் **தலைமைத் தமிழ்ப் பண்டிதராக** நியமிக்கப் பட்டார்.

பொருட் செல்வத்தை யொரு பொருட்டாக எப்பொழுதும் கருதியதில்லை என்பதை முன்பே குறித்துள்ளோம். அதோடு ஆசிரியரது தன்னலங் கருதாப் பெருந் தகைமையையும் குறிப்பிடுதல் வேண்டும்.

> 'ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
> பொன்றாது நிற்பதொன் றில்'

என்பது பொய்யா மொழியேயாம். நன்னெறியால் ஈட்டப் பட்ட புகழ் ஒன்றே 'பொன்றாது நிற்பது' என்பதையும், நல்வினையே 'பொன்றுங்காற் பொன்றாத்துணை' என்பதையும் நன்குணர்ந்திருந்த ஆசிரியரோ தன்னலங் கருதி நன்னயம் மறுப்பவர்?

நமது ஆசிரியர் சென்னையில் தங்கசாலைத் தெருவில் வசித்து வந்த மனை, செங்கல்வராய முதலியார் என்னும் பெருந்தகையாளரது என்பதை முன்பே குறித்துள்ளோம்; இச் செங்கல்வராய முதலியாரது குமாரர் **சரவண**

முதலியார் தமது மேற்படிப்பை முன்னிட்டுச் சென்னைக் கிருத்துவக் கல்லூரியிலேயே சேர்ந்து படித்தனர். இதற்கு முதற் காரணம் யாதெனில், அக்கல்லூரியிலேயே படித்தால் சாஸ்திரியாரிடம் தமிழை நன்கு கற்க முடியும் என்பதேயாம். சாஸ்திரியாரும் சரவண முதலியாருக்கு வகுப்பிலேயேயன்றித் தமது மனையிலேயும் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுக்கொடுத்து வந்தனர். இவரும் ஆசிரியரது இயற்றமிழ் மாணவர்களில் ஒருவராவர். பி. ஏ. வகுப்பிற்குப் பாடமாக வைத்திருந்த தமிழ்ப் பகுதிகள் அவருக்குக் கிள்ளுக் கீரையாகவே இருந்தன ; சங்க இலக்கிய இலக்கணங்களையும் ஆசிரியரிடம் வரன்முறையாகப் பாடங்கேட்டவருக்குப் பல்கலைக் கழகப்பரீட்சை எம்மாத்திரம்? அவ்வாண்டு பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள் யாவருள்ளும் சரவணமுதலியாரே மிக அதிகத் தமிழ்ப் பயிற்சி உடையவர் என்பது யாவருமறிந்ததே. இவர் பி. ஏ. பரீட்சைக்குப் போன ஆண்டு தமிழ்ப் பரீட்சைக் குழுவின் உறுப்பினர்களில் சாஸ்திரியாரும் ஒருவராயிருந்தனர். இயல்பாகவே சரவண முதலியார், அவ்வாண்டுத் தமிழ்த் தேர்தலில் முதல்வராக நிற்கக் கூடியவராயினும், அவருடன் படித்த மாணவர்களில் சிலர், முதலியாரது கல்வியைக் கண்டு பொறுமையாலோ அன்றித் தமது இயலாமையால் மனம் நொந்தோ தவித்தனர். இவர்கள் அவரைப் பார்த்து, 'இவ்வாண்டுத் தமிழ்ப் பரீட்சையில் மாகாண முதல்வனாக நீயே தேர்வாய் என்பதில் ஐயமில்லை ; ஏனெனில் உனது இயற்றமிழ் ஆசிரியராகிய சாஸ்திரியாரே பரீட்சகராயிருக்கின்றனர் அன்றோ?' என்று குறும்பு கலந்த கேலியோடு கூறிவந்தனர். இது கண்டு மனம் வருந்திய சரவண முதலியார் இதனை ஆசிரியருக்கு அறிவித்து விட்டனர். இவ்வகையான எண்ணம் தம் மாணவர்களிலேயே சிலருக்கு இருப்பதாக

உணர்ந்த சாஸ்திரியாருக்கு அளவிறந்த மன வருத்தம் ஏற்பட்டது; தாம் பரீட்சகராயிருப்பின், சரவண முதலியார் இயல்பாகவே முதல்வராகத் தேறினும் தாம் தமது இயற்றமிழ் மாணவருக்கு வரம்புமீறி உதவி புரிந்துவிட்டதாகத் தமது பகைவர்கள் கதை கட்டிவிடக் கூடும் என்று கண்டுகொண்டனர். ஆகவே, அவ்வாண்டு தமக்குத் தமிழ்ப் பரீட்சகர் பதவி வேண்டாம் என்று எழுதிவிட்டனர்; அதற்குப் பதில் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் அப்பொழுது தமிழாசிரியர் அலுவலைத் திறம்பட நடத்திவந்த **உ. வே. சாமிநாத ஐயரவர்களை** நியமித்துக் கொள்ளலாம் என்றும் பல்கலைக் கழகத்தார்க்குக் குறிப்பிட்டுவிட்டனர். அப்போது பல்கலைக் கழக உபதலைவராயிருந்த டாக்டர் மில்லர் அவர்கள் சாஸ்திரியாரை அழைத்து, 'பல்கலைக் கழகத்தார் உம்மிடத்தில் முழு நம்பிக்கை வைத்திருக்கும்போது, யார் எது கூறினும் என்ன? பரீட்சகர் பதவியைக் கைவிடுவதால், பண நட்டமேயன்றி வேறென்ன பலன் உண்டு?' என்று கேட்டனர். அதற்கு ஆசிரியர் சிறிதும் தயங்காது, 'எனது மாணவனது பெருமையை விடச் செல்வப்பேறு எனக்கு பெரிதல்ல' என்று கூறிவிட்டனர். மில்லர் துரையும் இவரது **தன்னலங் கருதாத் தகைமையை** வியந்து, இவர் விரும்பிய விதமே செய்தனர்.

இவ்விதமாக, பண வருவாயுடைய ஒரு பதவியை உதறி எறிவது என்பது தற்காலத்தவர்களால் மனதாற் கூட நினைத்தற்கியலாத ஒரு காரியம். அன்றியும் சாஸ்திரியார் காலத்தில் ஆசிரியர்களுக்கு வருவாய் மிகக் குறைவு என்பதையும் நினைவூட்டிக் கொள்ளின், இது ஒரு உண்மையான தியாகம் என்றே கருதவேண்டும். ஒரு கொள்கைக்காகவும், தமது மாணவனது புகழ் மங்காதிருக்கும் பொருட்டும், இச்செயலைச் செய்யத் துணிவார் மிகச் சிலரே. சாஸ்திரியாரது வாழ்க்கையே ஒரு பெரும்

'தியாக உற்சவ'மாக நடைபெற்றது. நாடகத் தமிழுக் காகத் தமது மதிக்க ஒண்ணுத உயிரையே தியாகஞ் செய்த பெரியார், கொள்கைக்காக பண வருவாயை விட்டுக்கொடுத்தது நமக்கு வியப்பை யளிப்பதாகாது.

சரவண முதலியாரே அவ்வாண்டு ராஜதானியிலேயே முதல் வகுப்பில் முதல்வராகத் தமிழில் தேறி பாஸ்கர சேதுபதி பொற்பதக்கமும் பெற்றுவிளங்கினுர். ஆசிரியர் இவ்விஷயத்தில் காட்டிய பெருந்தன்மையை அவரது இயற்றமிழ் மாணவர்கள் மிகுந்த பெருமிதத்தோடும் பக்தியோடும் கூறிக்கொள்வார்கள்.

ஆசிரியருடைய மாணவர்களில் ஒருவரும் திருப்புகழ் பதிப்பாசிரியர் வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் குமா ரருமான, வ. சு. செங்கல்வராய பிள்ளை ஒருமுறை கிருத் துவக் கலாசாலையில் படித்த மாணவர்களில் தமிழில் முதல்வராகத் தேர்ந்தார். அக்கலாசாலையிலேயே படித்து வந்த ஆர். வி. கிருஷ்ணையர் ஆங்கிலத்தில் முதல்வராக வும் தமிழில் இரண்டாமவராகவும் தேறினுர். கலாசாலை அதிகாரிகள் தமிழுக்குக் கொடுக்க வேண்டிய பரிசை ஆர். வி. கிருஷ்ணையருக்கே கொடுப்பதென முடிவு செய் தார்கள். ஆசிரியர், மில்லரிடம் வாதாடித் தமிழ்ப் பரிசைத் தமிழில் முதல்வராகத் தேறின வ. சு. செங்கல்வராய பிள்ளைக்கே கொடுக்கும்படி செய்தார். தமிழ் விஷயத் தில் மில்லரோடு நேரில் வாதாடும் உரிமையை ஆசிரியர் பெற்றிருந்தார் என்று தெரிகிறது. இதனுல் ஆசிரியரது தமிழார்வமும் வகுப்பு வேற்றுமை மனப்பான்மை யின் மையும் நன்கு புலப்படும்.

தமது மாணவர்களது தமிழறிவைப் பற்றிச் சாஸ்திரி யார் மிகுந்த பெருமை கொண்டிருந்தார்; கிருத்துவக் கல்லூரித் தலைவர் டாக்டர் மில்லரிடமும், அக்கல்லூரி யில் தாய்மொழிக் கல்வி மேற்பார்வையாளராயிருந்த ரங்கய்ய செட்டியாரிடமும், தம்மிடம் தமிழ் பயிலுபவர்

அம்மொழியில் மிகுந்த ஆர்வமும் அறிவும் பெற்று வருவதைப் பற்றிப் பெருமையோடு புகழ்ந்து சொல்லிக் கொள்வர்.

இவர் கல்லூரியில் பாடஞ் சொல்வதற்கு அமைந்த பாடப் பகுதிகள் எல்லாம் இவருக்கு மிக எளிய பகுதிகளாகவே அமைந்திருந்தன. அக்காலத்தில் மாணவர்களும் (தற்காலத்தில் போலப் பல விஷயங்களிலும்) புத்தியைப் பரக்க விடாமல், தங்கள் பாடங்களை நன்கு படித்து வந்தமையால், ஆசிரியர்க்கு அவர் தொழில் எள்ளளவும் வருத்தம் கொடுக்கவில்லை. ஆகவே ஆசிரியர் சபாபதி முதலியாரிடம் தாம் கற்ற தமிழ்க் கல்வியையெல்லாம் சொல்லிக் கொடுக்கவோ, அன்றித் தாம் புதுமுறையாக ஆராய்ச்சி செய்து வைத்திருந்த அரிய விஷயங்களை எல்லாம் எடுத்துரைக்கவோ, அன்றிச் சங்க இலக்கிய இலக்கணங்களைப் பாடம் சொல்லவோ வாய்ப்பில்லாமற் போயிற்று. இது கண்டு ஆராமை கொண்ட ஆசிரியர், தம்மிடம் கல்லூரியில் பாடம் கேட்கும் தமிழ் மாணவர்களிற் சிலரை மட்டும் தமது மனைக்கு வரவழைத்து அவர்களுக்கு இயற்றமிழ் கற்பித்து வந்தனர். இவர் செய்து வந்த தமிழ்ப் பணிகள் யாவற்றுள்ளும் தலை சிறந்தது இதுவே எனலாம். இவரிடம் தமிழ்பயின்றவர்கள் யாவரும் இலவசமாகவே பயின்றனர். ஆசிரியர் தமிழைப் பொருள் வருவாய் கருதி யாருக்கும் எப்பொழுதும் போதிப்பதில்லை. இதனால் இவர் தமது தமிழார்வத்தாலும், தமிழ்க் கல்வி முழுவதும் பிறர்க்குப் பயன்படவேண்டும் என்னும் ஆர்வத்தாலும் இயற்றமிழ் மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து வந்தனர் என்பது தெளிவு. இக்கருத்தையே ஆசிரியரும், 'தமிழ் வாணரும் சாமானிய ஜனங்களை ஒட்டிச் சென்று அவர்களைக் கைவிடாது பற்றிக்கொண்டு திருத்தி, அவர்களையும் மகிழ்வித்துத் தாமும் மகிழ்வார்களாக.

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'—

என்ற திருவள்ளுவனார் வாக்கு ஒரு பொழுதும் மறக்கற் பாலதன்று' என்று கூறியுள்ளனர். இவ்வாறு இவர் தனித்து இயற்றமிழ்ப் பாடங் கூறிவந்த மாணவர்கள் பன்னிருவர் ஆவர்.

ஆசிரியருக்கு அவரது பத்தொன்பதாவது வயதில் பழனியில் கல்யாணம் நடந்தது. பழனியில் அரசாங்க வேலை பார்த்துவந்த திண்டுக்கல் **ப. கல்யாண சுந்தரம் ஐயர்** கடைசிப் புத்திரியான **முத்து சுபலக்ஷ்மியம்மாள்** எனும் குணவதியாரே மனைவியார். சகோதரர் ஐவருடனும் சகோதரி ஒருவருடனும் பிறந்தவர். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்ற ஆன்றோர் வாக்கிற் கிணங்க இருவரும் வாழ்ந்தனர் என்பது தேற்றம். இவ்வகை மனைமாட்சியையே 'மங்கலம்' என்றனர் வள்ளுவனார்; 'மற்றதன் நன்கலம் நன்மக்கட்பே' றல்லவா! துன்முகி வருடம் கார்த்திகை மாதம் 19-ம் நாள் புதன்கிழமை சுவாதி நட்சத்திரத்தில் (2—12—1896) ஆசிரியருக்கு ஒரு புதல்வி பிறந்தனள். அப்பெண்ணுக்கு, சில ஆண்டுகளுக்கு முன் இறந்து போன தமது தமக்கையாரான '**ஆனந்தவல்லி**' அம்மாளின் பெயரையே சூட்டினர்.

1899-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ந் தேதி இவரது முதல் குமாரன் பிறந்தனன்; '**நடராஜன்**' என்னும் பெயரிட்டுச் செல்வமாய் வளர்த்தனர் ஆசிரியர். தமது முதல் புத்திரனுக்குத் தம் தமிழாசிரியரான சபாபதி முதலியாரின் பெயரையே பரியாய நாமத்தாற் குறித்துப் பெயரிட்டதும், ஆனி உத்திரத்தில் பிறந்த காரணத்தால் நடராஜப் பெருமானது பெயரையே வைத்ததுமான பொருத்தம் உணரற்பாலது.

## அத்தியாயம் 5

# நாடகப் பணியும் நாட்டுப் பணியும்

ஆசிரியர் வயதில் இளைஞராயிருந்தனராயினும் அறிவிலும் நியமத்திலும் பெரியவராகவே விளங்கிவந்தனர். இவர் தீவிர சைவராயிருந்தார்; அதுதானே அவரது குல மரபு! சைவ சிகாமணியான மணியசிவனாரது தொடர்பு ஏற்பட்ட பிறகு வேறு எவ்வாறு இருக்க முடியும்? இலக்கியத் தொண்டு அவரைச் சென்னையில் இருத்திய போதிலும், முக்கியமான அமயங்களில் புண்ணியத்தலங்கள் தோறும் சென்று இறை வழிபாடு செய்வதில் ஆசிரியர் தவறுவதில்லை.

1894-ம் ஆண்டு ஆசிரியர் தமது தாயாரோடும் கூடச் சீகாளத்தி சென்றிருந்தனர். அது மகாசிவராத்திரி நாள். பொன்முகலியாற்றில் ஸ்நானம் செய்துகொண்டும், அடியார்க்கருளும் இறைவனையும், பக்தசிகாமணியாய் அன்பொருபிழம்பாய் நின்ற கண்ணப்பரையும் வணங்கிக் கொண்டும் சிலநாள் அங்குத் தங்கியிருந்தனர். இறைவன் திருமுன்பு இருக்கும்போது, இறைவனது பேரருள் பெற்றோரது நினைவும் உடன் உண்டாதல் இயற்கையேயன்றோ? சீகாளத்தி இறைவன் முன்பு தம்மை மறந்து பக்தி வயப்பட்டு நின்ற சாஸ்திரியாருக்குத் தமது தந்தையாரது ஞானாசிரியரும் சிவானுபூதிச் செல்வருமான மாங்குடி மணிய சிவனாரது நினைவுண்டாயிற்று. அவ்வமயம் அச்சிவனார் மீது தாம் ஓர் அழகிய கலிவெண்பாவை யியற்றினார். இதுவே 'மணியசிவனார் கலிவெண்பா' என்பது. இக் கலிவெண்பா 124 அடிகள் கொண்டது. இதன் கண் மணியசிவனாரது பலபடித்தான பெருமைகளையும் விரித்துரைத்துள்ளனர். அன்றியும் அச்சிவனாரது சீடர்களான ஸ்ரீநிவாசசிவனார், சுப்பிரமணியசிவனார், கோவிந்த சிவனார் ஆகிய சிறந்த சிவனடியார்களைப் பற்றியும் அவர்களுடைய

DR. T. P. M. LIBRARY

பெருமைக் குணங்களைப் பற்றியும் அழகுற விளங்க எடுத்தோதியுள்ளனர். மாங்குடி மணியசிவனாரிடம் ஆசிரியர்க்கு இருந்த அளவிறந்த பக்தியும் அன்பும் இதனால் நன்கு புலனாகும்.

இம் மணியசிவனார், ஆசிரியர் தம் தந்தையாகிய கோவிந்தசிவனாருக்கு நேரடியான ஞானகுருவாயும், தீட்சாகுருவாயும் அமைந்தனராயினும், தமக்கும் ஒரு வகையில் அவர் தீட்சாகுருவாயிருந்தனர் என்பதை இக் கலிவெண்பாவில் விளங்க வைத்துள்ளனர். சாஸ்திரியாரது ஆழ்ந்த அறிவு, ஆன்ற பண்பு இவையிற்றை யுணர்ந்த மணியசிவனார் ஆசிரியர் தம் கனவில் எழுந்தருளி ஐந்தெழுத்து (நம: சிவாய), ஆறெழுத்து (நம: குமராய) மந்திர உபதேசங்களைச் செய்தருளினர் என்பதையும் குறிப்பிட்டுள்ளனர்.

* '........................................—அஞ்செழுத்து
மந்திரத்தை யெங்கனவில் வந்துரைத்த—சுந்தரனை,'

என்றும்

* '...................................................விள்ளரிய
ஆறெழுத்தை யெம்மனச்செ யன்பான் விதைத்தானை'

என்றும் கலிவெண்பாவில் வரும் அடிகளைக் காண இது புலனாகும். தமக்கு இளமையிலேயே உண்டாக்கிய தமிழறிவும் பெருமையும் எல்லாம் மணியசிவனார் தமக்குச் செய்த ஆசியின் பலத்தால் தான் என்ற உணர்ச்சி மேலிட்டிருந்தார் சாஸ்திரியார்.

* '......................................— † சோத்தம்யாஞ்
செய்யுளாற் செய்வான் திருவருள் புரிந்தானை'

என்றும்

* '..................யெந்தமக்கு மேம்பாடு —தந்தவனை'

---

* பாவலர் விருந்து—ஸ்ரீமணியசிவனார் கலிவெண்பா.

† சோத்தம்—இழிந்தோர் செய்யும் அஞ்சலி.

என்றும் நன்றியறிவு நன்கு புலப்பட இக்கலிவெண்பாவிற் காட்டியுள்ளார்.

ஆசிரியர் தாம் செய்த தமிழ் நூல் பலவற்றையும் ஆராய்ந்து வரும்பொழுது தமக்கு ஏதோ முக்குணவயத்தால் ஐயம், திரிபு, அறியாமைகள் ஏற்பட்டு, அக்காரணத்தால் ஆராய்ச்சிக்கு இடர்ப்பாடு ஏதேனும் ஏற்பட்டால், ஐயம் ஒழிய ஓதி மனப்பாடமாகத் தாம் வைத்திருந்த இக்கலிவெண்பாவை ஒரு முறை ஓதியபின் துயிலப் போவது வழக்கம்; தூக்கத்தில் ஸ்ரீமணியசிவனார் ஆசிரியரது கனவில் எழுந்தருளி அவ்வையப்பாடுகள் அனைத்தையும் நீக்கிவிடுவர்; துயிலுணர்ந்த பிறகு, இவருக்கு எல்லாம் தெளிவாய் உண்மை விளங்கப் பெறும். இது பலகாலும் நிகழ்ந்ததுண்டு என்பதை ஆசிரியரே தமது மாணவர்களிடம் கூறியுள்ளனர் என்ப. இதனால், மணியசிவனாரிடம் சாஸ்திரியார் எவ்வளவு கடமைப்பட்டிருந்தார் என்பது ஓரளவு புலனாகும்.

ஒவ்வோராண்டும், கல்லூரி விடுமுறை சமயத்தில் சாஸ்திரியார் சென்னையைவிட்டு மதுரைக்குச் சென்று சில காலம் தங்குவது வழக்கம்; தமது தாய் தந்தையரும் மற்ற உற்ருர் உறவினரும் வசிக்குமிடம் என்பது மட்டுமன்றி இவரது பிறப்பிடமுமான மதுரையம்பதி மீது இவருக்குத் தனிமையான அன்பு உண்டு. இதனாலேயே மதுரையைவிட்டு நெடுநாள் பிரிந்து வசிக்க இவர் மனம் ஒப்புவதில்லை. இதைத் தமது 'மதுரை மாநக'ரில்,

*" நின்னிற் பிரிந்து நெடுங்கலை கற்பேன்
சென்னை போந்துஞ் சிறியனே னுள்ளம்
பன்னாள் சென்றும் பரிந்து நிற்காண
வேட்கை மேவி விரைந்தாண்டு தோறு
மிருமதி நின்வயி னிருந்தேன்........."

---

*பாவலர் விருந்து—மதுரை மாநகர்.

என்று ஆசிரியரே கூறுகின்றனர். இதற்கேற்ப, 1894-ம் ஆண்டும் இவர் மதுரைக்குச் சென்று இரண்டு மாதங்கள் தங்கியிருந்தனர். அவ்விடத்தில் தமது நியம குருவான மணியசிவனுருடைய மாணவர்களில் சிறந்தவர்களான கோவிந்தசிவனுர், சுப்பிரமணியசிவனுர், ஸ்ரீனிவாசசிவனுர் என்பாரது சிவபக்திச் செயல்களில் ஈடுபட்டு, அவர்களைப் புகழ்ந்து முப்பத்தேழு அடிகள் கொண்ட ஆசிரியப்பா ஒன்றையியற்றினர். இதில் தமது அவயவங்களை விளித்து, அப்பெரியார்களை நினைந்து, கண்டு, கேட்டு, அவர்கள் அருச்சிக்கும் மணம் வீசுமலர்களை முகர்ந்து, அவர் பாதம் வழுத்தித் தலைபணிந்து மலையாதிருக்குமாறு வேண்டிக் கொள்ளு முகத்தால் அவர்களது பெருமையை விளக்கிக் கூறியுள்ளனர். இம்மூவரும் சிவபக்தியிற் சிறந்தோர் என்பதையும், அப்பக்தியால் தமது பழவினைப் பயனை நீக்கிக் கொண்டவர்கள் என்பதையும்,

'.............................பரம சிவன் பேர்
மொழிந்து †சஞ்சித மொழிந்த தூயரை'

என்று அழகாகக் கூறியுள்ளனர்.

இவர் தமது இருபத்தைந்தாம் வயதிற்குள்ளாகக் கல்லூரியில் மூன்று ஆண்டுகள் உதவித் தமிழ் ஆசிரியர் தொழில் ஆற்றிவிட்டனர். இதன்கண் இவர் காட்டிய அரிய திறமையைக் கண்டுணர்ந்த கல்லூரித் தலைவர் டாக்டர் மில்லர் இவரது அறிவாற்றல்களை மிகப் பாராட்டினர். அன்றியும் 1895-ம் ஆண்டில், கிருத்துவக் கல்லூரியில் சின்னசாமிப் பிள்ளையவர்கள் வகித்து வந்த தலைமைத் தமிழாசிரியர் பதவிக்கு வேறு யாரையும் நியமிக்காது நமது சாஸ்திரியாருக்கே அப்பதவியை

* பாவலர் விருந்து – அவயவ அறிக்கை.

† சஞ்சிதம்: ஆன்மா அநாதியாகச் சேர்த்து வைத்துள்ள வினைத் தொகுதி.

அளித்தனர். சாஸ்திரியாரும் தமிழ்த் தொண்டைப் பெருமையோடு நடத்தத் தமக்குக் கிடைத்த பேற்றை எண்ணி, இதுவும் இறைவன் திருவருளே என்று மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். இருபத்தைந்துவயது முடிவடைவதற்குள்ளாக, சென்னையிலுள்ள சிறந்த கல்லூரிகள் ஒன்றில் தமிழ்த் துறைத்தலைவர் பதவி ஏற்றுத்திறமையோடு நடத்துவது என்பது பெரும்பாலோர்க்குக் கிடைக்கக்கூடிய எளிய வாய்ப்பன்று. இவருக்கு இப்பதவி கிடைத்தது இவரது தமிழ்ப் பணியும், இவர் இப்பதவியைப் பெறுவதற்காக யாதொரு முயற்சியும் செய்யாமையுமே என்னலாம்.

இது இவ்வாறாக, அப்பொழுது ஆசிரியர் அடைந்த பெருமையையும் புகழையும் கண்ட சில போலிகள் பொறாமையால் வாடிவதங்கிக்கொண்டிருந்தனர் என்றால் அதில் என்ன வியப்பு? அது எவ்வளவு வெறுக்கத்தக்க பண்பேயாயினும், வாழ்க்கையில் எத்துறையிலாயினும் ஏமாற்றமடைந்தவர்கள் பொறாமையும் அடைவது இயல்புதானே! அவ்வியற்கை விதிக்கேற்ப, தாங்கள் பல்லாண்டு இம்மண்ணுலகில் வாழ்ந்தும் புகழ் என்பதிருக்கும் இடத்தையும் எட்டிப் பார்த்தறியாத எளிய பண்டிதர்களுள் சிலரும், நமது சாஸ்திரியார் தமது நுண்ணறிவுத் திறத்தாலும் புலமையாலும் சொல்வன்மையாலும் மொழியாராய்ச்சியாலும் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்று விளங்குவதைக் கண்டு பொறாமைப் பேய்க்காளாகி, ஆசிரியரை யொன்றும் செய்யமாட்டாதவராயினும், தமக்குள் தாமே புழுங்கிக் கொண்டிருந்தனர்.

அவ்வமயம் நாடகத் தமிழில் பெரிதும் ஈடுபட்டிருந்த ஆசிரியர், தமிழ் மொழியில் நாடக இலக்கணங்கள் சில இருப்பதைப்பற்றி அறிவோமேயன்றி உரைநடையில் இயன்ற நாடகங்கள் இல்லையாதலால் அவ்வகை இலக்

கியம் தமிழில் ஏற்படவேண்டும் என்னும் கருத்தோடு, 'ரூபாவதி—அல்லது காணுமற்போன மகள்' என்னும் நாடகத்தை இயற்றிக் கொண்டிருந்தனர். இந்நாடகம் அச்சானவுடன் இதைப் பல விதமாகக் கண்டித்து அவதூறு செய்யச் சில வீணர்கள் காத்திருப்பதைச் சாஸ்திரியாரும் எவ்வாறே உணர்ந்தனர். இதை எவ்வாற்றானும் தடுக்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு தாம் வெளியிட்ட 'ரூபாவதி—இரண்டாம் பதிப்'பில் பல திருத்தங்களைச் செய்து கொண்டனர்; அன்றியும், நல்ல இலக்கியப் பயிற்சியுள்ள ஒருவரைக்கொண்டு இந்நூலுக்கு ஒரு முகவுரை பெற வேண்டும் என்று கருதி, அப்போது கோயம்புத்தூர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராயிருந்த பூரணலிங்கம் பிள்ளையவர்களை ஒரு முகவுரை எழுதித் தரும்படி கேட்டனர். பிள்ளையவர்களும் அவ்வண்ணமே செய்வதாக வாக்களித்து விரைவிலேயே நீண்டதொரு முகவுரையும் எழுதி யளித்தனர். இம்முகவுரைக்கண், நூலைப் பலவாறு பழித்துரைக்க எண்ணியிருந்தவர்கள் எண்ணம் எல்லாம் அழியும்படி அந்நாடகத்தின் உட்பொருள்களையும், பல வகைப்பட்ட அரிய பண்புகளையும் நன்கு விளக்கி எழுதி விட்டனர்; அதோடு நூலின் அருமையையும் ஆசிரியர்தம் பெருமையையும் நிலைநாட்டினர். இது கண்டு வாய் வாளாமை மேற்கொண்டு ஆரவாரமின்றி அடங்கினர் இவர் பகைஞரும்.

ரூபாவதி நாடகம் 1895-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் நாளன்று இரவு சென்னை வித்தியாபிமான சங்கத்தாரால் அரங்கேற்றப்பட்டது. அச்சமயம் சாஸ்திரியாரே ரூபாவதி வேடம் பூண்டு திறம்பட நடித்தனர்; மற்றும் அவரது நண்பர்களிற் சிலரும் இயற்றமிழ் மாணவர்களிற் பலரும் பற்பல வேடங்கள் பூண்டு அந்நாடகம் அரங்கேற்றுதற்கண் கலந்துக் கொண்டனர். இதனால் ஆசிரியர் நாடகம் இயற்றுவதிலேயேயன்றி

அவ்வந்நாடகங்களில் வரும் முக்கிய பாத்திரங்களின் வேடங்களைத் தாமே மேற்கொண்டு நடிப்பதிலும் திறமை சாலி என்பது புலப்படும். 'இவர் நாடகம் எழுதுவதில் வல்லுநராயிருப்பதனோடு எத்தகைய நாடக பாத்திரத்தையும் எளிதிற்றுமெனக் கருதி நடிக்கும் வன்மையுடையார்' என்பர் நாடகவியல் உரைகாரர்.

ஆசிரியர் இயற்றியுள்ள நூல்களில் இப்பொழுது நின்று நிலவிவரும் நூல்கள் ஒன்பதனுள்ளும் இதுவே முதன் முதல் இயற்றப்பட்டதாகும். இந்நூல் வெளிப் பட்டதிலிருந்தே சாஸ்திரியாரது நூலாற்றும் திறமை கற்போர் உலகிற்கே கையகத்து நெல்லிக்கனி என விளங்குவதாயிற்று.

அடுத்தபடியாக இவர் எழுதி வெளியிட்ட நூல் 'கலாவதி' என்னும் நாடகமாகும். இந்நூல் வெளியான வுடனேயே மேன்மேலும் எழும் இவரது புகழைக் கண்டு வேண்டா வெறுப்போடு சிரமப்பட்டுக் கொண்டிருந்த சிலருக்கு வாயடைத்து விட்டது. தாம் இயற்றிய நாடக இலக்கணமாகிய 'நாடகவியல்' என்னும் நூலுக்கு ஒரு இலக்கியமும் இயற்றிக் காட்ட வேண்டும் என்னும் கருத்து மீதூர இதை இயற்றினர். இதைப்பற்றிக் 'கலாவதி' நாடக முகவுரையில் ஆசிரியரே ஒருவாறு குறிப் பிட்டுள்ளனர்: 'இடையே நாடக இலக்கணம் அணுத் துணையும் அறியாத சில புல்லறிவாளர் தோன்றித் தாமும் நாடகம் எழுதுவான் புக்குக் குன்று முட்டிய குரீஇப் போலப் பெரிதும் இடர்ப்பட்டு எழுதியதையும் வெளியிட வெள்கி மயங்கித் திரியா நின்றார். இப்போலிகள் நாடக விலக்கணங் கற்றுத் தருக்கடங்கி யுறுதிகூடுதல் கருதியும், எந்தம் இயற்றமிழ் மாணவர்க்கு நாடகத்தமிழும் அறி வுறுத்தல் கருதியும் சூத்திரமும் உரையுமாக 'நாடக இயல்' என்று தலைக்குறியிட்டு ஆங்கில கீர்வாண அமைதி களை அநுசரித்து ஒரு நூல் செய்துளேன்.' அன்ன இலக்

கணத்திற்கு இலக்கியமாகவே இக்கலாவதி நாடகமும் இயற்றப்பட்டது.

இக்கலாவதி நாடகம் 1897-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி "வித்வங் மநோரஞ்சனி சபை"யார் மூலமாகச் சென்னை **விசயை பொதுஜன மண்டப** (Victoria Public Hall)த்தில் அரங்கேற்றப்பட்டது. இதை இந்நாடகத்தின் இறுதிச் செய்யுளாகிய,

> 'வீடறும் பொதுஜன விசயை மண்டப
> வாடரங் காகிய வதற்கு நம்மவை
> நாடிவந் தாடிய நடர்க்குங் காணிய
> கூடிய மாந்தர்க்குங் குறைவில் சோபனம்'

என்னும் பாடலில் குறித்துள்ளனர். இதில் வித்வங் மநோரஞ்சனி சபையை 'நம்மவை' என்கின்றனர். இதனாலேயே, அறிஞர்கள் பலரால் நிறுவப்பட்டு நாடகக் கலையை நல்வழிப்படுத்தப் பெரும் பாடுபட்டு வந்த இச் சபையோடு நமது ஆசிரியர் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தனர் என்பதும் தெளிவாம். இந் நாடகத்தின்கண்ணும் கலாவதி வேடம் பூண்டு நமது ஆசிரியரே நடித்தனர்.

'வித்வங் மநோரஞ்சனி சபை'யோடு நெருங்கிய உறவு வைத்துக் கொண்டிருந்தவர்களில் மற்றொருவர் தண்டலம் **ச. நாராயண சாஸ்திரிகள்** என்பவராவர். இவர் ஆசிரியர்க்கு நெருங்கிய நண்பர்; ஆசிரியர் இயற்றிய 'மணிய சிவனார் சரித்திரம்' என்னும் வடமொழி மேற்கோள்கள் மிகவும் விரவிய உரைநடை நூலுக்குச் சாற்றுக் கவியொன்று வடமொழியிற் கூறியவர்; இவரே 'போஜ சரித்திரம்' என்னும் மிக நீண்டதொரு தமிழ் நாடகம் இயற்றியுள்ளனர்; இப் 'போஜ சரித்திர' நாடகத்தை நாராயண சாஸ்திரியார் இயற்ற மிக உதவி புரிந்தவர் நமது ஆசிரியரேயாம்; அன்றியும் சாஸ்திரியாரது 'நாடகவியல்'

என்னும் இலக்கண நூலை இயற்றுதற்கண் வடமொழி மேற்கோள்களையும் நாடக நூல்களையும் ஆராய்வதில் பெரிதும் உதவி புரிந்தனர் நாராயண சாஸ்திரியார். இதை ஆசிரியர் 'நாடகவியல்' முகவுரையில் பின்வருமாறு கூறுவர் : 'வடநூல்களை யாம் படித்தறிதற்குப் பேருதவி புரிந்தவர் எமது கலாசாலை வடமொழித் தலைமைப் புலவர் பிரமஸ்ரீ வேதம்—வேங்கடராய சாஸ்திரியாரவர்களும், சென்னை உயர்நீதிசாலை நியாயவக்தாக்களுள் ஒருவரும் எமது நண்பருமாகிய பிரமஸ்ரீ த. ச. நாராயண சாஸ்திரியாரவர்களுமாவர். அவர்கள் செய்நன்றியை யாம் ஒருபொழுதும் மறக்கற்பாலேமல்லேம்.' ஆகவே, இலக்கிய ஆராய்ச்சியிலும், நாடக நூல்கள் எழுதுவதிலும், நாடகக் கலையை மேடை வாயிலாக உயிர்ப்பிப்பதிலும் இரு சாஸ்திரியார்களும் ஒருவர்க்கொருவர் உதவி வந்துள்ளமை நன்கு விளங்கும். அக்காலத்தில் வீழ்ச்சியுற்றிருந்த தமிழ் நாடகக் கலையைக் கைதூக்கிவிட முன்வந்த பெரியார்களது நன் முயற்சியால் சென்னையில் நிறுவப்பட்ட நாடக சபைகளுள் இவர்களது 'வித்வந் மநோரஞ்சனி சபை'யும் '*சுகுண விலாச சபா'வும் பெயர் பெற்றவை.

நாடகம் இயற்றுவதும் நடிப்பதுமே இவர் அவகாசத்திற் பெரும் பகுதியைப் பறித்துக் கொண்டன; இதோடு, எது தவறினும் நாடகம் பார்ப்பதில் தவறாத பழக்கமும் வந்து விட்டது. பகல் முழுவதும் ஓய்வின்றி உழைத்து வந்ததோடு நில்லாமல், இரவிலும் கண் விழிப்பதாயின், உடல் நலம் பாதிக்கப்படுவதில் வியப்பில்லையன்றோ! இரவில் மழைபோல் கொட்டும் பனியிலும் உட்கார்ந்து திறந்த வெளியில் தமது கருத்துக்களை நூல்களில் அமைப்பது இவர் வழக்கம்; இவ்வாறு செய்வதால்

* பம்மல் சம்பந்த முதலியாரது நன்முயற்சியே பிற்கூறிய 'சுகுண விலாச சபா'வின் வாழ்க்கைக்கு ஓர் ஆதாரம் என்று ஐயமின்றிக் கூறலாம்.

உடல் நலம் கெடுமே எனக்கூறிய நண்பர்களுக்கு, 'அவ்வப்போது மனத்தில் தோன்றும் கருத்துக்களை எழுத்திற் பொறிப்பதற்கு உறக்கம் வராதிருக்க வேண்டிப் பனியில் உட்கார வேண்டுவது அவசியமே' என்று கூறுவர். ஆசிரியர் உடல் நலம், இளம் வயதாகிய இருபத்தெட்டாம் பிராயத்திலேயே ஓரளவு பாதிக்கப்பட்டுவிட்டது: தமிழ்த் தாயை உயிர்ப்பிப்பதற்குத் தமது உடலையே தியாகஞ் செய்யத் தொடங்கி விட்டனர்.

சாஸ்திரியாரது தமிழாசிரியரான மதுரைச் சபாபதி முதலியார் இயற்றிய நூல்களில் 'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழ்' என்பதும் ஒன்று. குளந்தை என்பது மதுரை ஜில்லாவைச் சார்ந்த பெரியகுளத்தைக் குறிக்கும்; இவ்வூரில் முதலியார் ஆசிரியராயிருந்த காலத்தில் அவரது நண்பர்களிற் பலர் அவ்வூரில் கோயில் கொண்டுள்ள முருகன் மீது பிள்ளைத் தமிழ் ஒன்று பாட வேண்டினர்; அவ்வேண்டுகோளுக்கிணங்கி முதலியார் இந்நூலை 1863-ம் ஆண்டில் இயற்றி அருளினர். இதை முதலியாரது மாணாக்கர்கள் அறிந்து வெவ்வேறு பிரதிகள் செய்து வைத்துக் கொண்டனர். அப்போது வடகரை ஜமீன்தார் சிறுவயதினராயிருந்தமையால் அவர் முதலியாரது மேற்பார்வையில் இருந்து வந்தனர். ஜமீன்தார் ஸ்ரீ ராமபத்ர நாயுடு அவர்கள் தாம் பட்டத்திற்கு வந்தபிறகு இந்நூலினை அச்சிட வேண்டும் என்னும் எண்ணத்தைத் தெரிவித்து அதற்கு வேண்டும் செல்வம் தாம் உதவுவதாகவும் வாக்களித்திருந்தனர்.

அதன்படி அந்நூலை அரங்கேற்றி அச்சிட வேண்டிய அமயமும் அணுகவே, அந்நூலை அரங்கேற்ற வேண்டி ராமபத்ர நாயுடு அவர்கள், முதலியாரது மாணவர்களில் பெயர் சிறந்த சாஸ்திரியாரைப் பெரிய குளத்திற்கு அழைத்திருந்தனர்; ஏனெனில் சபாபதி முதலியார்

அப்போது மிகுந்த முதுமை நிலையில் இருந்தமையால் அவரே நேரில் சென்று அரங்கேற்ற இயலாது போயிற்று.

ஆசிரியரும் பல பிரதிகளைக்கொண்டு ஒப்புப் பார்த்து வைத்திருந்த 'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளை'த் தமிழை 1896-ம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டனர்; அன்றியும் நூலை அரங்கேற்றத் தம்மைப் பெரியகுளத்திற்கு வடகரை ஜமீன்தார் வரவழைத்திருந்தமையின், அதையும் செய்து முடிக்க மனம் விரும்பிப் பெரியகுளம் புறப்பட்டுச் சென்றனர். ஆசிரியரது தமையனரான சுந்தரேச சாஸ்திரியார் அச்சமயம் பெரியகுளத்தில் அரசாங்க அலுவல் பார்த்துவந்தனர். செல்லும்போது தமது இயற்றமிழ் மாணவர்களிடத்துத் தாம் பல நாள் பிரிந்திருக்க நேரிடாது என்றும் அரங்கேற்றத்தை விரைவிலேயே முடித்துக்கொண்டு சென்னைக்குத் திரும்பிவிடுவதாகவும் கூறிச் சென்றனர். சென்றவிடத்தில் அரங்கேற்றமும் செம்மையாக நடந்தேறியது. ஆயினும் ஜமீன்தாரது வற்புறுத்தலின்மேல் குறித்த காலத்திற்கு மேலும் சில நாட்கள் பெரியகுளத்தில் தங்கும்படி நேரிட்டது.

"ஒரு சமயம் சாஸ்திரியார் ஜமீன்தாரிடம் போயிருந்தபொழுது அங்கு ஒரு புலவர் வந்திருந்தனராம். அவர் இவரை இன்னரெனக் கேட்டுத் தெரிந்துகொண்டு பாடலொன்று சொல்லி 'அதன் பொருளை விளக்குக' என்றனராம். சாஸ்திரியாருக்கு அதன் பொருள் உடனே விளங்காததால் ஒரு நாள் கெடுவு தமக்குக் கொடுக்க வேண்டுமென்று கூறி அன்றெல்லாம் ஆய்ந்து மறுநாள் அதன் பொருள் இன்னதென ஜமீன்தார் எதிரில் அப்புலவருக்கு விடை அளித்தனராம். பின்னர் ஜமீன்தாரை நோக்கித் தாம் ஒரு செய்யுள் கூறுவதாயும் அதன் பொருளைத் தம்மைச் சோதித்த புலவர் கூறவேண்டுமென்று கேட்டுக் கொண்டனராம். ஜமீன்தார் முன் புலவரும் நன்றென

ஒத்துக்கொண்டனர். 'உடனே ஒரு செய்யுளைக் கூறினேன்' என்று சொல்லி அச்செய்யுளில் ஒரு அடியை எடுத்துக் கூறினர். அது வருமாறு: "செவ்வேளைப் பாம்பிரவிக் கொடுநரகிற் புகுவனெனச் செப்பும் வேதம்."

"ஐயா! இவ்வடியின் பொருள் சொல்ல மாட்டாது அப்புலவர் விழித்த விழிகட்குத் திக்குகள் போதா," என எனது ஆசான் புன்னகையுடன் கூறின முழக்கம் இன்னும் என் காதில் இப்போதுதான் சொல்லியது போலக் கேட்கின்றது. எட்டுநாள் கெடுவு கொடுத்தும் அவ்வடிக்கு மட்டும் அவருக்குப் பொருள் விளங்கவில்லை. பின்னர் ஜமீன்தாரும் புலவரும் 'நீங்களே அதற்குப் பொருள் கூறுங்கள்' எனக் கேட்க "அதன் பொருள் மிகவும் வெளிப்படை. 'பாம்பிரவி' என்பது பாம்பு+இரவி அல்லவா? பாம்பு என்பதற்குப் 'பணி' என ஒரு பெயர் உண்டல்லவா? 'இரவி' என்பது சூரியன். சூரியனுக்கு 'ஆதவன்' என்று ஒரு பெயர் உண்டல்லவா? ஆகவே 'பாம்பிரவி' என்ருல் பணி+ஆதவன்=பணியாதவன் என்ருயிற்று. 'செவ்வேளைப் பணியாதவன் கொடுநரகிற் புகுவனெனச் செப்பும் வேதம்' என்பதுதான் பொருள்" என விளக்கிக் காட்டினராம். இத்தகைய நிகழ்ச்சிகள் பல கூறித் "தமிழ் வகுப்பு ஒரு மணி நேரமும் நாளும் ஒரு நிமிடம்போலத் தோன்றி மறையும்படி செய்வர்" என வ. சு. செங்கல்வராய பிள்ளையே எழுதியிருக்கிருர்.

ஆசிரியர் பெரியகுளத்தில் அதிகம் தாமதிப்பது கண்டு மனம் பொருத இயற்றமிழ் மாணவர்களில் இருவரான சலசலோசன செட்டியாரும், பலராம ஐயரும் ஆசிரியர் விரைவில் திரும்பி வரவேண்டும் என்னும் வேட்கை மீதுர, அன்ஞர்க்குச் செய்யுள் எழுதியனுப்பினர். அவற்றுள் சலசலோசனச் செட்டியார் எழுதி விடுத்தது ஒரு வெண்பா. அது பின் வருமாறு:

† 'செல்வ மலிகுளந்தைச் சேயின் றமிழ்விரிப்பச்
செல்வ லெனச்சென்ருய் தேசிகவான்—கல்விவயிற்
போந்தவன் ருழ்ப்பப் புலம்புகொண்டிற் கண்ணுறையு
மேந்திழையை நேர்குவல்யா னெண்.'

அவ்வமயம் பலராமய்யர் எழுதி விடுத்தது ஒரு விருத்தப்பா ; அது வருமாறு :

‡ 'அரியவுடல் சிற்றின்மிகு வேட்கை தாய்க்கென்
றமைந்த பெயர் நான்கினிடை யக்கரத்தை
துரிதனுப்பிற் ருேமுளதோ சொல்லா யெஞ்சுந்
துரிசறுமீ ரிரண்டுமொழி நிரலே யெந்தாய்
பரிவுறுநின் மொழியினுதி மதியி லேசெம்
பாவாணர் முடியின்மிஞர் புயத்தின் வாழச்
சொரியுமருள் புரிபெரும வடியேன் போற்றுஞ்
சூரியநா ராயணவேட் சுகுண மாலே !'

இச் செய்யுட்களைக் காணவும் மிகுந்த மகிழ்ச்சியோடும் தமது இயற்றமிழ் மாணவர்களது தமிழறிவையும், அன்பினையும் கண்ட பெருமையோடும் ஆசிரியர் உடனே

---

† சேயின் தமிழ்—முருகன்மீது பாடப்பட்ட பிள்ளைத்தமிழ்; கல்வி வயிற் போந்தவன் : தலைவன் ; புலம்பு : தனிமை; ஏர் திழை : தலைவி ; நேர்குவல். நிகர்ப்பேன் ; எண் : அறிவீராக.

‡ இது 'நடுவெழுத்தலங்காரம்' என்னும் சொல்லணியைச் சார்ந்தது. அரியவுடல் - தேகம் ; சிற்றில் - குடிசை ; மிகு வேட்கை - காதல் ; தாய் - அம்மா. இந்நான்கு சொற்களின் நடுவெழுத்துக்களைச் சேர்க்கவே. 'கடிதம்' என்ருகும்: அக்கரம் - எழுத்து; துரிது - கடிதினில்; தோம்-குற்றம் ; நிரலே-முறையே. எஞ்சும் ஈரிரண்டு எழுத்துக்களைக் கூட்ட தேம், குசை, அமா என்ருகும். இவற்றுள் தேம் - தேன்; இது அவர் மொழியின் மேலது. குசை - கடிவாளம்; இது அவர் தம் கூரிய அறிவின் மேலது. கால் - ஏனைய பாவாணர் முடி மீது இவர் கால் இருப்பதாகக் கூறவே, இவரது பெருமை புலனுகும் ; அமா- மாமை நிறம். இது தலைவனைக் கூடிய மகளிர்க் குரியது.

சென்னைக்குத் திரும்பிவிட்டனர். இவ்வியற்றமிழ் மாணவர்களது உண்மை யுள்ளன்பினை ஆசிரியர் என்றும் மறவாது போற்றி வந்தனர். இது நிற்க,

தாமோதரம் பிள்ளையவர்களது வேண்டுகோளின்படி சாஸ்திரியார் உயரிய செந்தமிழ் நடையில் ஒருநூல் இயற்றித் தருவதாகப் பிள்ளையவர்களுக்கு ஏற்கெனவே வாக்களித்திருந்தனர் என்பது முன்பே கூறப்பட்டது. அவ்வாக்குக்கிணங்க ஆசிரியரும் '**மதிவாணன்**' (புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதை) என்னும் கதையை எழுதத் தொடங்கினர். இக்கதை பூரணலிங்கம் பிள்ளையவர்கள் ஆசிரியராயிருந்து நடத்திவந்த 'ஞானபோதினி' என்னும் மாதாந்தப் பத்திரிகை வாயிலாகச் சிறிது சிறிதாக அச்சிடப்பட்டு வெளி வருவதாயிற்று. ஆயினும் 1897-ம் ஆண்டு முதல் வெளிவரத் தொடங்கிய இந்நூல் 1902-ம் ஆண்டில்தான் நூலாக அச்சிடப்பட்டது. முழுப் புத்தக உருவத்தில் வெளிவரும் காலத்து இந்நூலைக் கண்ணுறத் தாமோதரம் பிள்ளையவர்கள் இல்லாது போனமை குறித்து ஆசிரியருக்கு மிகவும் வருத்தமே; ஆனாலும், என் செய்வது? போகூழ் இருந்தவாறு அது. இதைக்குறித்துச் சாஸ்திரியார் அந்நூல் முகவுரையிற் கூறுவது:

'மதிவாணன் என்னும் பெயரிற் புதுவது புனைந்த இச்செந்தமிழ்ச் சிறுகதை, 1897-ம் ஆண்டு முதல் 'ஞானபோதினி' யென்ற மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையின் கட் சிறிது சிறிதாக வெளிப்படுவதாயிற்று. காலஞ்சென்ற ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களது வேண்டுகோளின் படி வகுக்கப்பட்ட இந்நூல் அன்னார் இருந்த காலத்திலேயே முற்றுப்பெறுதுபோனமை பற்றிப் பெரிதும் மனமுளைகின்றேம்.'

இவ்வாறு நூல்களியற்றுவதும், இயற்றமிழ் மாணவர்களுக்குப் பாடம் சொல்லுவதும், கல்லூரியில் அலுவல்

பார்ப்பதும் ஆகிய இவ்வேலைகளே ஆசிரியரது பொழுதை அநேகமாக அபகரித்துக் கொள்ளுமாயினும், சோம்பல் என்பதைக் கனவிலும் அறியாத இவர் இன்னும் எத்துணைத் துறைகளில் தமிழுக்கும் தமிழ் கற்பார்க்கும் உதவி புரியலாம் என்று சிந்திப்பாராயினர்.

'சென்னைப் பல்கலைக் கழகத்தார் 1897-ம் ஆண்டு பி. ஏ. வகுப்பிற்குத் தமிழ்ப் பாடப் புத்தகங்களுள் ஒன்றாகத் தண்டியலங்காரம்—சொல்லணியியல் வைத்திருந்தனர். அக்காலத்தில் சரியான பாடத்தோடு கூடிய தண்டியலங்காரப் பிரதி கிடைப்பதரிதாயிருந்தது. சித்திர கவிகளைச் சித்திரங்களில் அமைத்து நோக்குதற்குச் சித்திர உருவங்கள் இன்னவாறு தீட்டப்படவேண்டும் என்றும், எழுத்துக்களை இன்னவாறு அமைக்கவேண்டும் என்றும் செவ்வனே புலப்படாமையினால், மாணாக்கர்கள் பெரிதும் இடர்ப்பட்டமை கண்டு, ஆசிரியர், சித்திர கவிகளின் இயல்பு நன்கு புலப்படச் 'சித்திர கவி விளக்கம்' என்னும் சிறு நூல் ஒன்றைத் தமது மாணாக்கர்களுக்குப் பயன்படவேண்டுமென்றே அச்சிட்டு உதவினர். பின்னர் ஆசிரியர் தம்மிடம் தமிழ் பயின்ற இயற்றமிழ் மாணவர் தண்டியலங்காரம் பாடம் கேட்ட காலத்துத் தண்டியலங்கார சித்திர கவிகளையும் மற்றும் வட மொழியணியிலக்கணங்களிற் கண்டு புதியனவாகப் புனைந்த சில சித்திரகவிகளையும் ஒருங்கு சேர்த்துச் சித்திர மமைத்துதவினர். ஆசிரியர் தாமே தண்டியலங்காரத்தைத் தெளிவாக அச்சிட்டுத்தமிழ் உலகிற்கு உதவக்கருதியிருந்ததுண்டு. அஃது நேர மின்மையால் நிறைவேறாது போயிற்று. இக்குறிப்புக்களையும் பிறவற்றையும் சேர்த்துச் சாஸ்திரியாரது இயற்றமிழ் மாணவர் பலராம ஐயரவர்கள் பிற்காலத்தில் (1939 ல்) 'சித்திர கவி விளக்கம்' என்னும் நூலாகப் பதிப்பித்துள்ளனர்.

1897-ம் ஆண்டு, இவரிடம் கல்வி பயிலும் இயற்றமிழ் மாணவர்களில் ஒருவராயிருந்த சலசலோசனச் செட்டியார் மிக இளம் பருவத்திலேயே புகழுடம்பெய்திப் பொய்யுடலை நீத்து விட்டனர். ஆசிரியர் மாணவரின் உறவு காதலன் காதலி உறவினை ஒக்கும் என்று அவ்வியற்றமிழ் மாணவர் செய்யுளாற் கூறியதற் கேற்பக் காதலியை யிழந்த காதலனே யென ஆசிரியரும் அளவிலாத் துயரம் எய்தினர்; பிரிவாற்றாது கையறு நிலையும் பாடினர். அக் கையறுநிலைச் செய்யுள்கள் கற்பார் மனதைக் கரைக்கக் கூடியனவாயுள்ள திறம் உணர்ந்து சுவைக் கற்பாலது. 'கல்வியிற் சிறந்த ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் உள்ள இயைபு, குற்றமற்ற தந்தைக்கும் புத்திரனுக்கும் உள்ள இயைபு போன்றது என்பவர்தங் கோட்பாட்டினை மறுத்துக் கலைகளில் வல்ல காதலனுக்கும் காதலிக்கும் உள்ள இயைபே அதை யொப்பது' என்னும் கருத்துப்பட,

† 'குற்றமிலாத் தாதைமக வென்றோர்தங் [1] கோண்மறுத்துக்
கற்றகலைக் காதலனுங் காதலியு மாகுநிலை
மற்றறிந்த வாசானு மாணவனு மாமிவர்கட்
குற்ற [2] வியைபென் றுரைத்தாயெங் குற்றனையோ!
உத்தமனே யெம்பாலன் புள்ளாயெங் குற்றனையோ!!'

என்று இரங்கிப் பாடியுள்ளனர்.

பலவகையினும் இவரது பெருமை யாவருக்கும் புலப்படுமாறு பெருகவே, சென்னைப் பல்கலைக் கழகத்தாரும் இவரை அக்கழகத்து உதவிப் பரீட்சகர்களுள் ஒருவராக நியமித்துக் கொண்டனர். 1898—99-ம் ஆண்டிலிருந்து அப்பதவியை இவர் வகித்து வந்தனர். இவ்வாண்டிலேயே ஆசிரியர் தம் நன் முயற்சியால் 'ஆரியமத சங்கம்' என்பது

† பாவலர் விருந்து—கையறு நிலை.
[1] கோள்=கொள்கை. [2] இயைபு=தொடர்பு.

ஒன்று நிறுவப்பட்டது. இதன் நோக்கம் இந்து மதத்தைப் பற்றிய உண்மைகள் பலவற்றையும் நூல் முகத்தால் வெளியிடவேண்டும் என்பதே. இதற்கு சாஸ்திரியார், பூரணலிங்கம் பிள்ளை, திருமலைக் கொழுந்துப் பிள்ளை, தி. அ. சாமிநாத ஐயர், பலராம ஐயர் ஆகியவர்கள் அங்கத்தினர்களாக இருந்தனர். அக்காலத்தில் உலக முழுமையும் இந்துமத விசாரம் செய்து திக்விசயம் செய்து வந்த விவேகானந்த அடிகள் அநேக இடங்களிலும் ஆற்றிய சொற்பொழிவுகளைத் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்தனர். இச் சங்கம் தொடர்ந்து வேலைசெய்து வந்திருந்தால், பல நற்பணிகள் புரிந்திருக்கும் என்பதில் ஐய மில்லை. இது நிற்க,

1898-ம் ஆண்டில் ஆசிரியர் இயற்றிய இரண்டாவது நாடகமாகிய 'கலாவதி' அச்சிடப்பட்டது. இந்நாடகம் ஆசிரியர் இயற்றிய பரந்த ஓர் முகவுரை, சிறு குறிப்புரை ஆகியவற்றோடும் தோட்டக்காடு **ராமகிருஷ்ண பிள்ளை** யவர்களது முன்னுரையோடும் வெளிவந்தது. தமது இயற்றமிழ் மாணவர்களுக்கு நாடகத்தமிழும் கற்பிக்கவேண்டி இவர் இயற்றிய 'நாடகவியல்' என்னும் நாடக இலக்கண நூலோடு பெரிதும் ஒத்து இயங்குமாறு இயற்றப்பட்டது இந்நூல்; இது கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பேர் உவகை யளிப்பதொன்றாயிருந்தது. ஆசிரியர் பால் குற்றங் காண்பதேயன்றிக் குணம் என்றும் காண்பதில்லை என்ற கொடு விரதம் பூண்டிருந்த சில புல்லறிவாளரும் இதை விரும்பி மேற்கொள்வாராயினர்.

ஆசிரியர் இந்நாடகத்தை, அப்போது சேது மன்னராயிருந்த பாஸ்கர சேதுபதியவர்களுக்கு உரிமையாக்க விரும்பினர்; விரும்பவே, அச்சேதுபதியார் அவைக் களத்தில் நூலை அரங்கேற்ற வேண்டுவதாயிற்று;

ஆகவே, 'கலாவதி' நாடகத்தை அரங்கேற்றம் செய்ய, ஆசிரியர் இராமநாதபுரம் சென்றனர். அங்குப்பல புலவர்களும் நிரம்பியிருந்த அவைக்களத்தே கல்விக் களஞ்சியமான பாஸ்கர சேதுபதியவர்களின் முன்னிலையில் இந்நாடகம் அரங்கேற்றப்பட்டது. சேதுபதியவர்களும் நாடகத்தின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்து பரிசில் வழங்கியதோடு கூட, நாடகத்தைத் தமக்கு உரிமையாக்கவும் அனுமதி யளித்தனர். அன்றியும் பல வகை வருணனைகளும், பா வகைகளும், சொல்லணி பொருளணிகளும் நிரம்பி நிற்கும் இந்நூலைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியும் அடைந்தனர். சேதுபதியவர்கள் தாம் நூலை நன்கு ஆராய்ந்து பார்த்ததைப்பலரும் அறியும்வண்ணம்,அவைக்களத்தே ஆசிரியரை நோக்கி, 'நீர் இயற்றிய இந்நாடகத்தில் பல வகைப் பாக்களும் இயற்றிச் சேர்க்கப் பட்டுள்ளமை யாம் கண்டோம்; அதனால் நுமது கவி பாடும் திறமையையும் கற்பனா சக்தியையும் நன்குணர்ந்தனம். ஆயினும், '* நிரோட்டம்' என்னும் வகைச் செய்யுள் இந்நூலிற் காணப்படவில்லை என்று கருதுகின்றோம்; ஆதலால் அவ்வகைச் செய்யுள் ஒன்றையும் பாடித்தக்கதோரிடத்தில் சேர்ப்பீராக' என்று கூறினர். அவ்வாறே செய்வதாகக் கூறி ஆசிரியர் அக்கணமே ஒரு நிரோட்டச் செய்யுளை எழுதி அதை அவைக்களத்தே படித்துக் காட்டிப் பொருளையும் விளக்கிக் காட்டினார். இது கண்டு அரசர் உட்பட யாவரும் பெரு மகிழ்ச்சி கொண்டு ஆசிரியரைப் புகழ்ந்தனர். அந் நிரோட்டச் செய்யுள் கீழ்வருமாறு :

---

* 'நிரோட்டம் : உதடுகளின் முயற்சியால் பிறக்கின்ற உ, ஊ, ஒ, ஓ, ஔ, ப, ம, வ என்னும் எழுத்துக்கள் வராமல் பாடப்படும் செய்யுள். நிரோஷ்டம் என்பது 'நிரோட்டம்' என்று நிற்கும். (ஓட்டம்=உதடு. நிரோட்டம்—உதடு ஒட்டாதது.)

† ‘செய்யா யினியநலஞ் சேரரசர் சீராளா
கையா லெனைத்தழீஇக் காதலியே யென்றழைத்த
லையா தகைபேய்ந் தழகார்ந்தா யென்றைக்கே
நையாநிற் கின்றே னனி’

இது கலாவதி நாடகம் நான்காம் அங்கம் முதற்களத்தின்கண் கலாவதி சிதானந்தனைக் குறித்துப் பாடுவதாக வரும் பல பாடல்களுள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது.

இது இவ்வாறாக, அரங்கேற்றத்தின் இடைவேளையில் கலாமண்டபத்திற்கு வந்திருந்த அந்தணர் ஒருவரைச் சார்ந்த பெண் ஒருத்தியை வீணன் ஒருவன், துர் எண்ணங் கொண்டு அவன் மனையில் சிறைப்படுத்தி வைத்திருப்பதாக ஆசிரியர் கேள்வியுற்று மனம் மிக வருந்தினர்; அம்மடந்தையை வீணனது, கெட்ட எண்ணம் ஈடேறும் முன், விடுவிப்பது எங்ஙனம் என்று தீவிரமாய் ஆராய்ந்து கொண்டிருந்தனர். மாலைப்பொழுதில் அரங்கேற்றம் முடிவுற்ற பின், புரவலரும் புலவரை விளித்து அவருக்கு வேண்டுவன வேண்டும்படி பணித்தார். அப்போது சாஸ்திரியார் அரசரை மிக நெருங்கி, ‘அரசே! யானொரு வரம் வேண்டுவல்; அதனை இவ்வவை கலைந்த பின் இற்றென்று கூறுவல்; அப்போது அவ் வரம் ஈந்தருள வேண்டுகின்றேன்’ என்று கூறி நின்றனர். இதைச் செவிமடுத்த சேதுபதியவர்களும் ‘இதில் யாதோ முக்கியத்துவம் இருக்கிறது’ என்று உணர்ந்து, அவையைக் கலைத்துவிட்டு, சாஸ்திரியாரைத் தனியே அழைத்து, ‘என்?’ என்று வினவினர். அப்போது தாம் கேள்வியுற்றதை உள்ளபடி அரசர்க்கு அறிவித்தனர் அருங்கலைப்

† நலம் - அழகு, நன்மை; சீராளன் - சிறப்பினை ஆள்பவன் மேலோன்; தழீஇ - தழுவி; தகை - பெருந்தன்மை; ஏய்ந்து - பொருந்தி; அழகு ஆர்ந்தாய் - அழகு நிறைந்தவனே! நனி மிகவும்; ‘அழைத்தல் என்றைக்கு’, ‘நனி நையாநிற்கின்றேன்’ என்று கூட்டவேண்டும்.

புலவர்; அன்றியும், தாமும் அரசரும் மாறுவேடம் பூண்டு அவ் வீணனது மனையைச் சோதித்து உண்மை யறிய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். இதற்கு உடனே இணங்கினர் செங்கோலரசரும். சோதனை செய்த பின் கேள்விப்பட்டது உண்மையென்று ஏற்பட்டது. அரசர் தமதாணையால் அம் மடந்தையை விடுவித்ததோடு அவ் வீணனுக்குத் தக்க தண்டனையும் அளித்துவிட்டனர்; அன்றியும் ஆசிரியரது பெருந்தன்மை, சூழ்ச்சித் திறன் முதலிய நற்குணங்களை மிகப் பாராட்டினர்.

இவ்வரங்கேற்றத்தை முடித்துக்கொண்டு அரசர் செய்த சிறப்புக்களை யெல்லாம் ஏற்றுக்கொண்டு ஆசிரியர் இரண்டு தினங்கள் இராமநாதபுரத்தில் தங்கியிருந்து விட்டு, அங்கிருந்து மதுரை சென்று, பிறகு சென்னை வந்து சேர்ந்தனர்.

1898-ம் ஆண்டு ஆசிரியர் சபாபதி முதலியாரவர்கள் தமது அறுபத்தோராவது வயதில், (விளம்பி வருஷம் ஆனி மாதம்) இறைவன் திருவடிகளில் கலந்துவிட்டனர்; தமது ஆசிரியர் மறைந்த ஆற்றுமை மீதூர ஆசிரியர் பாடிய கையறுநிலைச் செய்யுட்கள் 'பாவலர் விருந்'தில் உள்ளன.

'சங்கத்துச் செய்யுளெனுந் தண்கடலி னீர்முகந்தேர்
மங்கலங்க டாம்பாட மாணுக்க ருட்பொழியுந்
துங்க முகிலே துகடீர் சபாபதியே
யெங்கள் குருமணியே யெங்ங னகன்றனையோ!'

என்று அவ் வாசிரியரது கல்விச் செல்வத்தை வருணித்தார்;

'ஐயோ தமிழ்மொழியே! யையோ தமிழ்நாடே!
ஐயோ மதுரை யருநகரே! எம்முடைய
வையன் சபாபதியை யன்றோ விழந்தமையாற்
றுய்ய மதியிழந்த தூலவுடம் பாயினிரே!'

என்று அவர் மறைந்ததால் தமிழுலகு அடைந்த பெரு நட்டத்தை விவரித்தார். இவர் தமது ஆசிரியரிடத்து

வைத்திருந்த பேரன்பும் இவற்ருல் நன்கு புலனுகும். தமதாசிரியர் இயற்றிய நூல்களைப் பற்றி,

'தென்பரங்குன் றத்துறையுஞ் செவ்வேண்மே லந்தாதி
யன்பி னியமகமா வாற்றித் திருக்குளந்தை
மன்புடைப்பிள் ளைத்தமிழை மாண வியற்றியவா
வின்ப வடிவுடைய வீசுரன்ருே ளண்மிணையோ !'

'மாமதுரைப் பெம்மான்மேன் மாலையெனப் பேர்புனைந்து
காமர் சிலேடைவெண்பாக் கட்டுரைத்த பாவலனே
பாமணமார் கோவேநீ பாரினைவிட் டேகியது
தாமதுரை சாமீ தமியேஞ்செய் தீவினையோ !'

என்னும் இடங்களிற் கூறியுள்ளனர். இவற்றுள் 'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழை' 1896-ம் ஆண்டிலும், மதுரை மாலையை 1901-ம் ஆண்டிலும் சாஸ்திரியாரே அச்சிட்டு வெளியிட்டனர். 'திருப்பரங்குன்றத் தந்தாதி' யைப் பதிப்பிக்கக் கருதியிருந்தனராயினும், அவர் வாழ் நாளில் அதைப் பதிப்பிக்க இயலாமலே போயிற்று.

1897-ம் ஆண்டு ஜுலை மாதந்தொட்டு பூரணலிங்கம் பிள்ளையவர்கள் ஆசிரியராயிருந்து பதிப்பித்து வந்த 'ஞான போதினி' என்னும் பத்திரிகைக்கு 1900-ம் ஆண்டு, ஏப்ரல் மாதத்திலிருந்து சாஸ்திரியாரும் கூட்டாசிரியராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப் பத்திரிகை தொடக்கத்திலிருந்தே சாஸ்திரியார் இதோடு மிக நெருங்கிய உறவு வைத்துக் கொண்டிருந்தனர். இவரது முதல் உரை நடை நூலாகிய 'மதிவாணன்' என்னும் கதையின் முதல் அத்தியாயம் ஞான போதினியின் முதல் சம்புடம் முதல் கட்டுரையாக வெளிவந்தது எனின், இவரது கட்டுரைகளும் செய்யுட்களும் அப் பத்திரிகையின் அடிப்படையாக இருந்தன என்பதில் ஐயமில்லை. 1900-ம் ஆண்டு பூரணலிங்கம் பிள்ளையவர்கள்

கோவை மைக்கேல் கல்லூரியில் ஆங்கில ஆசிரியர் அலுவலை மேற்கொண்டு சென்றுவிட்டமையால், அவரது பத்திரிகையான 'ஞான போதினி'யை வேண்டிய அக்கறை யோடு கவனிப்பார் இல்லாது போகுமோ என்று அஞ்சிய பிள்ளையவர்களுக்குச் சாஸ்திரியார் சமயசஞ்சீவி எனக் கிடைத்தனர். பலதிறப்பட்ட வேலைகளுக்கிடையே அகப் பட்டுக்கொண்டிருந்த சாஸ்திரியார் இன்முகத்தோடு பத்திரிகை யாசிரியர் பணியையும் ஏற்றுக்கொண்டது அவரது தமிழார்வத்தையும், பொது மக்கட்குப் பணி யாற்றும் குறிக்கோளையும் தெரிவிப்பதாகும் அன்றோ? 1900 ஏப்ரலிலிருந்து ஞான போதினி அலுவலகம், சாஸ்திரியாரது மனையாகிய சென்னை லிங்கசெட்டித் தெரு, 286-ம் நம்பர் வீட்டிற்கு மாறிவிட்டது. ஞான போதினிப் பத்திரிகையிலேயே கீழ்க்கண்ட விண்ணப்பம் வெளியிடப்பட்டது; 'நமது கையொப்பக்காரர்களுக்கும் எழுதும் எழுத்தாளர்களுக்கும் யாம் அறிவிப்பது யாதெனில்: இனிமேல் கடிதம் எழுதுவோரும் எழுத் தாளரும் பின் வரும் மேல் விலாசத்திற்கு அனுப்புவார்க ளாக:—சென்னைக் கிருத்துவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்தியாரவர்கள் பி. ஏ. மேல் விலாசம் பார்த்து ஞான போதினிப் பத்திராதிபர் மகா-ா-ா-ஸ்ரீ எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்கட்குக் கொடுப்பது.'

சிறிதும் களைப்போ சலிப்போ இன்றி ஆசிரியரும் பத்திரிகை வேலையைத் தமது இறுதிவரையில் சரிவரவும் கற்போர் வியக்கும்படியும் நடாத்தி வந்தனர்.

## அத்தியாயம் 6

# தாய்மொழிப் பணிகள்

1899-ம் ஆண்டு 'தனிப்பாசுரத்தொகை' என்னும் அரிய நூல் ஒன்று வெளியாயிற்று. இலக்கியத்தில் 'புதியன புகுதல்' என்னும் முறைக்குத் தீரா விரோதங் கொண்ட 'பிற்போக்காளர்களுக்கு, எந்த மொழியினுடைய இலக்கியமும் பிற மொழிச் சொற்களையும் முறைகளையும் மேற்கொண்டுதான் வளர்ச்சியுற வேண்டும் என்னும் உண்மையைத் தெரிவிக்க வேண்டி, ஆசிரியர் புது முறையில் பல பாசுரங்கள் அவ்வப்போது இயற்றி வருவதுண்டு. இவையெல்லாம் ஆங்கிலத்தில் 'ஸானெட்' (Sonnet) எனப்படும் ஒருவகைப் பாவினத்தை யொட்டியும் தமிழ் மரபு தவறுமலும் எழுதப்பட்டவையாம். இவற்றிற்கு ஆசிரியர் 'தனிப் பாசுரங்கள்' எனப் பெயரிட்டனர். இப்பாசுரங்களைத் தமது இயற்பெயரால் வெளியிட விரும்பாமல் தமது பெயரின் நேர் தமிழ்மொழி பெயர்ப்பான † '**பரிதிமாற் கலைஞன்—கரூர்**' என்னும் புனை பெயரில் வெளியிட்டனர். இது சிறிது சிறிதாக 'ஞான போதினி' என்னும் பத்திரிகை வாயிலாக வெளிப்போந்தது. இது 6-12-1899-ல் புத்தக ரூபமாக வெளிவந்தது. இதுவே இந்நூலின் முதற் பதிப்பாகும். இத்தனிப்பாசுரங்களில் ஒன்றிரண்டைப் பற்றிக் கிருத்துவக் கல்லூரிச் சரித்திரப் பேராசிரியரான 'கெல்லட்' (F. W. Kellett) என்பவர் தாம் பத்திராதிபராயிருந்து நடத்தி வந்த கிருத்துவக் கல்லூரிப் பத்திரிகையில் புகழ்ந்தெழுதினர். இப்பாசுரங்

† பரிதி - சூரியன்; மால் - நாராயணன்; கலைஞன் - சாஸ்திரி; கரூர் - கறுப்புப் பட்டணம் (Black Town) சென்னைக் கோட்டையைச் சுற்றியுள்ளதும் இந்தியர் வசித்த இடமும், பிற்காலத்தில் 'ஜார்ஜ் டவுன்' என்று பெயர் மாற்றப்பட்டதுமான பிரதேசம்.

களில் பெரும்பான்மை 'ஞான போதினி'ப் பத்திரிகை வாயிலாக வெளிவந்த காலத்திலேயே பத்திரிகையை விடாது படித்து வந்த பொது மக்கள் பலரும் பல வகையாலும் அவற்றைப் புகழ்வாராயினர்.

இது கண்ட ஆசிரியர் தமது பாக்களை உலகு நல்ல முறையில் ஏற்றுக்கொண்டதென்று உணர்ந்தபின் தமது இயற்பெயரோடு புனைபெயரையும் சேர்த்துப் பிரசுரித்து நூலின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டனர். முதற் பதிப்புப் பாசுரங்களைக் கண்ணுற்றுப் படித்து மகிழ்ந்தவர்களில் கோதீர்த்தபுரிச் சர்வகலாசாலைத் (Oxford University) தமிழ்ப் புலவர் ஜி. யூ. போப்பையர் (G. U. Pope) அவர்களும் ஒருவர். ஆசிரியர் இயற்பெயரை மறைத்துப் புனைபெயருடன் வெளியான இச்செய்யுள்கள் தமிழின் மறுமலர்ச்சிக்கு உண்மையான ஒரு அறிகுறி என்பதாக அப்பேரறிஞர் கருதினார். கருதி அச்செய்யுள்களை ஆங்கிலத்தில் தனிப்பாசுரங்களாகவே மொழிபெயர்த்தனர். பரிதிமாற் கலைஞர் தம் தனிப்பாசுரங்களைப் போப்பையர் எவ்வளவு தூரம் உயர்வாகக் கருதினர் என்பது அவர் தமது திருவாசகப் பதிப்பின் முகவுரையிற் கீழ்க்கண்டவாறு வரைந்துள்ளமையால் புலனாகும். 'தமிழ்த்தாயின் மறுமலர்ச்சியை அறிவிக்கும் முகத்தான் எழுந்த சமீபகால நூல்களில் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை இயற்றிய 'மனோன்மணீயம்' ஒன்று; மற்றொன்று, ஆசிரியர் பெயர் தோற்றாது வெளிவந்துள்ள 'தனிப்பாசுரத் தொகை-முதற்பகுதி'—இவ்வகைப் புதுமுயற்சி மகிழ்ச்சியோடு வரவேற்கத் தக்கது.' இரண்டாம் பதிப்போடு ஆசிரியர் பெயரும் வெளியானபோது போப்பையர் அடிக்குறிப்பாக எழுதியது: 'ஆசிரியர் பெயர் இப்பொழுது அறிவிக்கப் பட்டுள்ளது. இச் செய்யுட்களை இயற்றியவர் சென்னைக் கிருத்துவக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ., என்பது.'

இப் போப்பையரது ஆங்கில மொழிபெயர்ப்போடு சேர்த்தே தனிப்பாசுரத்தொகை இரண்டாம் பதிப்பு வெளி வந்தது. ஆயினும், ஆசிரியர் முதற்பதிப்பிலேயே தமது இயற்பெயரை வெளியிடாது புனைபெயரால் வெளியிட்டது எக்காரணம்கொண்டு என்பதுபற்றி நாம் ஆராய வேண்டிய தேவையில்லாது செய்துவிட்டிருக்கிறார் ஆசிரியர் தாமே. அவர் 'தனிப்பாசுரத்தொகை' முகவுரையில் 'ஆங்கில நூற்பயிற்சியுடைய தமிழ் மக்கள் தமிழ்மொழியைப் பெரிதும் கவனித்தலின்றிக் கைசோர விடுகின்றனர் எனப் பலரும் கூறும் வசைமொழி எம்செவிப்படலும் மனம் பொறேம், புதுமை வழியால் ஏதேனும் செய்ய வேண்டுமென்று புகுந்தேம். அங்ஙனம் புக்குழி யாம் அவ்வக் காலங்களில் சிற்சில விடயங்களைப்பற்றிக் கொண்ட கருத்துக்களைச் செய்யுளுருவமாய்ச் செய்து வெளியிடலாமென்று உன்னினேம். அவ்வாறே அவ்வக்காலத்துச் செய்த பாசுரங்களை 'ஞானபோதினி' யென்னுமொரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையின் வாயிலாய்ச் சிறிது சிறிதாக வெளிப்படுத்தினேம். இதுகண்ட சில தமிழபிமானிகளும் எமது நண்பரும் அவையனைத்தையும் ஓராற்றாற் றொகுத்துத் தனியே ஒரு நூலாக வெளியிடவேண்டுமென்று வேண்டினர். அன்னார் வேண்டுகோட் கிணங்கி வெளியிடப் புகுந்த யாம் இப்பாசுரங்களிற் சில புதுக்கருத்துக்கள் காட்டியிருக்கின்றமை பற்றி அஞ்சுவேம், எமது மெய்ப்பெயரின் வெளியிடாது 'பரிதிமாற் கலைஞன்' என்னும் புனைவு பெயரின் வெளியிடுவேமாயினேம். அன்றியும் நன்னூலொன்று செய்தானது புகழின்மையான் இகழப்பட்டொழிதலும் புன்னூலொன்று செய்தானது உயர்ச்சியாற் சாலவும் புகழ்பட்டிலங்கலும் நாடோறுங் காண்டலின் இந்நூலைப் பற்றிய தமிழ்மக்களின் உண்மை மதிப்பு இனைத்து என்றுணர வேண்டியும் அவ்வாறு செய்ய விரும்பினேம்' என்று கூறியுள்ளதை நோக்குமிடத்து ஆசிரியரது உண்மைக் கருத்து நன்கு வெளிப்

படும். அன்றியும் இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் எழுதியுள்ள சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், 'பரிதிமாற் கலைஞனெனும் புனைவுபெயர் தானிறுவிப் பாரார் பார்த்துக், கருதுமாறுள்ளபடி யறிதரல்வேட் டிசைநலஞ் சால் கலைவலாளன்' என்றும் கூறியுள்ளனர். வடமொழியில் அமைந்த இயற்பெயரைத் தமிழாக்கும் பழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் இவர்தான்.

போப்பையர் இத்தனிப் பாசுரங்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பாற்றியதோடு நில்லாமல் இப்பாசுரங்களின் ஆசிரியரைப்பற்றி அப்போது சென்னைக் கவர்னராக இருந்த 'லார்டு ஆம்ட்ஹில்' (Lord Ampthill) என்பார்க்கு மிகப் புகழ்ந்து ஒரு நிருபமும் எழுதி விடுத்தனர். சென்னையில் இருந்த சிறந்த அறிவாளிகளில் ஒருவர், தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்கு அடிகோலியசிலரில் ஒருவர், நாடகத் தமிழ் உயிர்த்தெழப் பெரும் பணி புரிபவர், தனிச் சிறப்பெய்திய தனிப் பாசுரங்களின் ஒப்பற்ற ஆசிரியர் என்றெல்லாம் அந் நிருபத்தில் புகழ்ந்திருந்தது. ஆங்கிலேயரான டாக்டர் போப்பையர் இவ்வளவு தூரம் ஒரு தமிழரைப் புகழ்ந்தெழுதியிருப்பதைக் காண கவர்னர் லார்டு ஆம்ட்ஹில்லிற்கு மிகுந்த வியப்பாயிற்று. ஆகவே, சாஸ்திரியாருக்குத் தமது மாளிகையில் பேட்டியளித்துப் பெருமைப்படுத்தத் தீர்மானித்து அவருக்குச் சொல்லியனுப்பினர். சாஸ்திரியாரும் எந்தத் தமிழாசிரியருக்கும் அதுவரை கிடைத்திராத பெரும் பேறுன மாகாணத் தலைவரின் பேட்டி காணச் சென்றனர். கவர்னர் மாளிகையில் ஏறத்தாழ அரை மணி நேரம் தமிழாய்ந்த கலைஞனும், ஆளவந்த ஆம்ட்ஹில்லும் பல விஷயங்களைப்பற்றிப் பொதுவாகவும், இலக்கியத்தைப்பற்றிச் சிறப்பாகவும் அளவளாவிக்கொண்டிருந்தனர். அப்போது, தமக்குச் செய்யப்பட்ட பெருமையால் உளமகிழ்ச்சியடைந்த

பரிதிமாற்கலைஞர், இப்பேட்டி தமக்குக் கிடைத்தது தமது தனிப் பாசுரத் தொகையினாலேதான் என்பதையுட் கொண்டு, அந்நூலை ஆம்ட்ஹில் துரைக்கே உரிமை யாக்கத் தீர்மானித்துக் கொண்டனர். இவர் தமது எண்ணத்தை கவர்னரிடம் தெரிவிக்கவே, அவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு அவ்வெண்ணத்தை ஏற்றுக் கொண்டு அவ்வுரிமைக்குத் தமது இசைவு அளித்தது மன்றி, அவ்வுரிமை தமக்கே பெருமையளிக்கும் என்றும் கூறி ஆசிரியரை மகிழ்வித்தனர். 'தனிப் பாசுரத் தொகை' இரண்டாம் பதிப்பு லார்ட்ஆம்ட்ஹில் துரைக்கு உரிமை செய்யப்பட்டு வெளியாயிற்று. இதற்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்தவர் ஆசிரியரது பழைய நண்பர் சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்கள்; 'இனிப்பாரில் இது போலப் பொருளியல் சொல் நூல் இலதென்று கற்ேறார் இயம்பத் தனிப் பாசுரத் தொகைச் செந்தமிழ் நூலை இயற்றினார்' என்று சிறப்பித்துக் கூறுகின்றார். 1902-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கிருத்துவக் கல்லூரிப் பரிசிற் கொடை நாள் விழாவிற்குத் தலைமை வகித்தனர் கவர்னர் ஆம்ட்ஹில் துரையவர்கள். அப்போது அவர் அக்கல்லூரிக்குப் பெரும் புகழ் தேடிக்கொடுத்த டாக்டர் மில்லர் (தலைமையாசிரியர்), கூப்பர் (தத்துவ நூலாசிரியர்), கெல்லட் (சரித்திரப் பேராசிரியர்) முதலியோர்களைப் புகழ்ந்து கூறிவிட்டு இவர்களது பெருமையில் சிறிதும் குறைவுபடாது விளங்கித் தமது கல்லூரியின் நற்பெயரை நிலைநிறுத்தியவர் ஆசிரியர் பரிதிமாற் கலைஞர் என்றும் குறிப்பிட்டுப் பேசினார்.

ஆசிரியரது புகழ் உச்சி நிலையை அடைந்த அமயம் அதுவே எனலாம். இறுதிவரையில் அவ்வுச்சி நிலையினின்றும் அவர் பெயரும் புகழும் இறங்கவேயில்லை. ஆசிரியர் மீது வீண் பொறாமைகொண்டிருந்த புல்லறிவாளர்களும் வாய்மதமடங்கி ஊமையாயினர்.

அக்காலத்தில் பள்ளிக்கூடப் பாடப் பகுதிகள் கடினமாயிருந்தனவேயன்றி மாணவர்களுக்கு உதவக்கூடிய உரை நூல்கள் பெரும்பாலும் கிடைப்பதரிதாகவேயிருந்தன. இக்காலத்திலோ நூலை ஒரு முறைகூடப் படிக்காமல் உரை நூல்களைப் பயின்றே பரீட்சையில் நல்ல முறையில் தேறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சாஸ்திரியார் காலத்தில் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலைமைதான் இருந்தது. மாணவர்கள் எளிதில் பயனடையுமாறு பாடப் பகுதிகளுக்கு ஆண்டுதோறும் உரையழுதி வெளியிடுவது நல்லதென்று சாஸ்திரியார் எண்ணினர். இதன் முடிவாகத் தமது நண்பர்களோடு சேர்ந்து, 'சென்னைச் செந்தமிழ் உரைச் சங்கம்' என்பதொன்றை ஏற்படுத்தினர். இதற்குக் கீழ்க்கண்டவர்கள் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்: 1. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்; 2. க. ஸ்ரீ. கோபாலாசாரியார் (கிருத்துவ கல்லூரி உதவித் தமிழாசிரியர்); 3. தி. கோ. ஸ்ரீ ரங்காச்சாரியார் (ஸி. எஸ். எம். கலாசாலைத் தமிழாசிரியர், மேற்குறித்த கோபாலாசாரியாரின் மாணவர்); 4. ஆ. சேதுராம பாரதியார் (திருவல்லிக்கேணி ஆர்யன் கலாசாலைத் தமிழாசிரியர்). இவ்வுரைச் சங்கத்தார் 1899-ஆம் ஆண்டு மெட்ரிகுலேஷன் தமிழ்ப் பாடங்களுக்கும் 1900-ம் ஆண்டு எப். ஏ., பி. ஏ. தமிழ்ப் பாடங்களுக்கும் உரை எழுதி வெளியிட்டனர். நூலிற்கேற்றவாறும், வகுப்பின் தரத்திற்கேற்றவாறும், மாணவர்கள் எளிதில் அறியுமாறும் எழுதி வெளியிடப்பட்ட இவ்வுரை நூல்கள் மிகவும் பயன்பட்டன என்று கூறுதல் மிகையாகாது.

தென்னாடு முழுவதும் பரந்த புகழ்பெற்று விளங்கிய ஆசிரியரைப் பற்றி நன்கு அறிந்திராத தமிழ்ப் புலவர்கள் மிகச் சிலரே யிருந்தனர். அப்போது சிறந்த புலவர்களாய் விளங்கிய உ. வே. சாமிநாத ஐயர் (கும்பகோணம்

கல்லூரித் தமிழாசிரியர்), ரா. இராகவஐயங்கார் (சேது சமஸ்தான வித்வான்), பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ('நற்றிணை உரையாசிரியர்), திருமயிலை மகாவித்வான் சண்முகம் பிள்ளை, தமிழ் நூற் பதிப்பாளர் சி. வை. தாமோதரம் பிள்ளை, மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை—இன்னும்பல தமிழ் அறிஞர்களும் ஆசிரியரோடு நெருங்கிய நட்புப் பூண்டிருந்தனர்; இவரது முன்னேற்றத்தையும் அன்போடும் வியப்போடும் கவனித்து வந்தனர். மற்றும் பல புலவர்களும், ஆசிரியர்களும் இவரை நேரில் அறிந்துகொள்ள வேண்டும் என்று இவரைக்காண வருவார்கள். இவ்வாறுகத் தமிழ்ப் பணிக்கிடையே இவருக்குக் கிடைக்கக் கூடிய மிகக் குறைந்த ஓய்வு நேரத்தையும் இவருக்கென விடாது தாமே பறித்துக் கொள்வார்கள் நண்பர்கள்.

பெங்களூர்க் கல்லூரியில் தமிழாசிரியராயிருந்து வந்தனர் தி. கோ. நாராயணசாமிப் பிள்ளை என்பார்; இவர் நல்ல தமிழறிஞர்; 'மாமி மருகியர் வாழ்க்கை' முதலிய உரைநடை நூல்களையும், 'ராமாயண வெண்பா' முதலிய செய்யுள் நூல்களையும் இயற்றியவர். இவர் சாஸ்திரியார்மீது பற்றுடையவர்களில் ஒருவர். ஆகவே சாஸ்திரியாரை நேரில் காண வருவதாகக் கடிதமூலம் முன்னேற்பாடு செய்துகொண்டு ஒரு நாள் சாஸ்திரியார் மனைக்கு வந்து சேர்ந்தனர். அப்போது சாஸ்திரியார் தமது இயற்றமிழ் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். நாராயணசாமிப் பிள்ளையவர்கள் வந்ததும் ஆசிரியரவரை இன்முகத்தோடு வரவேற்றுத் தமது பிற தொழில்களை நிறுத்திவிட்டுப் பேசிக் கொண்டிருந்தனர். சாஸ்திரியார், 'வருக! பிள்ளையவர்களே! வருக! ஈண்டை வருக! இங்ஙன் இருப்பீர்; நேற்றைப் பிற்பகல் வருவல் என்று உரைத்த நும்மாற்றம் மறந்தினிரோ?' என்று தொடங்கிப் பேச ஆரம்பித்ததும்,

பிள்ளையவர்கள் அப்படியே திகைத்துவிட்டனர். இப்படி யாரேனும் உரையாடும்போதும் பேசுவதுண்டோ என்ற ஐயம் ஏற்பட்டது. சாஸ்திரியார் பேசிக்கொண்டிருந்த பொருளைக் கவனிக்கவே அவருக்கு இயலாமல், அவர் தமிழ் நடையையே கவனிப்பாராயினர். அதோடு, 'ஐயா! எனக்கொரு ஐயம்!' என்றனர்; சாஸ்திரியாரும் சிறிது புன்முறுவலோடு, 'என்னை! கூறுமின்' என்றனர். 'இல்லை' தாங்கள் எப்போதும் இதே நடையில்தான் பேசுவது வழக்கமோ? அதாவது, வீட்டில் கூட இம் மாதிரியான தமிழில்தான் பேசுவதோ என்று ஒரு சந்தேக மாயிற்று' என்று வணக்கத்தோடு கேட்டனர். 'அப்படி யெல்லாம் பேச எனக்குப் பைத்தியம் இல்லை; ஆயினும் ஆங்கிலம் படித்த தமிழறிஞர்களுடைய தமிழறிவு தெளி வாயிருப்பதில்லை யென்றும் அவர்களுக்குச் செந்தமிழ் பேசக்கூட வராது என்றும் தனித் தமிழ்ப் புலவர்கள் கூறிப் பரிகசிப்பதுண்டு என்பது நானறிவேன்; அதற் காகவேதான் பண்டிதர்களிடம் இத்தகைய நடையில் பெரும்பாலும் நான் பேசுவது; எளிய நடையிற் பேசுவதும் எழுதுவதுமே விரும்பத்தக்கது என்பதுதான் என் கொள்கை' என்று எடுத்துக் கூறினர். இது கேட்டு இன் புற்ற பிள்ளையவர்கள் பிறகு பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டுச் சென்றனர். சாஸ்திரியாரது பேச்சு நடையைப் பற்றித் திரு வி. கல்யாணசுந்தர முதலி யார் தமது 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்னும் நூலில், 'சூரியநாராயண சாஸ்திரியாரிடத்தில் சிறந்து விளங்கிய இயல்புகள் பல உண்டு. அவைகளுள் சிறந்தது எங்கும் எப்பொழுதும் எக்காரணம் பற்றியும் கொச்சைத் தமிழ் பேசாமை' என்று கூறுகின்றனர்.

ஆசிரியர் வெகுநாட்களாகத் தாம் ஒரு தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தித் தமிழ் முன்னேற்றத்திற்கான எல்லா ஏற் பாடுகளையும் செய்யக் கருதியிருந்தனர். இயற்றமிழ்

மாணவருக்குப் பாடம் கூறுவதும், 'திராவிட பாஷாபி விருத்தினி சங்கம்' நடத்துவதும், தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதும், தமிழின் பெருமையை ஆங்காங்குப் பல கட்டுரைகள் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் பொது மக்களுக்கு அறிவிப்பதும், 'ஞானபோதினி' என்னும் மாதாந்தப் பத்திரிகைக்குக் கூட்டு ஆசிரியராயிருந்து பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுவதும், கருத்துச் சிறப்பு வாய்ந்த பல நூல்களை இயற்றித் தமிழுலகிற்கு உதவுவதும், தாமே நாடகங்களை நடித்து நாடகத் தமிழ் வளர்ப்பதும் ஆகிய இவையெல்லாம் இந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்று வந்தன என்னலாம். ஆனால் சங்கம் நிறுவுவது என்பது விளையாட்டல்ல ; ஒருவருடைய தனி முயற்சியால் ஆகக்கூடியதுமல்ல ; பணம் இல்லாமல் மனம் மாத்திரம் இருந்தால் ஆகக்கூடிய காரியமுமல்ல ; திரவியமும் வேண்டும், திறமை வாய்ந்த ஊழியர் கூட்டம் ஒன்றும் வேண்டும். இவையெல்லாம் சாஸ்திரியாரிடம் போதிய அளவு இருந்திருக்க முடியாது என்பது வெளிப்படை.

இது இவ்வாறாக, மதுரையில் முன்பு இருந்து பின்பு இறந்துபட்ட மூன்றும் தமிழ்ச் சங்கத்திற்குப் பின் தமிழ் வளர்ச்சிக்கான பெரியதொரு சங்கமொன்று நிறுவ வேண்டும் என்றும், அதற்காக அக்காலத்திருந்த எல்லாப் புலவர்களது ஆதரவையும் பெற வேண்டுமென்றும், இச் சங்கத்தை மதுரையிலேயே நிறுவ வேண்டுமென்றும் ஒரு இயக்கம் தொடங்கியது. இதை ஆரம்பித்தவர் பாலவநத்தம் ஜமீன்தார் **பொ. பாண்டித் துரைசாமித் தேவர்** அவர்கள். இந் நன்முயற்சிக்கு இராமநாதபுரம் சமஸ்தானத் தலைவர் **பாஸ்கரசேதுபதியவர்கள்** ஒத்த துணையாயமைந்தனர். கல்வியறிவு, சொற்பொழிவுத் திறமை, அமைப்புத்திறன், செல்வம், செல்வாக்கு முதலிய யாவையும் ஒருங்கமையப் பெற்ற இவர்களது முயற்சி ஈடேறாது போவதுமுண்டோ?

ஆயினும், எவ்வளவு பெரியவர்களாக இருப்பினும், அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி எவ்வளவு சிறந்ததாயினும் சிறிதேனும் சிலரிடமிருந்தேனும் இடையூறில்லாமல் நிறைவேறுவது இவ்வுலக இயற்கையில்லை ; ஆதலால் இம் முயற்சியில் கலந்துகொண்டு மிகுந்த ஊக்கத்தோடு உழைக்க வேண்டிய தமிழ்ப் புலவர்கள் பலரும், மதுரை வாசிகளில் ஒரு சாராரும், சிறிதும் ஊக்கமின்றி இருந்து வந்தனர். நல்ல காரியம் ஒன்று தங்களுக்குச் சுயமாகச் செய்யத் திறமையில்லாமற் போனவர்கள், பிறர் மேற்கொண்டு செய்யும் நல்ல காரியங்களில் ஊக்கத்தோடு கலந்துகொள்ள வேண்டும் ; அன்றியும் இகழாதேனும் ஒழிய வேண்டும். இரண்டுமின்றி இடையூறு செய்வதில் மகிழ்ச்சி கொள்ளும் சிலர் பொதுநலப் பகைவர்களே யாவர். இவ்வாறு மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவுவதற்குத் தடையாகச் சிலர் நிற்பதையும் அவர்கள் மதுரைவாசிகளா யிருப்பதையும் நோக்க நமது சாஸ்திரியாருக்கு மிகுந்த மனவருத்தம் விளைந்தது. ஒரு வேளை சங்கம் நிறுவுதலே தடைப் பட்டுவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது. தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் ஆதரிப்பதில் தலை நின்ற தேவரவர்களும், சேதுபதியவர்களும் தமிழ்ப் புலமையிற் றலைநின்ற நமது சாஸ்திரியார், உ. வே. சாமிநாத ஐயர், ரா. ராகவ ஐயங்கார், சடகோப ராமாநுஜாசாரியார், குருராயர் முதலியோரும் இயைந்து செய்யும் முயற்சிக்குத் தோல்வி ஏற்படாது என்பது திண்ணமே ; ஆயினும் பொதுமக்கள் தாய்மொழி முன்னேற்றத்தில் போதுமான அளவு அக்கறை காட்டவில்லையென்பது வருந்தத் தக்கதேயாம். இதுபற்றித் தமது பிறந்த ஊரான மதுரைமீது தனிப்பட்ட வருத்தம் அவருக்கிருந்தது என்றே தோன்றுகிறது.

ஒரு முறை ஆசிரியர் சித்தூருக்கு ஒரு அலுவலாகச் சென்று திரும்பினர். வரும்பொழுது தமிழ்ச் சங்கம் நிறுவு

வதைப்பற்றி யோசித்துக்கொண்டே வந்திருக்கின்றனர். அக்காலத்தில் புகைவண்டிப் பிரயாணம் என்றால் எவ்வளவு சிரமத்தைக் கொடுக்கக்கூடியது என்பது இப்போது நினைத்துப் பார்ப்பதே கடினம். இவ்வளவு துன்பத்தோடு மனைக்குத் திரும்பிவந்த ஆசிரியர், வந்ததும் வழக்கம்போல, போய் வந்ததைப் பற்றிச் சிறிது பேசிக் கொண்டிருந்துவிட்டு, நீராடக் குழாயடியில் உட்கார்ந்தனர்; உட்கார்ந்ததும், உடனிருந்து எக்காலமும் தமிழ் ஆராய்ந்துவந்த இயற்றமிழ் மாணவர் ந. பலராம ஐயரை விளித்துத் தாம் கூறுவனவற்றை எழுதிக்கொண்டே வரும்படி கூறினர். அவர் எழுதி வரவர ஆசிரியர் தங்கு தடையின்றிக் கூறிக்கொண்டே வந்ததுதான் ‘மதுரைமாநகர்’ என்னும் மிக அழகிய ஆசிரியப்பா. இதைப் படிப்போர் யாவருக்கும் ஆசிரியரது தெள்ளிய செந்தமிழ்ச் செய்யுள் நடையும் செய்யுளியற்றும் திறமையும் தெரிவதோடு கூட ஆசிரியருக்கு மதுரைமீதும் தமிழ்மீதும் இருந்த அளவிறந்த அன்பும் புலனாகும். ‘தாய் மொழியாகிய தமிழினை மறந்து செல்வப் பொருளீட்டலிலேயே காலம் போக்கியுழலும் மதுரையாகிய தாம் பிறந்த நகர்க்கிரங்கியாற்றாது பாடியது’ என்ற தலைக்குறிப்பே இவரது உள்ளக் கிடக்கைக்குப் போதுமான சான்றாகும்.

ஆசிரியர் நினைத்த மாத்திரத்தில் கருத்துக்களைக் கோவைப்படுத்தி அழகிய செய்யுட்களாக யாத்து விடுவதில் இணையற்றவராக விளங்கினர். ஒரு நாள் இரவு உணவு கொண்டபின் தமது நண்பர்களும் இயற்றமிழ் மாணவர்களிற் சிலரும் சூழ மேன்மாடியில் ஆசிரியர் பொழுது போக்காக உரையாடிக் கொண்டிருந்தனர்; நிலவும் நன்றாய் ஒளிவிட்டுக்கொண்டிருந்தது. அங்கிருந்தவர்களில் ஒருவர் * உயர்நீதி மன்றத்தின் தலையில் அமைத்துள்ள விளக்கினின்றும் வெளிப்பட்டுச் சுற்றிச்

* (High Court)

சுற்றிவரும் இரண்டு சுடர்ப்பிழம்புகளைச் சுட்டித் தமக்குத் தோன்றும் கற்பனைகளைக் கூறக் கேட்டபொழுது, தற்குறிப்பேற்றமாகப் பல கற்பனைகளையும் ஆசிரியர் செய்தனர்; அன்றிரவு துயிலும் முன்பே இக்கருத்துக்களை யமைத்துப் பதினாறு செய்யுட்களை எழுதி முடித்து விட்டனர். இவையே † 'கலங்கரை விளக்கம்' என்னும் செய்யுட் பகுதியாம்.

1901-ம் ஆண்டில் ஆசிரியரது நெருங்கிய நண்பர்கள் இருவர் காலகதி யடைந்து விட்டனர். இவருள் ஒருவர் ரிப்பன் பிரஸ் சொந்தக்காரரான சை. இரத்தினச் செட்டியார் என்பவர்; இவர் 1901-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ம் தேதி காலஞ் சென்றனர். பல அரிய தமிழ் நூல்கள் அச்சேறி வெளிவருவதற்கு உதவி புரிந்துள்ள ரிப்பன் பிரஸ் சொந்தக்காரரான இரத்தினச் செட்டியார் பெரிய வேதாந்தியாயுமிருந்தனர்; அத்வைதத்தை நம்பி யவர்; இவரது மறைவு ஆசிரியரைச் சோகக் கடலில் ஆழ்த்தியதால், கையறுநிலையாக இவர் மூன்று விருத்தப் பாக்களைப் பாடித் தமது சோகத்தினின்று ஒருவாறுகத் தெளிந்திருந்தனர். இச்செய்யுட்கள் 'பாவலர் விருந்'தின் கையறுநிலையில் ஐந்தாம் உட்பகுதியிற் காணப்படுவனவாம்.

இதே ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி, அதாவது இருபதாம் நூற்றுண்டு ஆரம்ப நாளில், தமிழ்ப் பேரறிஞரும் ஆசிரியருக்கு நண்பரும் பேராதரவாக இருந்தவருமான சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் புகழுடம்பெய்தினர். அதுபோழ்து, சென்னையிலிருந்த தமிழ்ப் புலவர் பலரும் அனுதாபக் கூட்டம் ஒன்று கூட்டினார்கள். அதில் கலந்து கொண்ட அறிஞர்கள் பலரும் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

† கலங்கரை விளக்கம் : கப்பலைக் கரைக்கழைக்கும் விளக்கு. (Light house) இது பாவலர் விருந்தில் ஆறும் பகுதி.

சாஸ்திரியார் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து, பிள்ளையவர்களது அருங்குணங்களைப்பற்றியும் அன்னார் மறைவால் தமிழரும், தமிழ் நாடும் அடைந்த பெருநட்டத்தைப்பற்றியும் நான்கு செய்யுட்கள் பாடி அக்கூட்டத்தில் வாசித்தனர். இச்செய்யுட்கள் தாம் பாவலர் விருந்து கையறுநிலைப் பகுதியில் நான்காவது உட்பிரிவாகக் காணப்படுவன.

"பன்னரிய நகர்நடுவட் பழுத்ததொரு பயன்மரந்தான்
பறிப்புண் டாங்கே
தன்னிலையின் வீழ்ந்ததெனத் **தாமோத ரக்**குரிசில்
சாய்ந்தா னந்தோ!"

"காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போ
லோமோது செந்தமிழி னன்னூல் பலதொகுத்த
**தாமோ தரம்பிள்ளை** சால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்?"

ஆசிரியர் அங்குக் குழுமியிருந்த புலவர்களைத் 'தண்டமிழ்ச் செந்நாப் புலவீர்' என்று விளித்துள்ளதாலும், 'நந்தம் பன்னரிய நகர்' என்று சென்னையைக் குறித்துள்ளதாலும் இச்செய்யுட்கள் சென்னையில் நடந்த புலவர் கூட்டத்திற் படிக்கப்பட்டன என்பது விளங்கும். தொடக்கத்தில் தம்மைத் தமிழில் ஊக்கி, 'திராவிட சாஸ்திரி' எனும் பட்டமும் அளித்து 'இசை நலஞ்சால் கலைவலாளன், சுருதிவலார் குலக் கோமான்' † என்று தம்மைப் புகழ்ந்து பெருமைப்படுத்திய பிள்ளையவர்களது பிரிவாற்றுது, ஆசிரியர் கையறுநிலை பாடியது வியப்பன்று. இது நிற்க.

சில காலமாகவே எதிர்பார்க்கப்பட்டு வந்த மதுரைத் தமிழ்ச் சங்கம் 1901-ம் ஆண்டு மே மாதம் 24-ந்தேதியன்று தனது வாழ்நாளைத் தொடங்கியது. பாஸ்கர

‡ தனிப் பாசுரத் தொகைச் சிறப்புப் பாயிரம்.

சேதுபதியார் தலைமையில், பாண்டித் துரைசாமித் தேவரது மேற்பார்வையில், சாஸ்திரியார், உ. வே. சாமிநாத ஐயர், ரா. ராகவ ஐயங்கார், சடகோப ராமாநுஜாசாரியார் முதலிய தமிழ்ப் பேராசிரியர்களது கூட்டுதவியோடு மதுரையில் நான்காம் சங்கம் நிறுவப்பட்டது. அதற்கு அங்கமாகப் 'பாண்டியன் புத்தகசாலையும் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையும் ஏற்படுத்தப்பட்டுள. முன்னதன்கட் பல அருமையான ஏட்டுப் பிரதிகள் சேமித்து யாவருஞ் சென்று பார்க்கும்படி வைக்கப்பட்டுள; அச்சான நூல்கள் பலவுமிருக்கின்றன. பின்னதன்கட் கல்வி பயிலும் மாணுக்கர் பலர் நூல்களும் ஆடையு முணவும் சங்கத்தாருதவ, அவற்றைப் பெற்றுப் படிக்கின்றனர். இச்சங்கத்திற்கு உறுப்பினர்களாக ஏறக்குறைய ஐம்பதின்மர் புலவர் இருக்கின்றனர். இவர்களெல்லாம் ஆண்டில் ஒரு முறை கூடுகின்றனர்; கூடித் தமிழ்மொழி முன்னுக்கு வருவதற்குரிய யோசனைகள் செய்கின்றனர். சங்கத்திற்கெனத் தனியே ஓர் அச்சியந்திரசாலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலமாகப் பல அரிய தமிழ் நூல்களைச் சங்கத்தார் அச்சிடப் போகின்றனர்; 'செந்தமிழ்' என்னுந் தலைப் பெயரிட்டு ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை நடாத்திவருகின்றனர். அதன்கண்ணே பல அருமையான கட்டுரைகள் வெளிப்படுகின்றன. சங்கத்தார் ஆங்கிலக் கலாசாலைகளிற் கற்கும் மாணுக்கர்க்குத் தமிழில் ஆர்வமுண்டாதல் வேண்டிப் பணப் பரிசிலும் தகுதிச் சீட்டும் வைத்துப் பரீட்சைகளேற்படுத்தி யிருக்கின்றனர்.' † செந்தமிழ்ப் பத்திரிகை முதல் வெளியீட்டில் 'உயர்தனிச் செம்மொழி' என்னும் பொருள் பற்றி ஆசிரியர் ஒரு கட்டுரை எழுதியுள்ளனர். அன்றியும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சகர்களில் பாண்டித் துரைசாமித்தேவர், சடகோப ராமாநுஜாசாரியார், திருநாரா

---

† தமிழ் மொழியின் வரலாறு—முடிவுரை.

யண ஐயங்கார், உ. வே. சாமிநாத ஐயர் முதலியவர்களோடு இவரும் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

அடுத்த ஆண்டு (1902-ம் ஆண்டு மே மாதம் 24-ம் தேதி) தமிழ்ச் சங்க ஆண்டு விழாக் கொண்டாடப் பட்டது. அச்சமயம் உ. வே. சாமிநாத ஐயர், வை. மு. சடகோப ராமானுஜாசாரியார், யாழ்ப்பாணத்து அம்பலவாண நாவலர், நமது சாஸ்திரியார் முதலிய வித்துவான்கள் கூடியிருந்தனர், புலவர்கள் பலரும் தமிழின் பெருமையைப்பற்றிப் பலவாறு விரித்துரைத்தனர். சாஸ்திரியாரோ, 'சங்கப்புலவரை வாழ்த்தி இக்காலத்தில் தமிழின் நிலைமை இத்தன்மையதென்றும், பண்டிதர் தமிழும், சாமாணியர் தமிழும் பெரிதும் வேறுபடுகின்றன வென்றும், அவ்வேறுபாடு நாளடைவில் மிகுகின்றதென்றும், அது மிகாதிருக்கும் பொருட்டு நேரிய வழிகளை நாடவேண்டுமென்றும், அங்ஙனம் நாடவேண்டுமென்றல் யாவருக்கும் உடன்பாடாயின் பண்டிதர்கள் தமது உயரிய நடையினின்றும் இறங்கிப் பொது மக்களை மொழியுணர்ச்சியில் உடன்கொண்டு செல்லவேண்டுமென்றும், இதுவரை அங்ஙனம் செல்லாமையால் தமிழ் மொழி வளர்ச்சியின்றி 'ஒரு நிலைப்பாடு' எய்திவிட்டது என்று தமிழைக் குறைகூறுவதில் பயனில்லை என்றும், சென்னை மாகாணக் கல்வி ஆராய்ச்சித் தலைவர் தாய் மொழி நீக்கத்தைப்பற்றி வெளியிட்ட கருத்துப் பெரிதும் பிழைபட்டதென்றும், பெரியதொரு சொற்பொழிவு ஆற்றினர். இச்சொற்பொழிவால் ஆசிரியரது பல கருத்துக்களும் புலனும்.

தமிழின் வளர்ச்சிக்குத் தடையாகப் பல இடையூறுகள் அவ்வப்போது ஏற்பட்டதுண்டு. இவ்வகையிடையூறுகளை யெல்லாம் எதிர்த்து வென்று முன்வந்துள்ளது நம் தாய் மொழி. இந்நூற்றுண்டின் தொடக்

கத்தில், பல்கலைக் கழகப் பாடப் பகுதிகளில் தமிழின் நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டது. தமிழ் முதலிய தாய் மொழிகளுக்கு தேவையற்ற முதன்மை அளிக்கப் படுவதாயும், வடமொழியொன்று நீங்கலாக, ஏனைய மொழிகளை மாணவர்கள் அதிகம் கற்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் சில பெரிய இடத்து மனிதர் களுக்கு உதித்து விட்டது. லார்டு கர்ஸான் இந்திய ராஜப் பிரதிநிதியாக இருந்த காலம் அது; வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் இருந்த வடமொழிப் பற்றுடை யோர் ஒன்று கூடிக்கொண்டு மத்திய சட்டசபையில் சுதேசத் தாய்மொழிகளை யெல்லாம் பல்கலைக்கழகப் பாடப் பகுதிகளினின்றும் நீக்கிவிட வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர். இராசப்பிரதிநிதி, இப் பிரேரணையைச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அதன் கருத்தைத் தெரிவிக்கும்படி அனுப்பினர். பல்கலைக் கழகமோ, சென்னை ஆசிரியர் சங்கத்திற்கு இப்பிரே ரணையை யனுப்பிவிட்டது. இதுசமயம், மு. சி. பூரண லிங்கம் பிள்ளையவர்கள் எஸ். பாட்பீல்டு (S. Padfield) என்னும் புனைபெயரில் தாய்மொழி நீக்கம் பற்றி மெட்ராஸ் மெயில் (Madras Mail) தினத்தாளில் பல கட்டுரைகள் தொடர்ச்சியாக எழுதி வந்தனர். வடமொழி யன்பர்கள் இக்கட்டுரைகளின் ஆசிரியரை நேரிற் சந்திக்கக் கூட விரும்பினர். பற்பல இடங்களிற் கூட்டங்கள் கூடிச் சட்டசபைப் பிரேரணையைச் சட்ட மாக்கிவிடப் பெரும்பாடுபட்டனர் வடமொழிப் பற்றுடை யோர். இவர்கள் வடமொழியில் அன்பு பாராட்டுவதில் யாதொரு குற்றமுமில்லையாயினும், பிற தாய்மொழிகளை (அதுவும் தமிழை) அவமதிப்பது நமது சாஸ்திரியாருக்குச் சிறிதும் பொறுக்கக் கூடாததாயிருந்தது. வினை மிஞ்சி விடுவதற்கு முன்னுல் தமிழர்கள் விழிக்க வேண்டும் என்று உணர்ந்த சாஸ்திரியார் அப்போது கோவையில்

இருந்த பூரணலிங்கம் பிள்ளையவர்களுக்கு, அவரை உடனே புறப்பட்டுச் சென்னைக்கு வரும்படி ஒரு தந்தி அடித்தனர்; அதற்கு முதல் நாள்தான் சென்னையிலிருந்து கோவை வந்து சேர்ந்த பிள்ளையவர்களுக்குக் காரணம் விளங்காமல் சாஸ்திரியாருக்கே ஏதேனும் தீங்கு ஏற்பட்டுவிட்டதோ என்று அஞ்சி மறுநாளே சென்னை வந்து சேர்ந்தனர். சாஸ்திரியாரோ இன்முகத்தோடு பிள்ளையவர்களை வரவேற்றுக் காலதாமதமின்றிக் கவனிக்க வேண்டியவைகளைப்பற்றிக் கூறினர்; இரண்டு நாட்களில் நடக்க இருந்த ஆசிரியர் சங்கக் கூட்டம் தான் இவ்வளவு அவசரத்திற்கும் காரணம். இரண்டு நாட்களும் இவ்விரு நண்பர்களும் ஆசிரிய சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் வாடகை வண்டியமர்த்திக் கொண்டு சென்று கண்டு அவர்களுக்கு உண்மை நிலைமையை விளக்கி வந்தனர். சங்கக் கூட்டத்தில் தாய் மொழியே வென்றது; சாஸ்திரியாரும் பிள்ளையவர்களும் பட்டபாடு பலனளித்தது. இதோடு நில்லாமல், இவ்விருவரும் மதுரைக்குச் சென்று பாண்டித் துரைத் தேவரவர்களைக் கண்டு பேசி மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றித் தந்தி மூலம் அனுப்பும்படியும் செய்தனர். இதன் முடிவாகத் தமிழ் கட்டாய பாடமாகவே ஏற்படுத்தப்பட்டது. **அந்நாளில் இவ்விருவரும் மேற்கொண்ட உழைப்பே இந்நாளில் நம் தமிழ் மொழிக்குள்ள பெருமைக்குக் காரணம் என்பதில் ஐயமின்று.**

'ஒரு காலத்தில் யாம் வடமொழிப் புலவரொருவரோடு சல்லாபஞ் செய்து கொண்டிருந்தபோது, அவர் திடீரென்று 'மெய், வாய், கண், மூக்கு, செவி யென்ற வைம்பொறியானும் சிறந்து விளங்கி யாக்கை நலம் வாய்ந்த தமிழ் மகள், தான் சம்ஸ்கிருத நாயகனை யெதிர்ப் பட்டு மணக்குங்காறும், முகங் காட்டாது தலைகவிழ்ந்து நின்றனள்! இஃதென்னே!' என்று கூறிப் புன்னகை

செய்தனர். அஃதுணர்ந்த யாமுங் காலந்தாழ்த்தலின்றி, அவர் எதிர்பாராத வண்ணமாய், 'எவ்வாற்றானும் யாக்கை நலன் வாய்ந்தொளிருந் தமிழ் மகள் தன்னை மணக்குமாறுபோந்த வடமொழி நாயகன் மூங்கையாய் வாய் திறத்தலின்றி முகத்தினாற் பல சைகைகள் செய்து நின்றமைகண்டு, முகஞ் செய்து புறக்கணித்து நின்றனள்! இஃதென்கொலோ!' என்று கூறி இள நகை யரும்பினம். இச்சம்பாஷணையின் பொருளாவது, அவர் தமிழில் முகத்திற்குத் தக்க சொல்லில்லை யென்றார். யாம் 'முகம்' தமிழ்ச் சொல்லே என்பாரோடிணங்கி, அதனை வலியுறுத்திச் சொல்லு முகத்தால், வடமொழியில் முகத்தின் சொற்களைத் தவிர்த்து வாய்க்குத்தக்க சொல்லின்மை காட்டி, அது பேச்சு வழக்கற்ற பாஷை யென்று குறித்தனம். இச்சல்லாபத்தை அறிவுடையோர் விநோதார்த்தமாகக் கொண்டு எம்மைக் கடைக்கணிப்பாராக,' என்று ஆசிரியர் 'தமிழ் மொழியின் வரலாற்'றின்கண் கூறியுள்ளனர்.

தமிழ் * '**உயர்தனிச் செம்மொழி**'யாகவே வடமொழிக்கு ஒரு முறையிலும் தாழ்ந்தது இல்லை. அன்றியும் நடைமுறையில் பயிலப்படும் மொழி எனவே ஓராற்றால் வடமொழியினும் சிறந்தது எனவே கொள்ள வேண்டும் என்பது ஆசிரியர் கருத்து; இக்கருத்தையே, இவர் தமது கட்டுரைகள், சொற்பொழிவுகள்—இவற்றின் மூலமாக எப்போதும் வற்புறுத்தி வந்திருக்கின்றனர்.

'வடமொழி, இலத்தீன், கிரீக்கு முதலியன போலத் தமிழ் மொழியும் 'உயர்தனிச் செம்மொழி,' யாமாறு சிறிது காட்டுவாம். தான் வழங்கும் நாட்டின்கணுள்ள பல மொழிகட்குந் தலைமையும் அவற்றினும் மிக்கமேதகவுடைமையுமுள்ள மொழியே 'உயர் மொழி.' இவ்விலக்கணத்தான் ஆராயுமிடத்துத் தமிழ், தெலுங்கு முதலிய

* (Classical Language)

வற்றிற்கெல்லாம் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவும் உடைமையால் தானும் உயர்மொழியேயென்க. தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்க வல்ல ஆற்றல் சான்றதே 'தனிமொழி' என்னப்படும். தான் பிற மொழிகட்குச் செய்யும் உதவி மிகுந்தும் அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ் மொழியினுதவி களையப் படின், தெலுங்கு முதலியன இயங்குதலொல்லா; மற்றுத் தமிழ் மொழி அவற்றினுதவி யில்லாமலே சிறிது மிடர்ப் படுதலின்றித் தனித்து இனிமையின் இயங்க வல்லது. இஃது இந்திய மொழிநூற் புலவர்கள் பலர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆதலின் தமிழ் தனி மொழியே யென்க. இனிச் செம்மொழியாவது யாது?'

'திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி புகல் 'செம்மொழி'யாம்' என்பது இலக்கணம். இம்மொழி நூலிலக்கணம் தமிழ் மொழியின்கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொன் முடிவுகளும் பொருண் முடிபுகளுமின்றிச் சொற்றோன் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதி னுணரவல்லதாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தமெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ் மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க. நாட்டின் நாகரிகமுதிர்ச்சிக்கேற்பச் சொற்களும் ஏற்பட்டு மொழிக்கும் நாகரிக நலம் விளைத்தல்வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிற மொழிச் சொற்களன்றித் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இவையும் உயர்தனித் தமிழ் மொழிக்குப் பொருந்துவனவாம். ஆகவே தமிழ் தூய் மொழியுமாம். எனவே தமிழ் செம்மொழியென்பது திண்ணம். இது பற்றியன்றே தொன்றுதொட்டுத் தமிழ் மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப் புலவரால் நவின்றேதப் பெறுவதாயிற்று. ஆகவே தென்னாட்டின்கட் சிறந் தொளிரா நின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்

ருன் ஆராய்ந்த வழியும் 'உயர்தனிச் செம்மொழி'யேயாம் என்பது உறுதி' * என்பதே ஆசிரியர் கொண்டுள்ள கருத்து. இஃதிவ்வாருகத் தமிழ் மொழி, பள்ளிக்கூடங்களில் பாடமாகப் படிக்கத் தகுதியற்றது என்கிற கருத்தோடு ஒரு இயக்கம் கிளம்புமாஞல் அதை எதிர்த்துப் போராடாது விடுவரோ பரிதிமாற்கலைஞர்? இது நிற்க.

நாடகத் தமிழின் இலக்கணம் பூர்த்தியாகக் கிடைக்கப் பெருததால் அதற்கோர் இலக்கணம் இயற்றக் கருதி 'நாடகவியல்' என்னும் நூலொன்றை 1901-ம் ஆண்டு எழுதி வெளியிட்டனர் ஆசிரியர். 1903-ம் ஆண்டு பி. ஏ. பரீட்சைக்கு இந்நூலின் முதல் இரண்டு இயல்களைப்பாடமாக ஏற்படுத்தியிருந்தனர். இவ்விலக்கண நூல் ஒன்றே ஆசிரியரது புகழை நிலை நாட்டப் போதுமானது. தமிழிலக்கியத்தில் என்றும் மங்காத புகழை இந்நூல் அவருக்குச் சம்பாதித்துத் தந்தது எனில், அந்நூலின் பெருமையை ஓதி உணர்தலே தகவுடையதாம்.

இந்நூல் இயற்றி முடிந்து வெளிவரும் தருவாயிலேயே ஆசிரியர்க்கு உடல் நலம் குன்றத் தொடங்கிவிட்டது. அப்போது † கோதீர்த்தபுரிச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பேரறிஞராயிருந்த டாக்டர் ஜி. யூ. போப்பையர் அவர்கள் தமது வேலையை விட்டு விலகி ஓய்வெடுத்துக் கொள்ளத் தொடங்கினுர். அவருக்குப்பின் அவர் பதவியை வகிக்கக் கூடியவர் யார் என்று அந்தப் பல்கலைக் கழக அதிகாரிகளும் ஆராய்ந்து கொண்டிருந்தனர். அப்பதவியைப் பெருமையோடு வகிக்கத் தகுந்தவர் நமது சாஸ்திரியாரவர்களே என்பதை முற்றும் உணர்ந்திருந்த போப்பையர் சாஸ்திரியாரது கருத்தையறிவதற்கு லார்டு ஆம்ட்ஹில் துரை மூலம் முயன்று பார்த்தனர். சாஸ்திரியாரோ தமது உடல் நலம் குன்றியிருந்த காரணத்தால், பரதேசம்

* தமிழ் மொழியின் வரலாறு.

† Oxford University.

சென்று தமிழ்ப்பணி புரிய இயலாமையைத் தெரிவித்துக் கொண்டு விட்டனர். அதே சமயம் ஆசிரியர் மதுரைத் தமிழ்ச்சங்கப் பரீட்சகர்களான ஒன்பது பேரில் ஒருவராக நியமிக்கப்பட்டனர்.

ஓய்வு என்பதை உடலோ உள்ளமோ ஒரு சிறிதும் அறியாதவாறு எக்காலத்தும் புத்தகமும் கையுமாயிருந்து தமிழை எல்லாத் துறையிலும் ஆராய்ந்து வந்த காரணத்தால், சாஸ்திரியாரது உடல் நலம் கண்ணுடி சிதறுவது போல உடைந்து விட்டது என்பதைச் சிலரே உணர்ந்தனர். ஏனெனில், உடல் நலக்கேடு எவ்வாருயினும் அதை ஒரு சிறிதும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் உழைப்பையே உயிர் நாடியாகக் கொண்டு அவர் கடமையைச் செய்து வந்தமையால், அவ்வுழைப்பே அவர் உயிரை நாடிவிட்டது.

அவரைப் பிடித்தது இருமல் நோய்; அது மூச்சுப் பையை உருக்கிக்கொண்டே வந்தது என்பதை அவர் உணரவில்லை; அது என்புருக்கி, உயிரை உண்ணும் என்பதையும் இறுதி வரையில் யாரும் எண்ணவில்லை. ஆயினும், இறைவனது கருணைத் திறத்தில் உண்மையான நம்பிக்கை கொண்டவராதலால், கடவுள் தம்மைக் கைவிடார் என்றே நினைத்தார். இறைவன் கோயில் கொண்டெழுந்தருளியிருந்த கோயில்கள் பலவற்றிற்கும் வழிபாடு காரணமாகச் சென்று வந்தனர். 1902-ம் ஆண்டு வைகுண்ட ஏகாதசி நாளில் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமானைத் தரிசிக்கச்சென்று அக்காக்குங் கடவுளை அடிபணிந்தெழுந்து இனிய தமிழ்ப்பாவால் வணங்கினுர் செந்தமிழ்ப் பாவாணர்.

'சீர்த்தசெங் கமலத்தி னிற்றிகழ் தேவிகட் கடைநோக்கமும்
கூர்த்தபுந் தியுநோயி லாமை குலாவுதே கமுமேவுமே,
நார்த்தனைப் படுநாத னெம்பர நாரணப் பெருமானெனும்
பார்த்தசா ரதிபாத தாமரை பண்பினிற் றெழுவேயரோ.'

என்பது ஆசிரியர் பார்த்தசாரதிப் பெருமாள் மீது பாடிய பாடலாம்.

'மான விஜயம்' என்னும் அவலச்சுவை நாடகம் ஒன்று இவ்வாண்டு ஆசிரியரால் எழுதி வெளியிடப்பட்டது; இந் நாடகம் வெளியானதும் நாடகாசிரியர்களில் தலைமைப் பதவி உறுதியாகக் கிடைக்கக்கூடிய நிலையை எளிதில் எய்திவிட்டனர். 'மதிவாணன்' என்னும் உரை நடை நூலும் புத்தக வடிவில் பதிப்பிக்கப்பட்டது. 1902 மே 16-ம் தேதி இவர் எழுதிய முகவுரையோடு இந்நூல் ஞானபோதினியினின்றும் பெயர்த்து அச்சிடப்பட்டது. இவ்வாறு நூல்மேல் நூலாக வெளிவரவும், இவரது தமிழறிவு எட்டுத் திக்கிலும் தானே பரவத் தொடங்கியது. இவரது உடல் நலம் குறையக் குறைய, புகழ் வளர ஆரம்பித்தது; புகழ் வளர வளர, சில புல்லறிவாளர்கள்பால் பொறாமையும் வளரத்தொடங்கிற்று. முப்பது ஆண்டுகளே கண்டிருந்த சாஸ்திரியார் பேரும் பெருமையும் அடைந்திருக்க, தங்களை ஏன் என்று கேட்பார் இன்மையால் மனம் புழுங்கினர் சிலர்; இப்புன்குழு இவரைப் பற்றி அவதூறு பேசவும் அஞ்சவில்லை. இவற்றை யெல்லாம் பொருட்படுத்தினாரில்லை ஆசிரியர். ஆயினும் இவர் தம் மாணவர்களிலேயே † ஒருவர் தமதாசிரியரைப் பற்றிப் புறங்கூறி நின்றதைக் காண ஆசிரியர் மனம் மிக வெதும்பிற்று. ஆசிரியர் இயற்றிய நூல்களிற் கண்ட அரிய கருத்துக்கள் தங்கள் நூல்களினின்றும் பெயர்த்துக் கொள்ளப்பட்டன என்று கூசாது கூறினர் சிலர்; இவர் தமிழறிவே மேற்போக்கானது, பரந்து ஆழ்ந்ததன்று, ஆரவாரத்தோடு அமைவது என்று நாக்கில் நரம்பின்றிப் பொய் கூறித் திரிந்தனர் சிலர்.

† இவர் பெயரை வெளியிடுதல் நேரிதன்று என்று விடுத்தனம்.

இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்,
என்ன பயத்ததோ சால்பு'

என்பதைக் கடைப்பிடித்தனர் சாஸ்திரியார். ஆயினும் இப்பொருமைத் தீக்குணத்தைப் பற்றி ஞானபோதினி 1902-ம் ஆண்டு ஜனவரி 20-ம் தேதி வெளியிட்ட தலையங்கம் விரிவாய்ப் பேசிற்று : 'பிறரது ஆக்கம் கண்டு பொருமைப்படுவது இறப்பப் பெரியதோர் தீக்குணமாக, நூல்கள் முழுங்குமாற்றை நன்கு படித்தறிந்தவரெனச் சொல்லிக் கொள்ளும் தமிழ்ப் புலவர்களே தமக்குள் அழுக்காறுடையரா யொழுகுதல் எவ்வாறு நேரிதாகும்?........... ஒரு தமிழ்ப் புலவர் ஏதேனு மொன்றனுற் புகழ் நலம் பொலிந்து சிறந்துழி அது கண்டு மகிழ்ச்சியடைதலே ஏனைய புலவர்கள் யாவர்க்கும் எய்தியதோர் கடப்பாடாகவும், அதனை மறந்து பொருமைப் பேய்க்காளாகி அவரோடு மாறுபட்டு அவரடைந்த நன்மையின் பயனைத் தாமும் நுகரவேண்டி அவருக்கு இடுக்கண் விளையத் தக்கவாறு ஏதேனுமொன்று செய்தல் எவ்வாறு ஏற்புடைத்தாகுமோ?........ஒருவனுண்பதைத் தடுப்பது தவறுடைத்தன்றே? வேண்டு மெனின், நன்னெறியானுணவு கிடைக்கு மாற்றை யுய்த்துணர்ந்து ஒழுகாது பிறிதுபட வொழுகுதல் பைத்தியமே என்க' என்பது அக்கட்டுரையின் ஒரு பகுதி. அதோடு கூட, இத்தகைய புல்லறிவாளர்களது செய்கையால் அறிவு சான்றவெவரும் தனது மனவமைதியை இழத்தல் தகாது என்னும் கருத்தோடு 'மனவமைதி' என்பதோர் கட்டுரையும் எழுதி ஞானபோதினியில் வெளியிட்டனர். அக்கட்டுரையில் :

'தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப் பயத்தான்—உம்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர் கொலென்று
பரிவதூ உஞ் சான்றோர் கடன்'

என்னும் அருமை நாலடிகளையும்,

'தெரியா தவர்தந் திறனில் சொற்கேட்டாற்
பரியாதார் போல விருக்க—பிரிவில்லா
வம்பலர் வாயை யவிப்பான் புகுவாரே
லம்பலந் தாழ்க் கூட்டுவார்,'

என்னும் பழமொழிப் பாடலையும் எடுத்துக்காட்டித் 'தம்மினும் மிக்கார் தமக்குத் துன்பஞ் செய்தாராயினும் அவர்மாட்டுச் சினஞ் செய்யாதமைதல் அறிவுடைமையாம்; தம்மையொத்தார் அங்ஙனஞ் செய்யின் அவரை வெகுளாதமைதல் நலமுடைத்தாம்; தம்மினும் இழிந்தார், அவ்வாறு செய்துழிச் சினங்காத்தமைதல் சிறப்புடைத்தாம்,' என்று தமது பெருந்தன்மை தோன்றக் கூறியுள்ளனர். அன்றியும் தமது நன்றியில் மாணவனை மனதிற் கொண்டு,

'என்று மென்குறை யெங்கும் பரப்புவோன்
என்றன் மாணவ னென்னினு மற்றென்பால்
நின்று வேலை நிகழ்த்துந னென்னினு
மன்ற வென்குரு வாக மதிப்பெனல்'

என்னும் செய்யுளையும் அக்கட்டுரையிறுதியிற் சேர்த்தனர். ஆயினும் 'மானவிஜயம்' முகவுரையின் இறுதியிற் சேர்க்கப் பட்ட செய்யுள் இதினின்றும் சிறிது மாறுபட்டுக் காண்கிறது; அதுவும் ஒருவரைத் தனிப்படக் குறிப்பதாக இல்லாமல் இருத்தல் வேண்டி மாற்றிவிட்டனர் என்று தோன்றுகின்றது. அதாவது,

'என்று மெங்குறை யாங்கும் பரப்புநர்
துன்றி யெம்மிடஞ் சொல்லறி மாணவர்
நின்று வேலை நிகழ்த்துந ராயினு
மன்ற வெங்குரு மாரவர் வாய்மையே'

என்பதாம். இவ்வாறு ஆசிரியர் இயற்றிய நூல்களில் குணம் காணுது குற்றமே காண்பதைத் தமது தொழிலாகக் கொண்டு திரிந்த சிலரை உளத்திற்கொண்டு தான் 'மானவிஜயத்'தை 'எம்முடைய நண்பர் எனப்

பெருதாரெவர்க்கும்' என உரிமை செய்ததும். அன்றியும் அப் பொருமைக் காரர்களில் ஒருவரைப் பற்றிப் பாவலர் விருந்தின் பத்தாம் பகுதியாகிய 'போலியாராய்ச்சியன்' என்பதில் அறிகிறோம்; அதன் தலைப்பில், 'நூலாராய்ச்சி என்பது நூலிற் குற்றங் கூறுதலே யென்று பொருள் கொண்டும், மெய்யான குற்றங்களைக் காண்டலின்றிப் போலிக் குறைகூறிக் கொண்டும், நூலின் நயங்கண்டு நுகர்தலின்று நவை காண்டலே தொழிலெனக் கொண்டும், வாளாதிரிதரும் ஒருவனைச் சுட்டிப் பாடியது' என்று கூறுதலால் இது விளங்கும். அன்றியும் இப் போலியாராய்ச்சியர் ஒரு கண் ஊனமுடையார்; 'கொதி கண் ஒன்றுறு கொடுங் கொடி நிகர்ப்பை கொடியோய்!' 'ஏய்ந்த ஊறுணரும் ஓர் விழிய எங்ஙன் அறிவாய்?' 'கண் இலாது உழல் கசட்டறிவினுய்!' 'மயங்கு பொறியாய்!' என்று ஆசிரியரே கூறுவதாலும், அப்பகுதிக்கு உரையெழுதிய இயற்றமிழ் மாணவர் பலராம ஐயரவர்கள் 'ஆசிரியர் குறிப்பித்துள்ள வாளாதிரிதரும் போலியாராய்ச்சியனும் ஒருவனுக்கு ஒற்றைக் கண் போலும்' என்று குறிப்பா யுணர்த்தியுள்ளமை யானும், இது தெளிவாய் விளங்குகின்றது.

1902-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் ஐந்தாம் நாள் ஆசிரியரது இரண்டாம் புதல்வர் பிறந்தனர்; விசாக நட்சத்திரத்திற் பிறந்த காரணத்தால் இவருக்கு 'சுவாமிநாதன்' என்று பெயரிட்டனர். ஆகவே ஆசிரியர் தம் மனையறம் ஒரு புதல்வியையும் இரு புதல்வர்களையும் கொண்டிலங்கியது. 'மனவமைதி' யையே பெரும் பண்பாகக் கருதிவந்த ஆசிரியர் தம் இல்லம் அமைதியோடு மகிழ்ச்சி குலவும் கோயிலெனத் திகழ்ந்ததெனில் அது மிகையேயன்று.

ஆசிரியரது நெருங்கிய நண்பர்களில் ஒருவராயிருந்தவர் பண்டிதை அசலாம்பிகை யம்மையார் என்பவர். இவர்

திண்டிவனம் தாலுகாவைச் சார்ந்த இரட்டணை என்னும் ஊரினர்; வேதியகுலத்தைச் சார்ந்தவர். இவர் தந்தை யார் பெயர் 'பெருமாள் ஐயர்' என்பது. அசலாம்பிகை யம்மையார் 'திருவிடையூர்த் தலபுராணம்—முதற் பகுதி, காந்தி புராணம், திலகர் மான்மியம்' முதலிய நூல்களை யியற்றியவர்; உண்மையாகத் தமிழைப் படித்தவர்; நன்றாகச் செய்யுளியற்றுந் தன்மையர்; சொற்பொழி வாற்றும் கலை முழுதும் கைவந்தவர். திரு வி. கல்யாண சுந்தர முதலியாரால் 'தற்கால ஒளவையார்' என்று புகழப்பட்டவர். இவர் தமது தந்தையாரையிழந்து வருந்தி நின்றபோது, சாஸ்திரியார் அவருக்கு எழுதி யனுப்பிய 'பரிந்துரை'ச் செய்யுட்கள் ஏழும் பாவலர் விருந்தில் 'பரிந்துரை' என்னும் பன்னிரண்டாம் பகுதியிற் காணப்படுவனவாம்.

அக்காலத்தில் நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் எழுது வதையே தமது பொழுதுபோக்காகக் கொண்டிருந்த சில புலவர்கள் உண்டு. நமது சாஸ்திரியாரோ பெரும்பாலும் அந்த வேலைக்குப் போவதில்லை. ஆயினும் சில நூல்களுக் குச் சிறப்புப்பாயிரம் செய்துள்ளனர். அவை எல்லாம் நீண்டுபோகும் ஆசிரியப் பாக்களாக அமையாது சிறு சிறு செய்யுட்களாகவே இயற்றப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரி யது. மதுரைச் சபாபதி முதலியார் மறைசையந்தாதிக் கொரு உரை எழுதி வெளியிட்டனர். அதற்குத் தமது ஆசிரியராயிற்றே என்று ஒரு சிறப்புப்பாயிரம் எழுதிக் கொடுத்தனர்; அது வருமாறு:

'செந்தமிழ்க்கு வரம்பான தென்னிலங்கைத்
தீவா னல்லைச் சின்னத்தம்பி
தந்த திருமா மறைசை யந்தாதி
தனக் கொருரை சாற்றி னுைல்
விந்தை குடிவந்த சபாபதி மதுரை
வியனகரான் விரியச் செய்தென்

சிந்தை யுறைவோன் புலவர் செவிக்கமிழ்
தஞ்சுவைக் குமின்பந் தெவிட்டமாதோ.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றிய சேயூர் முருகன் பிள்ளைத் தமிழைப் பதிப்பித்த கல்குளம் குப்புசாமி முதலியாருக்காக, தமது நண்பராயிற்றே என்று சொல்லி யவை.

'சந்த மிக்குறழ் செந்தமிழ்த்திறல் சான் ஞெளிர்ந்
தந்த கப்பல நூல்கள்கூறியவ ண்ணலா
மந்த கக்கவி வீரராக வஞர்செயூர்க்
கந்த னுக்கொரு வண்பிளைக்கவி கண்டனன்.'

'அன்ன நூலை யன்பொடாய்தந் தச்சினி
னன்னர் யாரு மேற்றுவப்ப நாட்டினன்
பன்னு கல்வி செல்வனுற்ற பண்பிஞன்
மின்னு நம்பி குப்புசாமி வேளரோ.'

ஆசிரியரது நெருங்கிய நண்பரான, தி. அ. சாமிநாதய்யர் என்பவர் இயற்றிய 'வண்ண வைத்திய சாஸ்திர'த்துக்குச் சிறப்புப்பாயிரமாக இரு செய்யுட்கள் எழுதித் தந்தனர்; அவை கீழ்க்கண்டவையாம் :

'பூமகள் பொலியும் திருவை யாறதன்கட்
புனிதமா ரனந்தைய னீன்ற
பாமரு சாமி நாதவேட் சுகுணன்
பன்மொழி பயின்றநற் பனவன்
மாமகிழ் வெய்தி மதிகொடு வண்ண
வைத்திய நூலினை வகுத்தான்
பாமரர் கலைஞர் யாவரும் படித்துப்
பயன்பெற்றுச் சுகமுற மாதோ.

'என்னை மனங்களி மேவுபு கேண்மி
னெனின்றமிழ் நாட்டினர்காள்
மன்னுறு வண்டமிழ் மாமொழி யிற்பல
வாகட நூல்களுளே

நன்ன ரியற்றிய வண்ண வயித்திய
நாம முறுந்தனி நூ
லின்ன லொழித்திடு மின்ப மளித்திடு
மேரும் விளைத்திடுமே.'

இவையன்றி, சேலம் மாணிக்க முதலியார் என்பவர் இயற்றிய 'சங்கீத சந்திரிகை' என்னும் இசை நூலுக்கும், சுதேசமித்திரன் உதவி ஆசிரியராயிருந்த கோபால கிருஷ்ண ஐயர் என்பவர் இயற்றிய 'குணசீலன்' என்னும் நவீனகத்திற்கும் உரை நடையில் முகவுரையும் எழுதி யுள்ளனர். இவற்றில் 'சங்கீத சந்திரிகை' முகவுரை யிறுதியில்,

'அஞ்ஞான்று பாற்கடன்மால் கடைந்தபொழு
தெழுந்தமதி யடைவின் வானோர்
நஞ்ஞாலத் துள்ளார்க ளெவ்வெவர்க்கு
மின்பவொளி நல்கு மாபோ
லிஞ்ஞான்று மாணிக்க வள்ள
லிசைக் கடல்கடைய வினிதெழுந்து
சுஞ்ஞான வொளிபரப்பிச் சங்கீத
சந்திரிகை துலங்கிற் றம்மா.'

உடல் நலம் பெறுவதற்காகப் பல திருப்பதிகளுக்கும் ஆசிரியர் சென்று இறைவழிபாடு செய்து வந்தனர் என்று முன்பே குறித்துள்ளோம். 1902-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் தேதி திருப்பாதிரிப்புலியூரின்கண் ஈசனைக் கண்டு வணங்கிப் பாடியவை :

'மாதி னூடலை மாற்றிய சென்றருள்
தூதனாகிய தோன்றாத் துணைவனைத்
தீது நீத்தருள் செங்கைத் தினத்தனைப்
பாதி ரிப்புலியூ ரின்கட் பார்த் தெமால்'

'பார்த்த போழ்தினே பாவங்கள் பாறின,
கூர்த்த புந்தியும் கொண்ட தெந்தேவனை,
ஆர்த்தெ ழும்பு மிருமலு மழிந்ததால்
ஈர்த்த வன்செய ருளியலென் கொலோ.'

இதற்கு முன் தினம் திருவஹீந்திர புரத்தில் எழுந்தருளி யுள்ள தேவநாதப் பெருமானைத் தரிசித்து மனங்கனிந்து பாடியது :

'காவி நேர்விழிக் கமலையின் கேள்வனைக்
கரிசறு மடியார்க்குள்
ஆவி யாகிநின் றொளிர்தருஞ் சோதியை
யாரமிழ் தனையானைத்
தேவ நாதனைத் திருவஹீந் திரபுரந்
தெரிசனம் செய்தேனால் ;
மூவ ராய்நின்ற முதல்வனை னிருமலை
முதலறக் களைந்தானே.'

இதனால் ஆசிரியர் தீவிர சைவராயிருப்பினும், சமயப் பூசலில் தலையிட்டுக்கொண்டு பிற சமயக் கடவுட் பழிப்பையே தொழிலாகக் கொண்டிருப்பார் சிலரைப் போலாது சமமதக் கோட்பாட்டோடு விளங்கியவர் என்பது விளங்கும்.

ஆசிரியர், தாம் இருமல் நோயால் வருந்திய பொழுது, அவரது தந்தையாராகிய கோவிந்த சிவனார் தங் கட்டளையைச் சிரமேற் கொண்டு திருப்பரங்குன்றத்தில் நாற்பத்தைந்து நாள் தங்கியிருந்த காலத்தில், அப்பிணியினை நீக்கியருள ஞானபண்டிதனாகிய திருப்பரங்கிரிக் குமரனைப் பாடிய 'பண்டித நாட்ட'ச் செய்யுட்கள் பதினொன்றும் ; இவை பாவலர் விருந்தில் இறுதிப் பகுதியாகச் சேர்க்கப் பட்டவையாம் : இச் செய்யுட்களைப் படித்து உளமுருகாதார் யாருமே யிரார் என்பது திண்ணம். நக்கீரதேவர் முருகாற்றுப்படை பாடிப் பெற்றவாறு தாமும் அருள்பெற வேண்டி, 'உலகமுவப்ப' என்று தொடங்கித் தமது பண்டித நாட்டச் செய்யுட்களையும் இயற்றியுள்ளனர்.

கல்லூரியில் மேற்கொண்டு பாடம் சொல்ல உடல் நிலை இடம் கொடாது என்பதை யுணர்ந்த ஆசிரியர் 1903-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஆறுமாதத்திற்கு

ஓய்வு எடுத்துக்கொண்டனர். கல்லூரியினின்றும் ஓய்வு எடுத்துக்கொண்டதால், என்ன? ஆசிரியர் தமிழ்ப் பணியியற்றுதல் ஓய்ந்தபாடில்லை. பூரணலிங்கம் பிள்ளையவர்களும், சாஸ்திரியாரும், ஒருவர் தமிழ் இலக்கிய வரலாறு இயற்றுவது என்றும் மற்றொருவர் தமிழ்மொழி வரலாறு இயற்றுவது என்றும் தமக்குள் செய்துகொண்டிருந்த ஏற்பாட்டின்படி, பிள்ளையவர்கள் இலக்கிய வரலாறு இயற்றி வந்தனர்; அந்நூலைப் பிறகு சாஸ்திரியாருக்கே உரிமை செய்தனர். சாஸ்திரியார் மொழி வரலாற்றிற்கான ஆராய்ச்சியைச் செய்துவந்தனர். இவர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த காலத்தில் இவரது 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் ஆராய்ச்சி நூல் வெளியாயிற்று. இவ்வொரு நூலே எவ்வளவு பெரிய ஆசிரியருக்கும் நிலையான புகழ் தேடிக் கொடுக்கப் போதுமானது.

எத்துணைதான் உடல் நலம் குன்றியிருப்பினும், தமிழாராய்ச்சி முதலானவை இறுதிவரையில் தடையின்றி நடந்து வந்தன.

---

## அத்தியாயம் 7

## இயற்றமிழ் மாணவர்

கல்லூரியில் மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பதோடு, தமிழறிவு இயல்பாகவே வாய்த்திருக்கக் கூடிய சில பொறுக்கான மாணவர்களைத் தமது இல்லத்திற்கு அழைத்து வரன் முறையாக ஆசிரியர் பாடஞ் சொல்லிவந்தார் என்று முன்பே கூறப்பட்டது. இவ்வாறு மனையிற்பாடங்கேட்டமாணவர்கள் பன்னிருவர். இவர்கள் இயற்றமிழ், நாடகத் தமிழ் ஆகிய இரு தமிழிலும் பாடம் கேட்டனராயினும், பெரும்பான்மை பற்றி, 'இயற்றமிழ் மாணவர்கள்' என்று பெயரிட்டு வழங்கினர் ஆசிரியரும் பிறரும். இவர்கள்: (1) ந. பலராம ஐயர்; (2) பிரண

தார்த்திஹர சிவனார் ; (3) சலசலோசனச் செட்டியார் ; (4) சருக்கை, ராமசாமி ஐயங்கார் ; (5) சித்தூர், சுப்பிர மணிய ஆசாரியார் ; (6) செய்யூர், முத்தையா முதலி யார் ; (7) கு. ரா. ஸ்ரீனிவாச ஐயங்கார் ; (8) சருக்கை, சுந்தராச்சாரியார் ; (9) சருக்கை, வரதாச்சாரியார் ; (10) ஜக்கராஜு, பி. வாசுதேவைய பந்துலுகாரு ; (11) வ. சு. சண்முகம் பிள்ளை ; (12) சி. நா. சரவணமுதலி யார், என்னும் பன்னிருவரே. இவ்வியற்றமிழ் மாணவர் களுக்கு அடிக்கடி தாமே பரீட்சைகள் நடாத்தி அப் பரீட்சைகளில் நல்ல முறையில் தேர்பவர்களுக்குப் பரிசு களும் அளித்து வந்தனர். இவர்களே ஆசிரியரது அரிய இலக்கியக் கருத்துக்களையும் அழகிய இலக் கிய மரபினையும் பிற்காலத்தில் அழிந்துபடாது காத் துப் பெரும்பணி புரிந்தவர்கள். இவர்கள் கல்லூரி யிலேயே ஆசிரியரது தமிழ்ப்பாடஞ் சொல்லும் முறை யில் ஈடுபட்டவர்கள் ; ஆகவே முதலிலிருந்து முறையே தமிழை அவரிடம் பாடம் கேட்கும் ஆவலோடு அவரை அண்மியவர்கள்; நாலடியாரிலிருந்து முருகாற்றுப் படை ஈறாக, நன்னூல் தொட்டுத் தொல்காப்பியம் முடிய முற்கால இலக்கியத்தோடு தற்கால இலக்கியத்தையும் மேனாட்டு ஆராய்ச்சிக் கண்கொண்டு ஆராய விரும்பி அவ் வாறே ஆராய்ந்தவர்கள்.

ஆசிரியர் இவர்களுக்குப் பாடஞ் சொல்லும் முறையே வேறு ; எந்த வரன்முறைக்கும், எந்த வரையறைக்கும் அது அடங்காதது. பல நூல்கள் ஒரே சமயத்தில் பாடம் சொல்லப்படும் ; இலக்கணப் பாடம் நடக்கும்போது இலக்கியமும் கலந்து நடக்கும் ; சிறு நூல்கள் பெரு நூல் களைக் கொண்டு விளக்கப்படும். பழைய நூல்களை யாராயும்போதே புதுநூல்கள் இயற்றவும் பெறும். ஆசிரி யர் இயற்றும் நூல்களை மாணவர்கள் மேற்பார்வை யிடுவர் ; மாணவர்கள் இயற்றும் நூல்களை ஆசிரியர் மேற்

பார்வையிடுவர்; ஆசிரியர், மாணவரியற்றிய நூல்களை இன்புற்றுப் படித்து அச்சிற் பதிப்பிப்பார். ஆராய்ச்சி, பாடஞ் சொல்லுதல், ஏடு பெயர்த்தெழுதல், பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதல், புது நூல்கள் இயற்றுதல் ஆகிய எவ்வகை இலக்கியத் துறையிலும் ஓய்வு ஒழிவின்றி ஆசிரியரும் இயற்றமிழ் மாணவர்களும் உழைத்து வந்தனர்; மாணவர்கள் ஆசிரியரோடு போட்டி போட்டுக் கொண்டு நூல்களை இயற்றினர்.

ஆசிரியர் மாணவர் என்ற உறவு இவர்களிடத்தில் புது முறையில் அமைந்து கிடந்தது. இவர் இல்லத்தில் (1) 'கலை மயில் கலாபம்' விரித்தாடியது; (2) 'நாமகள் சிலம்பு'ம், (3) 'தமிழ் மகள் மேகலை'யும், (4) 'ஞான தரங்கிணி' என்னும் (5) 'இன்பவல்லி'யின் தமிழ் நடனத்திற்கு இன்னிசைசெய்து அழகு செய்தன; ஆசிரியர் மனையே ஒரு (6) 'கலாநிதி' என்னத் தக்கதாயிருந்தது.

இவ்வாறு ஓருயிர் பல உடல்களாகப் பரந்தாமன் கோபியரோடு விளையாடியது போல், பரிதிமாலும் தன் ஒருயிரே பதின் மூன்றுடலாய்த்திகழ்ந்து தமிழ் மகளோடு குலவி விளையாடி அவளுக்குப் புத்துயிரும் அளித்தனர்.

இவ்வருமை இயற்றமிழ் மாணவர்களுள் தலை சிறந்தவரும், ஆசிரியரோடு பெரும் பான்மை பாடங்கேட்டவரும் ஆரா அன்பு பூண்டவரும் ந. பலராம ஐயரவர்களே.

1. **ந. பலராம ஐயர்:** இவர் கடலூரைச் சேர்ந்தவர்; மேற் படிப்பை முன்னிட்டுச் சென்னைக்குப் போந்து கிருத்துவக் கல்லூரியில் சேர்ந்தனர். அப்பொழுதே கணிதத்திலும் தமிழிலும் மிகவும் கூரிய அறிவு படைத்திருந்தனர். கல்லூரியில் ஆசிரியர் சூரிய நாராயண சாஸ்திரியாரோடு தொடர்பு ஏற்படவே, அதன் பயனாகத்

---

1, 2. 3, 4, 5, 6—இவை ஆசிரியரும் இயற்றமிழ் மாணவரும் இயற்றிய நூற்றொகுதிகளின் பெயர்கள்.

தமிழாராய்ச்சியையே வாழ்க்கைப் பயனும் இன்பமுமாகக் கொண்டனர்; ஆசிரியரோடு மிக நெருங்கிப் பழகி அன்னாரது தமிழறிவை முற்றிலும் பெற்றுக்கொண்டனர்; சிறுவயதிலேயே செய்யுள் இயற்றும் வன்மையையும், உரை நடை எழுதும் திறனையும், சொற்பொழிவாற்றும் சக்தியையும் ஒருங்கே பெற்று விளங்கினவர். ஆசிரியரிடம் பாடம் கேட்க இயலாதவர்கள் இவரிடம் பாடம் கேட்டலையே அதற்குச் சமமாகக் கருதிவந்தனர். ஆசிரியர் பெரியகுளம் சென்றிருந்த காலத்தில், அவரது பிரிவாற்றுவது இவர் எழுதிவிடுத்த நடுவெழுத்தலங்காரச் செய்யுளும், சென்னைக் கடற்கரையில் ஆசிரியரும் இவரும் ஒருநாள் உலவிக் கொண்டிருந்தபோது தற்செயலாக ஊழைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க அச்சமயம் இவர் கூறிய

'ஓவாது நீமகிழ்த லூற்றுணர்ந்து மாகடலே
ஆவா அநேக ரருந்துயர்க்கா—ளாவாரால்
தேவாதி தேவன் திருமறையின் பண்பறியார்
சாவார்பார் தீதென்று தாம்'

என்னும் வெண்பாவும் இவர் செய்யுளியற்றும் திறனுக்குச் சான்று பகரும். இவர் இனிமையாகச் செய்யுட்களை இசையோடு பாடுவர்; ஒருமுறை இவரிடம் நூல்களைப் பாடம் கேட்டவர்கள் அதை எக்காலத்தும் மறவார். இவர் கடலூர்க் கலாசாலையிலும், காரைக்குடிக் கலாசாலையிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழாசிரியர் பணிசெய்துவந்தனர். இவர் இயற்றிய நூல்கள்: தசரதன் தவறு, வல்லீபரிணயம், மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நாடகங்களும், தாமரைநாண்மலர், யௌவனாம்பிகை பிள்ளைத் தமிழ் என்னும் செய்யுள் நூல்களும், சூளாமணி வசனம், சிலப்பதிகாரக் கதை, ஆத்திசூடி, நீதிக்கதைகள், தசகுமார சரித்திரம் முதலிய உரை நடை நூல்களுமாம்.

இவரைப் பற்றிச் சாஸ்திரியார் கூறுங்கால், 'எற்கினிய பன்னரும் பல நூல்களிற் பயின்ற மாணவன்' 'எனதன் புடைய மாணவன்', 'எற்கிசைந்த மாணவன்' என்று பலவகையாகப் புகழ்ந்துள்ளனர். இவர் இயற்றிய 'தசரதன் தவறு' 'தாமரை நாண்மலர்' என்னும் இரு நூல்களையும் பரிதிமாற்கலைஞரே அச்சிட்டுள்ளனர். ஆசிரிய வணக்கமாகச் சாஸ்திரியார் மீது ஐயரவர்கள் பாடியுள்ள செய்யுள்கள் எண்ணிறந்தவை. ஆசிரியர் நோய்வாய்ப் பட்டிருந்தபோது, ஆற்றுமை மிகுதியாலும், ஆசிரியர் நோய் தீர்ந்து நலமடைய வேண்டும் என்னும் பேரவாவாலும் நாடோறும் இறைவனைப் பரவிவந்ததோடு, புள்ளிருக்கு வேளூர் முருகனை வேண்டிக் குறையிரந்து இவர் பாடிய இனிய செய்யுட்கள் 'தாமரை நாண் மல'ரில் காணப்படுவனவாம்.

பிற்காலத்தில், ஆசிரியர் இயற்றிய நூல்களை உலகத்தோர் நன்குணர்ந்து பயனெய்துமாறு விளக்கஉரைஎழுதி உதவியவர் இவரே. இவ்வாறு இவர் எழுதியுதவிய உரைகளுள் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது 'நாடகவிய' லுரையாகும். ஆசிரியரோடு இவர் உடனுறைந்து பழகிய கேண்மை, இவ்வுரையைப் படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். இவர் 1943-ம்ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தனர். எந்தையாராகிய இவ்வையவர்கள் எழுதிவைத்திருந்த குறிப்புக்கள், அவர் நேரிற் கூறியுள்ள பல வரலாறுகள் ஆகியவற்றின் உதவியாலேயேதான் யான் இவ் வரலாற்றினை ஒருவாறு எழுத இயன்றது.

**2. பிரணதார்த்திஹர சிவனர்:** இவர் புதுக்கோட்டையைச் சேர்ந்தவர்; அந்தணர். புதுக்கோட்டையிலும் கும்பகோணத்திலும் கல்விபயின்று சென்னைக்குப் போந்து கிருத்துவக் கல்லூரியில் அறிவும் பொறையும் குடிகொண்ட ரெவரெண்ட் கூப்பர் துரையிடத்தில் தத்துவ சாத்திரம் பயின்றனர். இவர் தொண்டைமண்டல துளுவ

வேளாளர் உயர்தரக் கலாசாலையின் தமிழாசிரியரா யிருந்தனர். சின்னாள் கடலூர் சுதேசக்கலாசாலைத் தலைமை யாசிரியராகவும் இருந்தனர். இவர் சினமென்னும் குன்றேறி நில்லாக் குணவானாகையால் மாணவர்களால் மிக நன்கு மதிக்கப்பட்டவர்.

தமிழில் நல்ல ஆர்வமும் அறிவும் பெற்றிருந்த இவர் சாஸ்திரியாரையே தமக்கேற்ற குருவாகக் கொண்டனர். ஞானபோதினி என்னும் மாதாந்தப் பத்திரிகை வாயிலாக, இவர் இயற்றிவெளியிட்ட 'சிலப்பதிகார ஆராய்ச்சி' மிகவும் உயர்ந்த முறையிற் செய்யப்பட்ட ஒரு இலக்கிய ஆராய்ச்சியாம் ; இவர் அவ்வாராய்ச்சியில் கண்டுள்ள பல முடிபுகளையும் யாவரும் ஒத்துக்கொள்ளாவிடினும், இவர் மேற்கொண்ட ஆராய்ச்சி முறை போற்றற்குரியது. இவர் இயற்றிய நூல்கள் : 'அநுமான் சிங்கின் சரித்திரம் அல்லது கொலை களவுத்திறவுகோல்' என்னும் துப்பறியும் கதைகள் ; வியாசமஞ்சரி என்னும் உரைநடை நூல்; காமாட்சி அல்லது ஒரு கைம்பெண்ணின் கதை என்னும் அரிய சீர்திருத்தக் கதை ; தமயந்தி நாடகம் என்னும் அழகிய நாடகநூல் ஒன்று. இந்நூல்களில் எல்லாம் சிறந்தது தமயந்தி நாடகமாம். இவர் இந்நாடகத்தைக் 'கற்றறி மகளிர்'க்கு உரிமை செய்துளதிலிருந்து, இவர் தம் முற்போக்கான கொள்கை விளங்கும்.

3. **சலசலோசனச் செட்டியார் :** இவர், திருவிடை மருதூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்றக் கலம்பகம் முதலிய நூல்களியற்றிய திருவெவ்வளூர் ராமசாமிச் செட்டியாரவர்களின் புதல்வர். ஆசிரியரிடம் பேரன்பு பூண்டவர். இவர் இயற்றிய நூல்கள் சரசாங்கி, சாவித்திரி சரிதை, விநாயகர் பதிகம் முதலியன. இவற்றுள் 'சரசாங்கி' ஷேக்ஸ்பியர் இயற்றிய 'ஸிம்பலின்' (Cymbeline) என்னும் நாடகத்தைத் தழுவித் தமிழ் நடைக்கேற்பச் செவ்விதாகப் புனைந்து எழுதப்பட்டது. இச் சரசாங்கி நாடகம்

1900-ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகப் பரீட்சைக்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்தது. நூல் அச்சேறி வெளி வரும் முன்பே இவர் பொய்யுடலை நீத்து விட்டனர். பெரும் புலவருக்குப் புதல்வராய்ப் பிறந்து பெரும் புலவருடைய சிறப்புடைய மாணவனாய்த் திகழ்ந்து தாமும் புலமையிற் றலைநின்ற இவர் இளம் பிராயத்திலேயே காலமானது விதியின் விளையாட்டென்றே கூற வேண்டும்.

இவர் இறந்தபோது ஆசிரியர் வருத்த மிகுதியாற் கையறு நிலையாக ஐந்து செய்யுட்கள் இயற்றினர்; 'இயற்றமிழ் மாணவர் தம் கண்' என்று இவரைப்பற்றிக் கூறுகின்றனர் ஆசிரியர். இச்செட்டியார் 1897-ஆம் ஆண்டு காலகதியடைந்தனர்.

4. **சருக்கை, ராமசாமி ஐயங்கார்:** இவர் பல அரிய தமிழ் நூல்களை இயற்றியவர். 'சுகுண சுகேசர் அல்லது நட்பும் காதலும்' என்னும் ஐந்து அங்க நாடகம் ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் இயற்றியுள்ள Two Gentlemen of Verona என்னும் நாடகத்தைத் தழுவியது. இவர் கமலினி, உஷாபரிணயம், கட்டுரைத் தொகுதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளனர், இவற்றில் 'உஷாபரிணயம்' என்னும் நாடகம் 'நாட்டிய ராசகம்' என்னும் நாடகவகையைச் சார்ந்தது. 'புஷ்பபாண விலாசம்' என்னும் உவகைச் சுவை மிகுந்த நூலை வடமொழியினின்றும் தமிழாக்கினர். இது சாஸ்திரியாரால், தமிழ் மகள் மேகலை ஐந்தாம் கிங்கிணியாகப் பதிப்பிக்கப்பட்டது. இவர் 'இந்துமதி அல்லது கற்பரசி' என்னும் ஆறங்க நாடகம் ஒன்றும் இயற்றினர். இது 'நாமகள் சிலம்பு' ஆறும்பரலாக ஆசிரியரால் பதிப்பிக்கப்பட்டது. இவர் காளிதாசனால் இயற்றப்பட்ட 'விக்ரமோர்வசி' என்னும் வடமொழி நாடகத்தைத் தமிழ்ப்படுத்தி 'ஞானபோதினி' வாயிலாக வெளியிட்டனர்.

5. **சுப்ரமணிய ஆசாரியார் :** இவர் சர்ச் ஆப் ஸ்காட்லாந்து மிஷன் (Church of Scotland Mission) கலாசாலைப் போதகாசிரியராக இருந்தனர். இவர் விஞ்ஞானம் பற்றிய பொருள்களைப்பற்றி எழுதுவதில் தேர்ந்தவர்; அத்துறையில் ஆராய்ச்சியும் உடையர். சாஸ்திரியார் இவர் மூலம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தாருக்கு நவக்கிரகத்தைப்பற்றிய நூலொன்று இயற்றித் தருவதாக ஒப்புக்கொண்டனர்; ஆயினும் ஆசிரியர் காலமாய் விட்டதால், இது நிறைவேறவில்லை.

ஆசாரியார் '**ஔவையா**'ரைப்பற்றிப் பெரியதொரு ஆராய்ச்சி செய்துள்ளனர். ஔவையார் இருவர் என்னும்கொள்கைக்கு ஆதாரமாக இவர் எடுத்துக்காட்டுவன தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்காரர்களுக்கு மிகவும் பயன் படுவன. இவர் 'வியாபார நீதி' என்பதொரு நூலையும் 'பழிக்குப் பழி' என்னும் பிரஸ்தானவகை நாடகமொன்றையும் எழுதியுள்ளனர். 'பழிக்குப்பழி' இரண்டங்கமுள்ளது. இவர் இயற்றியுள்ள நூல்களைப் பார்க்குமிடத்து இவருக்குக் கல்வியிற் பல துறைகளிலுமிருந்த ஆர்வமும் ஆற்றலும் தெளிவுற விளங்கும்.

6. **முத்தையா முதலியார் :** இவர் செய்யூர் முத்தையா முதலியார் எனவும் படுவர். பெஸண்டம்மையார் இயற்றிய 'ஸ்ரீ ராமச்சந்திரா' என்னும் ஆங்கில நூலைத் தழுவி 'இராமாயணசாரம்' என்னும் கட்டுரைகளை 'ஞானபோதினி' வாயிலாக வெளியிட்டு வந்தனர். அரிய செய்யுட்களை அழகாக எழுதும் வன்மையுடையவர். இவரும் கிருத்துவக் கல்லூரியிலேயே பயின்றவர்; ஆசிரியரது தொடர்பேற்படவே, அது அவரிடம் நெடுங்கலை கற்க ஏதுவாயிற்று.

7. **கு. ரா. சீனிவாச ஐயங்கார் :** இவர் 'வித்தியாரண்ய நகரம், ப்ரிதுலை, நன்றியரியா மகன்', என்னும் நூல்களை இயற்றியர்; 'அபிநவ பத்திரிகை' என்னும் பத்திரிகை

யை ராமாநுஜாசாரியார் என்பாரோடு சேர்ந்து பத்திராதிபராயிருந்து நடாத்தி வந்தனர். இவர் நூல்களிற் பெரும்பான்மை ஆசிரியரால் பதிப்பிக்கப்பட்டவை. டி. ஏ. சீனிவாச ஐயங்கார் என்பவரோடு சேர்ந்து 'மிருச்ச கடிகை' என்னும் பிரகசன சாதி நாடகத்தை மொழிபெயர்த்தனர்.

8. **சருக்கை, சுந்தராச்சாரியார்:** இவர் ஆராய்ச்சி முறையில் இலக்கியத்தைப் பயின்றவர். 'ஞான போதினி' யில் இவர் எழுதிய 'ஸ்ரீ ராமர் வாலியைக்கொன்றது நியாயமா?' என்னும் கட்டுரை இவரது இலக்கிய ஆராய்ச்சி முறையை ஒருவாறு புலப்படுத்தும். பழமையிற் கட்டுண்டு நின்று மேனாட்டு முறையில் இலக்கிய ஆராய்ச்சி செய்யத் தமிழறிஞர்கள் இன்றைக்கும் துணிய்வில்லை என்பதை நோக்கச் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நேர்மையான இலக்கிய ஆராய்ச்சி சிலர் செய்தனர் என்பது மகிழ்ச்சிக்கு ஏதுவாகும். 'தற்பயிற்சி, வாழ்க்கைப் பயன்' முதலிய கட்டுரை நூல்களை ஆங்கிலத்தினின்றும் மொழிபெயர்த்தெழுதினர். உலோபி மகன், இவ்விரவும் விடியுமா? முதலிய செந்தமிழ்க் கதைகளையும் இயற்றினர். இந்நூல்களும் ஆசிரியர் சூரியநாராயண சாஸ்திரியாரால் பதிப்பிக்கப்பட்டனவேயாம்.

இவர் சென்னைத் தொழில் இலாகா உதவிக் கமிஷனராகப் பலகாலம் வேலைபார்த்துச் சில ஆண்டுகளுக்கு முன் காலமானார். இவருடைய இளைய சகோதரரே சருக்கை வரதாச்சாரியர்.

9. **சருக்கை, வரதாச்சாரியார்:** இவர் மனோதத்துவ சாத்திரக் கருத்துக்களை விளக்கி எழுதும் இயல்பினர்; 'பொழுது போக்கு' முதலிய அழகிய கட்டுரைகளை 'ஞானபோதினி' யில் வெளியிட்டுள்ளனர். 'ஜோதி மாலை' என்னும் நாடகம் இவர் இயற்றியுள்ள நூல்களில் தலைசிறந்தது; இது நாடிகை என்னும் சாதியைச்

சேர்ந்தது. இவர் பிற்காலத்தில் தமிழ்த் துறையினின்றும் விலகி அரசாங்க அலுவலான ஜில்லா நீதிபதி வேலை மேற்கொண்டு சென்றுவிட்டமையால் இவரது தமிழாராய்ச்சி ஓரளவோடு தடைப்பட்டு நின்றுவிட்டது எனலாம்.

10. **ஜக்கராஜு பி. வாசுதேவய்ய பந்துலுகாரு :** இவர் ஆந்திரப் பிராம்மணர். ஆந்திரராயிருந்தும் தமிழில் ஆர்வம் காட்டி ஆசிரியரது இயற்றமிழ் மாணவர்களில் ஒருவரானது பரிதிமாற்கலைஞருடைய பெருமையேயாகும். அழகிய உரைநடையும், இனிய செய்யுள் நடையும் கைவந்தவர். Curtain Lectures என்னும் ஆங்கில நூலின் மொழி பெயர்ப்பாகப் 'பள்ளியறைப் பிரசங்கங்கள்' என்று சில வெளியிட்டனர். இவையும் 'ஞான போதினி' யிற் பிரசுரிக்கப்பட்டவையே. இவரும் ஆசிரியர் இயற்றிய 'மணியசிவனார் சரித்திர'த்திற்குச் சிறப்புப்பாயிரம் எழுதியுள்ளனர். அவரது செய்யுள் நடை மிகவும் இனிமை வாய்ந்தது.

இவரும் ஆசிரியர் இறந்தபிறகு தமிழில் ஊக்கங்குன்றி ஆக்கங்கன்றிச் சென்னையை விட்டேகி, ஹைதராபாத் நிஜாம் ரயில்வே தலைமைக் காரியாலயத்தில் மானேஜர் வேலை பார்த்து வந்தார். பின்பு ஓய்வெடுத்துக்கொண்டு அங்கேயே தங்கிவிட்டனர்.

11. **வ. சு. சண்முகம் பிள்ளை :** 'திருப்புகழ்' முதற் பதிப்பைத் திருத்தமான முறையில் பதிப்பித்த வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்களின் முதற் குமாரர். இவர் ஆசிரியரிடம் வரன்முறையாகத் தமிழைப் படித்தவர். முருகனிடம் ஆறாத அன்பு பூண்டவர். இவர் அரசாங்க அலுவலை மேற்கொண்டு ஜில்லா முன்சீபாக இருந்து சில்லாண்டுகளுக்கு முன் ஓய்வெடுத்துக் கொண்டனர். இவர் சமீப காலத்தில் காலகதியடைந்தனர். இவருடன் பிறந்தவரான வ. சு. செங்கல்வராய பிள்ளை

என்பாரும் ஓரோரமயம் ஆசிரியரிடம் தமிழ்ப் பாடம் கேட்டனராயினும் இயற்றமிழ் மாணவர்களில் ஒருவரல்லர். இவ்விருவரும் ஆசிரியர்பால் என்றும் குறையாத அன்பு பாராட்டியவர்கள். செங்கல்வராயபிள்ளை ஆசிரியர் இறந்த சமயம் அவரைப் பிரிந்த வருத்தத்தைச் சில செய்யுட்களால் 'குவளைக்கோ' என்ற புனை பெயருடன் வெளியிட்டனர்.

12. கி. நா. சரவணமுதலியார்: இவர் மனையிலேயே ஆசிரியர் சென்னையில் இருந்தபோது சிலகாலம் வசித்து வந்தனர் என்பது முன்பே குறிப்பிடப்பட்டது. இவருடைய தகப்பனார்தான் செங்கல்வராய முதலியாரெனப் படுபவர். இவர் சிறு பிராயம் முதல் ஆசிரியரோடு நெருங்கிப் பழகும் பேறுபெற்றிருந்தனர். ஆதலால், இவருக்குத் தமிழில் தெளிந்த அறிவு ஏற்பட்டிருந்தது.

இவர் பச்சையப்பன் கலாசாலையில் படித்துவந்த போது தமிழை வரன்முறையாக யாரிடமேனும் பாடங் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று விரும்பினர்; அதற்கேற்ப, அக்காலத்தில் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியராயும், சென்னையில் பெரும்புலவராயுமிருந்த திருமயிலை சண்முகம் பிள்ளையவர்களை அணுகித் தனது உட்கோளைத் தெரிவித்துக்கொண்டனர். பிள்ளையவர்கள் சரவணமுதலியாரது தமிழார்வத்தை யுணர்ந்து, "நீ தமிழை வரன்முறையாகக் கற்கவிரும்புவது கண்டு மிக மகிழ்கின்றேன்; ஆயினும் தமிழ் இலக்கணம் ஒன்றே நல்ல முறையிற் பாடஞ்சொல்லவல்ல என்னைவிடத் தமிழ், ஆங்கிலம் முதலிய எல்லாப் பாடங்களையும் அழகாகப் போதிக்கக் கூடிய ஒரு ஆசிரியரிடம் நீ கல்வி பயின்றால் மிக நல்லது என்று கருதுகிறேன். அவ்வாறு பாடம் சொல்லக்கூடியவர் கிருத்துவக் கல்லூரித் தமிழ் ஆசிரியர் சூரியநாராயண சாஸ்திரியார் ஒருவரே. அவரையண்மி நீ பாடம் கேட்டுக்கொள்" என்று கூறிவிட்டனர்

இதைக் கேட்ட முதலியாரும் சாஸ்திரியாரை அடைந்து தனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டனர். சாஸ்திரியார் தமக்கு ஒரு சிறிதும் அவகாசமில்லை என்று கூறி விட்டனர். சரவண முதலியாரோ தமது மனைக்குத் திரும்பாமல் அன்று இரவு வெகு நேரம்வரையில் சாஸ்திரியார் மனையிலேயே தங்கிவிட்டனர்; 'நீர் ஏன் இங்கேயே இருந்துவிட்டீர்? உமது மனைக்குச் செல்லவேண்டாவோ?' என்று வினவிய சாஸ்திரியாரிடம் முதலியார், 'எனக்குத் தமிழைத் தருவதாகத் தாங்கள் வாக்குறுதி கொடுத்தாலல்லது நான் இவ்விடம்நின்றகலேன்; நான் ஊணும் வேண்டேன், உறக்கமும் வேண்டேன்' என்று கூறினர். இது கேட்டு வியப்படைந்த ஆசிரியர் இவ்வாறு ஆர்வமுடையவனே நன்மாணவன் என்று உளத்திற்கொண்டு முதலியாருக்கு அன்று முதல் தமிழ் கற்பித்து வருவாராயினர். ஒரு மாதம் தமிழ் கற்றபின், முதலியார் குருதட்சிணையாக ஒரு பவுன் தமது ஆசிரியரிடம் கொண்டு போய் வைத்து வணங்கி நின்றனர். இதைச் சிறிதும் எதிர் பாராத சாஸ்திரியார், 'உனக்கு நான் பாடம் சொல்லிக் கொடுக்க ஏற்றுக் கொண்டபோது, இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. நான் யாருக்கும் தமிழைக் காசுக்கு விற்பதில்லை என்பதை நன்குய்த் தெரிந்து கொள்வாயாக. உனக்கு இன்னும் இந்த எண்ணம் இருக்குமானல், நீ என்னிடம் பாடம் கேட்பதை இன்றோடு நிறுத்திக் கொள்ளலாம்' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டனர்.

சில மாதங்களுக்குப் பிறகு ஒருமுறை மூன்று நாட்கள் தொடர்ந்து முதலியார் ஏதோ ஒரு காரணத்தால் பாடம் கேட்க வராமலிருக்கவே, அவரை மனையிற் சென்று கண்டுவரலாம் என்று சாஸ்திரியார் சில மாணவர்களோடு புறப்பட்டனர். அவர் மனை யாது என்று விளங்கவே, அது, தான் மாணவனுயிருந்தபோது வசித்து

வந்த தங்கசாலைத் தெரு வீடு என்று தெரிந்தது; 'இது நான் முன்பு கல்லூரியில் படித்துவந்தபோது இருந்த வீடல்லவா!' என்று வியப்படைந்து உள்ளே நுழைந்த ஆசிரியரை, சரவணமுதலியாரது தந்தையார் செங்கல்வ ராய முதலியார் வரவேற்று உபசரித்தனர் அப்போது சரவண முதலியாரின் தந்தை வியாதியாய்ப் படுத் திருந்தார். தமது பழைய நண்பரும் உதவியாளருமான முதலியாரது மகனே தன்னிடம் பாடம் கேட்கும் மாணவன் என்பது அப்பொழுதுதான் ஆசிரியருக்குத் தெரியவந்தது. அப்பொழுது சரவணமுதலியாரை நோக்கி 'அப்பா! எனக்குச் சிறுவயதில் இவ்வளவு உதவி செய் தவர்களுடைய புதல்வனுன உன்னிடமிருந்து நான் குரு தட்சிணை பெற்றிருந்தால், அஃது என்னை எந்நரகில் உய்த்திருக்குமோ, அறியேன்' என்று கூறி நின்றனர். செங்கல்வராய முதலியாரும் தம் மனையில் இருந்து படித்து வந்த மாணவனே, பிறகு கல்லூரிப்பேராசிரியராக ஆகியிருப்பது தனக்குத் தெரியாது என்று கூறிக் கொண்டனர். இந்நிகழ்ச்சி சாஸ்திரியாரது கொள்கைத் திறனை மிக நன்கு விளக்கும்.

சரவண முதலியார் பி. ஏ. பரீட்சைக்குச் சென்ற ஆண்டு இவரே தமிழில் முதல்வராகத் தேறிச் சேதுபதி யார் பொற்பதக்கம் பெற்றனர் என்பது முன்பு கூறப் பட்டது. இவர் சென்னை அரசாங்கத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாளராயிருந்து ஓய்வெடுத்துக் கொண்டனர். சிலகாலம் தொண்டை மண்டலத் துளுவ வேளாள உயர் தரக் கலாசாலையின் காரியதரிசியாயிருந்தார். சில்லாண்டு கட்கு முன்பு இவ்வுலகை நீத்தனர்.

இப் பன்னிரு மாணவர்களையும் தமது பெரும் செல்வ மாகக் கருதி வந்தனர் சாஸ்திரியார்; ஏசுகிறிஸ்துவும், சங்கரரும், சிவஞான முனிவரும், அகத்தியரும் பன்னிரு மாணவர்களைப் பெற்றிருந்தது போல் தாமும் பன்னிரு

மாணவர்களைப் பெற்றிருந்ததாக ஆசிரியர் பன்முறை கூறிக்கொள்வதுண்டு. இம் மாணவர்களில் எல்லோருமே தங்கள் ஆசிரியரைப் போலவே தமிழ் ஆங்கிலம் இரு மொழியிலும் பயிற்சி பெற்றவர்கள். இம் மாணவர்கள் எல்லோரும் ஒரே சாதியினரல்லர்; ஒரே குலத்தினரல்லர்; ஒரே சமயத்தினரல்லர்; ஒரே வயதினரல்லர்; ஆயினும் எல்லோரும் ஓர் குலமாய்த் தமிழ்த் தாயின் மக்களெனத் தமிழைப் பயின்றவர்கள்; ஆதரித்தவர்கள்; வளர்த்தவர்கள். ஆசிரியருக்கு இவர்களிடம் அளவிறந்த அன்பும் நன்றியும் கூட உண்டு. ஆசிரியர் எழுதிய பல நூல்களையும் அவர் சொல்லிவர எழுதி வந்தவர் ந. பலராம ஐயரவர்கள்; எல்லா நூல்களும் இயற்றுந் தறுவாயிலும், அச்சாகும் தறுவாயிலும் இயற்றமிழ் மாணவர்களால் ஏடெழுதப்பட்டும், மேற்பார்க்கப்பட்டும் வந்தன. அநேக நூல்களின் முகவுரையில் சாஸ்திரியார் தமது இயற்றமிழ் மாணவர்களுக்குத் தாம் மிகவும் கடமைப் பட்டிருப்பதாகக் கூறிக் கொண்டுள்ளனர்.

---

## அத்தியாயம் 8

# ஆசிரியத் தன்மை

ஆசிரியர் சூரியநாராயண சாஸ்திரியார் தாம் வாழ்ந்த முப்பத்து மூன்றாண்டுகளுக்குள் தமிழிற்குச் செய்துள்ள சிறந்த பணி சுருக்கி வரைய இயலாதபடி விரிந்துளது; விரித்துரைக்க மாட்டாதபடி பரந்துளது. இவரது ஆசிரியத் திறனைப் பலவகையாகப் பிரித்து விளக்கின், இவர் தமிழுக்காற்றிய தொண்டின் தகைமை நன்கு புலனாகும். அவ்வாறு வகுத்து நோக்குங்கால், இவரது ஆசிரியத் தன்மையைப் பேராசிரியர், உரையாசிரியர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிகாசிரியர் என்னும் ஐவகையாக

வகுக்கலாம். பேராசிரியத் தன்மை கல்லூரியில் பொதுவாக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்த திறனும், சிறப்பாக இயற்றமிழ் மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்த முறையும் என இருவகைப்படும். இவ்விரு வகையும் முன்பே விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இவர் செந்தமிழ் உரைச் சங்கம் நிறுவிப் பாடப் புத்தகங்களுக்கு உரையெழுதி உபகரித்த தன்மையும் முன்பே கூறப்பட்டது. இனி நூலாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிகாசிரியர், என்னும் மூவகையில் இவரது தமிழ்த் தொண்டை, ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு ஆராய்வோம்.

**I நூலாசிரியர் :** சிறுவயதிலேயே இவரால் முற்றும் இயற்றப்பெற்று இப்போது காணாது போன நூல் 'மாலா பஞ்சகம்' என்னும் செய்யுள் நூல். இவர் இயற்றியதாக இப்பொழுது முற்றும் நின்று நிலவி வரும் நூல்கள் பன்னிரண்டு நூல்களாம். அவற்றில் 1. ரூபாவதி அல்லது லது காணாமற்போன மகள், 2. கலாவதி, 3. மான விஜயம், 4. தனிப் பாசுரத்தொகை, 5. பாவலர் விருந்து-முதல் நாள், 6. நாடகவியல், 7. மதிவாணன், 8. தமிழ் மொழியின் வரலாறு, 9. மணிய சிவனுர் சரித்திரம் என்னும் ஒன்பது நூல்கள் ஆசிரியர் வாழ்நாளிலேயே அச்சேறி வெளிவந்தனவாம் : 1. தமிழ் வியாசங்கள், 2. சித்திர கவி விளக்கம், 3. தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் மூன்றும் ஆசிரியர் காலத்திற்குப் பிறகு அச்சிட்டு வழங்கி வருகின்றன ; அவ்வக் காலங்களில் பத்திரிகைகள் வாயிலாகவும் சொற்பொழிவு வாயிலாகவும் வெளியிட்ட சில கட்டுரைகளைத் தொகுத்துத் ' தமிழ் வியாசங்கள் ' எனவும் ; ஆசிரியர் அறைகுறையாகச் செய்த தண்டியலங்காரச் சொல்லணியியல் சித்திர அமைப்பு வரலாறுகளைத் தக்கவாறு தொகுத்துச் 'சித்திர கவி விளக்கம்' எனவும்; தமிழ் இலக்கிய வரலாற்றினை விரிந்த முறையில் எழுதத் தொடங்கி முற்றுப் பெருது சில புலவர்கள் வரலாற்றை

வில் நின்றுவிட்ட சில வரலாறுகளை மாத்திரம் சேர்த்துத் 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' எனவும் பிற்காலத்தில் அச்சிடப்பட்டுள்ளன. இவர் இயற்றி, இப்போது பெரும் பாலும் வழக்கின்றியுள்ள நூல்கள் இரண்டு: அவை 1. இழிசினர் வழக்குரை வரையறை,* 2. வித்யா விருத்தி என்பன. 'இழிசினர் வழக்குரை வரையறை' என்பது ஒரு மொழிபெயர்ப்பு நூலாகும். இது சென்னைக் கிருத் துவக் கல்லூரியில் வடமொழித் தலைமை யாசிரியரா யிருந்த வேதம் வெங்கடராய சாஸ்திரியார் என்பவரால் ஆந்திர மொழியில் இயற்றப்பட்ட 'கிராமியப் பிரயோக நிபந்தனம்' என்னும் நூலின் மொழிபெயர்ப்பு; இது நாடகங்களில் இழிந்தோர் கையாளும் நடையின் வரை யறையை வகுக்க எழுந்த நூல். இம்மாதிரி ஆட்சிகள் சில ஆசிரியர் இயற்றியுள்ள நாடகங்களிலும் காணப்படும்; இதனை மேற்கோள் வாயிலாக விளக்கினால் நன்கு விளங்கு மாதலால் சில உதாரணங்களைக் கீழே தருகின்றோம்:

'சுகுண சுகேசர்' என்னும் நாடகம் நான்காம் அங்கம் முதற் களத்தில், 'தம்பீ! நூறு பயண்டாலும் வரட்டும். அவுகெல்லாருக்கும் நான் ஒருத்தன் போது மில்லே' என்பது இவ்வகை ஆட்சியைச் சேர்ந்தது. இவ்வாறு உரை நடையில் வராமல் செய்யுளிலும் இழி சினர் இயல்பாக வழங்கும் சொற்களினாலாய பாடல்கள் பயின்று வருவதுண்டு என்பதும் நாடகத் தமிழ் அதற் கிடந் தரும் என்பதும்,

'கீழ்மக்க ளியல்பிற் கிளக்குஞ் சொற்செறி
பாவுமுண் டவற்றை யாவருங் கொள்ப'

என்னும் நாடகவியற் சூத்திரத்தால் அறியலாம்.

---

* இந்நூலின் மூலமும் மணிப் பிரவாள நடையிலுள்ள உரையும் கிடைத்துளது. கூடிய விரைவில் மூலமும் தமிழ் விரி வுரையும் கொண்ட பதிப்பு வெளிவரும்.

‘ராசா மகளை யிவனுங் கட்ட,
ஆசை வெச்சான்! ஐயோ! பாவம்!
மோசஞ் செய்ய முன்னே சொன்னுன்.
தோச மிண்டே சும்மா விட்டேன்,’

‘தோண்டிப் போட்ட நுங்குக் கண்ணி
காண்டு கத்துங் கழுதைப் பாட்டு
வேண்ட மட்டும் பாடிக் கிட்டு
நாண்டிக் குலுக்கி நடந்துக் கிட்டே,’

‘ஏச்சுக் கிட்டுத் திரியு முண்டை
பேச்சுக் கேட்டுக் கெட்டுப் போனுன்
சீச்சீச் சீச்சீ யிந்தப் பாவி
பேச்சை யின்னிக் கேட்க மாட்டேன்.’

என்பன கலாவதி நாடகத்தில் நான்காம் அங்கம் மூன்ரும் களத்தில் சோமதத்தன் என்னும் சேவகன் கூற்றுக் களாம். ‘வித்யா விருத்தி’ என்பதும் வடமொழியினின் றும் மொழி பெயர்க்கப்பட்ட ஒரு நூல். இதன் முதனூ லாசிரியர் மாங்குடி மணிய சிவனுர். இது சிவபரமான வேதாந்த தத்துவங்களை அழகுற விளக்கிச் சொல்வதாம். இம் முதனூலின் பெருமையைப் பற்றிக் கூறுங்கால் ஆசிரி யரே கீழ்க்கண்டவாறு கூறுகின்றனர்:

† ’தித்திக்கும் பழவருக்க மானசிவா
கமரசத்தைச் சிவர கஸ்யத்
தேனுடனே கூட்டியுப நிடதமெனுங்
கற்கண்டுப் பொடியுஞ் சேர்த்து
மத்தித்து வேதாந்த சூத்திரச்சர்க்
கரையுமிட்டு மணநி றைந்து
வயங்கலுறு சிவஞான போதசூத்
திரநெய்யை வார்த்துக் காய்ச்சி

† மணியசிவனுர்துதி—மணிய சிவனுர் சரித்திரம்.

நத்தித்தீம் பதத்திறக்கி யதற்குவித்தி
யாவிருத்தி நாமஞ் சூட்டி
நாணிலத்தா ரெல்லோரு மினிதினிதென்
றேயுண்ண நல்கி னுன்.'

இனி ஆசிரியர் இயற்றி அவர்காலத்தே பதிப்பிக்கப் பட்ட நூல்களைச் சுருக்கமான முறையில் ஆராய்வாம்.

**1. ரூபாவதி அல்லது காணுமற்போன மகள் :** இதுவே இவ் வாசிரியர் முதன் முதலாக இயற்றிய நாடக நூல். இது நாமகள் சிலம்பின் முதற்பரல். இந்நூலின் இரண்டாம் பதிப்பு சிற்சில இடங்களில் முதற் பதிப்பினின் றும் வேறுபட்டுள்ளது ; நாடகவியற் கருத்துக்களை மிகுதியும் பின்பற்ற வேண்டியதன் நிமித்தம் இவ்வாறு திருத்தப்பட்டது. 'முதற்பதிப்பிற் போலாது இப்பதிப்பிற் பாத்திரங்களின் இயல்புக் கேற்ற சொல் வழக்கும், நடை வேறுபாடுகளும் சிற்சில திருத்தங்களும், புதிய செய்யுட் களும் அமைக்கப்பட்டுளவாமாறு யாவரும் கண்டு போற் றற்குரியது,' என்று ஆசிரியரே இந்நூலின் இரண்டாம் பதிப்பின் முகவுரையில் கூறுகின்றனர். சிற்சில செய்யுட் களில் பாட பேதங்களும் செய்தனர். இது பெரிதும் மேனுட்டு நாடக முறைகளைப் பின்பற்றி இயற்றப்பட் டது. ஆசிரியர் சுந்தரம்பிள்ளை இயற்றிய 'மனோன்மணீ யம்' ஒன்றே உயர்தர நாடகமாக அக்காலத்திற் பயின்று வந்தது; அதே முறையில் உரை நடையில் இயங்கும் நூல்கள் இல்லை என்னும் குறை நீங்கவே இந்நூல் இயற் றப்பட்டது.

இந்நூலாசிரியரது பிறநூல்களிலே போன்று இந் நூலினும் அவரது கடவுட்பக்தியும், மேற்புல விஞ்ஞான மும், இயற்கை வருணனைத்திறனும், செவிக்கினிய சொல் லமைப்பும், அமிழ்தினு மினிய அருந்தமிழ்ப் பாக்களும், மணிவாசகப் பெருமான் மீதுள அளவிலா அன்பும் காணக் கிடக்கின்றன என்பது இந்நூலைப்பற்றிய அக்காலத்துக் கருத்து.

இந்நூல், ஆசிரியர் பன்முறை சென்று கண்டுவந்த பெரியாரான சர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களுக்கு உரிமை செய்யப்பட்டது.

இவரது நெருங்கிய நண்பரான மு. சி. பூரணலிங்கம் பிள்ளையவர்களே இந்நூற்கு விரிவான முகவுரையொன்று ஆங்கிலத்தில் எழுதியுதவினர். இந்நூலின் முதற் பதிப்பு 1895-லும் இரண்டாம் பதிப்பு 1902-ம் ஆண்டிலும் வெளி வந்தன.

2. **கலாவதி :** ஆசிரியர் இயற்றியுள்ள நாடகவியல் என்னும் இலக்கண நூலோடு முழுவதும் ஒத்தியங்கு மாறு இயற்றப்பட்ட இலக்கியம் இதுவேயாம். இது நாமகள் சிலம்பின் இரண்டாம்பரல். இந்நூல் பெரிதும் வடமொழி நாடக இலக்கண முறைகளைப் பின்பற்றியது. 'எந்தம் நண்பர் யாவரும் வடநூல் முறைகளைப் பெரிதும் அநுசரித்து நாடகம் புதுவது ஒன்று புனையுமாறு ஏயி னமையின் இறைவன் திருவருளை முன்னிட்டு அவ்வாறே யிந்நாடகம் எழுதப் புகுந்தனம்' என்று ஆசிரியர் இந்நூல் முகவுரையுட் கூறுவர்.

இந்நூலில் ஆடவர்க்கான நற்குணங்கள் யாவையும் சிதாநந்தனிடம் காணப்பெறுவதும், மகளிர்க்கான நற்குணங்கள் யாவையும் கலாவதிபாற் காணப்பெறுவதும், நட்பின் திறம் நனிவிளக்கப்பட்டிருப்பதும் உணரத் தக்கவை. தலைவர் வகையில் திரோதாத்தனுக்கு எடுத்துக்காட்டாகச் சிதாநந்தனையும், தலைவியரில் சுகுணை வகைத் தலைவியர்க்கு எடுத்துக்காட்டாகக்கலாவதியையும் நாடகவியல் விரிவுரையாசிரியர் காட்டியிருப்பதே இதற்குப் போதிய சான்றாகும். இந்நூலில் சுமார் இருநூற்றிருபத்தைந்து செய்யுட்களுமிருத்தலால், இவற்றிற்கும் பிறவற்றிற்கும் மேற்கோளகராதியும், விளக்கக் குறிப்புரையும் ஆசிரியரே எழுதிச் சேர்த்து அச்சிட்டனர்.

இந்நாடகம் சேதுபதியரசர் சபையில் அரங்கேற்றப் பட்டது; அன்றியும் இது பாஸ்கர சேதுபதியவர்களுக்கே உரிமையும் செய்யப்பட்டது. இவர் இந்நூலுக்கு எழுதியுள்ள உரிமையுரைச் செய்யுள் பன்முறையும் படித்து இன்புறத்தக்கதா யமைந்துள்ளது; கலாவதியை ஒரு பெண்ணாக உருவகித்தேனும், நாடக நூலாகக் கருதியேனும் இருவகையினும் பொருள் கொள்ளக்கிடப்பது கற்றோர்க்கு இன்பமளிப்பதாம்.

இந்நாடகம் வெளி வருவதற்கு முன்பு ஆசிரியர் சுந்தரம்பிள்ளை இயற்றிய 'மனோன்மணீய' மும், பம்மல் சம்பந்த முதலியார் இயற்றிய 'லீலாவதி சுலோசனா' வும் சாஸ்திரியாரது 'ரூபாவதி'யும் அச்சிட்டுப் பிரசுரிக்கப் பட்டிருந்தன. ஆயினும் போலி நாடகங்கள் மலியத் தொடங்கிவிட்டதைக் கண்டு மனம் பொறாத ஆசிரியர் நாடக இலக்கணம் நிரம்பிய நூலியற்றக் கருதியே இதனைச் செய்தனர். இது பற்றி ஆசிரியர் 'இடையே நாடக இலக்கணம் அணுத்துணையும் அறியாத சில புல்லறிவாளர் தோன்றித் தாமும் நாடகமெழுதுவான் புக்குக் குன்று முட்டிய குரீஇப்போலப் பெரிது மிடர்ப் பட்டு எழுதியதையும் வெளியிட வெள்கி *மாழாந்து திரியா நின்றார். இப்போலிகள் நாடக விலக்கணங் கற்றுத் தருக்கடங்கி யுறுதிகூடுதல் கருதியும், எந்தம் இயற்றமிழ் மாணவர்க்கு நாடகத் தமிழும் அறிவுறுத்தல் கருதியுஞ் சூத்திரமு முரையுமாக நாடகவியலென்று தலைக் குறியிட்டு ஆங்கில கீர்வாண வமைதிகளை யநுசரித்து ஒரு நூல் செய்துளேம். அன்ன இலக்கணத்திற்கு இலக்கியமாகவே இக்கலாவதி நாடகமுமியற்றப்பட்டது' என்று கூறுகின்றார். இந்நூல் 1898-ல் முதன் முதல் வெளியிடப் பட்டது.

---

* மாழாந்து—மயங்கி

3. **தனிப்பாசுரத் தொகை:** தமிழ் மகள் மேகலையின் இரண்டாம் கிங்கிணியாக வெளிவந்த இந்நூல் முதன் முதல் ஞானபோதினியில் சிறிது சிறிதாக வெளிவந்தது. அப்போது ஆசிரியர் பெயர் 'பரிதிமாற்கலைஞன்' என்றே வெளியாயிற்று. இந்நூல் முதற்பதிப்பு தனிப்பாசுரங்களோடு மட்டும் வெளியாயிற்று; இரண்டாம் பதிப்பில் போப்பையர் ஆங்கில மாக்கிய செய்யுட்களும் உடனச்சிடப்பட்டு சென்னை கவர்னர் ஆம்ட் ஹில் பிரபுவிற்கு உரிமையாக்கப்பட்டது; இவ்விரண்டாம் பதிப்பில் ஆசிரியரது தமிழ் முகவுரையோடும் போப்பையரின் ஆங்கில முகவுரையும் காணப்படும். இந்நூலின் மூன்றும் பதிப்பு பலராமய்யரவர்கள் குறிப்புரையோடும் நூன் முகத்தோடும் வெளிவந்தது. இந்நூன்முகத்தின் கண் தனிப்பாசுரங்களின் வைப்பு முறையை அழகாக உரையாசிரியர் விளக்கியிருப்பது ஓதி இன்புறற்பாலது. கடைசி இரு தனிப்பாசுரங்களான 'போர்,' 'எறும்பு' என்பனவற்றிற்குப் போப்பையர் மொழிபெயர்ப் பின்மையால், சேலம் மாவட்டக் கல்வியதிகாரியாயிருந்த டி. பி. கிருஷ்ணசுவாமி முதலியார் அவர்கள் உரைநடையில் ஒருவாறு மொழிபெயர்ப்புச் செய்தளித்துள்ளனர். இந்நூல் முதல் பதிப்பு 1899-ம் ஆண்டு இறுதியில் வெளிவந்தது. இந்நூலைப் புனைபெயரால் வெளியிட்டதற்குக் காரணம் முதற் பதிப்பு முகவுரையிலேயே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளனர். இரண்டாம் பதிப்பிற்குச் சிறப்புப்பாயிரம் அளித்தார் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்.

இத்தனிப்பாசுரங்கள் எல்லாம் ஆங்கிலத்தில் உள்ள 'ஸானெட்' (Sonnet) என்னும் ஒருவகைக் கவியைப் பின்பற்றி யியற்றப் பட்டவை. அவ்வகைக் கவி ஒவ்வொன்றும் பதினான்கு அடியோடும் ஈற்றெதுகையோடும் அமைந்திருத்தல் வேண்டும் என்பது மரபு. இவ்வாறே இத் தனிப்பாசுரங்களும் பதினான்கு அடி கொண்டனவே;

ஒரே கருத்தையோ, பொருளையோ பற்றிப் பேசுவனவாம். ஆயினும் ஈற்றெதுகைக்குப் பதில் தமிழ் முறையைப் பின்பற்றி அடிமுதலெதுகை கொண்டவை. தமிழில் ஈற்றெதுகை வாராது என்ற போப்பையர் கொள்கை மறுக்கத்தக்கது; தமிழிலும் ஈற்றெதுகை கொண்ட செய்யுட்கள் உண்டு என்பது கீழ்க்காணப்படும் செய்யுட்களாற் புலனாம்:

" இற்றகை கால்செறி களமுழு
    துங்கழு கிட்டன காவணமே
யுற்றது கொள்ளல கைக்குலம்
    வெங்கள முரைபெரு காவணமே
வெற்றுடன் மன்னர் சரிந்த
    குடைக்கண் வரிந்தன சாமரமே
கொற்ற மிகும்பறை யோசை
    யழிந்து குலந்தன சாமரமே "

† 'கமலந் தனிற்பெரிய கண்களுறு வானே
குமரன் றனைப்பொருவு கோதில்குண வானே
விமலம் பொருந்தியவென் வீரர்பெரு மானே
சமரஞ் செயற்கவெனச் சாற்றுநளும் யானே?'

ஆயினும் அடி முதலெதுகைபோல் தமிழ்ச் செய்யுட்களுக்கு ஈற்றெதுகை ஓசையின்பம் பயப்பதில்லையாதலின், ஆசிரியர் முதலெதுகையையே தமது தனிப்பாசுரங்கட்கும் கொண்டனர்.

இந்நூலைப்பற்றி அக்காலத்தே சிலர் வெளியிட்ட கருத்துக்களைச் சுருக்கி வரைவாம்:

'இது நாற்பது தனிப் பாசுரங்கள் உள்ள நூல்; இதன்கண் உள்ள ஒவ்வொரு பாசுரமும் பதினான்கு அடி கொண்ட நேரிசை யாசிரியப்பாவாம். ஒவ்வொன்றும் ஒரு

* வில்லிபாரதம் - 16-ம் போர்ச் சருக்கம் - 49-ம் செய்யுள்.
† கலாவதி - அங்கம் 5, களம் 1, செய்யுள் 164.

பெரிய பொருளை எடுத்து மிகவும் நுட்பமாக ஆராய்ந்த பின்னரே வெளியிடப் பெற்ற கருத்துக்களுடையது. இந் நூல் சிற்சில இடங்களில் ஆங்கில நூற் கருத்துக்களையும் உடன் தழுவிக்கொண்டு விளங்குகின்றது. இவ்வளவு சிறப்புள்ள இதனை ஆக்கியோர் யாது காரணத்தாலோ நூலைத் தமது மெய்ப் பெயரால் வெளியிடாது புனை பெயராகிய 'பரிதிமாற் கலைஞர்' என்பதனால் வெளியிட்டிருக்கின்றனர். இதற்கு அவர் கூறும் காரணம் தக்கதேயெனினும் அவர் தமது மெய்ப் பெயர் கரந்துரைக்கத்தக்க அளவு பயப்படவேண்டுவது அவசியமன்று;........இந் நூலில் 'உடல்' என்னும் தனிப் பாசுரத்தில் யாக்கையின் நிலையாமையையும் இழிவையுமே எடுத்தெடுத்துக்கூறுவது நம் தமிழ்ப் புலவர்களது மரபாயிருக்க, இவர் யாக்கையை மிகவும் புகழ்ந்து பலவாறு புனைந்து கூறுகின்றனர்...இவர் இப்பாசுரங்களில் எந்த மூலையிலேனும் வாக்குத் தடைப் பட்டவராகக் காணப்படவில்லை.'

**4. பாவலர் விருந்து—முதல் நாள்:** இந்நூல் 1900-ம் ஆண்டில் முதன் முதல் வெளியாயிற்று. இது ஆசிரியர் இயற்றிய சிறு முகவுரையோடும், 'செந்தமிழ்ப் பாவலீர்' என்று தமிழ்ப் புலவோரை விளித்து உரைநடையில் இயற்றிய உரிமை யுரையோடும் வெளிவந்தது. இதை முதல் நாள் விருந்து என்றதால் இன்னும் பல நாள் விருந்திட ஆசிரியர் எண்ணி யிருந்தார் என்று தெரிகிறது. இது தமிழ் மகள் மேகலையின் மூன்றும் கிங்கிணியாக வெளிவந்தது.

பற்பல சமயங்களில் ஓரோவோர் பொருள் பற்றி ஆசிரியர் இயற்றிய செய்யுட்களையெல்லாம் தொகுத்தாக்கியதே 'பாவலர் விருந்து' என்னும் நூலாம்; இவை எவ்வெச் சமயங்கள் என்பதை இரண்டாம் பதிப்பு முன்னுரையில் இந்நூல் உரையாசிரியரான பலராம ஐயரவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். 'பாவலர் விருந்து'

என்பது பாவலர்க்குத் தாயிடும் இலக்கிய விருந்து என்னும் பொருள்படும்; அன்றியும் இச்செய்யுள் நூல் தொல்காப்பியத்திற் கூறிய 'விருந்து' இலக்கணத்தையும் பின்பற்றிச் செல்வது காணத்தக்கது. 'விருந்து' என்பது பழங்கதையைக் கூறாது புதிதாகச் சொல்லப்படுவது என்பதும், புதிதாக ஆசிரியராக வேண்டியவாறு பல செய்யுள்களும் தொடர்ந்து வரச் செய்வது என்பதும் புலப்படும்.

இவ்வாசிரியர் தெனிசனிடம் மிகவும் ஈடுபட்டவர் என்பது இப்பாவலர் விருந்தில் உள்ள மூன்றும் உட்பகுதி களால் விளங்கும். ஒன்று தெனிசன் இறந்தபோது பாடிய கையறுநிலைச் செய்யுட்கள்; மற்று 10, 11-ம் உட்பகுதிகள் மேற்புலப் புலவரது செய்யுட்களைப் பின்பற்றி யியற்றப் பட்டவை. அவை 'போலி ஆராய்ச்சியன், ஓர் ஐயப்பாடு' என்பவையாம்.

இந்நூலின் இரண்டாம் பதிப்பில் முதற் பதிப்பி லில்லாத மூன்று செய்யுட் பகுதிகள் சேர்க்கப்பட் டுள்ளன; அவை 1. பரிந்துரை. 2. முடிசூட்டிரட்டைமணி மாலை. 3. பண்டித நாட்டம் என்பனவாம். இந்நூலி லுள்ள 'பட்டினக் காட்சி' என்னும் பகுதியில் ஆசிரியர் ஊழ்வினையைப்பற்றிக் கொண்டிருந்த சில கருத்துக்கள் தெற்றெனை விளங்கும்.

5. **நாடகவியல்:** இந்நூல் தமிழ் மகள் மேகலையின் முதற் கிங்கிணி; இதன் முதற் பதிப்பு 1897-லும், இரண்டாம் பதிப்பு 1901 ஜனவரியிலும் வெளிவந்தன வாம். முதற் பதிப்பிலேயே ஆசிரியர் ஆராய்ந்து எழுதிய பரந்த முகவுரை யொன்றும் இணைக்கப்பட்டது. இந்நூலை ஆசிரியர் தமது தமிழ் ஆசிரியரான மதுரைச் சபாபதி முதலியாருக்கு,

'செந்தமிழ்த்தீம் பாலூட்டிச் சீராட்டி நாளுமெமை
விந்தைநலங் கூர மிகவளர்த்த—வெந்த

மருமைச் சபாபதிக்கெ மன்பின்குறி யாலிஃ
துரிமை புகுத்துகின்று மோர்ந்து'

என உரிமை செய்தனர்.

இந்நாடகவியல் நாடகத் தமிழிற்கோர் இலக்கணமாகும். பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் முதலிய நாடகத் தமிழ் நூல்கள் இறந்துபட்டமையின், தமிழ் ஆங்கில வடமொழியாதியவற்றிற் கண்ட நாடக இலக்கணங்களை எல்லாம் தொகுத்து இந்நூலையியற்றினர். நாடகத் தமிழிற்கு வகுக்கப்பட்ட இலக்கண நூல்களுள் தற்காலத்தில் நின்று வழங்குவது இது ஒன்றே என்னலாம். வடமொழி நூல்களைப் படித்தறிந்து அங்குக் கண்ட இலக்கண நூல்களைத் தமிழாக்குவதற்கு ஆசிரியருக்குப் பேருதவி புரிந்தவர்கள் வேதம் - வெங்கடராய சாஸ்திரியாரும், தண்டலம் - ச. நாராயண சாஸ்திரியாரும் ஆவார்கள். இவ்விருவரும் ஆசிரியருக்கு நெருங்கிய நட்புடையவர் என்பது பற்றி முன்பு குறிப்பிட்டுள்ளோம். 'இந்நூல் எம்மை யடுத்துத் தமிழ்க் கலை பயிலுறா உம் இயற்றமிழ் மாணவர்க்கு நாடகத் தமிழும் அறிவுறுத்தல் கருதி ஒருவாறு எழுதி வெளியிடப்பட்டது' என்பர் ஆசிரியர் அந்நூல் முகவுரையில். முகவுரையில் இவ்வாறு கூறியிருப்பினும், நாடகவியல் பாயிரம் எட்டாம் சூத்திரத்தில்,

'ஆதியி னியன்ற அருந்தமிழ்க் கலையுள்
நாடகத் தமிழில் நல்லிலக் கணம்பல
காணப் பெருமை கருத்தினில் தேறி
இந்நாள் நிலைமைக் கேற்ப வடநூற்
பாற்படும் இயல்பினும் மேற்புலப் புலவோர்
கூறும் இயல்பினும் கொள்ளற் பாலன
கொண்டுரைத் தாமிதைக் கொள்ளுப பெரியோர்'

என்றதால் 'வரம்பின்றி யொழுகும் நாடகத் தமிழுக்கு வரம்பு ஏற்படுத்த வேண்டி வகுத்தது இந்நூல்' என்னும்

கருத்துப்படக் கூறியுள்ளனர். ஆகவே இவ்விரு கருத்தினையும் உட்கொண்டு இந்நூல் இயற்றப்பட்டது என்பது புலப்படும்.

மாணவர்க்கென்றே சுருங்கிய முறையில் முதலில் எழுதப்பட்ட இந்நூலைப் பின்னர் முற்றிலக்கண நூலாக இயற்றக் கருதி மற்றைய நாடக இலக்கணங்களையும் சேர்த்து இருநூற்றெழுபத்திரண்டு சூத்திரங்களாக யாத்தனர். இது பொதுவியல்பு, சிறப்பியல்பு, உறுப்பியல்பு, நடிப்பியல்பு என நான்கு இயல்புகளைக்கொண்டு இயங்குவது. இதன் முதல் இரண்டு இயல்புகளும் 1903-ம் ஆண்டு பி.ஏ., வகுப்பிற்குப் பாடமாக அமைக்கப்பட்டன வாதலின், ஆசிரியரது இயற்றமிழ் மாணவர் பலராம ஐயரவர்கள் 1902-ல் இவ்விரு இயல்புகளுக்கும் உரை எழுதி வெளியிட்டனர். இவ்வுரைக்கு முன்னுரையாக 'ஆசிரியர் வரலாறு' ஒன்றும் சேர்க்கப்பட்டிருந்தது. அவ்வரலாற்றின் இறுதியில் 'இவருடைய வரலாற்று விரிவினையும் இயற்றிய நூல்களின் ஆராய்ச்சியினையும் தனி நூலாக அச்சிடக் கருதி யிருக்கின்றமையின் ஈண்டு வேண்டிய அளவு சுருக்கிக் கூறினும்' என்று எழுதி யிருந்தமையாலும், இதே உரை யாசிரியர் தாம் உரை எழுதிய 'பாவலர் விருந்து' முன்னுரையில் 'ஆசிரியர்தம் சரித்திரத்தை வேறாக எழுதக் கருதி யுள்ளேனாதலின்' என்பதாலும், இவரே சாஸ்திரியாரது வாழ்க்கை வரலாற்றினை விரிந்த முறையில் இயற்றித் தமிழ் உலகிற்கு உதவக் கருதியிருந்ததுண்டு என்று தெரிகிறது. 'ஆசிரியரோடு இடைவிடாது உடனுறைந்து பழகியவர் அவர்' என்பதை நினைக்க, சாஸ்திரியாரது வரலாற்றினை நூலாக இயற்றப் போதிய ஆற்றல் ஐயரவர்களுக்கே இருந்தது என்பது தெளிவாம். இந்நாடக இலக்கண நூலை ஆசிரியரே உரையோடு வெளியிடக் கருதியிருந்தார் என்றும், பிறகு சில காரணங்களால்

அது கைவிடப்பட்டது என்பதும், 'எமது நண்பர்கள் அனைவரும் எம்மைத் தூண்டியதன் நிமித்தம் இதனைச் சின்னாள் முன்னரே உரையோடும் வெளியிட விரும்பிய யாம் இன்னும் சில விடயங்களை விரித்தும் விளக்கியும் காட்டியிருத்தலின் நூல் எதிர் பாராதவண்ணம் விரிந்துளது; ஆகவே உரை எழுதுதற் கருத்து இப்போழ்தத்தின் அறவேயொழிக்கப்பட்டது' என்னும் ஆசிரியர் கூற்றாலேயே விளங்கும்.

பின்னர் 1934-ல் வெளியான மூன்றாம் பதிப்பு நான்கு இயல்களுக்கும் பலராம ஐயரவர்களால் விரிவாக எழுதப்பட்ட அரிய உரைகொண்டு விளங்குகின்றது; இந்த உரை மிகவும் பாராட்டற்பாலது. அளவிறந்த மேற்கோள்களோடு விளங்குவதால், நாடக இலக்கணம் கற்பார்க்கு இன்றியமையாததாய் அமைந்துள்ளது. இதற்குக் காரணம் 1897-ம் ஆண்டிலேயே ஐயரவர்கள் சாஸ்திரியாரிடம் இந்நூலை நன்கு பாடம் கேட்டு அதன் நுணுக்கங்களை எல்லாம் அறிந்திருந்ததுதான்; அவ்வாறு நூலாசிரியரிடத்திலேயே நேரில் பாடம் கேளாக்கால், இத்தகைய உரை எழுதுவது இயலாது என்பது இவ்வுரையை ஒரு முறை படிப்பவர்களும் எளிதில் உணர்வர்.

தற்காலத்தில் நாடகத்திற்கு இலக்கியமாகப் பல நூல்கள் பலரும் இயற்றியுள்ளனர். ஆயினும் ஆசிரியரது கலாவதி, ரூபாவதி, மானவிஜயம் போன்ற சிறந்த நூல்கள் மிகச் சிலவே யாம்; ஆயினும் அவற்றை 'மிகச் சில' என்றேனும் கூற இயலும். நாடக இலக்கணத்திற்கோ நாடகவியலைத் தவிர வேறு நூல் இல்லை என்று துணிந்து கூறலாம். ஆங்கில ஆராய்ச்சியும், வடமொழிப் பயிற்சியும், தமிழறிவும் ஆசிரியர்போல் ஒருங்கே அமையப்பெற்றோரால் இத்தகைய நூல் இயற்றப்படல் ஆமேயன்றிப் பிறரால் ஆகாது என்பது தெளிவு.

6. **மதிவாணன்:** சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் வேண்டுகோளின்படி இயற்றப்பட்ட இந்நூல் மாதம் ஒவ்வொரு அத்தியாயமாக 'ஞானபோதினி'யில் வெளி வந்தது. நூல் புத்தக உருவத்தில் வெளியாவதற்கு முன்பே தாமோதரம் பிள்ளையவர்கள் காலமாய் விட்டனர் என்பதைக் குறித்து ஆசிரியர் வருத்தத்துடன் அந்நூல் முகவுரையிலேயே எழுதியுள்ளனர்.

'மதிவாணன்' உயரிய செந்தமிழ் நடையின் இயன்றதொரு கதையாகும். இதை இவ்வளவு கடினமான நடையில் எழுதவேண்டுவதன் காரணம் முன்பே குறித்துள்ளோம். இப்புத்தகத்தினைப் பிள்ளையவர்களுக்கே உரிமை செய்யக் கருதியிருந்தனர் ஆசிரியர்; ஆயினும் நூல் வெளிவரும்முன் பிள்ளையவர்கள் காலமாகி விட்டதால் இந்நூலை அச்சிடும் விஷயத்தில் உதவி செய்த சூளும் பேட்டை ஜமீன்தார் முத்துக் குமாரசாமி முதலியாருக்கு உரிமையாக்கினர். 'செந்தமிழ்ப் புலவரைச் சந்ததம் காக்கும்' அம்முதலியாரது உதார குணத்தை ஆசிரியர் இயற்றிய உரிமைச் செய்யுளில் விளக்கியிருப்பதைக் காணலாம். மதிவாணன் 'இன்பவல்லி'யின் முதன் மலராக மலர்ந்தது. பல அரிய நீதிக் கருத்துக்கள் இம்மலரின்கண் மிளிர்கின்றன! உதாரணமாக 'ஒவ்வொருவர்க்கொரு நீதியுஞற்றுதலும் அறனேயோ?' என்பதும், 'மணமக்கள் தமது மனக்கோள் உணர்ந்தே மணவினை முடிப்பது மாண்புடைத்தாகும்' என்பதும் காணத்தக்கனவாம். இதற்குச் சான்றாகவே இந்நூலின் தலைப்பும் அமைந்துள்ளது †'புதுவது புனைந்தோர் செந்தமிழ்க் கதை'. ஆங்கில நடையைப் பெரிதும்

---

† புதுவது: புதுமுறையில் கொடியது செய்த பகைவனை மாயவனுக்குப் புலவர்தம் மகளைத் திருமணம் செய்து வைத்ததால் 'புதுவது புனைந்த' என்றார்.

பயில விரும்புவோர் அம்மொழியிற் பல நூல்களியற்றி யுள்ள லார்டு மெக்காலே (Lord Macaulay), பர்க் (Edmund Burke) முதலிய ஆசிரியர்கள் இயற்றிய உரைநடை நூல் களை விரும்பிப் பயிலுவதுபோல், செந்தமிழ் நடை கைவர விரும்புவோர் மதிவாணன் போன்ற நூல்களைப் படித்தல் தகுதியுடையது என்பது பல அறிவாளிகளுடைய தெளிந்த கருத்தாகும்.

7. **மானவிஜயம்:** சுதேசமித்திரன் பத்திராதிபர் ஜி. சுப்ரமண்ய ஐயர் அவர்களது முகவுரையோடு 1902-ம் ஆண்டு இந்நூல் முதன்முதல் அச்சிடப்பட்டது. இது நாமகள் சிலம்பின் எட்டாம் பரலாம். இரண்டாம் பதிப்பு பலராம ஐயரவர்களது குறிப்புரையோடு 1932–ல் வெளி யிடப்பட்டது. இவ்வுரையாசிரியர் எழுதியுள்ள முக வுரையில் 'போர்ப்புறம், குணவாயில்' முதலிய இடங் களைப் பற்றியும், 'பொய்கையார், கணையன்' என்னும் பெயர்களைப்பற்றியும், 'துஞ்சிய்' முதலிய சொற்பொருள் களைப்பற்றியும் விரிவான ஆராய்ச்சி செய்துள்ளனர்.

இது முழுதும் செய்யுளால் இயன்ற ஒரு அவலச்சுவை நாடகம்; 'அங்கம்' என்னும் வகையைச் சார்ந்தது. முற்றும் செய்யுளால் நடைபெறுவதாயினும் பாத்திரங் களின் ஏற்ற தாழ்விற்கேற்பச் சொல்விகற்பங்களும் நடை வேறுபாடுகளும் அமைந்துள்ளது. கடைச்சங்க காலத்து வரலாறுகள் சிலவற்றைக் கொண்டெழுந்தது. இந்நூலில் ஆன்மலட்சணம், போர்முறை, கலைஞர் யாக்கை நலத்தை மதியாதிருத்தல், கனவின் தன்மை, காரண காரிய முறைப்பாடு, பெரியோரைப் பேணுதல், ஆசானிடத் தன்பு, வாழ்க்கைப் பயன், யாக்கைச் சிறப்பு, ஆசிரிய மாணவ உறவு, முதலியவை அழகுபெற விளங்குமாறு எடுத்துக் கூறப்பட்டிருத்தல் காணப்படும்.

'எம்முடைய நண்ப ரெனப்பெரு தாரெவர்க்குஞ்
செம்மையுற விஃதுரிமை செய்கின்று—மம்மவர்

யாவேனு மென்னூ லெடுத்துப் படிக்குறூஉம்
மாவேட்கை யாளரான் மன் '—

என்று தமது நண்பரல்லாதார்க்கு உரிமை செய்துள்ள தன் காரணம், அன்னார்க்குத் தமது பெருந்தன்மையைப் புலப்படுத்த வேண்டியே. துயரிறுதி நாடகம் (Tragedy) தமிழில் இல்லை என்னும் குறையைப் போக்க எழுந்த முதல் நாடகம் இதுவேயாகும். இந்நாடகத்துள் காணப் படும் சில அரிய அடிகள் இவரது கருத்துச் சிறப்பையும் அக்கருத்தினை எடுத்தோதும் கவிதைச் சிறப்பையும் நன்கு விளக்குவனவாம். அவற்றிற் சில காண்போம்:

இகழ்ச்சியு மொன்றே புகழ்ச்சியு மொன்றே;
இன்பதுன் பங்க ளெல்லா மொன்றே;
... ... ... ...
என்ற னுள்ள மொன்றினுந் திரியாது
அதனாற் புகழ்நரை யன்பின் வியத்தலும்
அதனா லிகழ்நரை மருண்டு தெழித்தலும்
இலமே.'

வல்லடி வழக்கே நல்லடி வழக்கென
நாடி நடக்குநர் பேடிய ரலரோ;'

பித்தனும் புலவனும் மெத்தவும் ஒப்பர்'

' மிகப்படிப் புள்ளவன் சுகப்படா னிங்கே'

'துயர்க்குமுதல் அவ்வவர்தம் தொடர்பில்தனிச் சித்தமன்றா?'

' இக்கா லத்திற் கைக்கா சில்லான்
படித்தாலு மில்லை, நடித்தாலு மில்லை,
விழுந்தான் விழுந்தான், எழுந்திட மாட்டான்.'

' பொய்ம்மிறையச் சொன்னாலும் போகட்டுங் குற்றமிலை
கைந்நிறையப் பெற்றபணங் கண்கண்ட தெய்வமடா!'

' முன்னாட் கொள்கை யிந்நாட் கோளொடு
முரணலும் வழக்கே; அரணெனு நீதிநூல்
காலக் கேற்ப ஞாலத் தியலும்.'

'உலகு பொய்யெனப் பலகரை வார்சிலர்;
பிறப்பும் ஈங்கே; இறப்பும் ஈங்கே;
இன்பதுன் பங்கள் இவ்வுல கின்கணே;
மன்பெருந் துறக்கமும் வகைகெழு நரகுமிம்
மாயிரு ஞாலமே; மதிக்கவே றில்லை.'

இவையன்றி ஓரடியில் சில கருத்துக்களை யடக்கிக் கூறு வனவும் காணத்தக்கன :

'வாய்முத் துதிர்ந்து வழியெலாம் விழுமோ'
'தாமதஞ் செய்தால் தலைபோ யிடுமோ?'
'தவிச்ச வாய்க்குத் தண்ணீ ரில்லையோ?'
'காதலி னெனுது கடமை செய் துய்வலே?'

கனவின் தன்மையைப்பற்றியும், யாக்கை நிலையாமை, யாக்கைப்பயன், புலவர் இயல்பு, ஏவலாளர் இயல்பு முதலியவற்றைக் குறித்தும் இந்நூலில் கூறப்பட்டுள்ள வை படித்து இன்புறற் பாலன.

இரண்டாங்களத்தில்,

'ஒளியானை, யன்பரிடத் தொளியா தானை'

என்பது தொடங்கிவரும் இரு தாண்டகச் செய்யுட்களும்,

மூன்றாங்களத்தில்,

'உலகனைத்தும் நிறைந்தொளிரும் ஒருபொருளே
யுன்றனையான்'

என்பது தொடங்கி வரும் இரு விருத்தப் பாக்களும்,

ஐந்தாங்களத்தில்,

'மன்னுயிர்க்குத் தாயாகி வந்தவனைத் தீவினையேன்'

என்பது தொடங்கிவரும் இரு பாடல்களும்

ஆறாங்களத்தில்

'பொய்யோ வென்னப் புகலுறுமிப்
புன்மைக் குடியின் பொறைவேண்டேன்'

என்று தொடங்கும் செய்யுளும், இறுதியில் வரும்,

அன்றாலின் கீழிருந்து நால்வருக்கு மெய்ப்பொருளை
யளித்தார் தாமும்'

என்றுவரும் தாண்டகமும் சுவை ததும்பும் இன்றமிழ்ப் பாடல்களாம்.

8. **மணியசிவனார் சரித்திரம் :** இச்சரித்திரம் தமது நியம குருவான மாங்குடி மணியசிவனாரது வரலாற்றினை விரித் துரைப்பது; வடமொழி மேற்கோள்கள் பலவற்றையும் உட்படுத்தியது; மணியசிவனாரது திரு விளையாடல்கள் பலவற்றைப் பற்றியும் அழகுபட எடுத்துக் கூறுவது. இந் நூல் எழுதப்பட்டிருக்கும் முறையிலிருந்து சாஸ்திரி யாரும் அதிதீவிர சைவப்பற்றுள்ளவர் என்பது தெளி வாகும். இந்நூலைப் படிப்பார்க்கு ஆசிரியருக்கு வட மொழியிலிருந்த ஆற்றலின் அளவு ஒருவாறு புலப்படும்.

9. **தமிழ்மொழியின் வரலாறு :** இந்நூல் ஆசிரியர் உடல் நலம் குன்றியிருந்த காலத்தில் அச்சிட்டு வெளியிடப்பட் டது. 1903-ம் ஆண்டில் வெளியான இந்நூலின் முதற் பதிப்பு ஆசிரியரியற்றிய முகவுரையோடும் கிறித்துவக் கல்லூரியில் சரித்திரப் பேராசிரியராயிருந்த கெல்லட் (F.W. Kellett) அவர்கள் எழுதிய ஆங்கில முன்னுரையோடு வெளிவந்தது. இந்நூல் மிகுந்த ஆராய்ச்சியின் முடிவாக ஆசிரியரது பழுத்த அறிவின் முதிர்ச்சிக்கு அறிகுறியாக உலகினர்க்குத் தந்த ஆராய்ச்சி நூலாகும். ட்ரெஞ்ச் (Trench) மாரிஸ் (Morris) என்னும் ஆசிரியர்கள் ஆங்கிலமொழிக்குச் செய்ததைத் தமிழ்மொழி வரலாற் றிற்கு நம் நாட்டில் அடிகோலியவர் நமது சாஸ்திரியாரே என்பதில் ஐயமில்லை. இம்முறையைப் பின்பற்றிப் பிறர் யாரும் சென்ற ஐம்பது ஆண்டுகளில் பெரிய முறையில் ஆராய்ச்சி செய்யாதிருத்தலைக் காணத் தமிழைப்பற்றி ஆரவாரமாகப் பேசுவோரும் எழுது பவரும் மிகுதியும் உள்ளனரேயன்றி உண்மை வகையால் ஆராய்ந்து தமிழ்த் தொண்டு ஆற்றுபவர் சிலர்கூட இல்லை என்னும் வருந்தத் தக்க உண்மையே வெளிப்படுகின்றது.

இவர் இந்நூலிற் கூறியுள்ள பல முடிபுகளை ஆசிரியரே ஞானபோதினியிற் பற்பல இடங்களில் வெவ்வேறு அமயங்களில் வெளியிட்டனர். 'தமிழ் அகராதி'† என்பதோர் கட்டுரையில் பின்வருமாறு காணப்படுகிறது. "நிகண்டுடையாரும் பிழைபோன விடங்களுண்டு; உதாரணமாகச் சூடாமணி நிகண்டில் 'சாகஞ்சாகினி வெள்ளாடு தேக்கெனுந் தருவுதேனீ' என்று கூறப்பட்டுள்ளது. சாகம் என்ற சொல்லுக்குத் தேனீ யென்ற பொருளில்லை. சரகம் என்ற சொல்லுக்கே அப் பொருளுண்டு. ஆகவே 'சரகம்' என்றதிலுள்ள ரகாரத்தைச் சகர ஆகாரத்தின் அறிகுறியாகிய காலெனை வரிவடிவிற் கண்டு மருண்ட மருட்சியே அப் பிழைக்கு உற்ற காரணமாமாறு தேற்றம். இவ்வாறு ஆராய்ச்சிக் குறைவால் நிகழ்ந்த வழு பிற்றை நாளிலக்கியங்களிலும் இடம் பெற்றுவிட்டது. இலக்கண இலக்கியத் தெழுவரம் பிசைத்த **சிவஞான முனிவரது** மாணாக்கருட் சிறந்தவரும், தணிகைப் புராண நூலாசிரியருமாகிய **கச்சியப்ப முனிவர்** தமது **வண்டு விடு தூது** என்னும் நூலின்கண் 'ஏக்குலங் கடாங்கி யுகையாத சாகமே' என்று வண்டை விளிக்கின்றனர். ஆகவே நிகண்டேறி இலக்கியங்களிலும் பயின்று வருஞ் சொற்கள் தவறுடையன வென்பது பின்னர் நிகழும் ஆராய்ச்சிகளிற் காணப்படினும் அவற்றைத் திருத்தப் புகுதல் ஒருநாளுஞ் சாலாது'; இதே கருத்தைத் தமிழ்மொழியின் வரலாற்றில் 'பாஷை வேறுபடுமாறு' என்னும் ஏழாம் பகுதியில் கூறுகின்றனர்.

இந்நூல் இயற்ற ஆசிரியருக்கு தி. மி. சேஷகிரி சாஸ்திரியார் இயற்றிய 'திராவிடசப்த தத்துவம்' என்னும மொழி நூல் மிகவும் பயன்பட்டது என்று தெரிகிறது. இச் சேஷகிரி சாஸ்திரியார் ஆசிரியரது நெருங்கிய நண்பர்களின் ஒருவராக இருந்தவர் என்று முன்பே கூறப்பட்டிருக்கிறது.

† ஞானபோதினி 1902, பிப்ரவரி மாத இதழ்.

பிற மொழிச் சொற்கள் நம் தமிழிற் புகும் முறையை யும், புகுந்து பின் அவை யடையும் மாறுதல்களையும், தமிழ்ச் சொற்கள் பிற மொழிகளில் புகுந்துள்ள வரலாற் றையும், 'தொண்ணூறு' என்னும் சொல்லின் பகுதி 'தொண்டு' என்று இருத்தல் சாலும் என்று துணிந்து கூறு மாற்றையும், நன்னூலில் 'அஃறிணை ஆண் பெண் பாகுபாடு இல்லாமை தமிழ் இலக்கணத்திற்கே ஒரு குறை பாடு' என்று எடுத்துக் காட்டியதும், 'பொதுப்படை நியமம், சிறப்புப்படை நியமம், இழிபொருட்பேறு, இரட் டைப் பதம்' என்னும் புதுக் குறியீடுகளால் மொழி வளர்ச்சியின் விதிகளை விளக்கியதும் இவரது ஆழ்ந்த ஆராய்ச்சித்திறனை நன்கு விளக்குவனவாம். சொற் பொருளாராய்ச்சியை விரிந்த முறையில் செய்து தமிழர்க்கு ஆராய்ச்சி முறையில் புது வழி கற்பிக்க விரும்பி யிருந் தனர் ஆசிரியர். இதற்குச் சான்றாக, ஆசிரியர் 'சொற் பொருளாராய்ச்சி' என்னும் கட்டுரையில் 'அறு' என்னும் பகுதியடியாகப் பிறந்த அறம், அறல், அறவு, அறவை, அறுதல், அறுதி, அறுத்தல், அறுப்பு, அறும்பு, அறுகால் அல்லது அறுதாள், அறுவை, அறை, அற்றம், அற்றை ஆறு என்னும் சொற்களுக்கு அவயவப் பொருள் கூறி விளக்குவது காண்க. இக் கட்டுரை ஞானபோதினி யில் வெளியானபோது தமிழ்ப் புலவர் பலரும் இம் முயற் சியைப் புகழ்ந்ததோடு நில்லாமல் 'தாது பதார்த்த விளக்க அகராதி' யொன்று ஆசிரியர் இயற்றவேண்டும் என்றும் வற்புறுத்தி வந்தனர். அம் முயற்சியிலும் ஆசிரியர் ஈடு பட்டிருந்தனர்; ஆயினும் ஊழ் தான்முந்துற்றபோது யார் என்ன செய்ய முடியும்? ஆகவே அம் முயற்சியும் அறைகுறையாகவே போயிற்று.

சாஸ்திரியார் இயற்றிய நூல்கள் யாவற்றுள்ளும் தலைசிறந்தது 'தமிழ் மொழியின் வரலாறு' தான் என் பது அறிஞர்களது துணிபு. இந் நூலைத் தமது ஆங்கில

ஆசிரியரும், கல்லூரித் தலைவருமான டாக்டர் மில்லர் அவர்களுக்கே உரிமை செய்தனர். ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் 'மனோன்மணீய' நாடகத்தைத் தமது ஆசிரியரும் கலாசாலைத் தலைவருமான 'ஹார்வி' துரைக்கு உரிமை செய்ததை இது நினைவூட்டுகிறது.

இந்நூல்களேயன்றி இனி யியற்றி வெளியிடவேண்டுமென ஆசிரியர் கருதியிருந்த நூல்கள் பலவாம். அவற்றில் முக்கியமானவை 1. சூர்ப்பணகை 2. முத்ரா ராட்சசம் என்னும் நாடகங்களும் 3. உமை திருமணம் என்னும் மொழிபெயர்ப்புச் செய்யுள் நூலும், 4. இன்னுமா? என்னும் எளிய தமிழ் நடையில் இயற்றப்பட்ட ஒரு தமிழ்க் கதையும், 5. அவ்வைக் காட்சி என்னும் செய்யுள் நூலுமாம். சூர்ப்பணகை என்பதொரு பிரகசன சாதி நாடகம். இதை 1902-ல் இயற்றத் தொடங்கினராயினும், இது முற்றுப் பெறவில்லை : இது நாமகள் சிலம்பின் ஏழாம் பரலாக வர இருந்தது. இதன் முதற்களம் இன்னவாறு எழுதப்பட்டிருந்தது என்பதற்குச் சில சான்றுகள் நாடகவியல் உரையினுல் காணக் கிடக்கின்றன. 'நாமகள் சிலம்பின் ஏழாம் பரலில் சூர்ப்பணகை தனக்குப் பேரழகு வாய்ந்த தலைவன் கிடைப்பானோ என்று சோதிடங் கேட்க ஒரு முனிவன்பாற் செல்ல அவன் இவளைக் கண்டு பயந்தோடிக் கீழே விழுந்தனன்'; 'சூர்ப்பணகை என்னும் பிரகசனத்தில், இலக்குமணர், சூர்ப்பணகையின் மூக்கை அறுத்துவிட, அவள் அது காரணமாகக் கோபத்துடன் முறையிட்டது உறுப்பறையான் வந்த வெகுளி'; 'சூர்ப்பணகை என்னும் பிரகசனத்தில், சூர்ப்பணகை தனக்குச் சிறந்த நாயகன் கிடைப்பானோவென்று சோதிடம் கேட்க ஒரு முனிவன்பாற் செல்லுழி, ஆண்டுப் பன்னக சாலையில் இராமபிரானையே கண்டபோழ்து அவள் அடைந்த வியப்பு கருவிகள் உறுவான் முயலுழிப்பயனே முடிந்ததனுலுண்டாயது.'

இனி 'முத்ராராட்சசம்' என்பது வடமொழியில் விசாகதத்தாரால் இயற்றப்பட்ட ஒரு நாடகம். இதைத் தமிழில் மொழிபெயர்க்கமுற்பட்ட ஆசிரியர் முதல் அங்கத்தில் இரண்டு களங்களை முழுதும் செய்துள்ளனர். 'உமை திருமணம்' என்பது வடமொழியில் காளிதாசன் இயற்றியுள்ள 'குமாரசம்பவ'த்தின் முதல் ஏழு சருக்கங்களின் மொழி பெயர்ப்பு; இந்நூலும் முற்றுப்பெறவில்லை; இயற்றிய அளவு கிடைத்தும் இலது. 'இன்னுமா?' என்பதொரு எளிய நடைத்தமிழ்க் கதை; இதுவும் இயற்றிய அளவு கிடைத்தபாடில்லை. 'அவ்வைக் காட்சி' புதுவழியில் இயற்றப்பட்ட ஒரு செய்யுள் நூல், மெய்க்கோள் பலவற்றையும் விளக்கும்பொருட்டு எழுந்த இந்நூலும் அழிந்துபட்டது என்றே காண்கிறது.

திருநாரையூரென்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் **பொல்லாப் பிள்ளையாரின்** மெய்யடியார் **நம்பியாண்டார் நம்பியை** ஒருமயம் அபயகுலசேகர சோழ மன்னர் வணங்கி, "ஐயா! சமயகுரவர் மூவர் அருளிச் செய்த தமிழ் மறையாகிய தேவாரத் திருமுறையும் திருத்தொண்டர்களுடைய வரலாறும் பூவுலகத்தில் விளங்கல் வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார். நம்பியும், பொல்லாப் பிள்ளையாரை வணங்கிக்கேட்க, அவரும் தில்லையிலே கனக சபைக்குப் பின் பக்கத்தில், சமய குரவர்கள் மூவருடைய கைகளின் அடையாளத்தையுடைய அறையினுள்ளே, தேவாரத்திருமுறைகள் இருப்பதாகக் கூறினர். இதனையறிந்த சோழ வரசர் சிதம்பரம் சென்று தில்லைவாழந்தணர்களிடம் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அவ் வந்தணர்கள், "அரசே! திருமுறைகளை வைத்தருளிய சைவத்திருநெறித் தலைவர் மூவர் எழுந்தருளி வந்தால் அறை திறக்கும்" என்றனர். சோழவரசர் தில்லை நடராசருக்குச் சிறப்பான பூசை செய்வித்து, சமயகுரவர் மூவரைத் திருவீதியிலே திருவுலா

10

வருவித்துக் கனகசபையை வலஞ்செய்வித்துத் திருமுறைகள் இருக்கும் அறையின் எதிரே கொணர்வித்து நிறுத்திக் கொண்டு, தில்லைவாழந்தணர்களை நோக்கி, "சமயகுரவர்கள் மூவரும் எழுந்தருளி வந்துவிட்டார்கள். இனி அறை திறக்கலாமே" என்றார். தில்லைவாழந்தணர்கள் சோழ வரசருடைய அறிவை வியந்து, அறையைத்திறக்க அனுமதித்தார்கள்.

அறையைத் திறந்து நோக்குங்கால், அளவில்லாத ஏடுகள் கறையானால் பழுதாயிருப்பது கண்டு சோழ வரசரும் நம்பியாண்டார் நம்பியும் கண்ணீர் சொரிந்து வருந்தினர். அப்போது, "தேவாரப் பதிகங்களிலே இக்காலத்துக்கு வேண்டுவனவற்றை மட்டும் வைத்து விட்டு, மற்றவைகளைச் செல் மண் மூடச் செய்தோம்" என்ற அசரீரிவாக்கு ஆகாயத்தில் எழுந்தது. சோழ வரசரும் நம்பியாண்டார் நம்பியும் கவலை தீர்ந்தார்கள்.

அவ்வண்ணமே, ஆசிரியர் பரிதிமாற் கலைஞர் எழுதிய சில நூல்கள் மறைந்தன; இதுவும் இறைவன் திருவருளே என மனந்தெளிதல் ஏற்புடைத்தாகும்.

இவரது நூல்களில், பாவலர் விருந்தும் தனிப் பாசுரத் தொகையும் இயற்றமிழில் செய்யுள் நூல்களாகவும், மதிவாணன், தமிழ் வியாசங்கள், மணிய சிவனார் சரித்திரம் என்பன இயற்றமிழில் உரை நடைநூல்களாகவும், நாடக வியல் நாடகத் தமிழில் இலக்கண நூலாகவும், ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் என்பன நாடகத் தமிழிற்கு இலக்கியங்களாகவும், தமிழ் மொழி வரலாறு, தமிழ்ப் புலவர் சரித்திரம் என்பன ஆராய்ச்சி நூல்களாகவும், சித்திர கவிவிளக்கம் என்பது இயற்றமிழில் அணியிலக்கண நூலாகவும் அமைந்துள்ளன.

II **பதிப்பாசிரியர்:** இவர் பதிப்பித்த நூல்கள் இருவகையாம்; அவையாவன: 1. பண்டையோர் இயற்றிய நூல்கள், 2. தாமும் தமது நண்பர்களும் இயற்றமிழ்

மாணவர்களும் இயற்றிய நூல்கள். இவற்றில் இவர் பதிப்பித்த பண்டைய நூல்கள் ஆறு; இவை: 1. சயங்கொண்டாரது கலிங்கத்துப் பரணியும், 2. புகழேந்தியாரது நளவெண்பாவும், 3. மழவை மகாலிங்கய்யர் இலக்கணமும், 4. தாண்டவராய முதலியாரது பஞ்சதந்திரமும், 5. மதுரைச் சபாபதி முதலியார் இயற்றிய திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழும், 6. மதுரை மாலையும் ஆம். இவற்றில் முதல் நான்கும் சென்னை தாம்ஸன் கம்பெனியாரால் வெளியிடப்பட்டன. இவரது கலிங்கத்துப் பரணிப் பதிப்பும் நள வெண்பாப் பதிப்பும் பெரும்பாலும் ஏட்டுச் சுவடிகளைப் பின்பற்றியவை யாதலால், கையெழுத்துப் பிரதிகளை ஆதாரமாகக் கொண்டு பிற்காலத்தார் பதிப்பித்த பதிப்புக்களினின்றும் மாறுபட்ட பாடங்களோடு விளங்குகின்றன.

தாமும் தமது மாணவர்களும் நண்பர்களும் இயற்றிய நூல்கள் மிக மல்கியதை உணர்ந்த ஆசிரியர் அவையிற்றினை வகுத்துப் பற்பல நூற்றொகையுள் அடக்குவாராயினர். அங்ஙனம் அடக்குகையில், நாடக நூல்களின் வகையினை **நாமகள் சிலம்பு** என்றும், செய்யுள் நூல் வகையினைத் **தமிழ்மகள் மேகலை** என்றும், கதைகளாகிய உரைநடை நூல் வகையினை **இன்பவல்லி** என்றும், ஞானநூல் வகையினை **ஞானதரங்கிணி** என்றும் இவையிற்றுள் அடங்காத நூல்களைக் **கலாநிதி** என்றும் பெயர் கொடுத்து வகுத்தனர். இவற்றுள் அறுபத்தைந்து நூல்கள் அடங்கியுள்ளன. இவற்றையன்றியும் **கலைமயில் கலாபம்** என்னும் தலைப்பில் பண்டையாசிரியர் நூல்களை ஆராய்ந்து அச்சிட்டனர். இவையேயன்றி, குமரகுருபர அடிகள் இயற்றிய 'நீதிநெறிவிளக்க'த்து முதல் ஐம்பத்தொரு செய்யுட்களுக்கு விசேட உரை யெழுதினர். அது தருமபுர ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவுளப் பாங்கின்படி வெளியிடப்பட்டுள்ளது.

**III பத்திரிகாசிரியர்:** இவ்வாசிரியர் தமது பல வேறு தொழில்களுக்கிடையே பத்திரிகாசிரியர் தொழிலும் நடாத்தி வந்தனர். இவர் நடாத்திய பத்திரிகை 'ஞான போதினி' என்னும் திங்கள் வெளியீடாம். முன்பே இது பூரணலிங்கம் பிள்ளையவர்களால் சில ஆண்டுகளாக நடத்தப்பட்டு வந்தது. இது மாதமொருமுறை நாற்பது பக்கங்களோடு வெளிவந்து கொண்டிருந்தது. 1900-ல் சாஸ்திரியாரும் கூட்டாசிரியராக இதனை நடத்தி வரலாயினர்; 1903-லும், இறுதிவரை தாமே பதிப்பாசிரியராயுமிருந்தனர். இப்பத்திரிகை, இலக்கியம்பற்றி ஒன்றுமே தெரியாதவர்களுக்காக வெளிவரும் பத்திரிகைகளைப் போலாது, பாமரர், பண்டிதர் இருவகையினரும் கற்றுக் களிப்புறும் வண்ணம் வெளியிடப்பட்டது. இடையிடையே கிடைத்த ஓய்வு நேரங்களில் தாமே பல அரிய பொருள்களைப் பொறித்தும், பலரைப் பொறிக்குமாறு தூண்டியும் திங்கள்தோறும் இப்பத்திரிகையைச் செவ்வனே நடாத்தி வந்தனர்.

இவ்வாறு பல வகையிலும் தமிழுக்குத் தொண்டு செய்து வந்த ஆசிரியருக்குத் தமிழே கடமை; தமிழே இன்பம்—தமிழே தான், தானே தமிழ். இவருக்குத் தமிழ் இலக்கியத்தில் அழியாத இடம் உண்டு. தற்கால நாடகத் தமிழிற்கு இலக்கணம் இயற்றியவரை, தமிழ் மொழியாராய்ச்சியையே முதன் முதல் சீரிய முறையிற் செய்து காட்டியவரை, தமிழ் உயர்தனிச் செம்மொழி என்று நிலை நாட்டியவரைத் தமிழ் மறக்குமா? இவரைப் பற்றி ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் கூறுவது; 'சாஸ்திரியாரால் இயற்றப்பட்ட நூல்கள் தமிழ் அன்னையின் அணிகள். அவைகளுள் ஒன்று 'தமிழ் மொழியின் வரலாறு'; 'தமிழ் நாட்டில் தமிழ் மொழி வரலாற்றுக்கு வழிகாட்டியவர் சூரியநாராயண சாஸ்திரியார் என்னும் பரிதிமாற்கலைஞரே. அவர் நீண்டநாள் உலகில் வாழ்ந்தி

ருந்தால் தமிழ் அன்னை இழந்த அரியாசனத்தில் இவர்ந் திருப்பாள். முத்தமிழும் ஆக்கமும் பெற்றிருக்கும்' என்பதாம்.

'அந்தணகுலத்தின் விந்தையிற் றோன்றி
அன்னார்ப்பற்றிய இன்னுப் பழமொழி
போலியுரையெனச் சால விளக்கிய'

தண்டமிழ் புலவர் இவர் என்பதில் எத்துணையும் ஐய மில்லை.

---

## அத்தியாயம் 9

## கூற்றும் கொள்கையும்

ஆசிரியர் பொதுவாகத் தமது வாழ்க்கையின் குறிக் கோளாகக் கொண்டிருந்த கொள்கைகளைத்தவிர, இலக் கியம்பற்றியும் சமூக சீர்திருத்தம் பற்றியும் பல சிறப் பான கருத்துக்களையும் கொண்டிருந்தனர். இவற்றைத் தமது நூல்களிற் பலவிடங்களிலும் பொறித்து வைத்துள் ளனர். ஆசிரியர் இயற்றியுள்ள நூல்களைக் கூர்ந்து பரி வுடன் ஆராய்வார்க்கு இவையெல்லாம் விளங்குவன வாம். பொதுமை வகையால் பார்க்கும்போது, தமிழிற் புதியன புகத் தொடங்கியவற்றிற்குத் தமது நூல்களில் இடந்தருதலே இவரது முதன்மையான கொள்கை என லாம். இப்புதியன, இலக்கியத்தில் நடை, மரபு என இரு வகைப்படும்; நடையாவது, உரை நடையோ செய்யுள் நடையோ நாடகங்களில் பேச்சு நடையோ ஆகியவற்றைக் குறிக்கும்; மரபாவது, நடை எவ்வாறாயினும் அதை எழுதுகின்ற முறை—அதாவது, கருத்துக்களைக் கோவைப் படுத்திப் படிப்போர்க்குத் தருகின்றவாறு. இவையே யன்றி, பல சீர்த்திருத்தக் கருத்துக்களையும் ஆசிரியர் தமது நூல்கள் வாயிலாக வெளியிட்டுள்ளனர்.

கலாவதி நாடகத்தின் முகவுரை இறுதியில்

தொன்று தோன்றிய யாவவை தூயன
இன்று தோன்றிய யாவவை தீயன
என்றி யம்புமி யல்புண ராமகன்
அன்றி மூதறி வாள ரறைவரோ ?'

என்று

இவர் கூறுவதால், பழமை யாதும் நல்லது புதுமையாதும் தீயது என்னும் கருத்து இவருக்கு உடன்பாடன்று என்பது நன்கு புலப்படுகின்றது. ஆயினும் இலக்கியத்தில் அவ்வப்போது காணப்படும் சில மாறுதல்கள் தம்மியல்பாகவே நாளடைவில் ஏற்படுவனவே என்றும், நினைத்தபடி எல்லாம் இலக்கிய மரபோடு நினைத்தவர்கள் எல்லாம் விளையாடிக் கொண்டிருந்தால் மொழியே உருப்படாது என்பதும் ஆசிரியர் கருத்து. இது 'தமிழ் மொழியின் வரலாற்'றில் சாஸ்திரியார் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளதாற் புலனாகும்: 'பாஷை திரிந்து வேறுபடுவதெல்லாம் தன்னியல்பாகவேயாம். ஒருவனாலுந் தான் விரும்பியபடி தான் பேசும் பாஷையை மாற்ற முடியாது. மக்களறிவின்றியே பாஷை முதிர்ந்து கொண்டு செல்லும், பல்லாண்டுகள் கழிந்த பின்னரே முதிர்ச்சிக் குறிகள் தோன்றும்..............பாஷையின் ஒழுகலாற்றை மாற்றுதல் எவரானும் முடியாததாம். ஆதலால் தமிழ்ப் பாஷையின் ஒழுகலாறு இன்னதென்று உய்த்துணர்ந்து கொண்டு, ஆற்று வெள்ளத்தின் வேகத்துடன் செல்வான் போல அவ்வொழுகலாற்றினை யொட்டி அதனோடியைந்து தமிழ்ப் புலவரும் தம் பாஷையைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும். இனிச் சிலர் 'புதியன புகுதல் தமிழிற்கு ஒக்குமாயினும் பழையன கழிதல் ஒவ்வாது' என்று கொள்கையுடையார் போலத் தாம் எழுதும் நூல்களின் கண் பழையன கழிந்த சொற்களிலும் சொல்லுருவங்களிலும் அளவிறந்தவற்றை வழங்கினர். இவர் செயல் தம்

முடைய வல்லமை காட்டிப் படிப்போரை மருட்டித் தம்மைப்பற்றி அவர்கள் நல்லெண்ணங் கொள்ள வேண்டும் என்று நினைத்துச் செய்ததாகக் கருதப்படும்; படலால், இவர் தாம் எண்ணியபடி நன்கு மதிக்கப்பாடு பெறுவதில்லை. சாமானிய சனங்கள் இன்னோர் நூல்களைத் தொடவும் அஞ்சுகின்றனர். மேலும் இங்ஙன மெழுது வார் சுவை போலிச்சுவை எனப் பலரும் ஒதுக்குவர்.'

தமிழில் நிறுத்தக் குறிகளைப் பெரும்பாலும் பண்டைய ஆசிரியர்கள் கையாளுவதில்லை. அவற்றைப் பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதியிலேயே சில ஆசிரியர்கள் மிகுதியாகக் கையாளத் தொடங்கினர். அந்நிறுத்தக்குறிகள் இல்லாவிடில், வாக்கியங்களின் பொருள் பெரிதும் விளங்குவதில்லை. ஆறுமுக நாவலர் முதலிய உரைநடையாசிரியர்கள் இக்குறிகளைத் தம் நூல்களில் முன்பே கையாள ஆரம்பித்தனர். ஆயினும் சிலவற்றை மிக அதிகமாகப் பயிலத்தொடங்கிய சில ஆசிரியர்களில் சாஸ்திரியாரும் ஒருவர். பத்தி (பாரா) பிரித்தெழுதலைப் பழந்தமிழர்கள் மேற்கொள்ளவில்லை. இதையும் கையாளத் தொடங்கிப் பலருக்கும் பயிற்றுவித்தனர். சந்திசேர்த்து எழுதுதலை உரை நடையில் அளவு மீறி மேற்கொள்வதால், எழுதப்பட்டுள்ள தொடர் மொழிகளின் பொருளே விளங்காமற் போவதுமுண்டு. இதைப் பற்றி ஆசிரியர் கூறுவதாவது: 'இனித் தமிழ்ப் புலவர்கள் தாம் எழுதும் நூல்களில் சந்தி சேர்த்தே எழுதுகின்றனர். சந்தி சேர்த்து எழுதுதலே தமிழ் இலக்கண மரபாயினும், வசன நடையினும் அவ்வாறு எழுதுதல் வேண்டும் என்ற நியமம் இல்லை. முற்காலத்தே ஏற்பட்ட உரை நூல்களிலும், முற்றும் சந்தி சேர்த்தெழுதியிருக்கக் காணோம். இக்காலத்தினும் பண்டிதர் பலர் சில இடங்களில் சந்தி சேர்த்தும், சில இடங்களில் சந்தி சேராமலும் எழுதி வருகின்றனர். ஆதலின் கடின சந்தி

களை எப்பொழுதும் பிரித்தெழுதுக. பொருள் மயக்கமாவது, பொருள் வேறுபாடாவது உண்டாக்க வல்ல சந்திகளைச் சேர்க்காமல் பிரித்தே எழுதுக. சந்தி சேராமையாற் பொருள் கெடுவதாயிருந்தால், அவ்விடத்தில் சந்தி சேர்த்தெழுதுக. எளிய சந்திகளைச் சேர்க்கினும் சேராவிடினும் ஒன்றுதான். எளிய சந்திகளைச் சேர்ப்பதனாற் சாமானிய ஜனங்களுக்குப் படிப்பதிற் கஷ்டப்பட வேண்டியது ஒன்றுமில்லை. இவ்விதிகளெல்லாம், வசன நடையில் அனுசரிக்கத்தகுவன ஆகும்; தமிழ்ச் செய்யுள் நடையிலும் இவை தழுவத்தக்கனவோ? இது சிறிது வாதம் விளைக்கத் தக்கதோர் விஷயம். செய்யுளின்கண் இவை மேற் கொள்ளப்படுமேல் செய்யுளை ஓசை யூட்டி இசையறுத்துப் படிக்கும்போது இடர்ப்பாடு காணப்படும். ஆதலால் சந்தி சேர்த்து இசை நலம் கெடாமல் ஒரு பாடம் தந்த பின்னர்ச் சந்தி பிரித்துப் பிறிதொரு பாடம் அதனடியில் தருதல் வேண்டும்.

ஆகவே சந்தி பிரித்தெழுதும் விஷயத்தில் எவ்வளவு மட்டில் இடர்ப்பாடின்றி மேற்கொள்ளலாமோ அவ்வளவையும் மேற்கொள்ளவே வேண்டும். இதன்கண்ணே தமிழ் வாணர் காலம் போக்கற்க.' *

'பழையன கழிதலும் புதியன புகுதலும் ஆகிய இவ்விரண்டும் பாஷை இயக்கத்திற்குரிய இரண்டு கால்களென மதிக்கப்படுகின்றன. இவ்வுண்மையை உய்த்துணர்ந்து தமிழ்ப் பாஷையின்கட் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை யுடனே மேற்கொள்ளுதல் தமிழ் மக்கள் கடனும்.' *

அன்றியும், எவ்விடத்திலும் ஒரே மாதிரியான நடையைக் கையாளாமல் பொருளுக்கேற்றதும், பேசுவோனது நிலைமைக் கேற்றதுமான நடையைக் கையாளுதல், பொருத்தமானது. இது இவ்வாறாகச் சிலர் நடைக்கும்

* தமிழ் மொழியின் வரலாறு—பாஷையின் சீர்திருத்தம்.

கருததுககும் தொடர்பே இல்லை என்னும் கருத்துப்பட மிகக் கடின நடையையோ கொச்சைத் தமிழையோ எழுதத் தொடங்கிவிடுகின்றனர். இம்முறையும் சாஸ் திரியாருக்கு உடன்பாடன்று. பெருமிதமான நடையா யிருப்பினும், பலரானும் தெரிந்துகொள்ளக் கூடியதா யிருக்க வேண்டும் என்பதே இவர் கருத்து.

இவர் எழுதிய நூல்களில் தொட்ட இடங்களிலெல் லாம் புலனாவது இவரது தாய்மொழிப் பற்றேயாம். 'ஐந்தெழுத்தாலொரு பாடையென் றறையவும் நாணுவர் அறிவுடையோரே' என்ற ஈசான முனிவரைக் கூசாது முனிவர்; சுந்தரம் பிள்ளையவர்களது 'பல்லுயிரும் பல வுலகும்' என்று தொடங்கும் மனோன்மணீயத்தடுத்த பாட்டினை எடுத்துக் காட்டுவர். தமிழ் உயர்தனிச் செம் மொழி என்பதனைப் பல காரணங்கள் கூறி நிலைநாட்டு வர்; முருகனைத் 'தமிழுன் புலவா!' 'தமிழ் வாணர்க்கிறை வனே!' 'உயர் தமிழ் ஆய்தந்த ஒண்புலவா!' என்று பாராட்டுவர்; தமிழை மதியாதிருந்த மதுரையை, 'புலத் தமிழ் தோற்ற போலி மதுராய்!', 'மனைவி சொற்கேட்டுத் தனை யீன்றெடுத்த, தாயினைப் பசியிற் றீய விடுக்கும், பதகனை யொத்த மதுரை மாநகரே!' என்று இகழ்வர்.

இவர் இயற்றியுள்ள 'மதுரை மாநகர்' என்னும் ஆசிரியப்பாவினைப் படிப்போர்க்கெல்லாம் இவரது தமி ழன்பு புலனாவதோடு, மதுரையம்பதிமீதும் உரையாசிரி யர் நச்சினார்க்கினியர் மீதும் இவர்க்கிருந்த பேரன்பு நன்கு புலனாகும். 'நச்சிப் பாண்டியர் மெச்சி வளர்த்த சங்க மிருந்து பொங்கிய நன்னகர்' என்று மதுரையை உயர்த்திப் பேசினர்;

'செந்தமிழ்ப் 'பாற்கடற் புந்திமத் தாற்கடைந்
துட்பொரு ளாகிய தட்பநல் லமுதை
உரையெனத் தந்த நரைமூ தாளர்
அந்தண குலத்தின் விந்தையில் தோன்றி

அன்னூர்ப் பற்றிய இன்னுப் பழமொழி
போலி யுரையெனச் சால விளக்கிய
உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க் கினியர்'

என்று அவ்வுரை யாசிரியரை மிகப் புகழ்ந்துள்ளனர். ஆசிரியர் பயின்றுவந்த தொல்காப்பியப் பிரதிகளில் நச்சினர்க்கினியர் உரைகளைப் பற்றி மிகப் புகழ்ச்சியாகப் பல இடங்களிலும் எழுதி வைத்துள்ளனர். இருவரும் மதுரைவாசிகள், அந்தணர் குலத்தவர், தமிழ் பயின்றோர் என்பவையெல்லாம் இதற்குக் காரணமில்லை என்பது வெளிப்படை. இவர் நடாத்திவந்த 'ஞானபோதினி' என்னும் பத்திரிகையில் ஒரு முறை கீழ்க்கண்டவாறு குறித்துள்ளனர் : 'மதுரைமாநகர் செய்த தவத்தால் தோன்றிய நச்சினர்க்கினியருக்கு நமது அன்பின் அறிகுறியாக வெண்கற் சிலை யொன்று அமைத்து நமது சங்கத்து (மதுரைத் தமிழ்ச் சங்கத்து)ச் சபா மண்டபத் தலைக்கண் நிறுவுதல் வேண்டும்.' இதை நோக்கின் ஆசிரியர் சிவஞான முனிவருக்குச் சேனவரையரிடத்தி லிருந்த மதிப்பு, சாஸ்திரியாருக்கு நச்சினர்க்கினியர்பால் இருந்ததென்று தெரிகிறது.

ஆராய்ச்சி செய்யுமிடத்து, பழைய புராணக் கருத்துக்களையும் வரலாறுகளையும் ஒதுக்கிவிட வேண்டும் என்பதே இவர் துணிபு. 'கருத்துக்கள் தன் முயற்சியானெழும் ஒலிகளின் சம்பந்தமாகவே வெளிப்படுகின்ற இயல்பினின்றுமே பாஷைகள் உண்டாதலியலும் என்பது யாவரும் மறுக்க முடியாததோர் பாஷை நூலுண்மை. இவ்வுண்மையை யொட்டியே தமிழ்ப் பாஷையின் தோற்றமும் ஏற்பட்டிருத்தல் மிகவும் கவனிக்கற்பாலதே. ஈதிவ்வாருகத் தமிழ் நூலாசிரியர் பலரும் இக்காலத்தினும் ஆங்கில நூற்பயிற்சி யில்லாத நண்பருட் சிலரும் தமிழ் மொழியும் வடமொழியும் தேவ பாஷைகள் என்றும், இவ்விரண்டும் முறையே அகத்தியனுர்க்கும் பாணினியார்க்

கும் சிவபெருமானுல் உபதேசிக்கப் பட்டனவென்றும் கூறுவர்' என்று கூறுவதை நோக்குமிடத்து எவ்வளவு பெரிய ஆசிரியராயினும் அவர் கூற்று அறிவிற்குப் புறம் பானதாயின் கூசாமல் ஒதுக்க வேண்டுவது என்பதே இவர் கொள்கை எனத் தெரிகிறது.

பொதுவாக இலக்கியத்திலும், சிறப்பாகச் செய் யுளிலும் சித்திர கவிகள், மிறைக்கவிகள் முதலிய செப்பிடு வித்தைகள் செய்வதில் வீண்காலம் போக்கு வதை இவர் கண்டிக்கிருர். 'அணிகளுட் சொல்லணிகளே விசேடமாய் நல்லிசைப் புலவர்களால் மதிக்கப்படுவன அல்ல. முற்காலத்துச் சங்கச் செய்யுட்களிலெல்லாம் சொல்லணிகள் காண்டல் அரிது. இச்சொல்லணிகளினும் சித்திர கவிகள் மிகவும் ஒதுக்கப்படுவனவாயின........ இவை யனைத்தும் பெரும்பாலும் பொருட் செறிவிலவாய் வீண் சப்த ஜாலங்களாய் மட்டில் முடிந்தன. இக்காலத் திலும் தென்னுட்டிற் புலவர் பலர் யமகம் திரிபு பாடு தலையே பெரிதாக எண்ணி வாணுளை வீணுள் கழிப்பர்.'* அன்றியும் தமிழில் எண்ணிறந்த புராணங்கள் இருக்க அவற்றில் சில நூல்களே உண்மையான கற்பனைத் திறனேடு இயங்குவனவெனவும், ஏனையவை யாவும் இச் சில நூல்களைப் பெரிதும் பின்பற்றித் தமக்கென ஒரு பெருமையில்லாது பத ஜாலங்களென நிற்பன என்பதும் இவர் கருத்தாம். 'புராணமாவது, பூர்வீக ஆசிரியர்க ளாகிய திருத்தக்கதேவர், கல்லாடர், கம்பர் முதலிய வித்வ சிரோமணிகள் கூறிய கற்பனைகளைத் தவிர்த்துச் சுதந்திர யூகத்தாலமைந்த கற்பனைகளும் அலங்காரங் களும் அர்த்தபுஷ்டியும் கிஞ்சித்தேனும் இல்லாமல், கடவுளைப்பற்றித் தமக்குத் தோன்றியவாறு லீலை செய்த தாகச் சிறுபிள்ளைத்தனமாக எழுதப்பட்டிருக்கும் ஒரு நூலாம்' என்று இவர் கூறுவது காணத் தக்கது.

* தமிழ் மொழியின் வரலாறு—ஐவகை இலக்கணம்.

'பெண்ணின் பெருமை'யைப்பற்றி ஆசிரியர் கூறும் கருத்துக்கள் மிகவும் அழகாக அமைந்திருக்கின்றன. 'கற்பு' என்னும் தனிப் பாசுரத்தில் மகளிர் கற்பைப் பற்றிப் பொதுவாக ஜனங்கள் நினைக்கும் கருத்துக்களை மாற்றி அதற்கு அழகான புதுப் பொருள் கூறுகின்றார் :

'கற்பென் பதுகலை கல்லாமை யன்று;மற்
றிற்படி கடவா திருத்தலு மன்று;
தீய வழியினிற் செல்வுழி நின்னை
யேயே யிஃதெனை யென்னு திருந்து
வாயிலாப் பூச்சியாய் மன்னுத லன்று;
மாடுபோ லுழைத்துக் கூடி வாழ்ந்து
காலந் தன்னைக் கழித்தலு மன்று;
... ... ... ...
கனவிலும் பிறரன்பு கருதா நலமே
உன்கருத் தொட்டா வுயரியல்
பென்று கூறுப மன்றவான் றோரே.'

'மாதர்' என்னும் தனிப் பாசுரத்தில்,

' நும்மை யடிமையா நோக்கித் தெழிப்பவர்
போலிக ளும்மையும் போலியா மதித்தனர்.
ஒத்த உரிமைகள் சித்த மகிழ்தர
மைந்தரோ டெய்தினிர் வாழிய!
... ... ... ...'

என்கிறார் மகளிர்க்கு ஆடவரோடு ஒத்த உரிமை வேண்டும் என்று குறிக்க வந்த கலைஞர்.

கற்பைப்பற்றி மட்டும் ஏராளமாக அளந்து விட்டு, ஆடவர் பயில வேண்டிய ஓரிலாள் நோன்பைப்பற்றிச் சிறிதும் பேசாத புல்லறிவாளரை நோக்கிக் கணவன் என்பானது இலக்கணம் கூற வந்த ஆசிரியர் ' ஓரிலாட் கோள் முறையுற்ற தலைவன்' என்று கூறுகின்றார்; தலைவியைத் தலைவன் நடத்த வேண்டிய முறையையும்,

பணமணி தன்னைப் பரிவுடன் போற்றும்
பணியென மனைவியைப் பாதுகாக் குநனாய்த்
தன்னில் லாளைத் தனக்கிணை யாய
தலைவியா மதிக்குந் தன்மை யாளனாய்
வயங்குந னல்லனோ நயங்கொளுங் கணவன்?
மற்றுள மார மணந்த தையலைச்
சற்றுமரு ளின்றித் தவிப்பான் புரிகுநன்
கண்ணவ னோவக் காரிகை தனக்கு?
... ... ... ...

என்னுமிடத்திற் கூறுகின்றார். பெண்களுடைய சுதந்திரத்தைப் பறித்துக்கொள்ளும் சிலரை *'மருட்டு விழி மட்வார் தம் உரிமை எலாங்கவர்ந்து கொடு மயங்கிப் பேசுந் திருட்டு மொழியாளர்' என்பர்.

† 'பெண்ணெதற்கும் உரியளலள் தன்வயமு
முடையளலள் பேதையாவள்
நண்ணியதன் தலைவனுக்குக் குற்றேவ லாட்டியென
நாளும் தம்முள்
எண்ண மிட்டுப் புன்மொழிகள் பல பிதற்றித்
திரிதருஞ்சில் எளியர்... ...'

என்று அவர்களை வாயார வருணித்துள்ளனர்.

காதலைப்பற்றிக் கூறுங்கால் ஆசிரியர் கண்டதும் கொள்ளும் காதலே காதல் என்றார்.

‡ 'கண்டவக் கணத்தினை காதல் கொண்டிடாது
எண்டகு மன்பினர் எவர்கொ லாபவோ?'

ஆகவே, துறவறத்தினும் இல்லறமே மிகச் சிறந்தது என்று ஆசிரியர் கூறுவதில் வியப்பொன்றுமில்லை. 'இல்லறம்' என்னும் தனிப் பாசுரத்தில்,

---

* பாவலர் விருந்து—பரிந்துரை. முதற் செய்யுள்.

† கையறுநிலை. ‡ மதிவாணன்.

... ... ... ...
ஏத்தருந் தகைய இல்லற மெனுமிம்
மாத்தடந் தேரினை வாழ்க்கையாம் போர்க்களஞ்
செலுத்துபு துன்பத் தியரை யெறிந்து
தொலைத்திட லறியார் துறவு துறவென
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து
மயக்கினு மாழ்கலீர்! மாந்தர்காள்
உயக்கமின் றில்லற முற்றுமெய் யுணர்மினோ'

என்பது காண்க. அன்றியும் ரூபாவதி நாடகத்தின் 'பின்னுரை'யில் 'சுந்தராநந்தன்'

'இல்வாழ்க்கையே நல்லொழுக்கம் கற்பிக்கும் உத்தமக் கல்லூரியாம். ஆகவே அகிலத்துள்ள ஆன்மகோடிகளே வெறுத்துத் துறவறம் பூண்டு உடல் வற்றி மெய்ந்நிலை தவறி வாழ்நர் போலாது, அன்பினுற் கட்டுண்டு இல்லறம் பூண்டு மனித சமூகத்தில் இருந்து பிறர்க்குப் பயன்பட்டு வாழ்வோமாக' என்று கூறுவதும் இவர் கருத்தை ஒத்தே யிருக்கிறது.

மாணவர் ஆசிரியர்கட்குள் இருக்க வேண்டிய உறவைப்பற்றிப் பலர் பலவாருகக் கூறுவராயினும் அதை ஆசிரியர் தம் கொள்கைக்கேற்பவே பலகாலும் எடுத்துரைப்பர். மானவிஜயத்தில்,

'உன்னைத் தணந்தபின் உயிர்தரிக் கல்லேன்;
நிற்பிரி வாற்றேன்; வெற்புறு தோளனே!'

என்னும் அடிகள் ஆசிரியர்க்கு மாணவன்பால் இருக்கக் கூடிய பேரன்பின் முதிர்ச்சியைக் காட்டுகின்றன. 'மாணவ'னைப்பற்றிக் கூறும் தனிப் பாசுரம்,

'தலைவனை விழையும் தலைமகள் புரையக்
கலைவலா னைக் கண்டுகளி சிறந்தும்'

என்றும் கூறும். இயற்றமிழ் மாணவர்களிடம் ஒத்த முறையிலேயே நடந்து வந்தனர் என்பதும் ஈண்டு நினைவு கூரத் தக்கது.

மனவுணர்வு இல்வழிப் பாவமில்லை என்பது ஆசிரியர் கருத்து என்க. இதற்குச் சான்று,

*'மனவுணர் வில்வழி வருதற் பாலதோர்
பாவமு மில்லெனப் பகர்ந்த புலவனும்
பொய்யன் கொல்லோ?'

'இன்னா எனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.'

'எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணாசெய் யாமை தலை.'

என்பவற்றின் உரையில் பரிமேலழகர் 'அறமும் பாவமும் உளவாவது மனமுளதாய வழியாகலான்' என்றும், 'ஈண்டு மனத்தானாகாத வழிப் பாவமில்லை என்பது பெற்றாம்' என்றும் கூறுவது காணத்தக்கது.

இனி, மனதிற்கு இனிமை தரும் பொருள்கள் மனிதன் குணத்தைக் கெடுத்துவிடக் கூடியவை என்று பலர் தவறாக நினைக்கும் கருத்தோடு மாறுபடுவர் ஆசிரியர்; ஆகவே நாடகம், சங்கீதம் ஆகிய இன் கலைகள் ஒருவனைத் தீயவழியிற் செலுத்தக்கூடியவை என்று கூறுதல் அவர்க்கு உடன்பாடு இல்லை. 'உழைத்த உள்ளத்திற்கு இன்பந்தந்து ஊக்கம் விளைப்பன நாடகங்களே. சிற்சிலர் அறிவு திரிந்து வேறுபட்டாராயின் அஃது அவரது இயற்கைத் தன்மைகளில் ஒன்றாமே யன்றி நாடகத்தால் விளைந்த செயற்கைத் தன்மை யன்றாம்' ‡ என்று இவர் கூறுவதும் காண்க.

ஊழைப் பற்றி ஆசிரியரது கருத்து யாது என்பது அன்னார் இயற்றிய 'பட்டினக் காட்சி' யிற் பரக்கக் காணலாம்.

'இன்ன நாட்டினில் இன்னவூ ரினில்இன்ன பெயரில்
இன்னார் தாய்தந்தை மார்களு மின்னார்சோ தரரும்

* மானவிஜயம்—ஆரங்களம்.

‡ தமிழ் மொழியின் வரலாறு - மூவகைப் பாகுபாடு.

இன்னள் இல்லறக் கிழத்தியு மாஇன்ன குலத்தில்
இன்ன வாழ்க்கையில் இருக்கெனப் பழவினை இருத்தும்.'

'அன்றி நம்மனத் துதித்திடுங் கருத்தினை யந்தத்
துன்று செய்வினை மாற்றுவ வல்லவென் றூய
நன்றி யேயொரு வடிவென நண்ணுமா ணவனே!
என்று கூறலும் இளநகை அரும்பினன் மாதோ.'

'உள்ள நூற்புலவோர்களும் உரைத்தனர் இதையே;
மெள்ள மெள்ளவெப் பொருள்வந்து மயக்கினும் வியந்த
உள்ள மப்பொருள் விழைதலும் விடுத்தலும் உரைத்தல்
உள்ளு மாருயிர்ச் செயலென உணர்திஎன் மைந்தா.'

இனி, வாய்மையைப் பற்றி ஆசிரியர் கொண்டிருந்த கொள்கை அவரது 'வாய்மை' என்னும் தனிப் பாசுரத்திற் காணலாம். அங்குக் கூறுகின்றார்,

'என்னணம் பொய்மெயாத் துன்னும்
நன்றுந் தீதும் ஒன்றலில வாகவே?'

என்ற இக் கூற்று,

'பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்'

என்னும் குறளடிகளை ஒருவாறு மறுத்தல் காணலாம்.

நிலையாமையைப் பற்றித் தமிழ்ப் புலவர்கள் வாயோயாது பேசி வந்திருக்கிறார்கள்; ஆயினும் ஆசிரியர் நிலையாமையைப்பற்றி யாரும் கவலை கொள்ளாது கடமையைச் செய்வதே சிறந்த முறை என்று தமது 'ஓர் ஐயப்பாடு' என்னும் பாவில் கூறுகின்றார். இதற்குக் குறிப்புரை எழுதிய உரையாசிரியரும் 'எல்லாம் நிலைபேறின்றி யழியுமாயினும் அவனவன் செய்யற்பால கடமைகளைச் செய்தலே தக்கது என்பது ஆசிரியர் கருத்துப் போலும்' என்று கூறியுள்ளது கருதத் தக்கது.

'இவர் வெளிவேடம்பூண்ட போலிகளை மிக வெறுப்பவர் என்பதை நன்கறிவாராக. இவர் உண்மையாய

சீர்திருத்தக்காரர் என்பதும் புதுமை வழியால் உழைப்பவர் என்பதும் அவர் தம் நூல்களில் பெறப்படும்'— (நாடகவியல் உரைகாரர்.)

இவ்வாறு தாம் எழுதிய நூல்கள் நாடகமோ, கவிதையோ கட்டுரையோ, ஆராய்ச்சியோ எதுவாயினும் அவ்வவ் விடங்களில், கற்கும் மாணவர்க்கே யன்றிக் கற்ற பெரியோர்க்கும் பயன்படும் வண்ணம் பல அரிய கருத்துக்களைப் பொன் போற் பொதிந்து வைத்துள்ளனர் நமது ஆசிரியர்.

---

## அத்தியாயம் 10

## இறுதிக்காலம்

நோய்வாய்ப்பட்டிருந்த ஆசிரியர் 1903-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து ஆறுமாதத்திற்குக் கல்லூரியிலிருந்து ஓய்வெடுத்துக்கொண்டனர். கல்லூரியிலிருந்து பிரியும்போது ஆசிரியர், மாணவர்களைச் சந்தித்துப் பேசிய கூட்டத்தில், தாம் ஆறுமாதத்திற் குணமடைந்துவிட்டால் திரும்பி வருவதாக உறுதிகூறிச் சென்றனர். அன்றைய தினத்திலிருந்து சரியாக ஆறுமாதந்தான் தாம் உயிர்வாழப்போவதாக அவர் உணர்ந்தே இருந்தனர் போலும்!

இவர் ஓய்வு எடுத்துக்கொண்டாலும், இவரது நண்பர்கள் இவருக்கு ஓய்வு கொடுக்கவில்லை. மாணவர்கள், தேனீ பூவைச் சுற்றுவதுபோல் எப்போதும் இவரைச் சுற்றிக் கொண்டேயிருந்தனர். இவர் மனையில் தமிழ் முழக்கம் இறுதிவரையில் குறையவே இல்லை; ஆசிரியரும் பாடம் சொல்வதைக் குறைத்துக்கொள்ளவில்லை.

"அந்தோ! இத்தகைய பெருமைவாய்ந்த புலவருக்குக் கடவுள் நீண்ட ஆயுள் கொடுக்கவில்லை. 1903-ம்

வருடம் அவரது முப்பத்து மூன்றாவது வயதில் நோய்க்கிரையாகி, நாளுக்கு நாள் தேகம் இருமலினால் மெலிவடைந்து, 'ஐயா! இருமல் எம்முடன் பொருமல் செய்கிறதே!' எனக்கூறி இருமிக் கொண்டே பாடஞ்சொல்லுவார். இறுதிநாள் வரையில் அவர் வீட்டில் தமிழ் முழக்கமே! அவர் பேசுவதை வியந்து கேட்பவர் ஒருபால்; அவர் எழுதின குறிப்புக்களைப் பெயர்த்து எழுதுபவர் ஒருபால்; அவர் ஆணையின்படி நூல் எழுதுபவர் ஒருபால்; ஆக அவர் இல்லம் எப்பொழுதும் தமிழ்மகள் குலவி நடமிடுகோயிலாக விளங்கும்" என அவரது மாணவர் வ. சு. செங்கல்வராய பிள்ளை எழுதியுள்ளனர்.

இறுதி நாளில், வாய் பேசவும் இயலாதிருந்தபோது, மில்லர் துரைமகனார் ஆசிரியரது இல்லத்திற்கு வந்து, அவரது கரங்களைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு, "எனது புருவத்து ரோமங்கள் என் கண்களை மறைக்கின்றன; அவ்வாறு வயது முதிர்ந்தும் யான் இன்னும் உயிரோடிருக்கிறேன்; உலக இன்பங்களை அனுபவியாத குறுகிய காலத்தே தமிழ்ப்பணி பலசெய்த நீர் பல நாள் உலகில் வாழவேண்டியிருக்க, எமன் உம்மைக் கொண்டு போவது எத்துணை கொடுமை" என்று வருந்தியழுதனர்.

ஆசிரியர் இறப்பதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னே இவர் நிலைமையைக்கண்டு பரிதவித்த ஜேம்ஸ் ரஸ்ஸல் (James Russel, Bursar Christian College) துரையவர்கள், (I leave you to the care of better hands than man's, Suryanarayana!) "சூரியநாராயணா! மனிதனை விடச் சிறந்தவர் (கடவுள்) கைகளில் உன்னை ஒப்புவிக்கிறேன்" எனக் கூறி மனங்கசிந்து வருத்தமுற்றனர்.

1903-ம் ஆண்டு நவம்பர் மாதம்—உடல் நலம் மிகக் குன்றிவிட்டது; எப்போதுமுள்ள வீர முழக்கம் குறையவில்லையாயினும் இறுதி நெருங்குவது நன்கு தெரிந்தது.

எவ்வளவுதான் எதிர்பார்த்திருந்தாலும் இறுதி நெருங்கும் போது சொல்லொணுத்துயரம் எங்கிருந்தோ வந்து விடுகிறதே!

1903-ம் ஆண்டு நவம்பர் மாதம், இரண்டாம் நாள் திங்கட்கிழமை—எதிர்பாராத முடிவு, தவிர்க்க முடியாத முடிவு—சென்னையில் லிங்கிச்செட்டி தெருவில் தாம் குடியிருந்த வீட்டில், இருமல் நோயின் முதிர்ச்சியால், தமது முப்பத்து மூன்றும் வயது ஆரம்பத்தில் (நம்பமுடியாத இளமை!) இவ்வுலக வாழ்வைநீத்து இறைவன் திருவடிகளை யடைந்தனர் பரிதிமாற்கலைஞர். தமிழின் கனிந்த கனி பறிப்புண்டு வீழ்ந்தது. தமிழ்த்தாய் தன் அருமை மகனை யிழந்து துயரில் மூழ்கி நின்றனள்.

கலங்கிய கண்களும் புலம்பிய வாயும் எங்கும் நிறைந்தன. உடலோடு உயிராய் வாழ்ந்த இல்லக்கிழத்தியார் தாமோ, அன்றித் தமக்கு அறிவறிந்த மக்களாய்த் தோன்றிய சிறுர்தாமோ, அன்றித் தமது முதிர்ந்த வயதுடைய தந்தையான கோவிந்தசிவஞர்தாமோ, அன்றித் தமது மூத்த சகோதரர் சுந்தரேச சாஸ்திரியார்தாமோ, அன்றித் தம்மக்களினும் மிக அருமையாகப் பாராட்டிவந்த இயற்றமிழ் மாணவர்கள்தாமோ, அன்றி எண்ணிறந்த நண்பர்கள்தாமோ—இவர்களில் யாருடைய துயர் மிஞ்சியது என்று கூற யாரால் இயலும்?

நன்றி செலுத்தும் முறையில் சென்னைப் பல்கலைக் கழகமும் எல்லாச் சென்னைக் கல்லூரிகளும் அன்று மூடப்பட்டன. சென்னை மாகாணத்துப் பத்திரிகைகள் பலவும் இவரது பிரிவாற்ருமையைக் குறித்து வருந்தியும், இவரது தியாகத்தைப் போற்றியும் எழுதின. அவற்றுள் '**விவேக சிந்தாமணி**' பின்வருமாறு எழுதியது:

"இவ்வளவு இளவயதில் இப்படி அகாலமரண மடைந்தது மிகவும் பரிதாபத்தைக் கிளப்புவதாயிருக்கிறது. இவருக்குப் பாலபருவ முதற்கொண்டு தமிழில்

அபிமானம் அதிகம். இவ்விவேக சிந்தாமணி யாரம்பிக்கப் பட்ட காலத்தில் இவர் சென்னைக் கிருத்துவக் கல்லூரியில் பி. ஏ., பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களில் ஒருவரா யிருந்தார். அப்பொழுது விவேக சிந்தாமணிக்கு எழுதி வந்த செந்தமிழ்ப் பயிற்சி பெற்ற வாலிப சிகாமணிகளில் இவர் ஒருவராய் விளங்கினர். பி. ஏ., பரீட்சையில் தேறின பின் கிருத்துவக் கல்லூரியிலேயே ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராக உத்தியோகம் பெற, அது முதல் இவருக்கு இயற்கையாகத் தமிழிலுள்ள அபிமானம் மிகப் பெருகி, மேன்மேலும் தமிழ்ப் பாண்டித்தியம் பெற இவரைத் தூண்டியது. பிரதம தமிழ்ப் பண்டிதர் காலஞ்சென்ற பின் இவருக்கு அந்த ஸ்தானம் கிடைக்கவே, காலேஜ் வகுப்பு மாணுக்கர்களுக்குத் தமிழ் போதிக்கவும், தமி ழில் தனக்குள்ள அவாவினுல், தம்மாணவருள்ளத்தி லும் அது விஷயமாய் அவாவெழச் செய்யத்தூண்ட சந் தர்ப்பமும் கிடைத்தது. இந்த அருமையான சந்தர்ப் பங்களை இவர் நன்குபயோகிக்காது கைநழுவவிட்டார் என்பதற்கில்லை. ஏனெனில் இவர் தாமே பல கிரந்தங்க ளியற்றினதன்றி இவர் மாணுக்கர்களில் தமிழ் வன்மை வாய்ந்தவர்களைத் தூண்டிவிட்டு அவர் மனம் உற்சாகப் படும்படி செய்து அவர்களையும் பல கிரந்தங்கள் எழு தும்படி செய்து அவைகளைத் தாமே பார்வையிட்டுத் தொகுத்துப் பதிப்பிக்க வித்யாசாதகமும் செய்தார். இவர் பண்டிதரான பிறகு சாமான்ய ஜனருமுணரும்படி எளிய நடையிலெழுதுவதைவிட உயர்நடைபற்றி பண்டி தர் களிக்கவே யெழுதித் தம் பாண்டித்தியத்தைக் காட்டி வந்தாராயினும், இவர் முயற்சியால் தமிழ் நூல்கள் விர்த்தியடைய நேர்ந்ததும், இவர் செல்வாக்கிற்குட்பட்ட மாணவர்கள் வழக்கம்போல் தமிழையசட்டை செய்து தள்ளாது அதிலபிமானம் வைத்து ஆதரவாய்ப்போற்றிய தும் தமிழுக்குப் பெரிதும் கிடைத்த ஒரு பாக்கியமே

யென்று சொல்லல் வேண்டும். இவர் தம் மாணவர்களால் மட்டுமன்றி இவருடைய காலேஜ் ப்ரொபசர்களாலும், மற்றப் பண்டிதர்களாலும் நன்கு மதிக்கப்பட்டுவந்தார். இவருடைய நண்பர்கள் பலரில் இவரைப்போல் பாண்டித்தியம் பெற்ற "அசலாம்பிகையம்மை" யென்னும் பிரம்மகுல வித்யார்த்தினியும் இவர் பிரிவாற்ருது பாடிய செய்யுட்கள் இரக்கமும் உருக்கமுமாயுள்ளன.

"இவர் அகாலமரணம் அடைந்ததுபற்றிப் பிரிவாற்ருது வருந்தும் வயது சென்ற பெரியவரான இவர் தந்தையாரோடும், நேரக்கூடாத விபத்து நேர்ந்துவிட்டதால் உள்ளம் நொந்து புண்பட்டுழலும் அவர் தர்மபத்தினியோடும், இளவயதிலே தந்தையாதரவிழந்த அவர் அருமைக் குழந்தைகளோடும் நாம் மனங்கலந்து உள்ளமுருகி வருந்துகிருேம். ஆனைமுதல் எறும்பீருக அண்ட சராசரங்களையும் ஆட்டுவித்து லீலாவினோதமாக ஆக்கியழித்துக் காத்தருள் செய்யுமீசன், இவர்களுள்ள மறிந்து உண்மை விளங்கக் கருணை மிகுந்து இவர்களது துன்பந் துடைத்துத் தூயநெறி காட்டுவாரென்று திருவருட் சோதியை நினைந்து பிரார்த்திக்கிருேம். இவர்களுக்கு நரரூபமான நாம் என்ன ஆறுதலைச் சொல்லுவோம்."

சங்கரரும் மணிவாசகரும் தமது முப்பத்திரண்டாம் ஆண்டில் இல்வுலக வாழ்வில் தத்தம் கடமையைச் சிறப்புற ஆற்றி மறைந்தனர். ஆசிரியரும் தமது முப்பத்திரண்டாம் வயது முடிந்து நான்கு மாதத்திற்கெல்லாம் தமிழுலகிற்காகத் தமது உயிரையும் ஈந்து மறைந்தார்.

மனைவி, மக்கள், தந்தை, சகோதரர், மாணவர், நண்பர் என்பார் யாவரையும் நீத்துப் பிரிந்தனர் பரிதிமாற் கலைஞுர்; தந்தையார் கோவிந்த சிவஞர் தமது முதிர்ந்த வயதில் தம்மை எய்திய துன்பம் தாளாது இல்லறம் விட்டுத் துறவறம் மேற்கொண்டு சென்று விட்ட

னர். ஏனையோர் தாங்கொணுத் துயரத்தை ஒருவாறு ஆற்றித் தேறியிருந்தனர்.

ஆசிரியர் பிரிவாற்ருது அவரது மாணவர் வ. சு. செங்கல்வராய பிள்ளை 'குவளைக்கோ' என்ற புனைபெயரில் எழுதிய கையறுநிலைப் பாக்களில் சில வருமாறு :

'சீரியநாற் கூறுபெருந் தேனர் கவிவலவ
சூரியநா ராயணப்பேர்ச் சுந்தரனே துஞ்சினையோ ?
தண்டமிழ்போ தித்த சபாபதியாஞ் சற்குருவைக்
கண்டு களிப்பதற்குக் காசினியை நீத்தனையோ !
விண்ணுலகில் வாழும் வியன்புலவர் சங்கைகளை
நண்ணிப் பரிகரிப்பான் நாடி நடந்தனையோ !
வண்டமிழி னுதி வரலா றுணர்வதற்குத்
துண்ட மதிவேணித் தூயவன்பாற் போந்தனையோ !
மாணுர் குடமுனிபோன் மாபா டியமுனிபோன்
மாணுக்கர் பன்னிருவர் வள்ளானீ கொண்டனையே !
கல்வியறி வில்லாக் கடையேமைக் கண்பார்த்துச்
செல்வ ! தமிழைச் செவியறிவு றுத்தனையே !
மூகனமர்ந்து மாணவர்க்கு முத்தமிழ்போ தித்த
அகனலத்தைக் கோமான் ! அடியேம் மறவேமால் !'

சாஸ்திரியாரது இறுதிக்குப் பின் அன்னுரது மாணவரான மேற்கூறிய பிள்ளையவர்கள் கூறியது :

"தற்கால நாடகத் தமிழுக்குப் பிதா இவர்தானே! நாடக இலக்கணத்தைத் தமிழ் உலகிற்குத் தந்தபுலவர் இவர்தானே; இவர் இயற்றிய கலாவதிக்கு நிகரான நாடகத் தமிழ் நூல் நானிலத்துண்டோ! இவருடைய தனிப்பாசுரத்தொகைபோல் இனிப்பான நூலொன்றினிப் பாரிலுண்டோ? இவர் தம் மதிவாண நூலின் செந்தமிழ் போல நெஞ்சிற் பதிவாகும் நூலொன்று வருமோ இனித்தான்? மானவிஜயம்போன்ற தேனமுத நூல்தான் தேடிற் கிடைக்குமோ? எழுபது ஆண்டிருந்த ஒருவர் தமிழணங்கிற்குச் செய்யும் திருப்பணியெல்லாம் முப்

பது ஆண்டில் முடித்த பெருந்தகை யல்லவோ? அவர் புகழ் ஞாயிறுள்ளளவும் நானிலத்திலகு மன்றோ?" ஆசிரியரது கொள்கை கைம்மாறு வேண்டாக் கடப்பாடாயினும், அவர் நூல்களைப் பயின்று அவர் கொள்கைகளைப் பின்பற்றுவதோடு அவர் செய்த சிறந்த தமிழ்ப் பணி உலகறியுமாறு அன்னார் இயற்றிய அரிய நூல்களைப் பன்முறையும் கல்லூரிகளிற் பாடமாக வைத்தலும் தமிழார்வமுடையாரது சிறந்த கடமை என்பது துணிபு.

ஆசிரியரது மூத்தகுமாரர் **வி. சூ. நடராஜன்**, ஆங்கில வைத்தியப்பட்டமும், உடல் நலப்பட்டமும் பெற்று, உடல் நலப்பணி (Health officer) செய்து ஓய்வெடுத்துப்பின் 1953-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் நாள் காலமானார். இவர் உயர்நிலைப்பள்ளியில் வடமொழியைப் பயின்ற போதிலும், 'குலவித்தை கல்லாமல் பாதி' என்ற முது மொழிக்கிணங்க, தமிழார்வம் குறையாது, தமது ஓய்வு நேரங்களில் இயன்ற தமிழ்ப்பணிகள் செய்து வந்தது பாராட்டற்பாலது. இவரது தமிழ் இசைப் பாட்டுக்களும், நகைச்சுவைப் பாட்டுக்களும் யாவரும் அறிந்ததே. இவர் சிறுவர்க்கான தமிழ் நூல்களும் எழுதியுள்ளார்.

ஆசிரியர் நினைவு என்றென்றும் நிலைத்திருக்குமாறு அன்னாரது பெயரில் மாஜுமதுரையில் ஒரு உயர்நிலைத் தொடக்கப் பள்ளியை நிறுவி, கைம்மாறு கருதாது சிறந்த முறையில் நடத்தியும், ஆசிரியர் செய்த தமிழ்ப் பணியின் உண்மை வரலாறு உலகோர் அறியுமாறு பல விதத்திலும் பாடுபட்டுவரும் அவரது இளைய குமாரர் **வி. சூ. சுவாமிநாதன்**பால் தமிழன்பர் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

'குழவியைப் பெறுவதை விட அதை வளர்ப்பதே மிகக்கடினம்' என்பது உலகறிந்த உண்மை. அது போன்று ஆசிரியர் இயற்றிய நூல்களை உயர்ந்த முறை

யில் பதிப்பித்து மிகக் குறைந்த விலையில் இவர் தமிழ் நாட்டுக்கு அளித்து வருகிறார். இதுவன்றி, இவர் தொடக்க இடைநிலை உயர்நிலைப் பள்ளிகளுக்கான அரிய புத்தகங்கள் பலவற்றையும் நல்ல முறையில் பதிப்பித்துத் தமிழ் நாட்டுக்குத் தொண்டு புரிவது யாவரும் கொண்டாடத் தக்கது.

DR. T. P. M. LIBRARY.
MADURAI KAMARAJ UNIVERSITY

